# ஏமை

சரத் சந்திர சட்டர்ஜி

தமிழாக்கியவர் :

ஆர். ஷண்முகசுந்தரம்

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1960
MADURAI

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை—4.

முதற் பதிப்பு : அக்டோபர்—1957.

முழு உரிமையும் இன்ப நிலையத்தாருக்கு.

விலை ரூபாய் இரண்டு

13000

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை—14.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# சரத் சந்திரரின் நூல்கள்

★

## இன்ப நிலைய வெளியீடுகள்

★

புதுமணப் பெண்
சந்திரநாத்
ரமா
ஞானதா
வைகுந்தன் உயில்
ஜமீந்தாரணி
அசலா

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# ரமா

வேணி கோஷால், முகர்ஜி மஹாஷயருடைய வீட்டு முற்றத்திற்குள் நுழைந்ததும் எதிரில் இருந்த பெண்ணைப் பார்த்து, "சின்னம்மா, ரமா எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

சின்னம்மா அப்போது பூஜை செய்து கொண்டிருந்தாள். ஆகையால் அவள் சமையலறைப் பக்கம் சுட்டிக் காட்டினாள். வேணி சமையலறைக் கதவருகில் போய் நின்றுகொண்டு, "ஏன் ரமா, என்ன செய்வது என்று ஏதாவது முடிவு செய்தாயா ?" என்று கேட்டான்.

அடுப்பிலிருந்த பாத்திரத்தை இறக்கிக் கீழே வைத்து விட்டுத் தலையை உயர்த்திப் பார்த்தாள். பிறகு, "எதைப் பற்றி அண்ணா ?" என்றாள்.

"அதுதான், தாரிணி சித்தப்பா சிரார்த்த விஷயமாகத் தான். ரமேஷ் நேற்று வந்திருக்கிறானாம். தன் தகப்பனாரின் சிரார்த்தத்தை பெரிய தடபுடலாகச் செய்யப் போகிறானும். நீ போகப் போகிறாயா, இல்லையா ?"

ரமா திடுக்கிட்டுக் கண்களை திறந்தபடியே, "நான் போவதா ? தாரிணி கோஷால் வீட்டிற்கா ?" என்றாள்.

வேணி சிறிது வெட்கமடைந்தான். "ஆமாம், இது எனக்கே தெரியும். என்னவானாலும் நீங்கள் அங்கே போக மாட்டீர்கள். அவனே நேரில் வந்து எல்லோரையும் அழைக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். இங்கு அழைக்க வந்தால் நீ என்ன சொல்லுவாய் ?'' என்றான்.

ரமா மிகக் கோபத்துடன், "நான் ஒன்றுமே சொல்ல மாட்டேன்! வெளி வாயிலிலேயே காவல்காரனே எல்லாம் சொல்லி விடுவான் '' என்றாள்.

பூஜை செய்து கொண்டிருந்த சின்னம்மாள் காதில் இந்த ருசிகரமான சம்பாஷணை விழுந்ததும், அவள் அப்படியே பூஜையை விட்டுவிட்டு எழுந்து வந்துவிட்டாள். வந்ததும் வராததுமாய், "காவல்காரன் ஏன் சொல்லுவான்? எனக்குச் சொல்லத் தெரியாதா? இந்த வீட்டிற்கு மறுபடி அடி எடுத்து வைக்காதவாறு அந்தப் பயலைப் பேசி விட மாட்டேன் ! தாரிணி கோஷால் மகன் நம்ம வீட்டுக்கு அழைக்க வருவதா ? வேணி ! நான் ஒன்றையும் மறந்து விடவில்லை. தாரிணி தன் மகனுக்கு நமது ரமாவைக் கலியாணம் செய்து வைத்துவிட விரும்பினான். அப்போது யதீந்திரன் பிறக்கவில்லை. இந்தக் கலியாணம் நடைபெற்றுவிட்டால் யதுநாத முகர்ஜி சொத்து எல்லாம் நமக்கே சேர்ந்துவிடும் என்று தாரிணி நினைத்தான். நான் சொல்வது புரிகிறதா வேணி? இந்த பைரவ ஆசார்யா தான் எத்தனையோ மந்திர தந்திரம் செய்தான். என் மகளுக்குக் கலியாணம் ஆகி, ஆறே மாதத்தில் அவளும் விதவையாகி வீட்டில் வந்து உட்கார்ந்துவிட்டாள். இந்த சின்ன சாதி யதுமுகர்ஜியின் பெண்ணை மருமகளாக அடையவேண்டுமென்று பார்த்தானே ! அந்தப் பாவி செத்ததும் அப்படித்தான். பெற்ற பிள்ளைகூட கொள்ளி வைக்கக் கொடுத்து வைக்கவில்லை. அவன் தலையில் இடிவிழ '' என்று ஒரே மூச்சில் பேசி நிறுத்தினாள்.

இத்தனையும் கூறிவிட்டு குஸ்திப் பந்தயத்தில் தோல்வி அடைந்தவன் நடுங்குவதைப்போல நடுங்கத் தொடங்கினாள். அவள் அடிக்கடி, 'சின்ன சாதி, சின்ன சாதி' என்று கூறியதைக் கேட்டு வேணியின் முகம் வாடியது.

ஏனென்ருல், தாரிணி கோஷால் இவனுடைய சித்தப்பா தானே ! இதைக் கவனித்த ரமா அவளைச் சிறிது அடக்கி, “ சின்னம்மா, நீ ஒருவர் சாதியைப்பற்றி ஏன் இம்மாதிரி பேசுகிருய் ? சாதி என்பது ஒருவர் கையால் கட்டிய கோட்டையா ? அவரவர்க்கு அவரவர் சாதி உயர்ந்தது தான் ” என்ருள்.

வேணீ சிறிது புன்சிரிப்புடன், “ இல்லை ரமா ; சின்னம்மா சொல்வதில் தப்பு ஒன்றும் இல்லை. நீ அவ்வளவு பெரிய பிராமண வீட்டுப் பெண்தானே ? உன்னை நாங்கள் எங்கள் வீட்டுக்குக் கொண்டு வர முடியுமா ? சித்தப்பா இம்மாதிரி சொன்னது மற்றவர்களை அவமரியாதை செய்தது போலத்தான். மந்திர தந்திரம் என்று சின்னம்மா சொன்னுளே, அது வாஸ்தவம்தான் ; சித்தப்பாவும், பைரவ ஆசார்யாவும் செய்ய முடியாத காரியம் உலகத்திலே ஒன்றும் கிடையாது. இந்த பைரவ ஆசார்யாதான் இன்று ரமேஷுக்கு வளர்ப்புத் தந்தையாக இருக்கிருன் ” என்ருன்.

“ ஆமாம், வேணி ! அதுதான் தெரிந்த சங்கதி ஆயிற்றே. பத்துப் பனிரண்டு வருஷமாக ஊருக்கே வரா திருந்தானே, அவன் எங்குதான் இருந்தான் ?”

“ எனக்கு என்ன சின்னம்மா அதெல்லாம் தெரியும்? சித்தப்பாவிடம் உங்களுக்கு எவ்வளவு சம்பந்தமோ அவ்வளவு சம்பந்தம்தான் எனக்கும். இத்தனை நாளும் பம்பாயிலோ எங்கேயோ இருந்தான் என்று கேள்விப் பட்டேன். சிலர் டாக்டர் பாஸ் பண்ணிவிட்டு வந்திருக் கிருன் என்கிருர்கள். இன்னும் சிலர் வக்கீல் பாஸ் பண்ணி விட்டு வந்திருக்கிருன் என்கிருர்கள். வேறு சிலர் இது எல்லாம் வெறும் பித்தலாட்டம் என்கிருர்கள். ஏனென்ருல் பயல் பெரிய குடிகாரனும். அவன் வீட்டிற் குள் நுழையும்போதே கண்ணெல்லாம் செவ்வலரிப் பூப்போல சிவந்திருந்ததாம்.”

“ அப்படியா சங்கதி ? அப்போ வீட்டிற்குள் கூட நுழைய விடக்கூடாது.”

வேணி மிகுந்த உற்சாகத்துடன், "ஆமாம், நுழைய விடக்கூடாது. ஏன் ரமா, உனக்கு ரமேஷ் ஞாபகத்தி லிருக்கிறதா ?" என்றான். தன் துர்ப்பாக்கியத்தைப் பற்றிப் பேசியதால் ரமா சிறிது வருத்தமடைந்திருந்தாள். ஆனாலும் புன்சிரிப்புடன், "ஞாபகமில்லாமலென்ன ? என்னைவிட ரொம்பப் பெரியவன் அல்லவே. நாங்களிரு வரும் ஒன்றாகத்தானே சிறு வயதில் படித்தோம். அவன் தாயார் இறந்தது எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. அவளுக்கு என்மேல் மிகுந்த பிரியம்" என்றாள்.

சின்னம்மா மறுபடியும் ஆடத் தொடங்கினாள். "அவள் பிரியத்திலே கொண்டு போய் கொள்ளியை வை. எல்லாம் தங்கள் காரியத்திற்காகத்தான். எப்படியாவது உன்னைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்பதுதான் அவர்கள் நோக்கம்" என்றாள்.

வேணி மிகத் தெரிந்தவன் போல், "இதில் சந்தேக மென்ன ? சின்னம்மா கூட........"

அவன் பேசி முடிப்பதற்குள் ரமா முகத்தைச் சுளித்துக்கொண்டு, "சின்னம்மா, இப்போது அந்தப் பழைய பேச்சுகளை ஏன் பேசுகிறாய் ?" என்றாள்.

ரமேஷுடைய தந்தையுடன் எத்தனையோ வழக்குகள் நடைபெற்றிருந்தாலும், அவனுடைய தாயார் மட்டும் ரமா உள்ளத்தில் எங்கோ மறைந்திருந்தாள். இன்னம் அவள் இதயத்திலிருந்து மறைந்துவிடவில்லை. வேணி உடனே அவள் கூறியதை ஆமோதித்து, "ஆமா மாம்! சின்னச் சின்னம்மா பெரிய வீட்டுப் பெண்ணல் லவா ? இன்றைக்கும் அவளைப்பற்றி நினைத்தாலே அம்மா கண்ணீர் விட்டுவிடுவாள்" என்றான்.

பேச்சு வேறு விஷயத்துக்குப் போகவே வேணி அத்துடன் அதை நிறுத்திவிட்டு, "அப்புறம் என்ன ? இதே தீர்மானம்தானே ? இனி இதில் ஒன்றும் மாறுதல் கிடையாதோ ?" என்றான்.

ரமா சிரித்தாள். "அண்ணா, அப்பா அடிக்கடி சொல் லுவார் ; நெருப்பு, கடன், விரோதி இம்மூன்றையும்

துளிக்கூட மிச்சம் வைக்கக்கூடாதாம். தாரிணி கோஷால் உயிருடனிருந்த வரையிலும் நமக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருந்தான். அப்பாவைக் கூட ஜெயிலுக்கு அனுப்ப முயற்சித்தான். அண்ணு, நான் ஒன்றையும் மறந்துவிடவில்லே. உயிருள்ள வரையிலும் மறக்கவும் மாட்டேன்; ரமேஷ் நமது விரோதியின் மகன் தானே! பின் நாம் எப்படிப் போக முடியும்? நம்மைச் சேர்ந்தவர்களேயும் போகவிடக் கூடாது. (பிறகு சிறிது யோசித்து விட்டு) அண்ணு, அவர்கள் வீட்டுக்கு எந்தப் பிராமணனும் போகாமல் செய்ய உன்னுல் முடியாதா?'' என்ருள்.

வேணி சிறிது முன் வந்து, மெதுவாக, "இதற்குத் தான் நானும் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். நீ எனக்கு உதவியாக இருந்தால் அப்புறம் எனக்கு எதைப் பற்றியும் கவலே கிடையாது. இந்தக் குவாபூரிலிருந்து அவனே விரட்டாவிட்டால் என் பெயர் வேணி கோஷால் அல்ல. இந்தப் பயலுக்கு எவன் சிபார்சுக்கு வருவானே பார்க்கிறேன்'' என்ருன்.

"அப்புறம் பிழைத்தாற் போலத்தான். அண்ணு இன்னென்றையும் சொல்லிவிடுகிறேன். அவனும் பயந்து விடுவான்.''

வேணி இன்னும் சற்று முன்னுக்கு நகர்ந்து வந்து நன்கு உட்கார்ந்து கொண்டான். பிறகு சுற்றிலும் ஒரு முறை பார்த்துவிட்டு, "பழி தீர்த்துக்கொள்ள வேண்டு மானுல் இதுதான் உனக்குச் சமயம். அவன் நன்கு காலே ஊன்றிக் கொண்டானுனல் அப்புறம் கஷ்டம். சொத்துக் களே எப்படி நிர்வாகம் செய்வது என்பது இன்னம் அவனுக்குத் தெரியாதிருக்கிறது. இந்தச் சமயத்தில் விரோதியை அழிக்காவிட்டால், எப்போதுமே அவனே ஒன்றும் செய்யமுடியாது. இவன் தாரிணி கோஷாலுடைய பிள்ளே என்பதை எப்போதுமே நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்'' என்ருன்.

"அண்ணு, இது எனக்கு ரொம்ப நன்ருகத் தெரியும்'' என்ருள் ரமா.

"உனக்குத் தெரியாதது என்னம்மா இருக்கிறது? கடவுள் உன்னை ஆணாகப் படைப்பதை விட்டு பெண்ணாகப் படைத்துவிட்டான். யோசனை செய்வதிலே உன்னைப்போல வேறு யாரிருக்கிறார்கள் என்று நாங்கள் அடிக்கடி பேசிக்கொள்வோம். சரி, நாளைக்கு நான் வருகிறேன். நேரமாகிறது, நான் போகிறேன்" என்றான்.

வேணி எழுந்து நின்றுகொண்டான். ரமாவும் இந்தப் பேச்சுக்களால் அளவு கடந்த ஆனந்தமடைந்தாள். அவளும் மிகுந்த மரியாதையுடன் எழுந்து நின்று கொண்டாள். சந்தோஷத்தால் அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. அப்போது வெளி முற்றத்திலிருந்து யாரோ ஒருவர், "அடே, ராணி எங்கே காணுமே?" என்று கூறுவது கேட்டது.

ரமா குழந்தையாயிருந்தபோது ரமேஷின் தாயார் ரமாவை இந்தப் பெயர் சொல்லித்தான் அழைப்பாள். ரொம்ப நாளாகிவிட்டபடியால் .ரமா கூட இதை மறந்திருந்தாள். வேணியின் முகத்தைப் பார்த்தாள். அவன் முகம் கறுத்திருந்தது. இதற்குள் வந்த ஆள் எதிரில் வந்து நின்றான். வேணியைப் பார்த்ததும், "அடே, பெரிய அண்ணா! நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள். சரி, வாருங்கள். நீங்கள் இல்லாவிட்டால் அங்கே எப்படி வேலை ஆகும்? நான் ஊர் முழுதும் உங்களைத் தேடிக் கொண்டிருந்தேன். ராணி எங்கே?" என்றான்.

ரமாவால் ஒரு அடி எடுத்துக்கூட அப்பால் வைக்க முடியவில்லை. முடிந்திருந்தால் ஓடிப் போயிருப்பாள். தலை குனிந்து கொண்டு மௌனமாக நின்றாள். ரமேஷ் சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "அடே, அப்பா! நீ இவ்வளவு பெரியவளாகி விட்டாயே! சௌக்கியம்தானே?" என்றான்.

ரமா தலை குனிந்தபடியே நின்று கொண்டிருந்தாள். இந்தச் சந்தர்ப்பத்தில் அவள் ஒன்றும் பேச முடியவில்லை.

ரமேஷ் சிரித்துக் கொண்டு, "அடையாளம் தெரிந்ததோ இல்லையோ? நான்தான் ரமேஷ் அண்ணா" என்றான்.

ஆனால், ரமா இன்னும் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஆம், மிகுந்த இனிமையான குரலில்தான், "நீங்கள் சௌக்கியம்தானே ?" என்றாள்.

"ஆம், சௌக்கியம்தான். சரி, நீ ஏன் ரமா என்னை 'நீங்கள்' என்று சொல்கிறாய் ?"

பிறகு வேணியைப் பார்த்து, "பெரிய அண்ணா, ரமா சிறியவளாக இருந்தது எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. அம்மா இறக்கும்போது ரொம்பச் சிறியவளாக இருந்தாள். அப்போது இவள் என் கண்ணீரைத் துடைத்து விட்டு, "ரமேஷ் அண்ணா, நீ அழாதே. என் அம்மா இருக்கிறாள். இரண்டு பேரும் ஆளுக்குப் பாதி வைத்துக்கொள்வோம்" என்று சொன்னாள். ஏன் ரமா, இது உனக்கு ஞாபகத்திலிருக்கிறதா ? எனது தாயார் முகமாவது ஞாபகம் இருக்கிறதா ?" என்றான்.

இதைக் கேட்டு ரமா மிகவும் வெட்கமடைந்தாள். பெரியம்மாவைப் பற்றி எல்லா விஷயங்களும் நன்கு ஞாபகத்தில் இல்லை என்று அவளால் சொல்ல முடியவில்லை. மீண்டும் ரமேஷ் பேசத் தொடங்கினான். "இனி நேரமில்லை. இடையில் மூன்றே மூன்று நாட்கள்தானிருக்கின்றன. செய்ய வேண்டியதை எல்லாம் செய்துவிடு. நான் ஒரு அனாதை போல் உங்களைத் தேடி வந்திருக்கிறேன். நீங்களின்றி ஒன்றும் செய்ய முடியாது" என்றான்.

சின்னம்மாள் மௌனமாக ரமேஷுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தாள். ரமாவோ, வேணியோ ஒன்றும் பேசாதிருக்கக் கண்டு அவள் ரமேஷுக்கு எதிரில் வந்து நின்றுகொண்டு, "ஏனப்பா ! நீ தாரிணி கோஷால் மகன்தானே ?" என்றாள்.

ரமேஷ் இதற்கு முன் சின்னம்மாவைப் பார்த்ததில்லை. அவன் கிராமத்தை விட்டுப் போன சமயத்தில் ரமாவின் தாயார் படுக்கையிலிருந்தபோது இவள் இங்கு வந்து சேர்ந்தாள். அதற்குப் பிறகு இவள் இந்த வீட்டை விட்டுப் போகவேயில்லை. ரமேஷ் சிறிது திடுக்கிட்டு அவளைப்

பார்த்தான். சின்னம்மாள், “இல்லாவிட்டால் வேறு யார் இப்படி வெட்கம் கெட்டுத் திரிவார்கள்? அப்பனைப் போலத்தான் பிள்ளையும்! அதில் துளியும் சந்தேகமே யில்லை. ஒரு பெரிய வீட்டிற்குள் நுழைந்து இவ்விதம் சத்தம் போடக்கூடாதென்பது தெரியவேண்டாம்?” என்ருள்.

ரமேஷ் ஒன்றும் பேசாமல் பார்த்துக்கொண்டே யிருந்தான். “சரி, நான் போகிறேன்” என்று கூறிவிட்டு வேணி அங்கிருந்து நழுவிவிட்டான்.

ரமா அறைக்குள்ளிருந்து வெளியில் வந்து, “சின்னம்மா, நீயும் என்ன உளறிக் கொண்டிருக்கிருய்? போய் உன் வேலையைப் பார்” என்ருள்.

சின்னம்மா ஜாடை தெரிந்து கொண்டாள். ஆகையால் தனது பேச்சில் இன்னும் கொஞ்சம் விஷத்தைக் கலந்து பேசினுள். “ரமா, நீ உளருதே; செய்து தீர வேண்டிய காரியத்தை உங்களைப்போல் வெட்கப்பட்டுக் கொண்டு செய்யாமலிருக்கமாட்டேன். சரி, வேணி ஏன் பயந்து கொண்டு ஓடவேண்டும்? அப்பா, நாங்கள் வீட்டுக்குத் தண்ணீர் எடுப்பதற்கும், மாவு அறைப்ப தற்கும், சொன்ன வேலையைச் செய்வதற்கும் உன் வீட்டு வேலைக்காரர்கள் அல்ல; உன் ஜமீன் குடிகள் கூட அல்ல, என்பதைத் தெரிவித்துவிடுகிறேன். தாரிணி இறந் ததற்காக கிராமம் முழுவதும் சந்தோஷப்பட்டது. இவை களை எல்லாம் நான் கூருமல் நீங்களே கூறுவதுதான் அழகு” என்ருள்.

ரமேஷ் இன்னும் கற்சிலை போல் அசையாது நின்று கொண்டேயிருந்தான். உண்மையில் இந்த வார்த்தைகளை எல்லாம் அவன் கனவில் கூடக் கருதியதில்லை. உள்ளே சமையலறைக் கதவுச் சங்கிலி ‘ஜல ஜல’வென ஆடியது. ஆனுல், யாரும் அதைக் கவனிக்கவில்லை. சின்னம்மா ரமேஷினுடைய துயரம் தேங்கிய முகத்தைப் பார்த்துக் கொண்டு, “என்ன இருந்தாலும், ஒரு பிராமணப் பையனை வேலைக்காரனை விட்டு அவமானம் செய்ய விரும்பவில்லை. அப்பா, கொஞ்சம் ஜாக்கிரதையாகக் காரியங்கள் செய்.

இங்கிருந்து போய்விடு. ஒரு பெரிய மனிதர் வீட்டிற்குள் நுழைந்து இஷ்டம் போல் சுற்றித் திரிவதற்கு நீ ஒரு சின்னக் குழந்தை அல்ல. உன் வீட்டிற்கு ரமா ஒரு நாளும் வரப் போவதில்லை. அதையும் சொல்லிவிடுகிறேன்" என்றாள்.

ரமேஷ் திடீரென சுய உணர்வை அடைந்தான். ரமா சமையலறைக் கதவருகில் நின்று கொண்டிருந்தாள். ரமேஷ் முதலில் சிறிது அங்குமிங்கும் பார்த்தான். பிறகு சமையலறைப் பக்கம் பார்த்துக் கொண்டு, "வர முடியா விட்டால் அதற்கென்ன செய்வது! ஆனால், எனக்கு இவைகள் ஒன்றும் தெரியாது. ராணி, ஏதாவது தெரியாமல் தப்பு செய்திருந்தால் மன்னித்துவிடு" என்று கூறிவிட்டு ரமேஷ் மெதுவாக அங்கிருந்து சென்றுவிட்டான். அறைக்குள்ளிருந்து யாதொரு சப்தமும் வெளி வரவில்லை. ரமேஷ் யாரிடத்தில் மன்னிப்பு வேண்டினானே அவர் மௌனமாக அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந் தார் என்பது கூட ரமேஷுக்குத் தெரியாது. அதன் பிறகு வேணி அங்கு வந்து சேர்ந்தான். அவன் அங்கிருந்து ஓடி விடவில்லை. மறைவிலிருந்து கொண்டு அனைத்தை யும் கேட்டுக் கொண்டிருந்தான். சின்னம்மாவைக் கண்டதும் அளவு கடந்த மகிழ்ச்சிப் பெருக்குடன், "சபாஷ், சித்தி! நன்றாகச் சுடச் சுடக் கொடுத்தாய்! எங்களால் இப்படிப் பேசி இருக்கவே முடியாது. ரமா, இப்படி வேலைக்காரனால் பேச முடியுமா? நான் மறைவி லிருந்து எல்லாம் கேட்டுக் கொண்டுதானே இருந்தேன். அந்தப் பயல் மூஞ்சியை 'உம்' என வைத்துக் கொண்டு போனான். ரொம்ப சரி" என்றான்.

சித்தி மிகுந்த கர்வத்துடன், "ரொம்ப சரி என்பது எனக்கும் தெரியும். ஆனால் இவைகளை எல்லாம் நீயே சொல்லியிருந்தால் இன்னம் நன்றாயிருந்திருக்கும். உன்னால் சொல்ல முடியாவிட்டால்தான் போகிறது. இங்கு நின்று கொண்டாவது கேட்டுக்கொண்டிருக்கலாமல்லவா? நீ இப்படி நழுவிப் போனது சரியல்ல" என்றாள்.

சித்தியின் பேச்சால் வேணியின் சிரிப்பு ஒரு நொடி யில் மறைந்துவிட்டது. இந்தக் குற்றச்சாட்டுக்கு என்ன

பதில் அளிப்பது என்று அவனுக்குப் புலப்படவில்லை. ஆனால், அவன் இதற்காக அதிக நேரம் சிரமப்படவேண்டி இருக்கவில்லை. ரமா உள்ளிருந்து கொண்டே சித்திக்குப் பதில் அளித்தாள். இத்தனை நேரம் பேசாமலிருந்தவள் திடீரென, "சித்தி, நீயே சகலத்தையும் தெரிவித்து விட்டது ரொம்ப நல்லதாகப் போச்சு. உன்னைப் போல யாரால்தான் கடுமையாகப் பேசியிருக்க முடியும்?" என்றாள்.

சித்திக்கும், வேணிக்கும் அவளுடைய பேச்சு ரொம்ப ஆச்சரியமாயிருந்தது.

சித்தி சமையலறைப் பக்கம் திரும்பி, "நீ என்ன சொன்னாய்?" என்றாள்.

"ஒன்றுமில்லை. பூஜை செய்வதற்குள் பத்துத் தரம் எழுந்துவிட்டாள். போய் பூஜையைச் செய்; இன்று சமையல் கிமையல் ஒன்றும் செய்யவேண்டாமா?" என்று கூறிவிட்டு ரமா அங்கிருந்து வெளியில் வந்தாள். யாருடனும் ஒன்றும் பேசாமல் பக்கத்து அறைக்குள் சென்று விட்டாள்.

வேணி வாடிய முகத்துடன், "சித்தி, விஷயம் என்ன?" என்றான்.

"எனக்கென்னப்பா தெரியும்? அந்த ராசாத்தியின் குணம் என்னைப் போன்ற வேலைக்காரிக்கு எப்படித் தெரியும்?" என்று கூறவும் அவன் முகம் கோபத்தால் சிவந்துவிட்டது. அவள் மறுபடியும் பூஜையில் உட்கார்ந்து கொண்டாள். மீண்டும் ஒரு வேளை பகவான் நாமத்தை உச்சரிக்க ஆரம்பித்திருப்பாள். வேணியும் மெதுவாக அங்கிருந்து சென்றுவிட்டான்.

## இரண்டாம் அத்தியாயம்

குவாபூர் ஜமீன் சம்பந்தமாக ஒரு கதை உண்டு. அதை இங்கு அவசியம் சொல்லித் தீர வேண்டும். ஒரு நூறு வருஷத்துக்கு முன், பலராம முகர்ஜி என்பவர் தன்னுடைய நண்பர் பலராம கோஷாலைக் கூட்டிக் கொண்டு விக்கிரமபுரத்திலிருந்து இங்கு வந்து சேர்ந்தாராம். முகர்ஜி உயர்ந்த பிராமணனாக மட்டுமல்லாமல் அதிபுத்திமானாகவும் இருந்தார்! அவர் கலியாணம் செய்து கொண்டு ஏதோ சர்க்கார் வேலை செய்து எப்படியோ இந்த சொத்தையும் சம்பாதித்தார். கோஷாலும் கலியாணம் செய்து கொண்டார்.

ஆனால், அவரால் கொஞ்சம்கூட சொத்துச் சம்பாதிக்க முடியவில்லை. கலியாண விஷயமாக இந்தப் பெயர்ப் பொருத்தமுள்ள நண்பர்களுக்குள் மனஸ்தாபமேற்பட்டது. கடைசியாக அந்த மனஸ்தாபம் வளர்ந்து இருவருக்கும் பேச்சு வார்த்தை கூட இல்லாமல் செய்து விட்டது. முகர்ஜி இறந்த அன்று கூட கோஷால் அவர் வீட்டுக்கு அடி எடுத்து வைக்கவில்லை. ஆனால், அவர் இரண்டாம் நாள் ஒரு ஆச்சர்யமான சங்கதியைக் கேள்விப்பட்டார். முகர்ஜி தனது சொத்துக்களைச் சமமாகப் பிரித்து, ஒரு பாகத்தைத் தன்னுடைய மகனுக்கும், மற்றொரு பாகத்தைத் தனது பெயர்ப் பொறுத்தமுள்ள நண்பர் மகனுக்கும் கொடுத்துப் போயிருந்தார். அப்போதிருந்து இந்தக் குவாபூர் ஜமீன் சொத்துக்களை முகர்ஜி வம்சமும், கோஷால் வம்சமும் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். ஜனங்கள் இப்படித்தான் கூறி வருகிறார்கள். இதை யாரும் மறுப்பதில்லை.

ஆனால், இப்போதோ கோஷால் வம்சம் கூட இரண்டு பாகமாகப் பிரிந்துவிட்டார்கள். ரொம்ப நாளைக்கு முன் ஒரு பங்குக்குச் சொந்தக்காரரான தாரிணி கோஷால்

வழக்கு விசாரணைக்காக ஜில்லா கோர்ட்டுக்குப் போயிருந்தார்.

அதே வாய்தாவில் அவருக்கு ஆறு ஏழு கேசுகள் இருந்தன. ஆனால் அவர் இந்தக் கோர்ட்டுத் தீர்ப்புகளை எல்லாம் துளியும் லட்சியம் செய்யாமல், எங்கிருந்தோ வந்த ஒரு கோர்ட்டுத் தீர்ப்பின் உத்திரவுப்படி இந்த உலகத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டார். கோஷால் வம்சத்தின் இன்னொரு பிரிவுக்குத் தலைவனான வேணி கோஷால் தனது சித்தப்பாவின் மரணத்தால் அதிக சந்தோஷமடைந்தான். உள்ளூரிலே கக்ஷி சேர்த்து அடுத்த வருஷம் சித்தப்பாவின் சிரார்த்தம் நடைபெறாமல் செய்யவேண்டுமென்று திட்டம் போட்டுக்கொண்டான். பத்து வருஷமாக சித்தப்பனும், மகனும் பேசிக் கொள்வதே கிடையாது. பத்து வருஷத்திற்கு முன் தாரிணியின் மனைவி இறந்து போனதால் வீடு சூன்யமாக இருந்தது. அப்போதே அவர் மகனை, மாமன் வீட்டிற்கு அனுப்பி விட்டு, தனியாகவே இருந்து கொண்டு மற்றவர்களுடன் வழக்காடிக் கொண்டு தம் காலத்தையும் முடித்துக் கொண்டார். தன் தந்தையின் மரணச் செய்தி காலேஜில் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் கிடைத்தது. வெகு நாளைக்குப் பிறகு நேற்றுச் சாயங்காலம்தான் தன் தந்தையின் சிரார்த்தத்தை நடத்துவதற்காக ரமேஷ் இங்கு வந்து சேர்ந்தான்.

வேலை வெட்டிகள் நிறைந்த பெரிய வீடு. இடையில் இன்னும் இரண்டு நாள்தான் இருக்கிறது. சிரார்த்த தினம் நெருங்க நெருங்க அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து கிழடு கட்டைகள் எல்லாம் வரத் தொடங்கின. ஆனால் குவாபூரிலிருந்து மட்டும் ஒரு ஆள் கூட வரவில்லை. ரமேஷுக்கு கொஞ்சம் கொஞ்சமாக விஷயம் தெரியலாயிற்று. கடைசி வரையிலும் கூட யாரும் வரமாட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டான். இருந்தாலும், பைரவ ஆசார்யாரும் அவருடைய குடும்பத்தார்களும் தான் வந்திருந்தார்கள். தனது கிராமத்துப் பிராமணர்கள் தம் வீட்டிற்கு வரவேண்டுமென்ற ஆசை ரமேஷுக்கு இல்லாதிருந்தாலும், காரியங்கள் எல்லாம் பெரிய

வீட்டிற்குத் தகுந்தாற்போல நடந்து கொண்டிருந்தன. இன்று வெகு நேரம் வரையிலும் ரமேஷ் வீட்டிற்குள் வேலையாக இருந்தான். ஏதோ காரியமாக வெளியில் வந்தவன், அங்கே இரண்டு வயோதிகர்கள் ஜமுக்காளத்தில் உட்கார்ந்துகொண்டு புகை குடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவர்களிடம் சென்று க்ஷேமம் விசாரிப்பதற்காக போக விரும்பினான். அதற்குள் பின்னால் ஏதோ சப்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தான்.

ஒரு வயோதிகர் ஆறு, ஏழு குழந்தைகளைத் தம்முடன் கூட்டிக்கொண்டு உள்ளே வந்து கொண்டிருந்தார். தோளில் அழுக்குப் படிந்த வேஷ்டி ஒன்றைப் போட்டிருந்தார். மூக்குக் கண்ணாடியை நன்கு தலையோடு சேர்த்துக் கட்டிக்கொண்டிருந்தார். தலை மயிர் முழுதும் வெளுத்திருந்தது. மீசை மயிரும் வெளுத்திருந்தாலும் புகை குடித்துக் குடித்துப் பழுப்பேறியிருந்தது. சிறிது முன்னுக்கு வந்து, அந்தப் பயங்கரமான கண்ணாடியுடன் ரமேஷைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, பிறகு அழத் தொடங்கினார். இவர் யாரென்பது ரமேஷுக்குத் தெரியாது. அவர் யாரானாலும் சரியே, ரமேஷ் திடுக்கிட்டு அவர் முன் போய் நின்றான். ரமேஷ் கையைப் பிடித்ததும் அவர் தழு தழுத்த குரலில், "இல்லை அப்பா ரமேஷ்! தாரிணி என்னை இவ்விதம் விட்டுவிட்டுப் போய் விடுவான் என்று நான் கனவில் கூடக் கருதியது இல்லை. பிறருக்குப் பயந்துகொண்டு பொய் பேசுபவனல்ல நான். நம்ம ரமேஷ் சிரார்த்தம் செய்யப் போவது போல் வேறு யாரும் செய்ததே இல்லை என்று நான் இங்கு வரும்போது வேணி கோஷாலிடம் சொல்லிவிட்டு வந்தேன்." பிறகு சிறிது பொறுத்து, "அப்பா, என்னைப்பற்றி பல பயல்கள் வந்து வித விதமாகச் சொல்லுவார்கள். இந்த தர்மதாஸ் தர்மத்திற்கு மட்டும் தாசனே ஒழிய வேறு யாருக்கும் தாசனல்ல என்பதை நீ நிச்சயமாக நம்பு" என்றார்.

இவ்வளவையும் கூறி அந்த வயோதிகர் தமது சத்தியத்தின் பெருமையை வெளிப்படுத்தி விட்டு, கோவிந்த காங்கூலி கையிலிருந்த ஹுக்காவைப் பிடுங்கி ஒரு தம்

பலமாக இழுத்தார். பிறகு ரொம்ப வேகமாகப் புகையை வெளியில் விட ஆரம்பித்தார்.

தர்மதாஸ் ஒன்றும் மிகைப் படுத்திக் கூறிவிடவில்லை. இங்கு சிரார்த்தத்திற்கு ஏற்பாடுகள் செய்வதுபோல் இவ்வளவு தடபுடலாக இதற்கு முன் இந்தப் பக்கத்தில் யாருமே செய்ததில்லை. கல்கத்தாவிலிருந்து பக்ஷணங்கள் செய்வதற்கு ஆட்கள் தருவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் வாசலில் அடுப்பு மூட்டியிருந்தார்கள். அவர்களைச் சுற்றி சிறுவர்களும் சிறுமியர்களுமாகக் கூடியிருந்தார்கள். ஏழை களுக்குத் துணிகள் கொடுக்க ஏற்பாடாகியிருந்தது. சண்டி மண்டபத்து உள்கட்டில் பைரவ ஆசார்யா பீஸ்களைக் கிழித்துக் குவித்துக் கொண்டிருந்தார். அங்கும் அநேகர் கூடியிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் ரமேஷின் இந்தக் காரியங்களை எல்லாம் கண்டு மனதிற்குள்ளாகவே சபித் துக்கொண்டிருந்தார்கள். ஏழை எளியவர்கள் தகவல் தெரிந்து தூர தூரத்திலிருந்து வந்து கூடினார்கள். பலதரப் பட்ட மனிதர்களும் வந்து வீடு நிறைந்தார்கள். ஒருவருக் கொருவர் தர்க்கமிட்டுக் கொண்டு எங்கும் ஒரே கூச்சல் மயமாக இருந்தது. இவைகளை எல்லாம் காணக் காண தர்மதாஸிற்கு இன்னம் அதிகமாக இருமல் எடுக்க ஆரம்பித்தது.

தர்மதாஸ் பேசியதைக் கேட்டு ரமேஷ் சிறிது வெட்க மடைந்தான். ‘ஒன்றும் பிரமாதமில்லை’ என்று சொல் வதைத் தவிர வேறு ஒன்றும் பேச முடியவில்லை. ஆனால் அதற்குள் தர்மதாஸ் அவனைத் தடுத்து எத்தனையோ விஷயங்களைப் பற்றிக் கூறினார். ஆனால், அவருடைய இருமல் சத்தத்தால் ஒரு வார்த்தை கூட யாருக்கும் புரிய வில்லை.

கோவிந்த காங்கூலி முந்தியே வந்திருந்தார். தர்மதாஸ் கூறிய வார்த்தைகளை எல்லாம் முன்பே கூறுவதற்கு இவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் இவைகள் ஒன்றையும் கூறவில்லை. இம்மாதிரி ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இழந்துவிட்டோமே என்ற பெருத்த கவலை அவரைப் பிடித்து உலுக்கியது.

இருந்தபோதிலும் இப்போது கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடவில்லை. உடனே அவர் அவசர அவசரமாக தர்மதாஸிடம், "நேற்றுக் காலையில், என்ன தர்மதாஸ்! இங்கு வருவதற்காகக் கிளம்பினேன். அப்போது வேணி என்னைக் கூப்பிட்டு, 'சித்தப்பா, புகை குடித்துவிட்டுப் போகலாம் வா' என்ருன். முதலில் அங்கு போகக்கூடாது என்றுதான் நினைத்தேன். இருந்தாலும் ஆள் என்ன சொல்லுவானே பார்க்கலாம் என்று போனேன். அப்பா ரமேஷ், வேணி என்ன சொன்ஞன் தெரியுமா?' 'சித்தப்பா நீ என்னமோ ரமேஷுக்கு உதவி செய்ய வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிருய்; ஆனுல் அவன் வீட்டில் யார் சாப்பிடப் போகிருர்கள்?' என்ருன். சரி, நான் என்ன விட்டுவிட்டேனு? அடே, நீ பெரிய மனிதனுக இருந்தால் இருந்துகொள். எங்கள் ரமேஷ் யாருக்கும் குறைந்தவனல்லவே. நான் சொன்னேன், 'வேணி பாபு, இதுதான் போகிற–வருகிற வழி; ஏழை எளியவர்கள் திரும்பி வரும்போது இங்கு நின்றுகொண்டு பார்; ரமேஷ் வயதில் சிறியவனுக இருந்தால் என்ன? எப்பேர்ப்பட்ட மனசு தெரியுமா? எனக்கும் இத்தனை வருஷமாகிவிட்டது. ஆனுல், இதற்குமுன் எங்குமே இவ்வளவு பெரிய ஏற்பாடுகளை நான் கண்டதே இல்லையே! ஏனப்பா தர்மதாஸ், இதெல்லாம் நம்மால் முடியக்கூடிய காரியமா? யாருடைய காரியமோ, அவரல்லவா மேலிருந்து கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்து வருகிருர். தாரிணி அண்ணு திக்பாலர்களில் ஒருவரேதான்; சந்தேகமில்லை" என்ருர்.

ஆனுல் தர்மதாஸின் இருமல் மட்டுப் படவில்லை. அவர் இடைவிடாமல் இருமிக்கொண்டே யிருந்தார். அவரைப் பார்த்துக் கொண்டுதான் இந்த அரிய விஷயங்களை காங்கூலி மஹாஷயர் இளம் ஜமீன்தாருக்கு எதிரில் சொன்ஞர். இதைக் கண்டு தர்மதாஸ் இதைவிட மேலாகப் பேசுவதற்கு யோசிக்கத் தொடங்கினுர்.

காங்கூலி மஹாஷயர் மறுபடியும், "அப்பா, நீ ஒன்றும் அந்நியனல்ல. நம்மைச் சேர்ந்தவன்தான். உனது தாயார், எனது அத்தைக்கு பெரியம்மா மகள். ராதாநகர்

பனர்ஜி வீடு—; தாரிணி அண்ணுவிற்கு இதெல்லாம் தெரியும். அப்போதிருந்து ஏதாவது ஒரு சங்கதி என்ருல்—ஒரு சண்டை சச்சரவோ, அல்லது சாக்ஷி வேண்டியிருந்தாலும், கூப்பிடு கோவிந்த காங்கூலியை என்பார்!" என்ருர்.

இதற்குள் எப்படியோ சிரமப்பட்டு தர்மதாஸ் தமது இருமலை அடக்கிவிட்டார். பிறகு மிகுந்த கோபத்துடன், "கோவிந்தா, ஏன் இப்படி வீணுக உளறுகிருய்? கொக், கொக், கொக். நான் இப்பத்த ஆசாமி அல்ல. எனக்கு, ஒன்றும் தெரியாதா? போன தடவை சாக்ஷி சொல்லச் சொன்னதற்கு, 'எனக்குக் காலுக்குச் செருப்புக் கூட இல்லை; வெறும் காலோடு எப்படி வரட்டும்?' என்ருய். கக், கக், கக். உடனே தாரிணி அண்ணு இரண்டரை ரூபாய் கொடுத்து ஒரு ஜோடி புதுச் செருப்பு வாங்கிக் கொடுத்தார். நீ அந்தச் செருப்பையே போட்டுக்கொண்டு வந்து வேணி பக்கம் சாதகமாக சாக்ஷி கூறிவிட்டு வந்தாய்! கக், கக்," என்ருர். கோவிந்த காங்கூலியின் கண்கள் கோபத்தால் சிவந்துவிட்டன. "நான் சாக்ஷி கூறினேனு?" என்ருர்.

"சாக்ஷி கூறவில்லை ?"

"ச்சீ! பொய் பேசாதே !"

"உங்கப்பன்தான் பொய்காரன் !"

கோவிந்த காங்கூலி தமது கிழிந்துபோன குடையைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு குதி குதித்து, "வாடா பயலே!" என்ருர்.

தர்மதாஸ் தம்முடைய மூங்கில் தடியை ஓங்கிக் கொண்டு கொக்கரித்தார். பிறகு பலமாக இரும ஆரம்பித்தார். ரமேஷ் திடுக்கிட்டு இருவருக்குமிடையில் வந்து நின்று கொண்டான். தர்மதாஸ் தமது தடியைத் தாழ்த்திக் கொண்டு இருமிக்கொண்டே, "நான் இந்தப் பயலுக்கு அண்ணன் முறையாகிறது. அப்படியிருந்தும் இந்தப் பயல் புத்தியைப் பாரு—" என்ருர். கோவிந்த காங்கூலியும் தமது குடையைத் தாழ்த்திவிட்டு, "ஆமாம்! இந்தப் பயல் என் அண்ணுதான் !" என்ருர்.

பலகாரம் செய்பவன் அடுப்பைவிட்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான். அங்கிருந்த அனைவரும் சப்தத்தைக் கேட்டு வேடிக்கை பார்க்க வந்து கூடிவிட்டார்கள். இவர்களுக்கு மத்தியில் ரமேஷ் ஆச்சரியத்துடன் நின்று கொண்டிருந்தான். அவன் ஒன்றும் பேசவில்லை. இரண்டு பேரும் வயது சென்ற கிழவர்கள். சாதாரண விஷயத்திற்காகவா இம்மாதிரி சண்டை செய்துகொள்வது! கூடத்தில் துணிகளை எண்ணிக்கொண்டிருந்த பைரவ ஆசார்யா எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு தானிருந்தார். அவர் ரமேஷிடம் வந்து, "நாநூறு வேஷ்டி கள் இருக்கிறது. இன்னம் வேண்டுமா?" என்று கேட் டார். ரமேஷினால் ஒன்றும் பேச முடியவில்லை. அவனு டைய இந் நிலையைக் காண பைரவ ஆசார்யாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவர் மிகுந்த கோபமான குரலில், "ச்சீ! காங்கூலி மஹாஷய், பாபு வருத்தப்படுகிறார். பாபு, நீங்கள் இதை எல்லாம் கவனியாதீர்கள். இங்கு அடிக்கடி இப்படி நடைபெறும். பெரிய சம்பல் நிறைந்த வீடுகளில் எத்தனையோ சண்டை சச்சரவுகள் நடக்கத்தான் நடக் கும். அடிதடி போட்டு மண்டையை உடைத்துக் கொள் வதுதான். பிறகு எல்லாரும் ஒன்றாகிவிடுவார்கள். சட்டர்ஜி, எழுந்து இங்கு வந்து இன்னம் துணி கிழிக்க வேண்டுமா என்று பாருங்கள்" என்றார்.

தர்மதாஸ் பதில் அளிப்பதற்கு முன்பே கோவிந்த காங்கூலி எழுந்து நின்றுகொண்டு மிகுந்த உற்சாகத் துடன், "ஆமாம், இதெல்லாம் நடைபெறுவதுதான். அடிக்கடி நிகழும். கும்பல் கூடினால் கூச்சலும் உண் டாகும்! ஆயிரம் பொய் சொல்லி ஒரு கலியாணம் செய்ய வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. உனக்கு ஞாபகம் இருக்கிறதா பைரவா? முகர்ஜி பெண் ரமா கலியாணத் தன்று ராகவ பட்டாச்சார்யாவும், ஹாரன் சட்டர்ஜியும் மண்டை உடைத்துக் கொள்ளவில்லை ? பைரவா, நான் இதையும் சொல்லிவிடுகிறேன். சின்னண்ணா செய்த காரியம் சரியல்ல. கீழ் ஜாதிக்காரர்களுக்குத் துணி கொடுப் பதும், நெய்யை சாம்பலில் ஊற்றுவதும் ஒன்றுதான். இதற்குப் பதிலாக, பிராமணர்களுக்கு ஒரு ஜோடி வேஷ்டி

யும், அவர்கள் குழந்தைகளுக்கு ஒவ்வொரு துண்டும் கொடுத்தால் பெயர் விளங்கும். நாளைக்கு நாமும் அப்படித் தான் செய்ய வேண்டும். என்ன தர்மதாஸ், உமது அபிப் பிராயம் என்ன ?'' என்ருர்.

தர்மதாஸ் தலையை அசைத்துக்கொண்டு, "அப்பா ரமேஷ் ! கோவிந்தன் சொல்வது ரொம்ப சரி; அந்தப் பயல்களுக்கு எத்தனை செய்தாலும் நல்ல பேர் கிடையாது. இல்லாவிட்டால் கீழ்ஜாதி என்று ஏன் சொல்லுகிருர்கள்? சொல்வது தெரிகிறதா ?'' என்ருர்.

இதுவரையிலும் ரமேஷ் மௌனமாக இருந்தான். துணி விஷயத்தைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தான். அவர்களுடைய குயுக்தி வாதங்களைக் கேட்டு அவன் வருத்தமடையவில்லை. இவர்கள் யாரைக் கீழ்ஜாதி என்று சொல்லுகிருர்களோ அவர்களுக்கு எதிரிலேயே இவர்கள் செய்த மானங்கெட்ட செய்கையை எண்ணித்தான் அதிக வருத்தமடைந்தான். இதற்காக இவர்களில் யாரும் துளிக் கூட வருந்தியதாகத் தெரியவில்லை. பைரவ ஆசார்யா இவ னுடைய பதிலுக்குக் காத்துக் கொண்டிருந்தார். அவரிடம், "இன்னும் இருநூறு வேஷ்டி கிழித்து வைத்திருங்கள் என்று சொன்னுன். கோவிந்தன் இடையில் தடுத்து, "ஆமாம், அவ்வளவு இல்லாமல் எப்படிக் காரியமாகும்; பைரவா, வா, நானும் வருகிறேன். நீ தனியாக என்னமா செய்வாய்?'' என்று கூறிவிட்டு யாரையும் எதிர்பார்க்காமல் பீஸ்கள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று விட் டார். ரமேஷ் வீட்டிற்குள் செல்ல விரும்பினுன். அதற்குள் தர்மதாஸ் அவனை ஒரு பக்கம் தனியாகக் கூட்டிக்கொண்டு போய் மெதுவாக, எத்தனையோ விஷயங்கள் கூறினுர். ரமேஷும் பதிலுக்குத் தலையை ஆட்டிக்கொண்டு போய் விட்டான். கோவிந்த காங்கூலி துணிகளை எண்ணிக் கொண்டே இதையும் கவனித்துக் கொண்டுதானிருந்தார். இதற்குள் ஒரு வயோதிகப் பிராமணன், "அப்பா ரமேஷ் ! எங்கேயிருக்கிருய் ?'' என்று கேட்டுக்கொண்டு வந்து சேர்ந்தார்.

இந்த பூதேவருடன் இரண்டு மூன்று சிறுவர்களும் சிறுமியர்களும் இருந்தார்கள். பெண் எல்லோரையும் விடப்

பெரியவள். அவள் கிழிந்துபோன ஒரு பழைய சட்டையைப் போட்டிருந்தாள். இரண்டு சிறுவர்களும் கோவணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்தவர்களெல்லாம் அவர்கள் யாரென்று பார்த்தார்கள். கோவிந்ததாஸ் அவரை வரவேற்றுக் கொண்டு, "வாருங்கோ, தீனு அண்ணு! தாங்கள் இன்று இங்கு வந்ததில் எங்களுக்கெல்லாம் பரம சந்தோஷம். பையன் தனியாகச் சிரமப்படுகிருன். ஆகையால் நீங்கள்—" தர்மதாஸ் மிகக் கோபமாக கோவிந்தனைப் பார்த்தார். ஆனுல் கோவிந்தன் அதை லட்சியம் செய்யாமல், "நீங்கள் இந்தப் பக்கம் வரப் போகிறதில்லை—" என்று கூறிக்கொண்டு ஹுக்காவை அவரிடம் கொடுத்தார். தீனு பட்டாச்சார்யா நன்கு உட்கார்ந்துகொண்டு ஹுக்காவை இரண்டு இழுப்பு இழுத்துக்கொண்டு, "அடே அப்பா, நான்தான் இங்கு இல்லையே! உன் மருமகளைக் கூட்டிவர சம்பந்தி வீடு போயிருந்தேன். தம்பி எங்கிருக்கிருன். ரொம்பத் தடபுடலாகக் காரியங்கள் நடைபெறும் போலிருக்கிறது. வரும் வழியில் கேள்விப்பட்டேன்; சாப்பாடு முடிந்த பிறகு வீட்டுக்குப் போகும் போது ஒவ்வொருவருக்கும் பதினுறு பதினுறு பூரியும் நாலு நாலு லட்டும் தரப் போகிருர்களாம்!" என்ருர்.

கோவிந்த காங்கூலி குரலை மட்டுப் படுத்திக்கொண்டு, "அதோடு, ஒவ்வொரு வேஷ்டியும் கிடைக்கும். இதோ பாரு, ரமேஷ். இதைத்தான் நான் தீனு அண்ணுவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். என்னமோ உங்களைப் போன்ற நாலு பேர்களுடைய ஆசீர்வாதத்தால் எல்லாக் காரியங்களும் நன்கு நடைபெற்று வருகிறது. ஆனுல் வேணி பின்னுல் கெட்ட எண்ணத்துடன் வேலை செய்கிருன். என்னையே இரண்டு மூன்று தரம் கூப்பிட்டு ஆள் அனுப்பியிருந்தானே! ஆனுல் என் விஷயத்தை விட்டுவிடலாம். ரமேஷும் நாங்களும், ஒரே ரத்தக் கலப்பு. ஆனுல் இந்த தீனு அண்ணு, தர்மதாஸ் அண்ணு இவர்களெல்லாம் உன்னை விட்டுவிடுவார்களா? தீனு அண்ணு எங்கோ வழியில் தெரிந்து ஓடோடியும் வந்திருக்கிருரே! ஓ, ஷஷ்டி சரண், கொஞ்சம் புகையிலை கொண்டு வா. அப்பா ரமேஷ், கொஞ்சம் இங்கு வா. ஒரு சங்கதி சொல்ல வேண்டும்" என்ருர்.

ரமேஷை, கோவிந்தன் ஒரு பக்கமாக அழைத்துக் கொண்டு போய், "உள்ளே தர்மதாஸ் மனைவி வந்திருக்கிருளா? ஜாக்கிரதை! அம்மாதிரி ஒன்றும் வைத்துக் கொள்ளாதே. இந்த அதர்மப் பிராமணன் என்ன சொன்னுலும், அவன் மனைவியின் கையில் மட்டும் உக்கிராண அறைச் சாவியைக் கொடுத்துவிடாதே. நெய், மாவு, எண்ணெய், உப்பு எல்லாவற்றிலும் பாதி கொண்டுபோய் விடுவாள். நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். நான் போனதும் உனது மன்னியை அனுப்பி வைக்கிறேன். அவள் வந்து சகல காரியங்களையும் கவனித்துக் கொள்வாள். நீ துளிக்கூடச் சிரமப்பட வேண்டாம்'' என்ருர்.

ரமேஷ் தலையை அசைத்துச் 'சரி' என்ருன். ஆனுல் அவனுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை. தர்மதாஸ், உக்கிராணத்து அறையைக் கவனித்துக் கொள்வதற்குத் தம் மனைவியை அனுப்புவதாக ரகசியமாகச் சொன்னது கோவிந்தனுக்கு எப்படித் தெரிந்தது!

இரண்டு சிறுவர்கள் தீனு பட்டாசார்யா தோளைப் பிடித்துக்கொண்டு, "சந்தேஷ், வேண்டும்" எனக் கூறினர்.

தீனு, ரமேஷையும், கோவிந்தனையும் பார்த்துக் கொண்டு "அடே, சந்தேஷுக்கு நான் எங்கு போவேன்?" என்ருர்.

"அதோ பார்" என்று பக்ஷணங்கள் செய்பவனைச் சுட்டிக் காட்டினுர்கள்.

இதற்குள் நாலைந்து குழந்தைகள் அழுதுகொண்டு வந்து, "அப்பா எங்களுக்கும் தரவேண்டும்" எனக் கேட்டனர்.

ரமேஷ், "சரி சரி, ஆசார்யஜி, குழந்தைகள் வீட்டில் கூட சாப்பிடாமல் வந்திருக்கும். அடே, உன் பெயர் என்னப்பா? அந்த தட்டை இங்கு எடுத்துக்கொண்டு வா" என உத்தரவிட்டான்.

மிட்டாய் செய்பவன் தட்டை எடுத்துக்கொண்டு வந்ததும் குழந்தைகள் அனைத்தும் அவனை முற்றுகை

இட்டுக்கொண்டன. அவனுக்கு எடுத்துக் கொடுக்க வேண்டிய சிரமமே இல்லை. அவைகளே எடுத்துக் கொண்டன. இதைப் பார்த்து தீனு பட்டாசார்யா மகிழ்ச்சி அடைந்தார். "அடே முனியா, சந்தேஷ் எப்படியடா இருக்கிறது?" என்ருர்.

"ரொம்ப நல்லாயிருக்கிறது அப்பா" என்று சொல்லி விட்டு சந்தேஷ் தின்பதில் ஈடுபட்டான். தீனு புன் முறுவலுடன், "உங்களுக்கென்ன, இனிப்பு இருந்தால் தீர்ந்தது. ஏப்பா மிட்டாய்க்காரா, இரும்புச் சட்டியை ஏன் இறக்கிவிட்டாய்? கோவிந்த அண்ணு, இன்னம் நேரமிருக்கிறதா?" என்ருர்.

மிட்டாய்க்காரன் ஒன்றையும் கவனியாமல், "ஆமாம், இன்னம் ரொம்ப நேரமிருக்கிறது. இன்னம் சந்தியா பூஜை........"

"அப்படியானுல் கோவிந்த அண்ணுவுக்குக் கொஞ்சம் கொடு. உன் கை பாகம் எப்படி இருக்கிறது என்று அவரும் பார்க்கட்டும். வேண்டாம், வேண்டாம், எனக்கு வேண்டாம். சரி, பாதி கொடு. பாதிக்கு மேல் வேண்டாம். அடே, ஷஷ்டிசரண் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா, கைகால் அலம்பிக்கொள்ளலாம்" என்ருர்.

இதற்குள் ரமேஷ், "உள்ளிருந்து இரண்டு மூன்று தட்டுகள் கொண்டு வா" என உத்தரவிட்டான். எஜ மானன் உத்தரவுப் பிரகாரம் தட்டுகளும், தண்ணீர் டம்ளர்களும் வந்தன. சிறிது நேரத்தில் மூன்று கிழவர் களும், செய்திருந்த பக்ஷணத்தில் சரிபாதியைச் சாப்பிட்டு விட்டார்கள். தீனநாத் திருப்தியாக ஏப்பம் விட்டுக் கொண்டு, "இவர்கள் கல்கத்தாவிலிருந்து வந்தவர்க ளல்லவா? என்ன தர்மதாஸ் அண்ணு?" என்ருர்.

தர்மதாஸின் தட்டு இன்னும் காலியாவில்லை. ஆகை யால் அவர் வாயைத் திறந்து ஸ்பஷ்டமாக ஒன்றும் சொல்லக்கூடவில்லை என்றுலும், இதில் அவருக்கு அபிப்பி ராயபேதம் இருப்பதாகத் தெரியவில்லை.

“ஆமாம் ரொம்பக் கெட்டிக்காரன்தான்” என்று கூறிவிட்டு கோவிந்தன் எல்லாருக்கும் கடைசியில் கை அலம்பச் சென்றார். அப்போது மிட்டாய்க்காரன் மிகுந்த பணிவுடன், “பண்டிட்ஜி, தாங்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்ட பிறகு, இந்த ரவாலாடையும்தான் பரிக்ஷை பண்ணிப் பாருங்களேன்” என்று வேண்டிக் கொண்டான்.

“ரவா லாடா! எங்கே கொண்டுவா பார்க்கலாம்” என்றார்.

ரவா லாடும் வந்தது. சந்தேஷ் அவ்வளவு சாப்பிட்ட பிறகும் கூட இந்தப் புதுப் பலகாரத்தையும் அவர்கள் சாப்பிடுவதை ரமேஷ் பார்த்துக்கொண்டிருந்தான். தீனநாத் தமது மகளைக் கூப்பிட்டு, “அம்மா இந்தா ரவாலாடையும் வாங்கிக்கொள்” என்றார்.

“இனி என்னால் சாப்பிட முடியாது” என்றாள் பெண்.

“அடே, ஏன் சாப்பிட முடியாது? சாப்பிட முடியும். ஒரு வாய் தண்ணீர் குடித்துவிட்டு வா, நன்றாகச் சாப்பிடலாம். சாப்பிட முடியாவிட்டால் மடியில் எடுத்து வைத்துக்கொள். நாளைக் காலையில் சாப்பிட்டுக் கொள்ளலாம். ஆமாம், அப்பா, திவ்யமான பக்ஷணங்கள். எல்லாம் அமிர்தம்தான். ரொம்ப நன்றாக இருந்தது. ஏப்பா, நீ இரண்டு வகை மிட்டாய்தான் செய்திருக்கிறாயா?” என்றார்.

ரமேஷ் ஒன்றும் பதில் அளிக்கவில்லை. மிட்டாய்க்காரன் மிகுந்த உற்சாகத்துடன், “இல்லை, ரஸகுல்லா, பாதாம்கீர்......” தீனநாத் ஆச்சர்யத்துடன் ரமேஷைப் பார்த்துக் கொண்டு, “பாதாம்கீரும் இருக்கிறதா? அதைக் கொண்டு வரவே இல்லையே. பாதாம்கீர், நான் ராதா நகரில் போஸ் பாபு வீட்டில் சாப்பிட்டது வாயில் இன்னம் அந்த ருசி இருந்துகொண்டே இருக்கிறது. அப்பா, நான் சொல்வதை நீ நம்பமாட்டாய். எனக்கு பாதாம்கீர்தான் ரொம்பப் பிடிக்கும்” என்றார்.

ரமேஷ் சிரித்துக்கொண்டு சற்று தலையை அசைத்தான். அவனுக்கு இதை நம்புவதில் ஒன்றும் சிரமம் தோன்றவில்லை. ராகால் ஏதோ வேலையாக வெளியில் போய்க்கொண்டிருந்தான். ரமேஷ் அவனை அழைத்து, "உள்ளே ஆசார்யா இருப்பார். கொஞ்சம் பாதாம்கீர் கொண்டுவரச் சொல்" என்றான்.

சந்தியா வேளை ஆகிவிட்டது. ஆனால், இந்தப் பிராமணர்கள் பாதாம்கீருக்காக உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து ராகால் வந்து "இனி உக்கிராண அறையைத் திறக்க முடியாது" என்றான்.

ரமேஷ் சிறிது கோபமடைந்தான். "நான் கேட்கிறேன் என்று போய்ச் சொல்" என்றான்.

கோவிந்த காங்கூலி, ரமேஷுடைய கோபத்தைக் கண்டு, "தீனு அண்ணு, பைரவன் புத்தியைப் பார்த்தாயா? தாயாரைவிடச் சிறிய தாயாருக்கு ரொம்பக் கவலை போலிருக்கிறது? ஆகையால் நான் சொல்வது........."

அவருடைய பேச்சு முழுவதையும் கேட்காமலேயே ராகால், "ஆசார்யா என்ன செய்வார்? அந்த வீட்டிலிருந்து எஜமானி அம்மா வந்து உக்கிராணத்து அறையைப் பூட்டிவிட்டார்கள்" என்றான்.

தர்மதாஸும், கோவிந்தனும் திடுக்கிட்டார்கள். "யார்? எஜமானி யார்?" என்றார்கள். ரமேஷும் ஆச்சரியத்துடன், "என்ன, பெரியம்மா வந்திருக்கிறார்களா?" என்றான்.

"ஆமாம். அவர்கள் வந்ததும், சின்ன அறை பெரிய அறை இரண்டையும் பூட்டிவிட்டார்கள்."

ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் ரமேஷால் பேச முடியவில்லை. அவன் எழுந்திருந்து உள்ளே சென்றான்.

"பெரியம்மா!"

தன்னைக் கூப்பிடுவதைக் கேட்டு விஸ்வேசுவரி உக்கிராண அறையிலிருந்து வெளியில் வந்தாள். வேணியின்

தாயாருக்கு வயது ஐம்பதுக்குக் குறையாது. ஆனால் பார்ப்பவர்கள் நாற்பது வயதுதான் மதிப்பிடுவார்கள். ரமேஷ் அவளையே கூர்ந்து கவனித்தான். இன்னம் அவளுடைய பொன்னிற மேனி சிறிதும் மாறுபடவில்லை. பழைய சௌந்தர்யம் இன்னமும் அவளிடம் குடிகொண்டிருந்தது. கத்தரித்து விடப்பட்டிருந்த அவளுடைய கூந்தல் நெற்றியை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. அவளுடைய அதரங்கள், நெற்றி, கன்னம் முதலியவைகளெல்லாம் கடைந்து எடுக்கப்பட்டது போலிருந்தது. இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக அவளுடைய கண் பார்வை மிகுந்த குளிர்ச்சியுடையதாயிருந்தது. சிறிது நேரம் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தாலே உள்ளத்திற்குச் சாந்தி உண்டாகும்.

இந்தப் பெரியம்மா ரமேஷிடமும் அவனது காலஞ் சென்ற தாயாரிடமும் மிகுந்த பிரியமாயிருந்தாள். கலியாணமாகி சில வருஷங்கள் வரையிலும் இருவருக்கும் குழந்தை இல்லாதிருந்தது. அந்தக் காலத்தில் இவர்களிருவரும் மாமி நாத்திகளுடைய திட்டுதலைப் பொறுக்காமல் அழுதிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேயே இருவருடைய சிநேகமும் பலப்பட்டது. அதற்குப் பிறகு கூட்டுக் குடும்பத்தில் இவர்களுக்குள் எத்தனையோ சண்டைகள் நேரிட்டிருக்கின்றன. இருந்தாலும் இவர்களுடைய நட்பு அவைகளினால் பாதகமடைந்ததில்லை. வெகு நாளைக்குப் பிறகு மறுபடியும் அவள் தனது மைத்துனி வீட்டிற்குள் நுழைந்து முன்பு அவள் புழங்கிக் கொண்டிருந்த சாமான்களைப் பார்க்கவும் அவள் கண்களில் நீர் நிறைந்தது. ரமேஷ் கூப்பிடவும் இவள் வெளியில் வந்தாள். அவள் சிவந்திருந்த தன் கண்களை முந்தானையால் துடைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து ரமேஷ் திடுக்கிட்டான். ஒரு வேளை தந்தையற்ற தனயனைப் பார்த்ததும் அவளுடைய பெண் உள்ளம் விம்மியிருக்கும். ஆனால் அவள் அதைச் சிறிதும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், "ரமேஷ், என்னை அடையாளம் தெரிகிறதா?" என்றாள்.

பதிலளிப்பதற்குள் அவனுடைய உதடுகள் துடித்தன. தாயார் இறந்த பிறகு, மாமன் வீடு போகிறவரையி

லும் இந்தப் பெரியம்மாதான் இவனை மார்போட ணைத்து வளர்த்தாள். இவனைப் பிரிய துளியும் அவள் இசைந்ததில்லை. அவைகள் எல்லாம் அவன் நினைவிற்கு வந்தன. நேற்று வீட்டுக்குப் போயிருந்தபோதுகூட பெரியம்மாவைப் பார்க்க முடியவில்லை. அது தவிர, வேணியும், சின்னம்மாவும் அலட்சியமாக நடந்து கொண் டதிலிருந்து, இந்தக் கிராமத்திலே நமக்கு வேண்டிய வர்கள் யாருமே கிடையாது என்று எண்ணியிருந்தான். விசுவேசுவரி சிறிது நேரம் ரமேஷ் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, “இல்லை அப்பா, இம்மாதிரி சமயங் களில் மனசைக் கல்லாக்கிக் கொள்ளவேண்டும்” என்றாள்.

ஆனால், அவளுடைய குரலிலே சாதாரணமாகத் தென் படும் இனிமையைக் காணோம். ரமேஷ் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டான். வீண் கௌரவம் காட்டக் கூடாத இடத்தில் காட்டுவதைப் போன்ற போலித்தனம் உலகத்திலேயே வேறு கிடையாது என்பதைத் தெரிந்து கொண்டான். உடனே அவன், “ஆமாம், பெரியம்மா ; என் மனசை ரொம்பத் திடப்படுத்திக் கொண்டேன். என்னாலானதைச் செய்து கொள்கிறேன். நீ எதற்காக வரவேண்டும் ?” என்றான்.

பெரியம்மா சிரித்தாள். “ரமேஷ், உனக்கு இதற்குப் பதில் சொல்லுவதற்கு நீயாக என்னை இங்கு வரவழைக்க வில்லை. சரி, கேளு. எல்லாக் காரியமும் முடிகிற வரை யிலும் உக்கிராணத்து வீட்டிலிருந்து எந்தச் சாமானும் வெளியில் போக அனுமதிக்கமாட்டேன். நான் போகிற போது உக்கிராணத்து அறைச் சாவியை உன்னிடம் கொடுத்துப் போகிறேன். பிறகு திரும்பி வந்து வாங்கிக் கொள்கிறேன். பாரு, சாவிக் கொத்தை யாரிடமும் கொடுத்துவிடாதே. நேற்று அண்ணாவைப் பார்த்தாயா?” என்றாள்.

இந்தக் கேள்வி ரமேஷுக்குக் கசப்பாக இருந்தது. தன்னுடைய மகன் விஷயம் பெரியம்மாவுக்குத் தெரியுமா தெரியாதா என்பதை அவனால் தீர்மானிக்க முடியவில்லை.

அவன் சிறிது யோசித்துவிட்டு, "அண்ணு வீட்டில் அப்போது இல்லை" என்ருன்.

கேள்வி கேட்கும்போது பெரியம்மாவின் முகம் வாடியிருந்தது. ஆனுல், அவன் அளித்த பதிலைக் கேட்டு அவள் முகம் மலர்ந்ததை அவன் அறிந்தான். உடனே அவள் சிரித்துக்கொண்டு, "அட கடவுளே! ஒரு தரம் இல்லாவிட்டால் இரண்டாந்தரம் போய்ப் பார்ப்பது? அவன் உன் பேரில் கோபமாயிருக்கிறது எனக்குத் தெரியும். ஆனுல் உனக்கு உன் காரியமாக வேண்டாமா? இன்னொருதரம் போய் நன்கு விஷயத்தைச் சொல்லு. அவன் உனது அண்ணுதானே. அவனிடம் பணிந்து போவதில் உனக்கு ஒன்றும் இழிவு வந்துவிடாது. அது தவிர, இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் எல்லாருடைய கையையும் காலையும் பிடித்து விரோதத்தை ஒழித்துக் கொள்வது தான் நல்லது. என் கண்ணல்ல, ஒரு தரம் போடா அப்பா! இப்போது அவன் வீட்டில்தானிருப்பான்" என்ருள்.

ரமேஷ் பேசாமலிருந்தான். பெரியம்மா எதற்காக இப்படி வற்புறுத்துகிருள் என்பது அவனுக்கு விளங்கவில்லை. விசுவேஸ்வரி இன்னும் சற்று முன் வந்து, "வெளியில் இருக்கிருர்களே அவர்களைப் பற்றி உன்னைவிட எனக்கு நன்கு தெரியும். நீ அவர்கள் பேச்சைக் கேட்டுவிடாதே. வா, போவோம். நீ என்னேடு வா, உன் அண்ணுவிடம் போவோம்" என்ருள்.

ரமேஷ் தலையை அசைத்துக்கொண்டு, "முடியாது பெரியம்மா; அது ஒருகாலும் முடியாது. வெளியில் உட்கார்ந்திருப்பவர்கள், எப்பேர்ப்பட்டவர்களானுலும் சரியே, அவர்கள்தான் இப்போது எனக்கு ஆவார்கள்" என்ருன்.

ரமேஷ் இன்னும் என்னவெல்லாமோ கூற விரும்பினுன். ஆனுல் அவன் பெரியம்மாவின் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு பேச்சை நிறுத்திக் கொண்டான். அவளுடைய முகம் இருளடைந்துவிட்டது. சிறிது நேரம் கழித்து அவள் ஒருபெருமூச்சு விட்டுக்கொண்டு, "அப்படி

யாஞல் சரி; அவனிடம் வரமாட்டேன் என்று சொல்லும் போது வீணுக உன்னை ஏன் தொந்தரவு செய்யவேண்டும். நீ எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். உன் காரியம் ஒன்றும் நின்றுவிடாது. நான் நாளைக்கு அதிகாலையிலேயே வந்துவிடுகிறேன்'' என்ருள்.

இதைக் கூறியதும் அவள் தன் வேலைக்காரியை அழைத்துக் கொண்டுபோய்விட்டாள். ரமேஷ் வேணியைச் சந்தித்திருக்கிருன். இருவருக்குள்ளேயும் ஏதோ பேச்சு நடந்திருக்கிறது என்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டாள். அவள் போன வழியைப் பார்த்துக் கொண்டே ரமேஷ் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தான். மிகுந்த சலிப்புடன் அங்கிருந்து வெளியில் வந்தான். அப்போது கோவிந்தன், "ஏனப்பா ! பெரியம்மா வந்திருந் தார்களா?'' என்ருர். ரமேஷ், " ஆம் " என்ருன்.

" உக்கிராணத்து அறையைப் பூட்டிவிட்டு சாவியை எடுத்துக்கொண்டு போய்விட்டாளாம்.''

ரமேஷ் இதற்குத் தலை அசைத்து, 'ஆம்' என்று பதில் அளித்தான். ஏனென்ருல் போகிறபோது என்ன நினைத் தாளோ தெரியவில்லை. சாவியைக் கொண்டு போய் விட்டாள்.

" பார்த்தாயா தர்மதாஸ்? நான் சொன்னபடிதானே நடந்தது! என்னப்பா ரமேஷ், விஷயம் தெரிந்ததா?'' என்ருர் கோவிந்த பட்டாச்சார்யா.

ரமேஷ் மிகுந்த கோபமடைந்தான். இருந்தாலும் வேறு வழியில்லாததால் வெளிக்குக் காட்டிக் கொள்ள வில்லை. தீனு பட்டாச்சார்யா இன்னும் இங்குதானிருந்தார். அவருக்குத் துளிக்கூடப் புத்தி கிடையாது. தனது குடும்ப முழுதுக்கும் வயிருர உண்ண உணவு கொடுத்தவனை வாய் சலிக்கப் புகழாமல் அப்பால் போகமாட்டார். அந்தப் பிராமணன் ரொம்ப அலட்சியமாக, " அப்பா, இது யாருக்குத் தெரியாது! உக்கிராணம் வேறு யார் கைக்கும் போகக்கூடாது என்பதுதான் இதன் அர்த்தம். அவளுக்கு எல்லாம் தெரியும்'' என்ருர்.

கோவிந்த பட்டாச்சார்யா மிகுந்த கோபத்துட னிருந்தார். "நீங்கள் விஷயம் தெரியாமல் ஏன் பேசு கிறீர்கள்? நடந்த விஷயம் என்னவென்று தெரியுமா? அதற்குள் அவள் கருத்தை அறியப் போய்விட்டீர்கள்!" என்றார். இதைக் கேட்டதும் தீனு பட்டாச்சார்யா, "அடே, இதில் தெரிவதற்கு என்னப்பா இருக்கிறது? எஜமானியம்மாள் வந்து உக்கிராணத்து அறையைப் பூட்டிவிட்டு சாவியை எடுத்துக்கொண்டு போய்விட் டாள் என்று சொன்னது தெரியவில்லை ? இதற்கு யார் தான் என்ன சொல்ல முடியும்?" என்றார்.

கோவிந்தன் மிகுந்த கோபத்துடன், "அடே பட்டாச் சார்யா, நீ வீட்டுக்குப் போகமாட்டாய்? நீ வந்த காரியம் முடிந்தது. குடும்பம் முழுவதும் நன்கு சாப்பிட்டீர்கள். மடியிலும் கட்டிக்கொண்டீர்கள். இன்னும் ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? இனி நாளை வந்து பாதாம்கீர் சாப்பிட லாம். இன்றைக்கு இனி ஒன்றும் கிடையாது. இனி போகலாம். எங்களுக்கு இன்னும் எத்தனையோ வேலை இருக்கிறது" என்றார்.

தீனு பட்டாச்சார்யா மிகுந்த வெட்கமடைந்தார். ரமேஷும் மிகுந்த கோபமடைந்தான்.

கோவிந்த காங்கூலி இன்னும் என்னவெல்லாமோ பேசியிருப்பார். அதற்குள் ரமேஷ், "காங்கூலிஜி, நீங்கள் பேசுவது என்ன? எதற்காக ஒருவரை இம்மாதிரி அவமானப்படுத்த வேண்டும்?" என்றான்.

கோவிந்த காங்கூலி இதைக் கேட்டுத் திடுக்கிட்டார். இருந்தாலும் அவர் உடனே சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "அப்பா, நான் யாரை அவமானம் செய்தேன். நான் சொன்னது சரியா தப்பா என்று இவர்களிடமே கேட்டுப் பாரு. அவர் கிளைக்குக் கிளை தாவினால் நான் இலைக்கு இலை தாவுகிறேன். தர்மதாஸ் அண்ணா இந்தக் கிழட்டுப் பிராமணனின் முட்டாள்தனத்தைப் பார்த்தாயா? ரொம்ப சரி" என்றார்.

என்ன பார்த்தது என்பது தர்மதாஸுக்குத்தான் தெரியும்; ஆனால் ரமேஷ் இந்த மனிதனின் அகம்பாவத்தை

யும், மானங்கெட்ட செய்கையையும்தான் பார்த்தான். உடனே தீனு பட்டாச்சார்யா, "அப்பா ரமேஷ், கோவிந்தன் சொல்வது எல்லாம் உண்மைதான். நான் பரம ஏழை என்பது எல்லாருக்கும் தெரியும். இவர்களுக்குப் போல எனக்கு நிலபுலன்கள் ஒன்றும் கிடையாது. எப்படியோ கஷ்டப்பட்டு ஜீவனம் செய்து வருகிறேன். என் குழந்தை குட்டிகளுக்கு நல்ல சாப்பாடு போடுவதற்கு ஆண்டவன் எனக்குச் சாமர்த்தியம் அளிக்கவில்லே. ஆகையால் எங்கேயாவது பெரிய வீடுகளில் விசேஷம் நடந்தால்தான் போய் சாப்பிடுவார்கள். அப்பா, இதைப் பற்றி நீ கவலேப்படாதே. தாரிணி அண்ணு உயிரோடிருந்த வரையிலும் எங்களுக்கெல்லாம் மனம்போல வழங்கினுர். இப்போது நாங்கள் வயிருர உண்டதை அவர் மேலிருந்து பார்த்து ரொம்ப சந்தோஷப்படுவார் என்பது நிச்சயமாக எனக்குத் தெரியும்" என்று கூறியதும் அவர் கண்களில் நீர் நிரைந்தது. ரமேஷ் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான். தீனு பட்டாச்சார்யா அழுக்கடைந்து கிழிந்து ஒட்டுப் போட்டிருந்த தனது வேஷ்டியால் கண்ணேத் துடைத்துக்கொண்டு, "அப்பா, நான் மட்டும் என்று நினேத்துக்கொள்ளாதே. இங்கு என்னேப் போல் இருக்கிருர்களே அவர்களில் யாருமே தாரிணி அண்ணுவிடம் கையேந்திவிட்டு வெறுங்கையோடு போனதில்லே. இதெல்லாம் யாருக்குத் தெரியும்! அவர் வலது கையில் கொடுப்பது இடது கைக்குக் கூடத் தெரியாது. சரி, உங்களுக்கு வேறு வேலே இருக்கும். அம்மா முனியா, அப்பா ஹரிதன் எழுந்திருங்கள் போவோம். இனி நாளேக் காலே வரலாம். அப்பா ரமேஷ், வேறு நான் என்ன சொல்லட்டும்? உனது தந்தையைப் போல வாழ்ந்து சிரஞ்சீவியாக இரு" என்றுர்.

ரமேஷ் அவருடன் சிறிது தூரம் வந்து, "பட்டாச்சார்யாஜி, இன்னும் இரண்டு மூன்று நாளேக்கு என் மேல் தயவு வையுங்கள். எனக்குச் சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது. இந்த வீட்டிற்கு ஹரிதன் தாயார் வந்தால் நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்" என்றுன்.

பட்டாச்சார்யா ரமேஷின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு அழுதபடி, "அப்பா ரமேஷ், நான் ஒரு பரம ஏழை. நீ என்னிடம் இப்படிப் பேசுவது எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கிறது" என்ருர்.

தன்னுடைய குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு அந்தப் பிராமணன் மெதுவாகப் போய்விட்டார். ரமேஷூம் திரும்பி வந்தான். காங்கூலியிடம் பேசுவதற்கு வாய் எடுத்தான். அதற்குள் அவரே, "அப்பா ரமேஷ், இது எங்கள் சொந்த வேலை. நீ அழைக்காவிட்டால்கூட நாங்களே வந்து எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டியது. ஆகையால்தான் நான் வந்தேன். தர்மதாஸூம் நானும் நீ அழைப்பாய் என்று காத்துக்கொண்டிருக்க மாட்டோம்" என்ருர்.

தர்மதாஸ் இன்னும் புகைபிடித்துக்கொண்டே இருமிக்கொண்டிருந்தார். அவர் தடியை ஊன்றி எழுந்து நின்றுகொண்டு, "கேளு ரமேஷ், நான் வேணி கோஷால் அல்ல. நாங்கள் நல்ல குலத்தைச் சேர்ந்தவர்கள்" என்ருர். தர்மதாஸின் இந்த ஆபாசப் பேச்சைக் கேட்டு ரமேஷ் திடுக்கிட்டான். இருந்தாலும் இப்போது அவன் கோபமடையவில்லை. படிப்பில்லாததாலும், சகவாச தோஷத்தாலும் எவ்வளவு ஆபாசமாகவும் இவர்கள் பேசிவிடுவார்கள். தாங்கள் பேசுவது ஆபாசம் என்பதுகூடத் தெரியாது. இவைகளை எல்லாம் இந்தச் சிறு வயதிலேயே ரமேஷ் நன்கு அறிந்து வைத்திருந்தான்.

பெரியம்மாவின் அன்பையும், கவலையையும் எண்ணி மனதிற்குள்ளாகவே துக்கமடைந்தான். எல்லோரும் சென்ற பிறகு ரமேஷ், அண்ணுவிடம் போவதற்குப் புறப்பட்டான். அவன் வேணி வீட்டிற்குள் போகும்போது மணி எட்டு அடித்துவிட்டது. வீட்டுக்குள் ஏதோ சண்டை நடப்பதுபோல் கேட்டது. கோவிந்த காங்கூலி தான் அதிகமாகக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். வெளியில் சப்தம் நன்கு கேட்டது. கோவிந்த காங்கூலி கூறுகிருர். "அவன் நாலு நாளைக்குள் நிர்மூலமாக அழிந்து போகாவிட்டால் என் பெயரை மாற்றிக் கொள்கிறேன்

வேணு பாபு. எவ்வளவு ஆடம்பரமாகச் செலவு செய்திருன் தெரியுமா? தாரிணி கோஷால் ஒரு தம்பிடி கூட வைத்துவிட்டுச் சாகவில்லை என்பது எனக்குத் தெரியும். பின் இந்த ஆடம்பரமெல்லாம் எதற்காக? அடே, கையில் காசிருந்தால் செய். இல்லாவிட்டால் யாராவது நிலத்தை அடகு வைத்து வட்டிக்குப் பணம் வாங்கி தந்தைக்குச் சிரார்த்தம் செய்வார்களா? வேணி மாதவ பாபு, இந்தப் படவா குறைந்தது மூவாயிரம் ரூபாயாவது கடன் வாங்கியிருப்பான் என்று நிச்சயமாகச் சொல்லுகிறேன்" என்ருர்.

வேணி உற்சாகத்துடன், "அப்படியானுல் இதன் முழு விவரத்தையும் தெரியவேண்டும் சித்தப்பா" என்ருன்.

கோவிந்தன் மெதுவாக, "அப்பா, கொஞ்சம் பொறு. நான் மெதுவாக அங்கு நுழைந்து கொள்கிறேன். அதற்கப்புறம்......அடே, வெளியில் யார் நிற்பது? யாரு? ரமேஷா? அடே அப்பா, நாங்களிருக்க நீ எதற்காக இராத்திரியில் வெளியில் வரவேண்டும்?" என்ருர்.

ஆனுல் ரமேஷ் இதற்கு ஒன்றும் பதில் அளிக்கவில்லை. அவன் வேணியிடம், "அண்ணு, உன்னிடம் தான் வந்திருக்கிறேன்" என்ருன். வேணி பாபு திகைப்படைந்து விட்டான். ஆனுல் கோவிந்தன் உடனே, "நீ ஏன் வரக்கூடாது அப்பா! நூறு தரம் வரலாம். இதுவும் உன் வீடுதான்; அண்ணுவோ தந்தைக்குச் சமானமானவர். தாரிணி பாபுவிடம் இருந்த விரோதம், அவரோடேயே போகட்டும். இனி விரோதம் எதற்காக? சகோதரர்களிருவரும் ஒன்ருகி விட்டீர்களானுல் நாங்களும் பார்த்து சந்தோஷமடைவோம் என்று சொல்லுவதற்குத்தான் வந்தேன். என்ன ஹால்தார் மாமா? என்ன சொல்லுகிறீர்கள்? ஏன் நின்று கொண்டிருக்கிருய்? யாரடா அங்கே? ஒரு ஜமுக்காளம் கொண்டுவா. இல்லை வேணி பாபு, நீங்கள் மூத்தவர். நீங்கள்தான் இனி சகலமும். நீங்கள் இப்படிப் பிரிந்து இருந்தால் காரியமாகாது. அம்மாவே நேரில் போன பிறகு........"

வேணி திடுக்கிட்டான். "என்ன, அம்மா போயிருந்தாளா?"

இதைக் கண்டு கோவிந்தன் மனதிற்குள்ளளாகவே சந்தோஷமடைந்தார். ஆனால் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் ரொம்பப் பெரிய மனிதன் போல, "சும்மா போய்விட்டு மாத்திரம் வந்துவிடவில்லை. சகல காரியங்களையும் அவர்தான் கவனிக்கிறார். அவர் கவனிக்காவிட்டால் வேறு யார்தான் கவனிப்பது?" என்றார்.

எல்லோரும் பேசாமலிருந்தார்கள். மறுபடியும் கோவிந்தன், "ஊருக்குள்ளே பெரியம்மாவைப் போல வேறு யாராவது உண்டா? இல்லை வேணி பாபு, அதை எதிரில் சொல்லக்கூடாது. ஜனங்கள் என்ன சொன்னாலும் சரி; ஊருக்குள்ளே உங்கள் தாயார்தான் லக்ஷ்மி. இம்மாதிரி தாயார் எல்லோருக்கும் கிடைக்குக் கூடுமா?" என்றார்.

வேணி சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "சரி" என்றான்.

உடனே கோவிந்தன் அழுத்தமாக, "வேணி பாபு, அம்மா 'சரி' என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. நீங்களே போய் இருந்து எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும். எல்லாப் பொறுப்பும் உங்களைச் சேர்ந்தது தான். இப்போது நீங்களெல்லோரும் இங்கு கூடியிருக்கிறீர்கள்! யார் யாருக்கு அழைப்பு அனுப்புவது என்பதை ஏன் தீர்மானிக்கப்படாது? என்னப்பா ரமேஷ்! ஹால்தார் மாமா, நான் சொல்வதெப்படி? தர்மதாஸ் அண்ணா, ஏன் பேசாமலிருக்கிறாய்? யாரை அழைக்க வேண்டும். யாரை அழைக்கக்கூடாது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்" என்றார்.

ரமேஷ் நின்றுகொண்டே, "அண்ணா, நீங்கள் நேரில் வீட்டிற்கு வந்து——"

வேணி மிகக் கம்பீரமாக, "அம்மா வந்த பிறகு நான் வந்தாலென்ன வராவிட்டாலென்ன? என்ன கோவிந்த சித்தப்பா?" என்றான்.

கோவிந்தன் பேச ஆரம்பிப்பதற்குள் ரமேஷ், "அண்ணா, உங்களுக்குச் சிரமம் அளிக்க விரும்பவில்லை. ஒரு தரம்தான் வந்துவிட்டு வாருங்களேன்" என்றான்.

வேணி ஒன்றும் பேசவில்லை. கோவிந்தன் ஏதோ பேச ஆரம்பித்தான். ஆனால் அதற்குள் ரமேஷ் எழுந்து சென்றுவிட்டான். உடனே கோவிந்தன் வெளியில் சென்று எட்டிப் பார்த்துவிட்டு வந்து மெதுவாக, "வேணி பாபு, நீங்களே பார்த்துக்கொண்டீர்களல்லவா, அவன் பேசிய தோரணையை ?" என்றார்.

வேணி என்னமோ யோசித்துக் கொண்டிருந்ததால் இதற்குப் பதில் அளிக்கவில்லை.

வழியில் வரும்போது கோவிந்தனுடைய பேச்சுக்களை நினைத்து ரமேஷ் வெறுப்படைந்தான். பாதி தூரம் போய் விட்டு அவன் மறுபடியும் வேணி கோஷால் வீட்டிற்குள் நுழைந்தான். அப்போது உள்ளே பலத்த வாக்குவாதங்கள் நடந்துகொண்டிருந்தன. ஆனால் அவைகளைக் கேட்பதற்கு அவனுக்கு விருப்பமில்லை. அவன் நேராக உள் கட்டிற்குச் சென்று, "பெரியம்மா!" என்று கூப்பிட்டான்.

பெரியம்மா அப்போது தனது அறைக்கெதிரில் இருளில் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். இரவு நேரத்திற்குப் பிறகு ரமேஷினுடைய குரலைக் கேட்டு ஆச்சரியமடைந்தாள். அவள் உடனே, "ரமேஷ்? ஏனப்பா ?" என்றாள்.

ரமேஷ் அருகில் சென்றான். பெரியம்மா சிறிது கலக்கத்துடன், "கொஞ்சம் இரு அப்பா, விளக்குக் கொண்டு வரச் சொல்லுகிறேன்" என்றாள்.

"விளக்கு வேண்டியதில்லை. சும்மா, உட்காருங்கள்" என்றான் ரமேஷ்.

அவனும் இருட்டில் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டான். "இந்த நேரத்தில் எங்கு வந்தாயப்பா ?" என்றாள்.

ரமேஷ், "இன்னும் யாருக்கும் அழைப்பு அனுப்பவில்லை. ஆகையால் உன்னிடம் கேட்டுப் போகலாமென்று வந்தேன்" என்றான்.

" எனக்கு என்ன தெரியும் ? அவர்கள் எல்லோரும் என்ன சொல்கிறார்கள் ? கோவிந்த காங்கூலி, பட்டாச் சார்யா......" ரமேஷ் இடையில் தடுத்து, " அவர்கள் சொல்வதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அவர் களிடம் கேட்கவும் மாட்டேன். நீ சொல்கிறபடி செய் கிறேன் " என்றான்.

ரமேஷ் சிறிது உணர்ச்சியுடன் பேசியதைக் கண்டு அவள் சிறிது ஆச்சர்யமடைந்தாள். சிறிது நேரம் பேசாம லிருந்துவிட்டு, " ஏன் ரமேஷ், எல்லோரைக் காட்டிலும் அவர்கள்தான் ரொம்ப வேண்டியவர்கள் என்று சொன்னாய். அது எப்படியோ போகட்டும். நான் பெண். என்னத்தைச் சொல்லுவது ? இந்த கிராமத்தில், ஏன் எல்லாக் கிராமத்திலும்தான், அவர்கள் இவர்களோடு சாப்பிட மாட்டார்கள். இவர்கள் அவர்களோடு சாப்பிட மாட்டார்கள். யாரைத் தள்ளுவது, யாரை வைத்துக் கொள்வது என்ற பிரச்னை கிராமங்களில் ரொம்பக் கஷ்ட மானது " என்றாள்.

இதைக் கேட்டு ரமேஷ் சிறிதும் ஆச்சரியமடைய வில்லை. இந்த இரண்டு மூன்று நாளிலேயே அவனுக்குச் சிறிது அனுபவம் ஏற்பட்டிருந்தது. " எதனால் இப்படி நடக்கிறார்கள் ?" என்று ரமேஷ் கேட்டான்.

விசுவேசுவரி, " அதற்கு, எத்தனையோ காரணங்கள். நீ இங்கு வசித்தால் அனைத்தையும் தெரிந்து கொள்வாய். சிலரிடம் உண்மையில் சில குறைகள் இருக்கத்தான் இருக்கிறது. வேறு சிலர் மேல் அபாண்டமாகச் சுமத்து கிறார்கள். அதைத் தவிர வழக்குகள், பொய் சாக்ஷிகள் இவைகள் மூலம் கக்ஷிகள் ஏற்படுகின்றன. நான் இன்னும் இரண்டு தினத்திற்கு முந்தி உன்னிடம் வந்திருந்தால் நீ இவ்வளவு சிரமமடைய வேண்டி இராது. இதை எப்படிக் குறைவின்றி நடத்துவது என்பதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன் " என்றாள்.

அவளுடைய பேச்சு ரமேஷுக்குப் புரியவில்லை. யார் உண்மைக் குற்றவாளிகள் ; யார் பொய்க் குற்றவாளிகள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவன்

மிகுந்த கோபத்துடன், "எனக்கும் இந்த பேச்சுக்கும் என்ன சம்பந்தம்? என்னை ஒரு வகையில் அயலூருக் காரன் என்றே சொல்லிவிடலாம். எனக்கு யாரிடத்திலும் விரோதம் கிடையாதே! ஆகையால் பெரியம்மா, நான் சொல்வதைக் கேளு. இந்தக் கக்ஷிகளை எல்லாம் நான் லக்ஷியம் செய்யப் போவதில்லை. பிராமணர் பிராமணரல் லாதார் சகலரையும் நான் அழைக்கப் போகிறேன். ஆனால் உன்னுடைய அனுமதி இல்லாமல் ஒன்றும் செய்ய முடிவ தில்லை. ஆகையால் உனது அனுமதியையும் கொடுத்து விடு" என்றான்.

அவள் சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தாள். பிறகு, "ரமேஷ், இந்த மாதிரி அனுமதி நான் கொடுக்க முடியாது. இதனால் ரொம்பக் குழப்பமுண்டாகும். ஆனால் நீ சொல்வது தப்பு என்று நான் சொல்லவில்லை. அப்பா, இது 'சரி, தப்பு' என்ற விஷயத்தை மாத்திரம் பொறுத்த தல்ல. சமூகம் ஒதுக்கி வைத்திருப்பவனை நாம் பலவந்த மாக சேர்த்துக் கொள்ள முடியாது. சமூகம் எப்படிப் பட்டதானாலும், அதற்குப் பணிய வேண்டியதாயிருக் கிறது. இல்லாவிட்டால் அதனால் நல்லது கெட்டது ஒன்றுமே செய்ய முடியாதே. ரமேஷ் இம்மாதிரி எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாதப்பா!" என்றாள்.

இந்த விஷயத்தை யோசித்துப் பார்த்திருந்தால் ரமேஷ் மறுத்திருக்கமாட்டான். ஆனால் இப்போது அவன் பார்க்கும் சமூகத்தின் ஊழல்கள் அவனை மிகவும் வேதனைக்குள்ளாக்கிவிட்டது. ஆகையால் அவன் மிகுந்த வெறுப்புடன், "இந்த சமூகத்தில்தானே தர்மதாஸ், கோவிந்தன் முதலியவர்களெல்லாம் இருக்கிறார்கள் பெரியம்மா? அந்த சமூகத்திற்கு துளி சக்திகூட இல்லா திருப்பதே நல்லது" என்றான். அவனது கோபத்தைக் கண்டு பெரியம்மா மிகுந்த பொறுமையுடன், "ரமேஷ், இவர் மாத்திரம் அல்ல; உனது அண்ணா வேணியும் இந்த சமூகத்திற்கு ஒரு தலைவன்தான்" என்றாள்.

ரமேஷ் ஒன்றும் பேசவில்லை. மறுபடியும் பெரியம்மா, "ஆகையால் இவர்களுடைய அபிப்பிராயங்களையும்

தெரிந்துகொண்டு காரியங்கள் செய் என்று நான் சொல்லு கிறேன். வீட்டிற்குள் அடி எடுத்து வைத்துவிட்டு இவர்களுக்கு விரோதமாகப் போவது நன்ருயில்லை" என்ருள்.

விசுவேசுவரி எவ்வளவு தீர யோசித்து இந்த யோசனை கூறுகிருள் என்பதை ரமேஷ் கோபத்தால் கவனிக்க வில்லை. அவன், "பெரியம்மா, எத்தனையோ காரணங் களால் இந்தக் கக்ஷிகள் ஏற்படுகிறது என்று நீயே சொன்னுய். இவைகள் எல்லாவற்றையும் விட தனிப் பட்ட துவேஷம்தான் முதல் காரணம். யாரைப்பற்றியும் எந்தவிதமான குண தோஷங்களும் என்னுல் கூற முடி யாது. அப்படியிருக்க நான் அகாரணமாக ஒருவரை எப்படித் தள்ளி வைப்பது ?" என்ருன்.

பெரியம்மா சிரித்துக்கொண்டு, "அடே பைத்தியமே! நான் உனது பெரியம்மா, தாய்க்குச் சமம். என் பேச்சைக் கேட்காமல் விடுவதும் தப்புதான்."

"பெரியம்மா, நான் என்ன செய்வேன் ? எல்லோ ரையும் அழைப்பது என்று நிச்சயித்துவிட்டேனே ?"

ரமேஷினுடைய உறுதியைக் கண்டு விசுவேசுவரியின் முகம் வாடியது. மனதிற்குள் சிறிது கோபமடைந்தாள். "அப்படியானுல் வெறும் அனுமதி வாங்கிப் போகத்தான் என்னிடம் வந்திருக்கிருயா ?" என்ருள்.

பெரியம்மா கோபடைந்துவிட்டாள் என்பதை ரமேஷ் அறிந்துகொண்டான். இருந்தாலும் அவன் சிறிதும் உறுதி தளரவில்லை. அவன் கொஞ்ச நேரத்திற்கப்புறம் "பெரியம்மா, எனது குற்றமற்ற காரியங்களுக்கு நீ, சந்தோஷத்துடன் அனுமதி அளிப்பாய்என்று நினைத்தேன். எனது......"

அவன் பேசி முடிப்பதற்குள் விசுவேசுவரி, "அதோடு, நான் எனது மகனுக்கு விரோதமாகப் போக மாட்டேன் என்பதும் தெரியவேண்டும்" என்ருள்.

இந்த பேச்சு ரமேஷின் மனதைப் புண்படுத்தியது. அவன் இதுவரையிலும் அவளிடம் புத்திர உரிமை பாராட்

டிக்கொண்டிருந்தான். ஆனால் இப்போது பேச்சிலிருந்து இவன் கொண்டாடும் உரிமை வேறுதானே. புத்திர உரிமை கொண்டாடுவதற்கு வேறு ஒருவன் இருக்கிறான் என்பது வெளிப்பட்டது. அவன் சிறிது நேரம் வரை யிலும் பேசவில்லை. பிறகு எழுந்து நின்று கொண்டு மெது வாக, "பெரியம்மா, என்னால் முடிந்த வரையிலும் நான் தனியாகவே இருந்து எல்லாக் காரியங்களையும் செய்து கொள்கிறேன். நேற்று வரையிலும் நான் இப்படித்தான் எண்ணி வந்தேன். நீ வந்து சிரமப்பட வேண்டாம். உன்னைக் கூட்டிப் போய் சிரமப்படுத்த வேண்டாம் என்று எண்ணுகிறேன்" என்றான்.

ரமேஷ் கோபம் பெரியம்மாவுக்கும் தெரிந்தது. ஆனால் அவள் அதற்கு ஒன்றும் பதில் அளிக்கவில்லை. அவள் இருளில் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந் தாள். சிறிது நேரம் கழித்து ரமேஷ் போகத் தொடங்கவே, "அப்பா, கொஞ்சம் இரு. நான் உக்கிராணத்து அறைச் சாவியைக் கொண்டு வருகிறேன்" என்று எழுந்து போய் சாவியை எடுத்து வந்து ரமேஷுக்கு முன் வீசி எறிந்தாள். ரமேஷ் முதலில் கொஞ்ச நேரம் மௌனமாக நின்று கொண்டிருந்தான். பிறகு குனிந்து சாவியை எடுத்துக் கொண்டு அங்கிருந்து போய்விட்டான்.

இப்போதுதான் சிறிது நேரத்திற்கு முன் அவன் மனதிற்குள், "இனி எனக்கு எதற்குக் கவலை. பெரி யம்மாதான் இருக்கிறாளே" என்று எண்ணியிருந்தான். ஆனால், இன்னும் ஒரு இரவுகூடக் கழியவில்லை. அதற்குள் அவன் மறுபடியும், "எனக்கு யாருமே கிடையாது. பெரியம்மாவும் என்னைக் கைவிட்டு விட்டாள்" என்று எண்ணும்படியாயிற்று.

# மூன்றும் அத்தியாயம்

ஏறக்குறைய சிரார்த்தம் முடிந்துவிட்டது. ரமேஷ் வெளியில் விருந்தினர்களை உபசரித்துக்கொண்டிருந்தான். உள்ளே சாப்பாட்டுக்கு இலை போட்டுக் கொண்டிருந் தார்கள். அப்போது வீட்டிற்குள் ஏதோ கூச்சல் கேட்கவே ரமேஷ் உள்ளே சென்றுன். அவனேடு நாலைந்து பேர்களும் சென்றுர்கள். சமையலறைக் கதவருகில், ஐம்பது அறுபது வயது சென்ற விதவை ஒருத்தி முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தாள். அவளருகில் ஒரு நடுத்தர வயது வந்த ஸ்திரீ நின்றுகொண்டு கோபமாகத் திட்டிக் கொண்டிருந் தாள். ஹால்தாரோடு தான் சண்டை போட்டுக் கொண் டிருந்தார்கள். ரமேஷைக் கண்டதும் அந்த ஸ்திரீ, "அப்பா நீயும் இந்தக் கிராமத்திற்கு ஒரு ஜமீன்தார்தான். இந்த ஏழை பிராமணப் பெண் ஒருத்திதான் குற்றம் செய் தவளா? வேறு ஒருவர் பேரிலும் குற்றம் கிடையாதா? இதற்காக எங்களை எத்தனை தடவை தண்டிப்பது?" பிறகு கோவிந்தனைச் சுட்டிக் காண்பித்து, "இவர் பள்ளிக் கூடம் கட்டுவதற்கென்று பணம் வசூல்செய்யவில்லையா? கிராம தேவதைக்குப் பூஜை போடுவதற்கென்று இரண்டு ஜோடி ஆட்டுக் கடா பணத்தை எங்களிடமிருந்து வாங்கி வைத்துக் கொள்ளவில்லையா? பின் ஏன் இவர்கள் ஒரே விஷயத்தை அடிக்கடி பேசி சண்டைக்கு இழுக் கிருர்கள்?" என்றுள்.

விஷயம் என்னவென்று ரமேஷுக்குப் புரியவில்லை. இந்நேரம் வரையிலும் உட்கார்ந்து கொண்டிருந்த கோவிந்த காங்கூலி விஷயத்தைவிளக்குவதற்காக எழுந்து நின்று கொண்டார். அவர் ரமேஷையும் அந்தப் பெண்ணை யும் ஒரு முறை பார்த்துவிட்டு, "என் பெயரை எடுத்த பிறகு நான் இனி உண்மையைத்தான் சொல்லுவேன். ஒருவருடைய தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டு இந்த

கோவிந்த காங்கூலி பேசமாட்டாரென்பது உலகறிந்த விஷயம். உனது பெண்ணுக்குப் பிராயச்சித்தம் ஆகி விட்டது. இதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால், அவள் சடங்குகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட வில்லை. அவள் இறந்துவிட்டால் அவளை மயானத்திற்குத் தூக்கிக் கொண்டுபோக நாங்கள் தயார். ஆனால்......"

அவள் மிகுந்த கோபத்துடன், "உன் பெண் இறந்துபோனால் கொண்டுபோய் மயானத்தில் வைத்து விடப்பா. என் பெண்ணைப்பற்றிக் கவலைப்பட வேண் டாம். கோவிந்தா, உன் நெஞ்சறியச் சொல்லு. அதோ, அந்த அறையில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறாளே உனது தம்பி மனைவி, அவள் போன வருஷம் ஒண்ணரை மாதம் காசிக்குப் போய்விட்டு வருகிறேன் என்று போய் ஏன் உருமாறி வந்தாள்? இதெல்லாம் பெரிய இடத்து விஷயமோ? அப்பா, என்னிடம் அதிகம் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாதே. நான் எல்லாவற்றையும் வெட்ட வெளிச்ச மாக்கி விடுவேன். நாங்களும் குழந்தை குட்டிகள் பெற்றவர்கள்தான். எங்களுக்கு எல்லாம் தெரியும். எங்களிடம் ஒன்றையும் ஒளிக்க முடியாது" என்றாள்.

கோவிந்த காங்கூலி அளவு கடந்த கோபத்துடன், "வாடி, போக்கிரி முண்டை!" என்று சப்தமிட்டார்.

ஆனால், அந்த மிரட்டலுக்கு அவள் சிறிதும் பயப்பட வில்லை. ஒரு அடி முன்னுக்கு வந்து, "அடே, நீ என்ன என்னை அடித்தா விடுவாய்? என் வாயைக் கிளறி விட்டாயா, ஒரு நிமிஷத்தில் கிராமம் முழுதும் தண்டோ ராப் போட்டு விடுவேன். என் பெண்ணு சமையலறைப் பக்கம் கூடப் போகவில்லை; இந்த ஹால்தார் அவமான மாகப் பேசினானே, அவனுடைய மாமி ஒரு முஸ்லிமோடு சம்பந்தம் கொண்டிருந்தது யாருக்குத் தெரியாது? நான் இப்பத்தவளல்ல. இதுவே போதுமா இன்னம் சொல்ல வேண்டுமா?" என்றாள்.

ரமேஷ் ஸ்தம்பித்துப் போய்விட்டான். பைரவ ஆசார்யா திடுக்கிட்டு அவளுடைய கையைப் பிடித்துக்

கொண்டு, "அடி, அம்மா! இவ்வளவே போதும், வேறு வேண்டியதில்லை. எழுந்திரு அம்மா சுகுமாரி, எழுந்திரு, வா, அந்த வீட்டிற்குள் போய் உட்காரலாம்" என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார்.

பிராண ஹால்தார் எழுந்து துப்பட்டியைத் தோள் மேல் போட்டுக்கொண்டு, "இந்தத் தேவடியாளை இந்த வீட்டிலிருந்து துரத்தாத வரையில் நான் இங்கு பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டேன். காளிசரண உனக்கு மாமன் வேண்டுமானால் எழுந்து வா. 'மாமா அங்கே போகாதீர்கள்' என்று வேணி கோஷால் வரும்போதே சொன்னார். இங்கு இம்மாதிரி தேவடியாள்கள் கூடி யிருப்பார்கள் என்று எனக்கு எப்படித் தெரியும்? தெரிந் திருந்தால் என் சாதியைக் கெடுத்துக் கொள்ள இங்கு வருவேனா? காளி, எழுந்து வா" என்றார்.

மாமா என்னமாக அழைத்தபோதிலும் காளிசரண் பேசாமல் தலை குனிந்தபடியே உட்கார்ந்து கொண்டிருந் தான். அவன் ஒரு துணி வியாபாரி. நாலு வருஷத்துக்கு முந்தி கல்கத்தாவிலிருந்து வந்திருந்த ஒரு வியாபாரி அவனுடைய விதவைத் தங்கையைக் கூட்டிக் கொண்டு ஓடிவிட்டான். இந்த விஷயம் அனைவருக்கும் தெரியும். 'அவள் மாமனார் வீட்டிற்குப் போயிருக்கிறாள். அங்கிருந்து தீர்த்த யாத்திரை செய்கிறாள்' என்று முதலில் கொஞ்ச நாள் வரையிலும் கூறி மறைத்து வந்தார்கள். எங்கு இத்தனை நாளைக்குப் பிறகு எல்லோர் முன்னிலையிலும் அந்த சம்பவத்தை வெளிப்படுத்தி விடுவாளோ என்ற பயத் தால் காளிசரண் தலை நிமிரவேயில்லை. ஆனால் கோவிந்த காங்கூலிக்குச் சிறிதும்கோபம் தணியவில்லை. அவர் எழுந்து நின்று கொண்டு, "யார் என்ன சொன்னாலும் சரி, இங்கே, வேணி கோஷால், பிராண ஹால்தார், யதுமுகர்ஜி பெண் இம்மூன்று பேரும்தான் ஞாயகாரர்கள். நாம் இவளை எந்த விதத்திலும் விடக்கூடாது. நம் இனத்தார்களைக் கேட்காமல் இந்த இரண்டு போக்கிரி முண்டைகளையும் வரவழைத்ததற்குச் சரியான பதில் ரமேஷ் கூறுமுன் இங்கு யாரும் தண்ணீர் கூடக் குடிக்கக் கூடாது" என்று உரக்கச் சப்தமிட்டார்.

பார்க்கப் பார்க்க இன்னம் நாலைந்து பேர்கள் வீரா வேசத்துடன் எழுந்து நின்று கொண்டார்கள். இவர்க ளெல்லாம் ஒன்றும் தெரியாதவர்கள். சமூக வியவ காரங்களில் எந்த வழியில் அதிக லாபமுண்டு என்பது நன்கு தெரிந்தவர்கள்.

விருந்திற்கு வந்திருந்த கனவான்கள் மனதிற்குத் தோன்றியபடி பேசத் தொடங்கினார்கள். பைரவ ஆசார் யாவும், தீனு பட்டாச்சார்யாவும்தான் படாத பாடு பட்டார்கள். அவர்கள் இரு கக்ஷிக்காரர்களிடமும் சென்று கெஞ்சிக் கூத்தாடினார்கள். விஷயம் வர வர முற்றிவிட்டது. ஆனால், ரமேஷ் மட்டும் வாயே திறக்க வில்லை. ஏற்கெனவே, அவன் பசியால் மிகவும் களைத்துப் போயிருந்தான். அவன் முகமே மாறி, பிரமை பிடித்தவன் போல ஒன்றும் பேசாமல் விழித்த கண் விழித்தபடி நின்றுகொண்டிருந்தான்.

இதற்குள், "ரமேஷ்!" என்று யாரோ கூப்பிடு வதைக் கேட்டு அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள். விசுவேசுவரி உக்கிராண அறையிலிருந்து வெளி வந்து கதவருகில் நின்று கொண்டிருந்தாள். அவள் தலையில் முந்தானையை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள். 'பெரியம்மா எப்போது வந்தாள்; அவள் என்னை விட்டு விடவில்லை போலிருக்கிறது' என்று ரமேஷ் நினைத்தான். கோஷால் வீட்டு எஜமானி விசுவேசுவரி அங்கு நிற்பதை அனைவரும் கண்டார்கள்.

கிராமங்களில் பர்தா வழக்கம் பட்டணங்களைப்போல் அவ்வளவு கடுமையாக இல்லை. இருந்தாலும் விசுவேசுவரி பெரிய வீட்டுப் பெண் ஆனதினாலேயோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலேயோ அதிக வயதடைந்த பிறகுகூட யார் முன்னிலையிலும் வருவதில்லை. ஆகையால் இன்று அவளைப் பார்க்க எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. இதற்கு முன் பார்த்திராதவர்கள் அவளுடைய கண்ணொளி யைக் கண்டு பிரமித்துவிட்டார்கள். உண்மைதான்: அடக்க முடியாத கோப முண்டானதினால்தான் அவள் வெளியே வந்தாள். சகலரும் அவளைப் பார்க்கவே அவள் தூண் மறைவில் போய் நின்றுகொண்டாள். அவளுடைய

குரலைக் கேட்டதும் ரமேஷினுடைய களைப்பு எல்லாம் எங்கோ ஓடி மறைந்துவிட்டது. அவன் அவள் அருகில் போய் நின்று கொண்டான். அவள் மிகத் தெளிவாக, "இம்மாதிரி பயப்படுத்த வேண்டாமென்று காங்கூலி மஹாஷயரிடம் சொல்லிவிடு. நாங்கள் எல்லோரையும் ரொம்பப் பாராட்டி அழைத்து வந்திருக்கிறோம் என்று ஹால்தாரிடம் தெரிவித்துவிடு. சுகுமாரியை ஏன் அவர் அவமானம் செய்ய வேண்டும்? எங்கள் வீட்டிலிருந்து கொண்டு யாரையும் திட்டக் கூடாது. இது சம்மதமில்லை யானால் யாரானாலும் எழுந்து வெளியே போய்க் கொள் ளட்டும்" என்றாள்.

பெரிய எஜமானியின் இந்த உத்திரவை அனைவரும் காதால் கேட்டார்கள். ரமேஷ் ஒன்றும் சொல்ல வேண்டி இருக்கவில்லை. அவன் ஏதாவது சொல்ல வேண்டி இருந்தாலும் சொல்ல முடியாது. இந்தப் பேச்சுக்கு என்ன பலன் ஏற்பட்டது என்பதைக்கூட அவனால் பொறுத்துப் பார்க்க முடியவில்லை. சகல பொறுப்புகளையும் பெரியம்மாவே ஏற்றுக் கொண்டாள் என்பதைத் தெரிந்தவுடனே கண்ணீரை அடக்கிக் கொண்டு ஒரு அறைக்கு போய் நுழைந்து கொண்டான். அவன் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியது. இன்று காலையிலிருந்தே அவன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததால், யார் வந்திருக்கிறார்கள் யார் வரவில்லை என்பதைக் கவனிக்கவில்லை. யார் வந் தாலும் வராவிட்டாலும் பெரியம்மா வருவாள் என்று அவன் கனவில்கூட கருதியதில்லை. எழுந்து நின்று கொண்டிருந்தவர்கள் எல்லாம் ஒவ்வொருவராக உட்கார்ந்து கொண்டார்கள். கோவிந்த காங்கூலியும், ஹால்தாரும்தான் மரம் போல நின்று கொண்டிருந் தார்கள். அந்தக் கூட்டத்திலிருந்து யாரோ தெரியவில்லை, "சித்தப்பா, உட்கார். வயிறு நிறைய சாப்பாடு போட்டு, பதினாறு பதினாறு பூரியும் நாலு ஜோடி சந்தேஷும் யார் கொடுப்பார்கள்!" என்று கூறினார்கள்.

பிராண ஹால்தார் மெதுவாக வெளியே போய் விட்டார். ஆனால் கோவிந்த காங்கூலி உண்மையிலேயே

உட்கார்ந்து கொண்டார். அவர் முகம் என்னவோ கடைசி வரையிலும் கனத்துத்தானிருந்தது. சாப்பாட்டு வேளையில் கூட மேல்பார்வை பார்த்துக் கொண்டு பந்தியில் உட்கார வில்லை. அவருடைய நடத்தையைக் கவனித்த சிலர், கோவிந்த காங்கூலி யாரையும் சுலபத்தில் விடமாட்டார் என்று மனதில் நினைத்துக்கொண்டார்கள். இதற்குப் பிறகு ஒரு கலவரமும் உண்டாகவில்லை. அன்று பிராம ணர்கள் சாப்பிட்டதை நேரில் பார்க்காதிருந்தால் நம்புவது கஷ்டம். சாப்பிட்டது போக வீட்டில் குழந்தை குட்டி களுக்கென்று எடுத்துக் கொண்டு போனது கணக்கு வழக்கில்லை. சாயங்காலத்திற்குள் சம்பல் அடங்கி விட்டது. ரமேஷ் வாசலில் ஒரு கொய்யா மரத்தடியில் நின்று கொண்டிருந்தான். அவனுடைய மனம் ஒரு நிலையில் இல்லை. அதற்குள் தீனு பட்டாச்சார்யா தமது குழந்தைகள் சகிதம் பலகாரங்களைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு கூடுமான வரையிலும் ஒருவர் கண்ணிலிலும் படாமல் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். எல்லோருக்கும் முதலில் அவருடைய பெண் முனியா, ரமேஷைப் பார்த்தாள். அவள் திருடனைப் போல பயந்து கொண்டு, "பாபுஜி நிற்கிறாரப்பா !" என்றாள்.

எல்லோரும் திகிலடைந்து விட்டார்கள். அந்தச் சிறு பெண்ணினுடைய ஒரு வார்த்தையிலிருந்தே ரமேஷ் அனைத்தையும் புரிந்து கொண்டான். ஓடுவதற்கு வழி இருந்திருந்தால் நிச்சயம் அவர் ஓடியே இருப்பார். ஆனால், ஓடுவதற்கு ஒரு வழியும் இல்லை. ஆகையால் அவர் தாமே முன்வந்து சிரித்துக் கொண்டு, "முனியா இவைகளை எல்லாம் யாருக்காகக் கொண்டு போகிறாய் ?" என்றார்.

முனியாவிடத்தில் சிறிதாகவும் பெரிதாகவும் அநேகம் பொட்டலங்கள் இருந்தன. அவள் ஒரு பதிலும் அளிக்க மாட்டாள் என்ற பயத்தினால் அவரே, "அப்பா, வீட்டில் ஒரு கீழ் சாதிப் பையன் இருக்கிறான். ஏதாவது மிஞ்சியதை எடுத்துக்கொண்டு போனால் அவன் கையில் கொஞ்சம் கொடுக்கலாம். ஆனால் அப்பா, ஒரு விஷயம். ஊரெல்லாம் ஏன் 'எஜமானி அம்மா, எஜமானி அம்மா' என்று சொல்

கிறார்கள் என்பது இன்றுதான் எனக்குத் தெரிந்தது" என்றார்.

ரமேஷ் ஒன்றும் பேசாமல் அவருடன் வெளி வாசல் கதவு வரையிலும் வந்தான். பிறகு அவன், "பட்டாச்சார்யாஜி, உங்களுக்கு இவ்விடத்திய விஷயமெல்லாம் தெரியும். இந்தக் கிராமத்தில் இவ்வளவு போட்டி பொறாமை ஏன் இருக்கிறது என்பதை உங்களால் தெரிவிக்க முடியுமா ?" என்று கேட்டான்.

பட்டாச்சார்யா தொண்டையைத் தீட்டிக்கொண்டு, "அடே அப்பா, அப்படியிருந்தாலும் எங்களுக்கு இந்தக் குவாபூர் கிராமத்தில்தான் சுகமிருக்கிறது சில நாள் முனியா மாமா வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கே பார்த்து வந்ததை உன்னிடம் என்னவென்று சொல்வேன்! அங்கே இருபது பிராமணர்கள் வீடுதானிருக்கும். இருந்தாலும் ஊரிலே நாலு கட்சி. தோட்டத்தில் இரண்டு மூன்று ஆரஞ்சு மரத்தை வெட்டிவிட்டதற்காக ஹரநாத் தனது மருமகனை ஜெயிலுக்கு அனுப்பினார். அப்பா, எல்லாக் கிராமத்திலும் இப்படித்தான். இதைத் தவிர வழக்குகளால் அநேகம் பிளவுகள்—முனியா அந்தப் பொட்டலத்தை ஹரிதனனிடமிருந்து வாங்கிக்கொள். அவன் தூக்கிவரமாட்டான்" என்றார்.

"இதை மாற்ற முடியாதா ?" என்று ரமேஷ் கேட்டான்.

"அப்பா, இதை மாற்ற முடியுமா ? இது கலியுகம் பாரு! இருந்தாலும் நான் ஒன்று சொல்லக்கூடும். நானும் எத்தனையோ இடங்களுக்குப் பிக்ஷைக்காகப் போயிருக்கிறேன். எவ்வளவோ பேர் என்னிடம் தயவு காட்டியிருக்கிறார்கள். உன்னைப்போன்ற வாலிபர்களிடம் ஈவு இரக்கம் இன்னம் இருப்பதை நான் நன்றாகப் பார்த்திருக்கிறேன். இந்தக் கிழப் பயல்களிடம்தான் அது மருந்துக்குக் கூடக் கிடையாது. இவர்களுக்கு ஒரு துளி இடம் கிடைத்தாலும் கழுத்தின் மேல் காலை வைத்துக்கொண்டு நின்று கொள்கிறார்கள். நாக்கு வெளியில் வந்து உயிர் போகும் வரையிலும் விடுவதில்லை" என்றார்.

இதைக் கூறிவிட்டு தீனு பட்டாச்சார்யா நாக்கை வெளியில் நீட்டிக் காண்பித்தார். அதைப் பார்த்து ரமேஷ் சிரித்தான். உடனே அவர், "அப்பா, இதுதான் உண்மை. எனக்கும் வயது அதிகமாகிவிட்டது. ஆனால்......அடே நீ இருட்டுக்குள் ரொம்ப தூரம் வந்துவிட்டாயே!" என்றார்.

"பரவாயில்லை, நீங்கள் சொல்லுங்கள்" என்றான் ரமேஷ்.

"நான் வேறு என்ன சொல்வேன். ஒவ்வொரு கிராமத்திலும் இதே நிலைமைதான். இந்தப் பயல் கோவிந்த காங்கூலி இருக்கிறானே, அவனுடைய அப்பன் பேச்சை எடுத்தாலே வாயைக் கழுவிக்கொள்ள வேண்டும். அந்தப் பிராமணத்தி ஒன்றும் இல்லாததைக் கூறவில்லை. ஆனால் எல்லோரும் அவனைக் கண்டால் பயப் படுகிறார்கள். பித்தலாட்டம் செய்வதில், பொய் சாக்ஷி சொல்லுவதில், பொய் வழக்கு ஜோடிப்பதில் ரொம்பக் கெட்டிக்காரன். வேணி பாபு அவனுக்குப் பின் பலமாக இருப்பதால் யாரும் அவனுக்கெதிராக ஒரு வார்த்தை பேசுவதற்குக் கூட துணிவதில்லை. ஆனால் அவனே மற்றவர்களை சாதியிலிருந்து தள்ளி வைத்துக் கொண் டிருக்கிறான்" என்றார்.

ரமேஷ் வேறு ஒரு கேள்வியும் கேட்காமல் மௌன மாக தீனு பட்டாச்சார்யாவோடு சென்றான். அவனுடைய உள்ளத்தில் கோபம் நிறைந்திருந்தது. தீனு பட்டாச்சார்யா மீண்டும் பேசத் தொடங்கினார் "அப்பா, இதை மனதில் வைத்துக்கொள். இந்தப் பிராமணத்தியை சும்மா விடமாட்டார்கள். கோவிந்த காங்கூலி, பிராண ஹால்தார் இந்த இரண்டு புலிகளும் சும்மா விட்டுவிடுமா? அப்பா, என்ன இருந்தாலும் அந்தப் பெண் ரொம்பவும் தைரியசாலி. தைரியமில்லாமலென்ன? அவள் மிட்டாய் வியாபாரம் செய்கிறாள். எல்லா வீடுகளுக்கும் போக வர இருப்பவள். அவள் எல்லோரிடமும் கூற ஆரம்பித்து விட்டாளானால் அவர்களுக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டு விடும். குற்றம் எந்த வீட்டில்தான் இல்லை, நீயே சொல்லு? வேணி பாபு கூட............"

அவர் என்ன சொல்லிவிடுவாரோ என்ற பயத்தினால் ரமேஷ் பேச்சில் குறுக்கிட்டு, "வேண்டாம், அண்ணாவைப் பற்றியே பேச வேண்டாம்" என்றான்.

தீனு பட்டாச்சார்யாவும், "ஆமாம் அப்பா, என்னைப் போன்ற ஏழைக்கு எதற்கு இந்தப் பேச்சு எல்லாம். யாராவது போய் வேணி பாபுவிடம் சொல்லிவிட்டால் என் வீட்டை நெருப்பு......"

ரமேஷ் மறுபடியும் தடுத்து, "பட்டாச்சார்யாஜி, இன்னும் உங்கள் வீடு ரொம்ப தூரமோ?" என்றான்.

"இல்லை அப்பா! அந்தக் குளத்தருகில்தான் எனது குடிசை இருக்கிறது. எப்பவாவது ஒரு நாளைக்கு......"

"வராமலென்ன! அவசியம் வருகிறேன். நாளைக் காலையில்தான் மறுபடியும் சந்திக்கப் போகிறேன். அதற்கப்புறமும் நீங்கள் வந்து கொண்டிருங்கள்" என்று கூறிவிட்டு ரமேஷ் அங்கிருந்து திரும்பிவிட்டான். தீனு பட்டாச்சார்யா அவனை மனப்பூர்வமாக, "அப்பா சிரஞ்சீவியாக இரு' என்று ஆசீர்வதித்துவிட்டுத் தமது குழந்தைகளுடன் வீட்டை நோக்கி நடந்தார்.

## நான்காம் அத்தியாயம்

அந்த ஊரில் ஒரே ஒரு கடைதான், ஆற்றுக்குப் போகும்வழியில் இருக்கிறது. பத்துப்பதினைந்து நாளாகியும் பாக்கிப் பணத்தை வாங்கிப்போகக் கடைக்காரன் வராமல் போகவே ரமேஷ் தானே கொடுத்து வரக் கடைக்குக் கிளம்பினான். மதுபாலன் ரொம்ப மரியாதையாகச் சின்ன எஜமானரை வரவேற்றான். சின்ன எஜமானர் வந்த காரணத்தை அறிந்து திடுக்கிட்டுப் போனான். மதுபாலன் தன் ஆயுளிலேயே கடனைத் தீர்ப்பதற்காக யாரும் நேரில் வந்ததைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை! எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசினான். "நல்லது எஜமான், கடையை எப்படி நடத்துவது? இரண்டணா, நாலணா, ஒரு ரூபாய், ஒண்ணே கால் ரூபாயாக அறு நூறு, எழு நூறு ரூபாய் வெளியில் பாக்கி நிற்கிறது. வாங்குவதற்குக் கொடுத்து விடுகிறோம் என்கிறார்கள். ஆனால், முன் பாக்கி அப்படியே நிற்கிறது. யார், பானர்ஜியா? நமஸ்காரம். எப்போது வந்தீர்கள்?"

பானர்ஜி வலது கையில் ஒரு லோட்டா இருந்தது. குதிங்கால் வரையிலும் சேர் படிந்திருந்தது. பூணூலை காதில் எடுத்து மாட்டிக் கொண்டிருந்தார். இடது கையில் நான்கு சிறு மீன்களை ஒரு இலையில் சுற்றிப் பிடித்துக் கொண்டிருந்தார். "நேற்று ராத்திரி வந்தேன். மது, கொஞ்சம் புகையிலை கொடு" என்றார்.

தமது கையிலிருந்த லோட்டாவையும், மீனையும் வைத்துவிட்டார். பிறகு, "மது, அந்தத் தோட்டக்காரன் புத்தியைப் பார்த்தாயா? அவன் சட்டென என் கையை வந்து பிடித்துக் கொண்டான். பாரு, காலம் எப்படி தலை கீழாக மாறிவிட்டது பாரு! இந்த மீன் என்ன ஒரு தம்பிடி பொறுமா? பிராமணனை ஏமாற்றி இந்தக் கிழவன் எத்தனை நாளைக்குப் பிழைத்துப் போவான்? இவன் நாசமாகப் போகமாட்டானா?" என்றான்.

மது ஆச்சரியத்துடன், "அவன் உங்கள் கையைப் பிடித்துக் கொண்டானா?" என்றான்.

பானர்ஜி ஒரு முறை சுற்றிலும் பார்த்துவிட்டு, "அரையணாத்தான் நான் அவனுக்குக் கொடுக்கவேண்டும். அதற்காக எல்லோர் முன்னிலையிலும் என் கையைப் பிடிப்பதா? ஆற்றில் லோட்டாவை அலம்பி விட்டு கைகாலைச் சுத்தம் செய்து கொண்டு கடைத் தெருப் பக்கம் போய்விட்டு வரலாமென்று போனேன். அவன் ஒரு கூடையில் மீனை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். ஆனால், என்னிடம் வெட்கமில்லாமல், "சாமி, கொஞ்சம் கூடக் கிடையாது. எல்லாம் விற்பனையாகி விட்டது" என்றான்.

"ஆனால், என்னிடம் ஒளிக்க முடியுமா? உடனே கூடையைப் பார்ப்பதற்காக மூடியிருந்த துணியை எடுத்தேன். சட்டென என் கையைப் பிடித்துக் கொண்டான். "அடே, உனது முந்திய அரையணா, இப்போதைய காலணா, இந்த முக்காலணாவையும் கொடுக்காமல் ஊரைவிட்டா ஓடிப் போய் விடுவேன்? என்ன மது, நீயே சொல்லு?" என்றார்.

மதுவும் அவரை ஆமோதித்துக் கொண்டு, "அப்படி எங்காவது நடக்குமா?" என்றான்.

"சரி, நீயே சொல்லு, இந்த ஊரிலே கொஞ்சமாவது நியாயமிருக்கிறதா? இருந்தால் வண்ணான், நாவிதனைத் தடை செய்து அவனை ஊரை விட்டுத் துரத்த வேண்டாம்!" திடீரென ரமேஷைப் பார்த்து, "மது இவர் யார்?" என்றார்.

மது மிகப் பெருமையுடன், "இவர் நமது சின்ன எஜமானர் மகனல்லவா. ஒரு பத்து ரூபாய் பாக்கி இருந்தது. அதைக் கொடுப்பதற்கு இவ்வளவு தூரம் வந்திருக்கிறார்" என்றான்.

பானர்ஜி மீன்காரன் குற்றத்தை மறந்துவிட்டு நன்கு கண்ணைத் திறந்து ரமேஷைப் பார்த்தார். "அடே ரமேஷா! மகராசனாக இரு அப்பா! நான் வரும்போது நீ

செய்த காரியத்தைச் சொன்னூர்கள். அதுதான் அழகு. இந்த மாதிரி சாப்பாடு இந்தப் பக்கத்திலேயே யாரும் போட்டதில்லையாம். ஆனுல், நான் என் கண்ணுரக் காணக் கொடுத்து வைக்கவில்லையே என்று துக்கமாக இருக்கிறது. இரண்டொரு பயல்கள் பேச்சைக் கேட்டு கல்கத்தாவிற்கு வேலைக்காகப் போய் இந்த நிலையை அடைந்தேன். ராம, ராமா! அங்கு யாராவது மனிதர்க ளிருக்க முடியுமா ?" என்ருர்.

ரமேஷ் பேசாமல் பானர்ஜியையே பார்த்துக் கொண் டிருந்தான். ஆனுல், கடையில் கூடியிருந்த மற்றவர்க ளெல்லாம் அவருடைய கல்கத்தா யாத்திரையைப் பற்றி கேட்க ஆவலுடனிருந்தார்கள். புகையிலையை நிரப்பி ஹுக்காவை பானர்ஜி கையில் மது கொடுத்துவிட்டு, " அப்புறம் என்ன ஆயிற்று ? ஏதாவது வேலை கிடைத் ததா ?" என்ருன்.

" கிடைக்காமல் என்ன ? நான் என்ன அரை குறை யாகவா படித்திருக்கிறேன்? ஆனுல், வேலை கிடைத்தால் மட்டும் போதுமா ? அங்கு யாரால் இருக்க முடியும் ? புகையும் புழுதியும், சகதியும் ரொம்பிக் கிடக்கிறது. வீட்டை விட்டு வெளிக் கிளம்பிய பிறகு, வண்டி, வாகனத்தில் நசுங்காமல் வீடு வந்து சேர்ந்தால் உனது அப்பன், பாட்டன் செய்த புண்ணியமென்று நினைக்க வேண்டும் !"

மது கல்கத்தா போனதில்லை. ஆனுல் ஒரு தரம் சாட்சி சொல்வதற்காக மேதினிப்பூர் வரையிலும் போயிருக்கிருன். அவன் திடுக்கிட்டு, " அடே, நீங்கள் சொல்லுவதென்ன ?" என்ருன்.

பானர்ஜி சிறிது சிரித்துவிட்டு, " நான் நிஜம் சொல் கிறேனு, பொய் சொல்கிறேனு என்று ரமேஷிடம் கேட்டுப் பார். ஆமாம் மது ; கஞ்சிக்கில்லாவிட்டாலும் இங்கேயே மடிந்து சாவேன். ஆனுல், அயலூர் போகும் பேச்சை மட்டும் என்னிடம் பேசிவிடாதே. அங்கே, காய் கறிகள். கீரை, மிளகாய், விறகு எல்லாம் காசுக்கு வாங்கித்தான் குடும்பம் நடத்தவேண்டுமென்று சொன்னுல்

நீ நம்பக்கூட மாட்டாய். ஏனப்பா, நம்மால் விலைக்கு வாங்கிச் சாப்பிட முடியுமா? இந்த ஒரு மாதமாகச் சாப்பிடாமலேயே துரும்பாகப் போய் விட்டேன். ராத்திரி, பகலா வயிறு கடபுடா என்கிறது. நெஞ்சு 'திக்திக்' கென அடித்துக் கொள்கிறது. இங்கு திரும்பி வந்த பிறகு தான் நல்ல உயிர் வந்தது. ஊரில் இருந்து கொண்டு கிடைத்ததைச் சாப்பிடலாம்; இல்லாவிட்டால் பிள்ளை குட்டிகளோடு வீடு வீடாகப் பிச்சை எடுக்கலாம். பிராமணனுக்கு இது ஒன்றும் புதிதல்ல. லக்ஷ்மி என்னிடம் குடிகொண்டிருப்பாள். அயலூருக்கு மாத்திரம் போகக் கூடாது" என்றார்.

பானர்ஜியின் பேச்சைக் கேட்டு அங்கிருந்தவர்களெல்லோரும் திடுக்கிட்டார்கள். அவர் எழுந்து எண்ணெய் டின் அருகில் சென்று தமது கையிலிருந்த செம்பில் ஒரு ஆழாக்கு எண்ணெய் அளந்து ஊற்றிக் கொண்டார். பிறகு கொஞ்சம் கையில் ஊற்றி தலையில் தேய்த்துக் கொண்டார். அதற்குப் பின், "வெகு நேரமாகி விட்டது. இனி குளித்துவிட்டு வீட்டுக்குப் போக வேண்டும். மது, காலணா உப்பு கொடு. அணா சாயங் காலம் கொடுக்கிறேன்" என்றார்.

"இனி மறுபடியும் அதே சாயங்காலமா?" என்று வெறுப்புடன் கூறிக் கொண்டு மது உப்பு தருவதற்கு எழுந்தான். உடனே பானர்ஜி கோபம் வந்தவர் போல, "அடே மது, உங்களுக்கெல்லாம் என்னப்பா வந்து விட்டது? காசு கொடுக்க வேண்டும் என்று தம்பட்டம் அடிப்பாய் போலிருக்கிறதே" என்று கூறிக் கொண்டு கொஞ்சம் உப்பு அள்ளித் துணியில் போட்டுக் கொண்டார். அதன் பிறகு லோட்டாவை எடுத்துக்கொண்டு ரமேஷைப் பார்த்து, "அப்பா, நானும் அந்த வழியாகத் தான் வரவேண்டும். வா, பேசிக் கொண்டே போவோம்" என்றார்.

ரமேஷும், "சரி வாருங்கள்" என்று கூறிக் கொண்டு எழுந்து நின்றான். மது கொஞ்ச தூரத்தில்

நின்று கொண்டு, "அந்த மாவு வாங்கிய ஐந்தணுவும் கொடுக்கவில்லையே ?" என்ருன்.

பானர்ஜி கோபத்துடன், "அடே அப்பா, மது, இரு வேளையும் இந்த வழியில்தான் வரப் போக இருப்பேன். உன் கண்ணில் படாமல் எங்கேயாவது ஓடி விடுவேனு ? அந்தத் திருட்டுப் பயல்கள் பேச்சைக் கேட்டு ஐம்பது ரூபாய் தண்டமாகப் போச்சு. இப்போதுதான் நீயும் கேட்க வேண்டுமா ? இதைத்தான் 'பட்டகாலிலேயே படும்' என்பது ! பார்த்தாயாட்பா ரமேஷ், இவர்களுடைய நடத்தையை" என்ருர்.

மது வருத்தத்துடன், "ரொம்ப நாளாக......"

"இருக்கட்டுமே ரொம்ப நாளாகத்தான் ! இம்மாதிரி நீங்களெல்லாம் பின்னுலிருந்து காலை வாறிவிட்டால் எப்படி ஊரில் குடியிருப்பது ?" என்று கோபத்துடன் கூறிவிட்டுத் தமது சாமான்களை எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

ரமேஷ் நேராக வீட்டிற்கு வந்தான். அவன் கதவுக்குள் நுழைந்ததும் அங்கே உட்கார்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்த ஒரு கனவான் இவனைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து நின்று கொண்டார். பிறகு சிறிது முன் வந்து அவனை நமஸ்கரித்துவிட்டு, "எனது பெயர் வனமாலி பாண்டே. நான் தங்கள் பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயர். நான் இரண்டு தரம் வந்தேன். ஆனுல், தங்களைத் தரிசிக்க முடியவில்லை. ஆகையால்......"

ரமேஷ் மிகுந்த பரிவுடன் நாற்காலியில் உட்காரச் சொன்னுன். ஆனுல், அவர் மிகுந்த பணிவுடன் நின்று கொண்டு, "நான் எப்படி உட்காருவேன் !" என்ருர்.

வயதோ அதிகமானவர். அதோடு பள்ளிக்கூடத்து உபாத்தியாயர். அவருடைய இந்த விசித்திரமான போக்கையும், பணிவையும் கண்டு ரமேஷ் மனதிற்குள்ளாகவே வருத்தமடைந்தான். அவர் எந்த விதத்திலும் உட்கார மறுத்துவிட்டார். அவர் நின்று

கொண்டே, "இந்தப் பக்கத்திற்கே இந்தச் சிறிய பள்ளிக்கூடம்தானிருக்கிறது. முகர்ஜி வம்சத்தாராலும் கோஷால் வம்சத்தாராலும் இந்தப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப் பட்டது. இதில் முப்பது, நாற்பது பிள்ளைகள் படிக்கிருர்கள். சில பிள்ளைகள் மூன்று, நான்கு மைல் தூரத்திலிருந்து கூட வருகிருர்கள். சர்க்கார் உதவியும் கூடச் சிறிது கிடைக்கிறது. இருந் தாலும் பள்ளிக்கூடத்தை நடத்துவது கஷ்டமாயிருக் கிறது" என்ருர். சிறு வயதில் இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தது ரமேஷுக்கு ஞாபகத்திற்கு வந்தது.

"மேல் கூரை போடாவிட்டால் அடுத்த மழை காலத்திற்கு யாரும் உள்ளே உட்கார்ந்திருக்க முடியாது. அது கூடக் கொஞ்சம் பொறுத்துச் செய்யலாம். ஆனல் இந்த மூன்று மாதமாக உபாத்தியாயர்களுக்குச் சம்பளமே கொடுக்கவில்லை. இனி ஒருவரும் வேலைக்கு வரமாட் டார்கள்" என்ருர்.

பாடசாலை விஷயத்தைக் கேட்டு ரமேஷ் திடுக் கிட்டான். உபாத்தியாயரை உள் அறைக்கு அழைத்துக் கொண்டு போய் சகல சங்கதிகளையும் விசாரித்தான். பள்ளிக்கூடத்தில் மொத்தம் நான்கு உபாத்தியாயர்கள். அவர்கள் எப்படியோ சிரமப்பட்டு வருஷம் இரண்டு இரண்டு பையன்களை மேல் படிப்புக்கு அனுப்பி வந்தார்கள். அவர்களுடைய பெயர், ஊர் முதலியவைகளை எப்போதும் மறக்கா வண்ணம் பாண்டேஜி அறிவுறுத் திஞர். மேல் வகுப்புப் பையன்கள் சம்பளத்தைக் கொண்டு பள்ளிக்கூடம் நடந்து வந்தது. சர்க்கார் உதவியால் இன்னெரு உபாத்தியாயருக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு உபாத்தியாயர் சம்பளம் மட்டும் சந்தா வசூலித்து சரிப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சந்தா தலைமை உபாத்தியாயர்தான் வசூலிக்கிருராம்.

இப்போது தொடர்ச்சியாக நான்கு மாதங்களாக எவ்வளவோ சிரமப்பட்டும் ஏழேகால் ரூபாய்க்கு மேல் வசூலாகவில்லையாம்.

இதைக் கேட்டு ரமேஷ் ஆச்சரியமடைந்தான். இந்த ஐந்து ஆறு கிராமத்துக்கும் ஒரே பள்ளிக்கூடம்தான்

இருக்கிறது. அப்படியிருந்தும் இந்த ஐந்து ஆறு கிராமங்களிலும் நாலு மாதமாக ஏழேகால் ரூபாய்க்கு மேல் வசூலாகவில்லை. “சரி, தங்கள் சம்பளம் எவ்வளவு ?” என்று ரமேஷ் கேட்டான்.

“ரசீது இருபத்தி ஆறு ரூபாய்க்குக் கொடுக்கிறோம். ஆனால் எங்களுக்கு பதின்மூன்று ரூபாயும் பதினைந்து அணாவும்தான் கிடைக்கிறது” என்றார் உபாத்தியாயர்.

ரமேஷுக்கு இது அர்த்தமாகவில்லை. ஆகையால் அவன் உபாத்தியாயர் முகத்தையே பார்த்தான். உபாத்தியாயர் அதைத் தெரிந்து கொண்டு, “சர்க்கார் உத்திரவு அப்படி இருப்பதால் இருபத்தி ஆறு ரூபாய்க்கு ரசீது எழுதி டிப்டி இன்ஸ்பெக்டருக்குக் காட்டவேண்டி இருக்கிறது. இல்லாவிட்டால் சர்க்கார் உதவி கிடைக்காது. இது எல்லோருக்கும் தெரியும். நீங்கள் எந்த மாணவனைக் கேட்டாலும் நான் சொல்லுவது சரியாயிருக்கும்” என்றார்.

ரமேஷ் சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, “இதனால் மாணவர்களிடம் தங்கள் மதிப்புக் குறையாதா ?” என்றான்.

உபாத்தியாயர் மிகுந்த வெட்கத்துடன், “என்ன செய்வது ? வேணி பாபு இதுகூடக் கொடுப்பதில்லையே ?” என்றார்.

“அவர்தான் இதற்கு அதிகாரிபோலிருக்கிறது ?”

உபாத்தியாயர் சிறிது சங்கடத்திலாழ்ந்தார். ஆனால், அவர் ‘இல்லை’ என்று சொல்ல முடியவில்லை. ஆகையால் அவர் மெள்ள மெள்ள, “அவர்தான் காரியதரிசி. அவர் சொந்தப் பொறுப்பிலிருந்து ஒரு தம்பிடி கூடச் செலவு செய்வதில்லை. யதுமுகர்ஜி பெண் சாக்ஷாத் லக்ஷ்மிதான். அவளுடைய தயவு இல்லாதிருந்தால் பள்ளிக்கூடத்தை வெகு நாளைக்கு முன்பே மூடியிருக்க வேண்டும். இந்த வருஷம் கூரை வேய்ந்து தருவதாகச் சொல்லியிருந்தார். ஆனால் ஏனோ அதை மெள்ள நழுவ விட்டு விட்டார். ஒரு உதவியும் செய்வதில்லை” என்றார்.

ரமேஷ் உற்சாகத்துடன் ரமாவைப் பற்றி இன்னும் அநேகம் கேள்விகள் கேட்டுவிட்டு கடைசியாக, "அவளுடைய தம்பி ஒருவன் இந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிருனு ?" என்றுன்.

"யதீன்தானே ? ஆம், படிக்கிருன்."

"சரி, உங்களுக்கு பள்ளிக்கூடத்திற்கு நேரமாகி விட்டது. இன்று நீங்கள் போங்கள். நான் நாளை பள்ளிக் கூடத்திற்கு வருகிறேன்."

"சரி" என்று கூறிவிட்டு உபாத்தியாயர் மறுபடி ஒரு தரம் ரமேஷை வணங்கிவிட்டுச் சென்றுர்.

## ஐந்தாம் அத்தியாயம்

விசுவேசுவரி அன்று பேசிய பேச்சுக்கள் அக்கம் பக்கம் கிராமங்களிலெல்லாம் உடனே பரவிவிட்டது. வேணி யாரையும் நேருக்கு நேர் கடுமையாகப் பேச மாட்டான்.

ஆகையால் அவன் சின்னம்மாவை அழைத்து வந்தான். ஏதோ ஒரு காலத்தில் தக்ஷன் என்ற ஒரு நாக சர்ப்பம் தனது கொடிய விஷத்தினுல் ஒரு பெரிய ஆலமரத்தையே எரித்து விட்டதாம். இந்தச் சின்னம்மாவும் அன்று காலையில் வந்து தனது விஷத்தைக் கக்கினுள். ஆனுல் விசுவேசுவரியின் ரத்த மாம்ச தேகம் அந்த விஷத்தினுல் எரிந்து விடவில்லை. ஒருவேளை இந்தக் காலத்துக்கும் அந்தக் காலத்துக்கும் அதிக வித்தியாசம் இருக்கலாம். விசுவேசுவரி சகல அவமானத்தையும் பொறுத்துக் கொண்டாள். ஏனென்றுல் இது அனைத்தும் தன்னுடைய புத்திரனுல் ஏற்பட்டது. இவள் ஏதாவது கோபத்தில் சொல்லிவிட்டால் அது எல்லோருக்கும் முன் வேணி காதிற்குத்தான் எட்டும். அது ரமேஷுக்கும் தெரிந்து விடும் என்று அவள் ஒன்றும் பதில் அளிக்கவில்லை.

ஆனுல், கிராமத்தில் இந்தப் பேச்சை ஒளித்துவிட முடியுமா ? ரமேஷூம் கேட்டான். தனது பெரிய அம்மாள் விஷயமாக மனதிற்குள் கவலைப் பட்டுக் கொண்டிருந்தான். தாயாருக்கும், மகனுக்கும் எங்கு விரோதமேற்பட்டு விடுமோ என்று பயந்து கொண் டிருந்தான். ஆனுல் வேணி, வெளியாரைவிட்டு தாயாரை இவ்விதம் அவமானம் செய்வான் என்று அவன் கனவிலும் கருதியதில்லை. இது உலகத்திலே இல்லாத புதுமையாக இருந்தது. இதனுல் அவன் கோபக் கனல் கொழுந்து விட்டெரிந்தது.

உடனே வேணி வீட்டிற்குப் போய் வாயில் வந்தபடி பேசி அவமர்னப்படுத்த வேண்டும் என்று ரமேஷூக்குத் தோன்றியது. ஆனுல் உடனே இது சரியல்ல என்று பட்டது. இதனுல் பெரியம்மாதான் அதிக அவமானமடைவாள் என்று நினைத்தான். அன்று தீனுவிடமும் இன்று உபாத்தியாயரிடமும் ரமா சம்பந்தமாகக் கேள்விப்பட்ட விஷயங்களில் இருந்து அவளிடம் இவனுக்குச் சிறிது அபிமானம் ஏற் பட்டது. பெரியம்மாவைத் தவிர இந்தக் கிராமம் முழுதும் அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்கும் போது முகர்ஜி வீட்டிலிருந்து சிறிது வெளிச்சம் வருவதை அறிந்தான். அந்த வெளிச்சம் எவ்வளவு சிறியதாயிருந்தால்தான் என்ன ! அவனுக்கு மிகுந்த ஆனந்தம் உண்டாகியிருந்தது. ஆனுல், இன்று இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அவளிடம் மிகுந்த வெறுப்புக் கொண்டான். இந்தப் பெண்ணும் அவளுடைய சிறிய தாயாரும், வேணியும் சேர்ந்து கொண்டு பெரியம்மாவை இவ்விதம் கொடுமைப்படுத்தியிருக்கிருர்கள் என்று ஊகித் தான். இந்த இரு பெண்களுக்கும் வேணிக்கும் என்ன தண்டனை, எப்படிக் கொடுப்பது என்று அவனுல் தீர்மானிக்க முடியவில்லை.

இதற்கிடையில் இன்னொரு சம்பவமும் நிகழ்ந்தது. இன்னும் அநேக சொத்துக்கள் கோஷால் வம்சத்திற்கும் முகர்ஜி வம்சத்திற்கும் பாகப் பிரிவினையாகாமலேயே இருந்தது. ஆசார்யா வீட்டிற்குப் பின்னுலிருந்த குளமும்

...RSITY EXTENSION...

அதில் ஒன்று. முதலில் இது ரொம்பப் பெரிதாக இருந்தது. நாளடைவில் இதை யாரும் கவனிக்காமல் விடவே மண் மூடி இப்பொழுது அது ஒரு பெரிய குட்டை அவ்வளவு தானிருக்கும். நல்ல மீன்கள் வெளியிலிருந்தும் கொண்டு வந்து விடப்படவில்லை ; அதிலேயும் கிடையாது.

ஏதோ, தானே தண்ணீரில் உற்பத்தியாகும் சாதாரண மீன்கள்தானிருந்தன. பைரவன் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தான். வெளியில் சண்டி மண்டபத் தருகில் கணக்குப்பிள்ளை கணக்கெழுதிக் கொண்டிருந்தார். பைரவன் அவசரமாக, "நீங்கள் உங்கள் ஆளை அனுப்ப வில்லையா? குட்டை மீனை எல்லாம் பிடித்துக் கொண்டு போகிருர்கள்" என்ருர்.

குமாஸ்தா பேனுவைக் காதில் சொருகிக் கொண்டு, "யார் பிடித்துக் கொண்டு போகிருர்கள்?" என்ருர்.

"யார் பிடிப்பார்கள்? வேணி பாபுவின் வேலைக் காரன் நின்று கொண்டிருக்கிருன். முகர்ஜி வீட்டு தர்பானும் இருக்கிருன். நான் இப்போது பார்த்துவிட்டு வருகிறேன். உங்கள் ஆள் மட்டும் இல்லை. ஜல்தியாக யாரையாவது அனுப்பி வையுங்கள்" என்ருர்.

ஆனுல் கோபால் சிறிதும் கவலையின்றி, "நம்ம எஜமானர் மீன் சாப்பிடுவதில்லையே" என்ருன்.

"அவர் சாப்பிடாவிட்டால் என்ன! நம்முடைய பங்கை வாங்கிவிட வேண்டுமல்லவா?"

"நாம் எல்லோரும் அதைத்தான் விரும்புகிருேம். பெரிய எஜமானர் உயிரோடிருந்தாலும் இதையே தான் விரும்புவார். ஆனுல், ரமேஷ் வேறு மாதிரியான மனிதராச்சே."

இதைக் கேட்டு பைரவன் ஆச்சரியமடைவதைக் கண்டு கோபாலன் சிரித்துக் கொண்டு, "இதென்ன பிரமாதம், இரண்டொரு மீன்கள். அன்று அக்கரையி லுள்ள புளிய மரம் வெட்டினுர்கள். அந்த இரண்டு வீட்டுக்காரர்களும் பங்கு போட்டுக் கொண்டார்கள்.

நமக்கு ஒரு புளியம்பட்டை கூடக் கிடைக்கவில்லை. நான் உடனே ஓடி வந்து எஜமானரிடம் எல்லா விஷயத்தையும் சொன்னேன். அவர் என்னைப் பார்த்து ஒரு தரம் சிரித்துவிட்டு மறுபடியும் புத்தகம் படிப்பதில் ஆழ்ந்து விட்டார். நான் என்ன செய்வது என்று கேட்டேன். ஆனுல், நமது ரமேஷ் பாபு என்னைத் திரும்பியே பார்க்கவில்லை. நான் பல தடவை கேட்ட பிறகு அவர் புஸ்தகத்தை மூடி வைத்து விட்டு அலட்சியமாக, 'விறகுக்காகச் சொல்கிருயா? நம்மிடம் வேறு புளியமரம் கிடையாதா' என்ருர். கேட்டுக் கொண்டீர்களா? 'இல்லாமலென்ன, நம்முடைய பங்கை ஏன் விட வேண்டும்? யாராவது தங்கள் பங்கை விடுவார்களா?' என்றேன். ரமேஷ் பாபு புஸ்தகத்தைக் கீழே வைத்து விட்டு ஐந்து நிமிஷம் பேசாமலிருந்தார். பிறகு, "அது உண்மைதான். ஆனுல், இரண்டு மூன்று அற்ப விறகுக்காக சண்டையிடுவதா?" என்ருர்.

பைரவன் திடுக்கிட்டு, "அடே, இதென்ன ஐயா நீங்கள் சொல்வது?" என்ருர்.

கோபால் சிரித்துக்கொண்டு, "ஆசார்யாஜி, நான் சொல்வது உண்மை. நான் அன்றே அனைத்தும் தெரிந்து கொண்டேன். வீணுக எதற்கு அடிக்கடி சொல்ல வேண்டும்? இந்த வீட்டு லக்ஷ்மி தாரணி கோஷாலோடு மறைந்துவிட்டாள்" என்ருன்.

பைரவ ஆசார்யா சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "அந்தக் குளம் என் வீட்டுக்குப் பின்னுலிருக்கிறது. நான் தகவல் கொடுக்க வேண்டுமல்லவா?" என்ருர்.

"ஆம். ரொம்ப சரி, நீங்களே போய் இதைப் பற்றிச் சொல்லுங்கள். ராப் பகலாக புஸ்தகம் படித்துக் கொண்டும், பங்காளிகளோடு இப்படிப் பயந்து கொண்டும் இருந்தால், சொத்து சுதந்திரமெல்லாம் இருக்கவா போகிறது! கோவிந்த முகர்ஜி மகள் பெண் தானே. ஆனுல், அவள் கூட இவர் விஷயத்தைக் கேட்டுச் சிரிக்கிருள். அன்ெருரு நாள் கோவிந்த காங்கூலியைக்

கூப்பிட்டு கேலியாக, "சொத்து அனைத்தையும் எங்களிடம் விட்டு விடச் சொல்லுங்கள். நாங்கள் ஏதாவது மாதா மாதம் கொடுக்கிறோம்" என்றுளாம். இதைவிட வெட்கக்கேடான பேச்சு வேறு ஏதாவது உண்டா?" என்றான். இதைக் கூறிவிட்டு கோபால் கோபத்தோடும் துக்கத்தோடும் தன் வேலையைக் கவனித்தான்.

வீட்டில் பெண்கள் கிடையாது. ஆகையால் எல்லாக் கதவுகளும் திறந்து கிடந்தன. பைரவ ஆசார்யா உள்ளே சென்று பார்த்தார். ரமேஷ் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ரமேஷுக்குக் கடமையை உணர்த்தி அவனுடைய சொத்துக்களைக் காப்பாற்றும் பொருட்டு பைரவ ஆசார்யா பீடிகை போட்டு விஷயத்தை ஒருவாறு தெரியப்படுத்தவே, ரமேஷ், தூங்கிக் கொண்டிருந்த சிங்கம் எழுந்து கர்ஜிப்பது போல, "என்ன, தினம் தினம் என்னிடம் இம்மாதிரி ஏமாற்று வித்தையா காட்டுகிறார்கள்? அடே பஜுவா" என்று கூப்பிட்டான்.

அவனுடைய இந்தக் கோபத்தைக் கண்டு பைரவ ஆசார்யா பயந்து விட்டார். அவன் யாரை இப்படிச் சொல்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பஜுவா கோரப்பூர் ஜில்லாவைச் சேர்ந்தவன். மிகுந்த தைரியசாலி. நம்பிக்கையுள்ள வேலைக்காரன். கம்பு சுற்றுவதில் ரமேஷினுடைய சிஷ்யன். ரமேஷ் தான் கம்பு சுற்றப் பழகிக் கொண்டதோடு அவனுக்கும் சொல்லிக் கொடுத்திருந்தான். பஜுவா வந்ததும் ரமேஷ், "போய் எல்லா மீன்களையும் பிடுங்கித் கொண்டு வா. யாராவது தடுத்தார்களானல் குடுமியைப் பிடித்து இங்கே இழுத்துக் கொண்டு வா. அது முடியாவிட்டால் பல்லை யாவது உடைத்துவிட்டு வா" என்று கடுமையாக உத்திரவிட்டான்.

பஜுவாவும் இத்தனை நாளும் இதுதான் வேண்டியிருந்தான். அவன் உடனே தனது எண்ணெய் போட்ட தடியை எடுத்து வருவதற்கு உள்ளே சென்றான். இவைகளைக்கண்டு பைரவ ஆசார்யா பயத்தால்

நடுங்கினுர். அவர் வங்காளத்துத் தண்ணீரைக் குடித்து வளர்ந்தவர். கூச்சல் போடுவதையும், தாறுமாருகப் பேசுவதையும் கண்டு அவர் பயப்பட மாட்டார். ஆனல் பஜுவா மறுவார்த்தையே பேசாமல் அப்புறம் போனதைக் கண்டு அவரது வாய் வறண்டு விட்டது. ‘குலைக்காத நாய் கடித்தே தீரும்’ என்னும் பழமொழி அவர் நினைவிற்கு வந்தது. பைரவ ஆசார்யா உண்மை யிலேயே நல்ல எண்ணத்துடன் வந்தவர். தக்க சமயத்தில் போய் ஏதோ சத்தம் போட்டால் கொஞ்சம் மீன் வீட்டுக்கு வரலாம். பைரவ ஆசார்யா உண்மையில் இந்த உதவி செய்யத்தான் வந்தவர். ஆனல் அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. வாயைத் திறக்காமல் தடியைக் கொண்டு வரப் புறப்பட்டு விட்டான். அவர் ஒரு ஏழை. கட்சி சேர்ப்பதற்கு அவருக்குத் துணிவு கிடையாது. சிறிது நேரத்திற்குள் பஜுவா ஒரு நீளமான தடியை எடுத்துக் கொண்டு வந்தான். முதலில் தடியை ஒரு சுழற்றுச் சுழற்றி ரமேஷை வணங்கிவிட்டுப் போகத் தொடங்கினுன். பைரவ ஆசார்யா திடீரென அழ ஆரம்பித்தார். பிறகு ரமேஷினுடைய இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு, “அடே, பஜு, நில்லடா, போகாதே அப்பா ரமேஷ், மன்னித்து விடு. நான் ஏழைப்பட்டவன். நான் பிழைக்க முடியாது” என்ருர்.

ரமேஷ் வெடுக்கெனத் தன் கையை இழுத்துக் கொண்டான். அவனுக்குண்டான ஆச்சரியத்திற் களவில்லை. பஜுவா திரும்பி வந்து திகைப்புடன் நின்று கொண்டிருந்தான். பைரவ ஆசார்யா தழ தழத்த குரலில் “அப்பா, இந்த விஷயத்தை ஒளிக்க முடியாது. வேணி பாபு என்னிடம் விரோதம் கொண்டாரானுல் அப்புறம் நான் ஒரு நிமிஷம்கூட இந்த ஊரில் குடி இருக்க முடியாது. என் வீட்டை நெருப்பு வைத்துக் கொளுத்தி விடுவார். அப்புறம் மும்மூர்த்திகள் வந்தாலும் என்னைக் காப்பாற்ற முடியாது” என்ருர்.

ரமேஷ் தலை குனிந்து மௌனமாக உட்கார்ந்து கொண்டான். சத்தத்தைக் கேட்டு கோபாலன் கணக்குப் புத்தகத்தை மூடி வைத்து விட்டு வந்தான். அவன்

மெதுவாக, "ஆம், இவர் சொல்வது உண்மைதான்" என்ருன்.

ஆனல், ரமேஷ் அதற்கும் ஒன்றும் பதில் அளிக்க வில்லே. கையாலேயே சமிக்ஞை செய்து பஜுவாவைப் போகச் சொல்லிவிட்டு மௌனமாக உள்ளே சென்று விட்டான். அவனது இதயத்துள்ளே பைரவ ஆசார்யாவின் அளவு கடந்த பீதியும் அவருடைய கோழைப் பேச்சுமே நிறைந்திருந்தது. அனல் இது யாருக்கும் தெரியாது.

## ஆரும் அத்தியாயம்

"ஏண்டா யதீன், விளேயாடிக்கொண்டா இருக்கிருய் ? பள்ளிக்கூடம் போகவில்லேயா?"

"அக்கா, எங்களுக்கு இன்றைக்கும், நாளேக்கும் லீவு."

சின்னம்மா இதைக் கேட்டவுடன் தனது குரூப முகத்தை இன்னும் அதிகக் கடுமையாக்கிக் கொண்டு, "மாசத்திலே பதினைந்து நாளேக்கு லீவு விடுகிற அந்தப் பள்ளிக்கூடத்திலே தீயை வை. இன்னும் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு இத்தனே ரூபாயைச் செலவு' செய்கிருயே ? நானுக இருந்தால் நெருப்பு வைத்து விடுவேன்" என்ருள்.

இதைக் கூறியதும் அவள் தன் காரியமாகப் போய் விட்டாள். சின்னம்மாளே முழுக்க முழுக்க கெட்டவள் என்று சொல்லித் தூற்றிக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் பெரிய தப்புதான் செய்கிருர்கள். அவள் இந்த மாதிரி சில சமயங்களில் உண்மையைக் கூறுவதும் உண்டு. அவசியம் நேர்ந்தால் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல் வதிலும் பின் வாங்குவதில்லே; ரமா தன்னுடைய தம்பியை அருகில் அணேத்துக்கொண்டு, "ஏண்டா யதீன், இன்று எதற்காக லீவு ?" என்ருள்.

யதீந்திரன் தன் அக்காளிடமிருந்து விடுவித்துக் கொண்டு, "எங்கள் பள்ளிக்கூடத்துக்கு மேல்கூரை போடுகிறார்கள். அதற்கப்புறம் வெள்ளை அடிப்பார்கள். நிறையப் புத்தகங்கள், நாலைந்து நாற்காலிகள், மேசைகள், ஒரு அலமாரி, ஒரு பெரிய கடிகாரம் எல்லாம் எங்கிருந்தோ வந்திருக்கிறது. அக்கா, நீயும் ஒரு நாளைக்குப் பார்க்க வருகிறாயா ?" என்றான். ரமா மிகுந்த ஆச்சர்யத்துடன். "அடே நீ சொல்வது நிஜமா ?" என்றாள்.

"ஆமாம் அக்கா, நான் நிஜமாகச் சொல்கிறேன். ரமேஷ் பாபு வந்திருக்கிறாரல்லவா. அவர்தான் இதெல்லாம் செய்திருக்கிறார்."

இதற்கு மேல் அந்தச் சிறுவன் அனைத்தையும் சொல்ல ஆரம்பித்தான். அதற்குள் சின்னம்மாள் எதிரில் வருவதைக் கண்டு ரமா அவனை அவசரமாகத் தனது அறைக்குள் அழைத்துச் சென்று விட்டாள். அவள் அவனை மிக அன்பாக அநேகம் கேள்விகள் கேட்டு, ரமேஷ் விஷயமாகவும், பள்ளிக்கூடம் விஷயமாகவும் அநேக விஷயங்கள் தெரிந்து கொண்டாள். அவன் தினசரி ஒரு மணி இரண்டு மணி நேரம் பள்ளிக்கூடம் வந்து பாடம் சொல்லிக் கொடுக்கிறான் என்பதையும் அறிந்தாள். அவள் உடனே, "ஏண்டா யதீந்திரா, நீ யாரென்பது அவருக்குத் தெரியுமா ?" என்றாள்.

பையன் தலையை அசைத்துக் கொண்டு, "தெரியும்" என்றான்.

"நீ அவரை என்ன சொல்லி அழைக்கிறாய் ?"

இப்போது பையன் சங்கடத்திலாழ்ந்தான். இது வரையிலும் அவ்வளவு நெருங்கிய சம்பந்தமும் தைரியமும் அவனுக்கு ஏற்படவில்லை. அவர் பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்ததும் தண்டப் பிரயோக தலைமை ஆசிரியரே தனியாக ஒதுங்கி நின்று கொள்கிறார். அதைக் கண்டு மாணவர்கள் இன்னும் அதிகமாக பயந்து விடுகிறார்கள். கூப்பிட்டாலும் யாரும் எதிர்நின்று பேசத் துணிவதில்லை. ஆனால், இதையெல்லாம் தனது அக்காள் முன்னிலையில்

காட்டிக் கொள்ளவும் இஷ்டமில்லை. எல்லா உபாத்தி யாயர்களும் அவரை 'சின்ன எஜமானர்' என்று சொல்வதைக் கேட்டிருக்கிருன். ஆகையால் சிறிது அவன் யோசனை செய்து, "நாங்களெல்லோரும் அவரை 'சின்ன எஜமானர்' என்றுதான் கூப்பிடுகிறோம்" என்றான்.

ஆனால், அவன் முகத்தைப் பார்த்து ரமா விஷயத்தை ஒருவாறு ஊகித்துக்கொண்டாள். அவனைத் தனது மடி மீது எடுத்து வைத்துக்கொண்டு, "சின்ன எஜமானர் என்ன ஆகிராரடா; அவர்தான் உனக்கு அண்ணு ஆச்சே! வேணி அண்ணுவைப் பெரிய அண்ணு என்று கூப்பிடுவது போலவே அவரையும் சின்ன அண்ணு என்று கூப்பிடுவதற்கென்ன?" என்ருள். பையன் ஆனந்தத்துடன், "அவர் எனக்கு அண்ணுவா ஆகிருர்? நிஜமா சொல்கிருயா அக்கா?" என்ருன்.

"ஆம், அண்ணுதான்."

இதைக் கூறியதும் ரமா சிரித்தாள். ஆனால் யதீந்திரனை தடுத்து வைப்பது அவளுக்குக் கஷ்டமாகப் போய் விட்டது. எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் இந்தத் தகவலை தனது தோழர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்திவிட வேண்டுமென விரும்பினுன். ஆனல் பள்ளிக்கூடம்தான் மூடியிருக்கிறதே. எப்படியும் இரண்டு நாள் பொறுக்க வேண்டியதாயிற்று இருந்தாலும் அருகாமையில் உள்ள பையன்களுக்கு எப்படிக் கூருமலிருக்க முடியும். அவன் போவதற்கு எழுந்து, "நான் போகிறேன் அக்கா!" என்ருன்.

"இப்போது நீ எங்கும் போக வேண்டாம்" என்று கூறித் தடுத்துவிட்டாள். போக முடியாமல் போகவே அவன் சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான். பிறகு, "அவர் இத்தனை நாளாக எங்கிருந்தார்?" என்ருன்.

ரமா அன்பாக, "இத்தனை நாளும் படிப்பதற்காக வெளியூர் போயிருந்தார். பெரியவனுன பிறகு நீயும் இப்படித்தான் படிப்பதற்காக வெளியூர் போக வேண்டு

மாக்கும். நீ என்னை விட்டுத் தனியாகப் போயிருப்பாயா ?" என்றாள்.

பையனைத் தன்னோடு அணைத்துக் கொண்டாள். சிறு பையனானாலும் தனது அக்காளின் குரலில் உள்ள மாறுதலைக் கண்டு ஆச்சர்யத்துடன் அவளையே பார்த்தான். தன்னுடைய தம்பியை உயிருக்குயிராக அவள் நேசித்து வந்தாலும் இதற்குமுன் எப்போதும் அவளுடைய நடத்தையிலோ பேச்சிலோ இம்மாதிரி மாறுதலை அவன் கண்டதில்லை.

"ஏன் அக்கா, சின்ன அண்ணாவின் படிப்பெல்லாம் பூர்த்தியாகி விட்டதா ?"

"ஆம், அவர் படிப்பை எல்லாம் முடித்துக் கொண்டு வந்திருக்கிறார்."

"உனக்கு எப்படித் தெரியும் ?"

அவள் பதிலுக்குப் பெருமூச்சுவிட்டுத் தலையை அசைத்தாள். உண்மையில் அவளைத் தவிர கிராமத்தில் வேறு யாருக்கும் இது விஷயமாகத் தெரியாது. அவள் அனுமானமும் சரி என்று சொல்லிவிட முடியாது. இருந்தாலும் பிறருடைய பிள்ளைகள் படிப்பு விஷயத்தில் இவ்வளவு சிரத்தை உள்ளவர் ஒருக்காலும் முட்டாளாக இருக்க முடியாதல்லவா ?

ஆனால், யதீந்திரன் இது விஷயமாகத் தர்க்கம் செய்யவில்லை. அதற்குள் அவனுக்கு இன்னொரு சந்தேகம் உண்டாகியது. "ஏன் அக்கா, சின்ன அண்ணா இங்கு ஏன் வருவதில்லை. பெரிய அண்ணா தினம் வருகிறாரே?" என்றான்.

இந்தக் கேள்வி ஒரு வேகமான அம்புபோல அவள் உள்ளத்தில் தைத்தது. இருந்தாலும் அவள் சிரித்துக் கொண்டு, "நீ அவரை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வரமுடியாதா ?" என்றாள்.

"இதோ போய்க் கூட்டி வருகிறேன்" என்று கூறி விட்டு யதீந்திரன் எழுந்து நின்று கொண்டான்.

"அடே, நீ ஒரு பைத்தியம்" என்று கூறிவிட்டு இரண்டு கையாலும் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"அடே, ஜாக்கிரதை, அப்படி எங்காவது செய்து விடாதே!" என்றாள்.

யதீந்திரன் என்னதான் குழந்தையாயிருந்த போதிலும் அவள் நெஞ்சு அடித்துக் கொள்வதைக் கண்டு ஆச்சரியத்துடன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். இதற்கு முன் அவள் இப்படி நடந்து கொண்டதை அவன் பார்த்ததில்லை. சின்ன எஜமானர், நமது சின்ன அண்ணாதான் என்று தெரிந்தவுடன் அவனுடைய கற்பனை எங்கெல்லாமோ செல்ல ஆரம்பித்தது. ஆனால், அக்காள் ஏன் அவரிடம் இப்படிப் பயப்படுகிறாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. இதற்குள் சின்னம்மா கூப்பிடுவது காதில் விழவே யதீந்திரனை விட்டு விட்டு ரமா எழுந்து நின்று கொண்டாள். சிறிது நேரத்திற்குள் சின்னம்மா அங்கு வந்து, "ரமா, குளிக்கப் போயிருக்கிறாய் என்று நான் நினைத்தேன். இன்று ஏகாதசி ஆச்சே, இன்னேரமாகியும் இன்னும் குளித்தாக வில்லையா? முகத்தைப் பாரு எப்படிக் கருவழிந்து கிடக்கிறது" என்றாள்.

ரமா பலமாகச் சிரித்துக் கொண்டு, "சின்னம்மா, நீ போ; இதோ நானும் போகிறேன்" என்றாள்.

"எப்போ போகிறாய்? வெளியில் வந்து பாரு. மீன் பங்கு போடுவதற்காக வேணி வந்திருக்கிறான்."

மீன் என்று கேட்டவுடன் யதீந்திரன் அங்கிருந்து கிளம்பி விட்டான். ரமாவும் முகத்தைப் பார்த்து எங்கு சின்னம்மா கண்டு பிடித்து விடுவாளோ என்ற பயத்துடன் அவனுக்குப் பின்னாலேயே இவளும் சென்றாள். வேணி முற்றத்தில் கோலாகலமாக இருந்தான். ஏராளமாக மீன்கள் குவிந்து கிடந்தன. ஒரு பெரிய கூடை நிரம்பி யிருந்தது. அதைப் பங்கிடுவதற்காக வேணி பாபு தயாராக வந்திருந்தார். வீதியிலுள்ள குழந்தைகள் சுற்றிலும் சப்தமிட்டுக் கொண்டிருந்தன.

இதற்குள் இருமிக்கொண்டே தர்மதாஸ் அங்கு வந்து சேர்ந்தார். "வேணி, இன்று மீன் பிடித்தீர்களா?" என்ருர்.

வேணி வியாகூலத்துடன், "அதிகமாக இல்லே" என்று கூறிவிட்டு தீவாரைக் கூப்பிட்டு, "ஏண்டா, இன்னும் நேரம் செய்கிருய்? ஜல்தியாக இரண்டு கூறு போடு" என்ருன்.

தீவார் பங்கு போடத் தொடங்கிஞன். இதற்குள் கோவிந்த காங்கூலி, "என்ன செய்கிருய் ரமா? ரொம்ப நாளாக வரமுடியவில்லே. இன்றைக்காவது போய்ப் பார்த்து விட்டு வரலாம் என்று வந்தேன்" என்று கூறிக் கொண்டு வந்து சேர்ந்தார்.

ரமா புன்முறுவலுடன், "வாருங்கள்!" என்ருள்.

"அடே, இதென்ன இவ்வளவு கூட்டம்?" என்று கூறிக்கொண்டு முன்ஞல் வந்தவர் தமது ஆச்சரியத்தை வெளிப்படுத்திக் கொண்டு, "ஓஹோ! இதுவா விஷயம்! ஏராளமாகத்தான் பிடித்திருக்கிறீர்கள். பெரிய குளத்தில் வலே போட்டிருப்பீர்கள் போலிருக்கிறது?" என்ருர். அவருடைய இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிப்பது வீண் என நினைத்து அனைவரும் மீனேப் பங்கு போடுவதில் ஈடுபட்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் அவர் அங்கிருந்து அகன்ருர். வேணி தனது பங்கை ஒரு கூடையில் போட்டு தனது ஆள் தலேயில் வைத்து விட்டான். பிறகு தீவாரை அங்கிருந்து போய்விடும்படி ஜாடை காட்டிஞன். ரமாவுக்கு அத்தனை மீன் தேவை யில்லே. ஆகையால் அவள் அங்கு வந்திருந்தவர்களுக் கெல்லாம் அந்தஸ்துக்குத் தக்கபடி அளித்தாள். அவர்களும் வாங்கிக்கொண்டு போகத் தொடங்கிஞர்கள்.

இதற்குள் எல்லோரும் ஆச்சரியப்படும் வண்ணம் ரமேஷ் கோஷால் வீட்டு மேற்கத்திய வேலேக்காரன் நெற்றிக்கட்டுத் தடியுடன் வாசலில் நின்று கொண் டிருந்தான்.

அவனுடைய முகத்தைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. அந்த முகத்தை ஒரு தரம் பார்த்தவர்கள்

மறந்துவிட முடியாது. கிராமத்திலுள்ள அனைவருக்கும் அவனைத் தெரியும். அவன் சம்பந்தமாக அநேக அற்புதக் கதைகள் கூட பரவியிருந்தது. இத்தனை மனிதர்களுக்குள் ரமாதான் எஜமானி என்பதை எப்படியோ அறிந்து கொண்டான். அவன் தூரத்திலிருந்தே, "அம்மா" எனக் கூறி ஒரு பெரிய சலாம் செய்தான். பிறகு அருகில் வந்து நின்று கொண்டான். அவனுடைய முகத்தைப் போல குரலும் கேட்ட மாத்திரத்தில் பீதியை விளைவிப்பதா யிருந்தது. அவன் வங்காளி கலந்த ஹிந்தியில், "நான் ரமேஷ் பாபுவின் வேலைக்காரன். மீன் பாகம் மூன்றில் ஒன்றை வாங்கிப் போவதற்காக வந்திருக்கிறேன்" என்பதைத் தெரியப்படுத்தினான். ஆச்சரியத்தாலோ அல்லது அவனது வேண்டுகோளை மீற முடியாததாலோ என்னவோ ரமா உடனே பதிலளிக்க முடியவில்லை. பஜுவா ஆச்சரியத்துடன் வேறுபுறம் திரும்பி வேணி பாபுவின் ஆளைப் பார்த்து, "அடே, போகாதே" என்றான். அந்த ஆள் பயத்தால் நாலு அடி பின்னால் வந்து நின்று கொண்டான். ஒரு அரை நிமிஷம் வரையிலும் யாரும் வாயே திறக்கவில்லை. அப்போது வேணிபாபு சிறிது துணிவு காட்டினார். அவர் நின்ற இடத்திலேயே இருந்து கொண்டு, "என்ன பங்கு?" என்றார்.

பஜுவா உடனே அவருக்கு ஒரு சலாம் வைத்து விட்டு. "பாபுஜி, நான் உங்களைக் கேட்கவில்லை" என்றான்.

சின்னம்மா தூரத்தில் திண்ணையில் இருந்தபடி, "அடே அப்பா! நீ என்ன, அடித்து விடுவாயாடா?' என்றாள்.

பஜுவா முதலில் சிறிது நேரம் சின்னம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதற்குப் பிறகு அவன் சிரித்த சிரிப்பில் வீடே அதிர்ந்தது. சிறிது நேரம் சிரித்து விட்டு, பிறகு அடக்கிக் கொண்டு, ரமாவைப் பார்த்து, "அம்மா?" என்றான்.

பஜுவாவின் பேச்சிலும் நடத்தையிலும் அவ மரியாதை ஒளிந்துகொண்டிருந்தது. இதை நினைத்து

ரமா மனதிற்குள்ளாகவே எரிச்சலடைந்திருந்தாள். "உனது பாபு என்ன வேண்டுமென்கிறார்?" என்றாள்.

ரமாவின் கோபத்தைக் கண்டு பஜுவா சிறிது வருத்தமடைந்தான். தனது அடிக் குரலை கொஞ்சம் மென்மைப் படுத்திக்கொண்டு இரண்டாந் தடவையாக தான் வந்த விஷயத்தைச் சொன்னான். ஆனால், இனி என்ன செய்ய முடியும்? மீன்கள் பங்கு போட்டாயிற்று. இத்தனை பேருக்கும் முன்னால் அவமானப்படவும் முடியாது. ஆகையால் அவள், "உனது பாபுவுக்கு இதில் பாகம் கிடையாது. போய், அவரை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளச் சொல்லு."

"ரொம்ப சரி" என்று கூறிவிட்டு மறுபடியும் ஒரு பெரிய சலாம் போட்டான். வேணியின் வேலைக்காரனை போகும்படி உத்திரவிட்டு விட்டு அங்கிருந்து போகத் தொடங்கினான். அனைவரும் அவனுடைய செய்கையைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவன் திரும்பி வந்து, "அம்மா, ஜனங்கள் பேச்சைக் கேட்டு எஜமானர் குளத்து மீனை எல்லாம் பிடுங்கி வரும்படி உத்திரவிட்டார். எனது எஜமானர் மாமிசம் சாப்பிட மாட்டார். நானும் அப்படித்தான். ஆனால்......" என்று கூறி நிறுத்திவிட்டுத் தனது வயிற்றின் மேல் கையை வைத்துக் கொண்டு, "எஜமானர் உத்திரவினால் ஒரு வேளை குளக்கரையிலேயே இந்த உயிர் போயிருக்கும். ஆனால் ராம்ஜி, எஜமானர் கோபம் தணிந்துவிட்டார் என்று என்னை சாந்தப்படுத்திவிட்டார். அவர் என்னைக் கூப்பிட்டு, 'பஜுவா, போ. குளத்திலே நமக்குப் பங்கு உண்டா இல்லையா என்று கேட்டுவிட்டு வா'" என்றார்.

இதன் பிறகு அவன் மிகுந்த மரியாதையுடன் தடி சகிதம் ரமாவைக் கும்பிட்டான். பிறகு பஜுவா, "யார் என்ன சொன்னாலும் சரி, எனக்கு நிச்சயமாகத் தெரியும். அம்மா வாயிலிருந்து பொய் வராது. அவள் அந்நியர் சொத்தைத் தொடக்கூட மாட்டாள்" என்று சொல்லி விட்டார் என்றான்.

அதன் பிறகும் அவன் பல தடவை வணங்கிவிட்டு அங்கிருந்து சென்றான். அவன் போனதும் வேணி,

"சரிதான், இதுதான் அவன் சொத்துக்களைக் காப்பாற்றும் லட்சணம்! உங்களுக்கு முன் இன்று சபதம் கூறுகிறேன். இன்றிலிருந்து அவன் குளத்தில் ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூட கையில் தொட விடமாட்டேன். தெரிந்து கொண்டாயா ரமா?'' என்ருன்.

இதைக் கூறியதும் சந்தோஷத்தால் 'ஹி...ஹி...ஹி' எனச் சிரித்தான். ஆனல் ரமாவின் காதில் இவைகள் ஒன்றும் ஏறவில்லை. ஆனல் அவளுடைய காதில் பஜுவா சொன்ன, "அம்மா வாயிலிருந்து பொய் வராது" என்ற வார்த்தை ஆயிரம் விதமாக ஒலித்துக் கொண்டிருந்தது. செக்கச்செவேலென்று இருந்த அவளுடைய முகம் ஒரு சொட்டு ரத்தம் கூட இல்லாததைப்போல் வெளுத்து விட்டது. தன் முகத்தை யாரும் பார்க்காதிருக்கும் வண்ணம முக்காடு போட்டுக் கொண்டு உடனே அங்கிருந்து சென்றுவிட்டாள்.

## ஏழாம் அத்தியாயம்

"பெரியம்மா!"

"யார்? ரமேஷா? வா அப்பா, உள்ளே வா.''

விசுவேசுவரி உடனே ஒரு விரிப்பை எடுத்து விரித்தாள். வீட்டிற்குள் அடி எடுத்து வைத்ததும் ரமேஷ் திடுக்கிட்டான். ஏனென்ருல் பெரியம்மா அருகில் உட்கார்ந்திருந்த பெண்ணின் முகம் நன்கு தெரியாவிட்டாலும், அது ரமா என்பதில் சந்தேகமில்லை. இவர்கள் பெரியம்மாவை அவமானம் செய்வதிலும் ஒன்றும் பின்வாங்குவதில்லை. பிறகு வெட்கமின்றிப் பேச வருவதற்கும் பின்வாங்குவதில்லை என்று மனதிற்குள் கோபமடைந்தான். ரமேஷ் எதிர்பாராது வந்ததால் ரமாவும் சங்கடத்திலாழ்ந்தாள். அதற்குக் காரணம் அவள் இந்தக் கிராமத்துப் பெண் என்பது மட்டுமல்ல. ரமேஷுக்கு முன்னல் முக்காடு போட்டாலும் போடா

விட்டாலும் அவளுக்கு வெட்கமாயிருந்தது. இதைத் தவிர மீன் விஷயமாக தகராறு வேறு ஆகியிருந்தது. ஆகையால் முடிந்தவரையிலும் வேறு பக்கம் திரும்பிக் குனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். ரமேஷ் அவளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பாயின்மேல் உட்கார்ந்துகொண்டு, "பெரியம்மா!" என்று கூப்பிட்டான்.

"ஏன் ரமேஷ்? இந்த நேரத்தில் எங்கே வந்தாய்?"

"இந்நேரத்தில் வராவிட்டால் உன்னிடம் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காது. உனக்கு வேலை இருந்து கொண்டே இருக்கும்."

பெரியம்மா இதற்குப் பதில் அளிக்காமல் சிரித்தாள். ரமேஷ் புன்முறுவலுடன், "ரொம்ப நாளைக்கு முன், நான் சிறு பையனாக இருந்தபோது உன்னிடம் வந்து விடைபெற்றுக்கொண்டு போனேன். இன்று அதே மாதிரி விடைபெற்றுப்போக வந்திருக்கிறேன். பெரியம்மா, ஒரு வேளை இது எனது கடைசிப் பிரிவாகவும் இருக்கலாம்" என்றான்.

என்னதான் அவன் முகத்தில் புன்னகை இருந்தாலும் அவனுடைய குரலில் இதயத்தின் வேதனை வெளிப்படாமலில்லை. அதைக் கேட்டு இரு பெண்களும் திடுக்கிட்டார்கள்.

"நீ மகராசனாக இரு அப்பா; ஏன் இப்படிப் பேசுகிறாய்?" என்று சொல்லச் சொல்ல விசுவேசுவரியின் கண்களில் நீர் நிறைந்தது. ரமேஷ் சிரித்துக்கொண்டிருந்தான். விசுவேசுவரி அன்புடன், "ஏன் அப்பா, இங்கு உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லையா?" என்றாள்.

ரமேஷ் தனது திட சரீரத்தை ஒரு முறைக்கு இரண்டு முறை பார்த்துவிட்டு, "பெரியம்மா, இது இவ்விடத்திய தண்ணீரைக் குடித்து வளர்ந்த தேகம். இவ்வளவு சீக்கிரத்தில் ஒத்துக் கொள்ளாமல் போய்விடுமா? இல்லை, எனது தேகம் ரொம்ப நன்றாக இருக்கிறது. ஆனால் என்னால் இங்கு இனி ஒரு கணம் கூடத் தாமதிக்க முடியாது. இருந்து இருந்து எனது பிராணன் போய்விடும் போலிருக்கிறது" என்றான்.

தேகத்துக்கு ஒன்றுமில்லை எனத் தெரிந்ததும் அவள் கவலையின்றிச் சிரித்துக்கொண்டு, "இதுதானே நீ பிறந்த இடம், பின் இங்கு ஏன் வசிக்க முடியாமல் போகிறது?" என்ருள்.

ரமேஷ் தலையை அசைத்துக்கொண்டு, "அதுவல்ல நான் சொல்வது. உனக்கே எல்லாம் தெரிந்திருக்குமென்று நினைத்தேன்" என்ருன்.

விசுவேசுவரி சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "எல்லாம் தெரியாது, கொஞ்சம்தான் தெரியும். அதனுல் தான் ரமேஷ் நான் சொல்கிறேன். நீ வேறு எங்கேயாவது போய்விட்டால் உன் காரியமாகாது" என்ருள்.

"ஏன் பெரியம்மா? ஏன் ஆகாது? இங்குதான் யாரும் என்னை விரும்புவதில்லையே!"

"ஒருவரும் விரும்பாததால்தான் நீ எங்கும் ஓட வேண்டாம் என்கிறேன். இங்கிருந்து ஓடி விடுவதற்கா இத்தனை நாளும் இந்த தேகத்தை வளர்த்திருய்?"

ரமேஷ் பேசாமலிருந்தான். இன்று ஏன் அவனுக்கு இந்தக் கிராமத்தின் மேல் இவ்வளவு வெறுப்பு ஏற்பட்டது? அதற்குக் காரணமும் இருந்தது. கிராமத்திலிருந்து ஸ்டேஷனுக்குப் போகும் வழி பத்து வருஷத்திற்கு முன் ஒரு நாள் பெய்த மழையால் சீர்கெட்டிருந்தது. அன்றிலிருந்து அந்த இடம் குழியாகிக் குழியாகி இன்று ஒரு பெரிய பள்ளமாக இருந்தது. அடிக்கடி நீர் நிறைந்து கொள்வதால் அதில் நடப்பதற்கு மிகுந்த சிரமமாக இருந்தது. எப்படியோ நிதானமாக நடந்து வந்தார்கள். மழை காலத்தில் ஏற்படும் கஷ்டத்தைச் சொல்லி முடியாது. நாலைந்து மூங்கிலை ஒன்ருக் கட்டிப் போட்டோ அல்லது பலகையைக் குறுக்கே போட்டோ சனங்கள் கையைக் காலை ஒடித்துக்கொண்டு அதைக் கடந்து வந்தார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டும் யாருக்கும் அதைச் சீர் செய்ய வேண்டுமென்று தோன்றவில்லை. அதற்காகக் கொஞ்சம் பணம் செலவாகும். அந்தப் பணத்தைத் தன் கையிலிருந்து போடாமல் ரமேஷ் ஏழு எட்டு நாள் சந்தா வசூலிக்க

ஆரம்பித்தான். ஆனால், ஏழு எட்டுப் பைசாக் கூட வசூலாகவில்லை. இது மாத்திரமல்ல. இன்று அவன் வெளியில் போய் விட்டு வரும்போது கடையில் நாலைந்து பேர் இது விஷயமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டான். ஒருவன் மற்றவனிடம் சிரித்துக்கொண்டு சொல்கிறான். "நீங்கள் ஒரு தம்பிடி கூடக் கொடுத்து விடாதீர்கள், பார்த்தாலே தெரியவில்லை. எல்லோரையும் விட சரி செய்ய வேண்டியது அவனுக்குத்தான் முக்கியம். நீங்கள் கொடுக்காவிட்டால் அவனே கொடுப்பான். அவன் செருப்புப் போட்டுக் கொண்டு நடக்க வேண்டி இருக்கிறதல்லவா! அவன் இங்கு இல்லாதபோது இத்தனைநாளும் நாம் ஸ்டேஷன் போகாமல் வராமலா இருந்தோம்."

இதற்கப்புறம் இன்னொருவன் கூறுகிறான். "அடே கொஞ்சம் பொறுங்கள். அவன் தலையில் கையை வைத்துக் கோவிலை பழுது பார்த்து விடலாம் என்று சட்டர்ஜி சொல்லியிருக்கிறார். அவனுக்குக் கொஞ்சம் சந்தோஷமூட்டி, 'பாபு, பாபு' என்று அழைத்தால் காரியமாகிவிடுகிறது."

இந்த வார்த்தைகள்தான் இன்று காலையிலிருந்து ரமேஷை வேதனைப்படுத்திக் கொண்டிருந்தது. பெரியம்மாவும் அதே பேச்சை எடுத்தாள், "நீ அந்தப் பாதையை ஒழுங்கு படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தாயே, என்னவாயிற்று?" என்றாள்.

"இனி அந்தப் பாதை சீர்ப்படாது. யாரும் ஒரு தம்பிடி கூடக் கொடுக்கமாட்டார்கள்."

"கொடுக்கமாட்டார்கள் என்று கூறிவிட்டால் காரியம் எப்படி ஆகும்? உனக்குத்தான் அப்பாவிடமிருந்து நிறையப் பணம் கிடைத்திருக்கிறதே. அப்பா, இந்தச் சிறிய தொகையை நீயே கொடுத்துவிடலாமே!"

"நான் ஏன் கொடுக்க வேண்டும்? இந்த ஜனங்களுக்காகத் தெரியாத்தனமாகப் பள்ளிக்கூடத்திற்கு அத்தனை ரூபாய் செலவழித்தோமே என்று விசனமாக

இருக்கிறது. இந்தச் கிராமத்துக்காரர் யாருக்காகவும் ஒன்றும் செய்யக்கூடாது.''

ரமாவை ஒருதரம் கடைக் கண்ணால் பார்த்துவிட்டு, "இந்தச் ஜனங்கள் தருமம் செய்தவனைப் பைத்தியக்காரன் என்று நினைத்துக்கொள்கிறார்கள். யாராவது இவர்களுக்கு நன்மை செய்தால், தனது தேவைக்காகச் செய்கிறான் என்று நினைக்கிறார்கள். இவர்களை மன்னிப்பதுகூட மகாப் பெரிய பாபம். பயந்து கொண்டு பின்வாங்கி விட்டானென்று எண்ணுவார்கள் ' என்றான்.

பெரியம்மா நன்றாகச் சிரித்தாள். ஆனால், ரமாவின் கண்ணும் முகமும் சிவந்துவிட்டது. ரமேஷ் கோபத்துடன, "ஏன் பெரியம்மா, நீ சிரிக்கிறாய் ?'' என்றான்.

"அப்பா, நான் சிரிக்காமல் என்ன செய்யட்டும் ? ஆனால், இங்குதான் நீ அவசியம் இருந்து தீரவேண்டும் என்று நான் சொல்வேன். நீ பிறந்த இடத்தைவிட்டுப் போவதனால் உன்னிடம் ஒன்று கேட்கிறேன். நீ கோபமடைவதற்கு இவர்கள் அருகதை உடையவர்களா ?'' என்றாள். பிறகு சிறிது பொறுத்து, "இவர்கள் எவ்வளவு எளியவர்கள் என்பது உனக்குத் தெரியுமா? இவர்கள் மேல் கோபிப்பதற்கு உனக்கு வெட்கமாயில்லை? ஆண்டவன் கருணை புரிந்து உன்னை இங்கு அனுப்பியிருக்கிறான். நீ இவர்களுக்கு மத்தியிலே இரு'' என்றாள்.

"ஆனால், பெரியம்மா! இவர்கள் என்னை விரும்புவதில்லையே ?''

"உன்னைப் பகைத்துக் கொள்வதால் தங்களுக்கே எத்தகைய தீங்கு செய்து கொள்கிறார்கள் என்பது உனக்குத் தெரியவில்லையா ? இங்கு மாத்திரம் அல்ல; எந்தக் கிராமத்திற்குப் போனாலும் இதே நிலைதான்.'' அதற்கப்புறம் அவள் ரமாவைப் பார்த்து, "ஏனம்மா, நீ அப்போதிருந்து ஏன் தலை குனிந்தபடியே உட்கார்ந்திருக்கிறாய்? ஏன் ரமேஷ், அண்ணன் தங்கைகள் பேசிக் கொள்வதில்லையா? இது வேண்டாமம்மா. இவனது தகப்பனாருடன் பழைய சச்சரவுகள் எல்லாம் ஒழியட்டும்

அதை வைத்துக்கொண்டு இனியும் நீங்கள் மனஸ்தாபப் பட்டுக் கொண்டிருக்க வேண்டாம்" என்றாள்.

ரமா தலை குனிந்தபடியே, "பெரியம்மா, நான் துளியும் மனதில் வைத்துக் கொண்டிருக்கவில்லை. ரமேஷ் அண்ணா..........."

ரமேஷ் திடீரென எழுந்து நின்று கொண்டு, "பெரியம்மா, நீ இதில் குறுக்கிடாதே. அன்று இவளுடைய சின்னம்மாவிடம் நன்றாக அகப்பட்டுக் கொண்டேன். இன்றைக்கு இவள் போய் மறுபடியும் சின்னம்மாவை அனுப்பினால் அவள் என்னை மென்று தின்னாமல் விடமாட்டாள்" என்று கூறிவிட்டு அவன் போகத் தொடங்கினான்.

விசுவேசுவரி அவனைக் கூப்பிட்டு, "போகாதே ரமேஷ், இந்த வார்த்தையைக் கேட்டுவிட்டுப் போ" என்றாள்.

ரமேஷ் கதவுக்கு வெளியில் நின்றுகொண்டு, "இல்லை பெரியம்மா, அகங்காரத்தால் உன் தலைமேல் ஏறி மிதிப்பவர்களுக்குப் பரிந்து கொண்டு பேசாதே" என்று கூறிவிட்டு பதிலை எதிர்பார்க்காமலேயே அங்கிருந்து போய்விட்டான். ரமா சிறிது நேரம் விசுவேசுவரியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அழ ஆரபித்தாள். "பெரிய்ம்மா, கடைசியில் இந்தப் பழியை என்மேல் ஏன் போடவேண்டும்? நான் அவளைத் தூண்டி விட்டேனா? அவள் பேசியதற்கு நானா பொறுப்பாளி?" என்றாள்.

பெரியம்மா அவளிரு கரங்களையும் அன்புடன் பிடித்துக்கொண்டு, "நீ சொல்லிக் கொடுக்கவில்லை, வாஸ்தவம்தான். ஆனால் அம்மா, சின்னம்மா பேச்சுக்கு நீ கொஞ்சம் பொறுப்பாக வேண்டும்?" என்றாள்.

ரமா கண்களைத் துடைத்துக் கொண்டு, "நான் ஏன் பொறுப்பாக வேண்டும்? ஒருக்காலும் முடியாது. பெரியம்மா எனக்கு இது விஷயமாக ஒன்றும் தெரியாது. பின் எதற்காக என் மேல் அபவார்த்தையைச் சுமத்தி அவமானம் செய்ய வேண்டும்?" என்றாள்.

விசுவேசுவரி ஒன்றும் தர்க்கம் செய்யவில்லை. மெதுவாக, "அம்மா, எல்லோரும் உள் அந்தரங்கத்தை அறிய முடியாது. ஆனால், உன்னை அவமானம் செய்ய வேண்டுமென்று அவன் எப்போதும் விரும்ப மாட்டான். உனக்குத் தெரியாதம்மா. நான் கோபால் சொல்லக் கேட்டிருக்கிறேன். உன் பேரில் எவ்வளவு சிரத்தை வைத்திருக்கிறான் தெரியுமா? புளியமரம் வெட்டிய போது யார் சொல்லியும் கேட்கவில்லை. எல்லோருக்கும் முன் சிரித்துக்கொண்டு அதைப்பற்றிக் கவலை வேண்டாம், என்று சொல்லிவிட்டான். 'ரமா இருக்கும் போது எனது பங்கு வந்து சேர்ந்துவிடும். அவள் பிறர் சொத்துக்கு ஆசைப்படமாட்டாள்' என்றான். அம்மா, எனக்கு நன்கு தெரியும். இத்தனை சச்சரவுக்குப் பிறகும் அவனுக்கு முன்போலவே நம்பிக்கை இருக்கிறது. அன்று குளத்து மீன்..........." என்று கூறிவிட்டு விசுவேசுவரி நிறுத்திக்கொண்டாள். அவள் சிறிது நேரம் ரமாவின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "அம்மா ரமா, இன்று உன்னிடம் ஒரு வார்த்தை கூறுகிறேன். சொத்து சுதந்திரத்தைக் காப்பாற்றுவது எவ்வளவு முக்கியமோ அதைவிட இவனது உயிரைக் காப்பாற்றுவது முக்கியமாகும். ஆகையால் அம்மா, எவர் பேச்சைக் கேட்டும், எந்தப் பொருளின் ஆசையாலும் அவனுக்கு நாலா பக்கத்திலும் துன்பத்தை இழைத்து அவனை இழந்துவிடக் கூடாது. அதனால் ஊருக்கு ஏற்படும் நஷ்டத்தைப் பூர்த்தி செய்யமுடியாது. அதை நான் சொல்லிவிடுகிறேன்" என்றாள்.

ரமா பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் ஒன்றும் பேசவில்லை. விசுவேசுவரியும் மறுபடி ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு ரமா, "பெரியம்மா, நேரமாகிவிட்டது. நான் வீட்டிற்குப் போகிறேன்" என்று கூறிவிட்டு பெரியம்மாவை நமஸ்கரித்துவிட்டுச் சென்றாள்.

# எட்டாம் அத்தியாயம்

பெரியம்மாவிடமிருந்து விடைபெற்றுச் சென்ற ரமேஷ் மிகுந்த கோபத்துடன்தான் போனான். ஆனால் வீட்டிற்குச் சென்றவுடன் அவன் கோபமனைத்தும் தணிந்துவிட்டது. அவன் மனதிற்குள்ளாகவே யோசிக்கத் தொடங்கினான். "இந்த சுலபமான விஷயம் புரியாமல் நான் எத்தனை கஷ்டப்பட்டேன்! உண்மையில் யார்மேல் கோபமடைவது? தங்களது நன்மை எதிலிருக்கிறது என்று கண் திறந்து பார்க்காதவர்கள் பேரிலா? சுயநலமே முக்கியமெனக் கருதிப் படிப்பின்றி தற்குறிகளாக இருக்கிறார்கள். மற்றவர்களுடைய பலத்தை அழிப்பதுதான் தங்கள் பலம் என்று கருதுகிறார்கள். நன்மை செய்தால்கூட சந்தேகப் படுகிறார்கள். அவர்கள் மேல் கோபிப்பதைப் போல முட்டாள்தனம் வேறேதேனும் உண்டா? கிராமங்களுக்கு வெகு தூரத்தில் நகரங்களில் இருந்து கொண்டு, புத்தகத்தைப் படித்துவிட்டு, 'நமது ஜனங்களிடம் என்ன இருந்தாலும் இல்லாவிட்டாலும் கிராமாந்திரங்களில் சாந்தியும், பரிசுத்தமும் நிலவுகிறது' என்று எண்ணியிருந்தேன். உள்ளதைக் கொண்டு திருப்தி அடையும் இந்தக் கிராம வாசிகளிடம் இரக்க உணர்ச்சி இருக்கிறது. துக்கப்படுகிறவனுக்கு உதவி செய்வார்கள். ஒருவன் சுகப்பட்டாலும் அப்படித்தான். அழையாமலேயே போய் சந்தோஷப்படுவார்கள். இவைகளினாலும் இவை போன்ற மற்றவைகளினாலும் உண்மையிலேயே வங்காளத்தின் செல்வம் அழிந்து போகவில்லை என்று எண்ணியிருந்தேன். அடடா! அது எத்தகைய மகத்தான குற்றம்! இந்தப் பொறாமையையும், போட்டியையும் நான் நகரத்தில்கூட பார்க்கவில்லையே!"

இன்று இவைகளை எல்லாம் நினைக்க நினைக்க அவனுக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. நகரங்களிலே இவன் அநீதிகளைக் காணும் போதெல்லாம், 'என்

னுடைய கிராமத்திற்குப் போய்விட்டால் இவை களை எல்லாம் காணவேண்டிய அவசியமிராது' என்று நினைப்பான். அங்கே உலகிலேயே மிகச் சிறந்த தர்மமும், சமூக நீதிகளும் குடிகொண்டிருக்கும் என்று நினைத்தான். ஆனால், ஹே, ஆண்டவா! எங்கே அந்த புனித வாழ்க்கை? எங்கே நமது அந்தப் புராதன தர்மங்கள்? நீ தர்மத்தின் உயிரை வாங்கிவிட்டிருந்தால் பின் எதற்காக இந்தச் செத்த உடலை இங்கே போட்டு வைத்திருக்கிறாய்? தர்மத்தின் இந்த கோரசவத்தை ஏழைக் கிராம வாசிகள் உண்மையான தர்மமெனப் பின்பற்றுகிறார்கள். அதனுடைய துர்க்கந் தத்தில் சிக்கி அடி பாதாளத்தை நோக்கிச் செல்கிறார்கள். இதில் பரிகாசமான விஷயம் என்னவென்றால் நகரங்களில் ஜாதி இல்லை தர்மமில்லை என்று கூக்குரலிடுகிறார்கள்!

ரமேஷ் வீட்டுக்குள் நுழைந்ததும் அந்த முற்றத்தில் ஒரு ஸ்திரி பத்துப் பனிரண்டு வயதுடைய ஒரு பையனுடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவள் எழுந்து நின்றுகொண்டாள். அந்தப் பையனைப் பார்க்க ரமேஷுக்கும் பரிதாபமாயிருந்தது. கோபால் சர்க்கார் வெளியில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். அவன் வந்து, "இவன் தெற்கு வீதி துவாரகா பண்டிதருடைய மகன். தங்களிடம் தர்மம் என்று கேட்பதற்காக வந்திருக்கிறான்" என்றான். தர்மம் என்று கேட்டவுடன் அவன் வெகுண் டெழுந்தான். "நான் தர்மம் கொடுப்பதற்குத்தான் வீட்டிற்கு வந்திருக்கிறேனா? கிராமத்தில் வேறு யாரும் இல்லையா?" என்றான்.

கோபால் சர்க்கார் சிறிது வருத்தத்துடன், "ஆம் பாபுஜி, வாஸ்தவம்தான். ஆனால், பெரிய எஜமானர் இருக்கும் வரையிலும் யாரையும் வெறும் கையோடு அனுப்பியதில்லை." பிறகு அந்தப் பையனைப் பார்த்துக் கொண்டு ஸ்திரியிடம், "காமினி அம்மா, இவர்கள் செய்யாத குற்றமில்லை. அவன் உயிரோடிருக்கும் வரை யிலும் அவனுக்குப் பிராயசித்தம் செய்யவில்லை. செத்த பிறகு பணத்திற்கு அலைகிறார்கள். அவர்கள் வீட்டில் தண்ணீர் குடிக்கும் செம்புகூடக் கிடையாதா?" என்றான்.

காமினி அம்மாள் அந்தப் பையனுக்குப் பக்கத்து வீட்டுக்காரி. அவள் தலையை அசைத்துக்கொண்டு, "அப்பா, நம்பாவிட்டால் போய் பார்த்துவிட்டு வா. வீட்டில் ஏதாவது இருந்தால் செத்த தகப்பனை வீட்டில் போட்டுவிட்டு நான் இவனைக் கூட்டிக்கொண்டு அலைவேனா? நீ கண்ணால் காணாவிட்டாலும் எல்லாம் கேட்டிருப்பாய். என்னிடமிருந்ததெல்லாம் இந்த ஆறு மாதமாக இவர்களுக்கே செலவு செய்தேன். ஐயோ, பாவம்! பக்கத்து வீட்டில் பிராமணக் குழந்தை வயிற்றுக்கில்லாமல் வாடுகிறானே என்று நினைத்தேன்" என்றாள்.

இதிலிருந்தே ரமேஷ் எல்லா விஷயங்களையும் அறிந்து கொள்ளக் கூடும். ஆனால், கோபால் சர்க்கார், "இந்தப் பையனுடைய தகப்பன் துவாரகா சக்ரவர்த்தி ஆறு மாத மாக காச நோயால் படுத்துக் கொண்டிருந்தார். இன்று காலை அவர் இறந்து விட்டார். அவருக்கு * பிராயசித்தம் நடைபெறவில்லை. ஆகையால் யாரும் பிணத்தை தொட மறுக்கிறார்கள். இப்போது அது செய்து தீரவேண்டும். காமினி அம்மா ஆறு மாதகாலமாக இவர்களுக்கு உதவி வருகிறாள். இனி அவளிடமும் ஒன்றும் கிடையாது. ஆகையால் அவள் இந்தப் பையனைக் கூட்டிக்கொண்டு தங்களிடம் வந்திருக்கிறாள்" என்றான்.

ரமேஷ் சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "இப்போது மணி இரண்டாகிறது. பிராயசித்தம் செய்யாவிட்டால் பிணம் அப்படியே கிடக்கவேண்டுமா?" என்றான். கோபால் சிரித்துக்கொண்டு, "வேறு வழி என்ன? சாஸ்திரத்திற்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியாதே! இதற்காகக் கிராமத்தார்களைத்தான் எப்படிக் குறை கூற முடியும்? எப்படியும் பிணத்தைப் போட்டு வைத்துக்கொண்டிருக்க முடியாது. இவர்கள் ஏதாவது செய்து தீரவேண்டும். ஆகையால்தான் பிச்சை எடுக்கிறார்கள். காமினி அம்மா வேறு எங்காவது போயிருந்தீர்களா?" என்றான்.

---

*வங்காளத்தில் காசரோகம் முதலிய அநேக நோயாளிகளுக்கு பிராயசித்தம் செய்யும் வழக்கம் உண்டு.

பையன் கையைத் திறந்து ஒரு கால் ரூபாயையும் நான்கு பைசாக்களையும் காட்டினன். "கால் ரூபாய் முகர்ஜி வீட்டில் கிடைத்தது. நாலு பைசா ஹால்தார் கொடுத்தார். இரண்டேகால் ரூபாய் இல்லாமல் காரிய மாகாது. பாபுஜி ஏதாவது—''

ரமேஷ் உடனே, "சரி, நீங்கள் வீட்டிற்குப் போங்கள். இனி வேறு எங்கும் போகவேண்டாம். நான் எல்லாக் காரியங்களும் செய்வதற்கு ஆள் அனுப்புகிறேன்'' என்றான். ரமேஷ் அவர்களை அனுப்பிவிட்டு கோபாலனைப் பார்த்து மிகுந்த வருத்தத்துடன், "இந்த மாதிரி இன்னும் எத்தனை ஏழைக் குடும்பங்கள் இந்தக் கிராமத்திலிருக் கின்றன?'' என்று கேட்டான்.

"இரண்டு, மூன்று வீடுதான். அதிகமாயில்லை. இவர் களுக்கும் சாப்பாட்டிற்குக் குறைச்சலின்றித்தானிருந்தது. ஆனால், ஒரு மர விஷயமாக துவாரகா சக்ரவர்த்திக்கும், சநாதனனுக்கும் ஐந்து வருஷம் ஒரு வழக்கு நடந்தது. ஆயிரக் கணக்கான ரூபாய் செலவழிந்தது. அதில் இரண்டு குடும்பமும் முழுகிப்போயிற்று. இந்த நிலைக்கு வந்திருக்க மாட்டார்கள். ஆனால் நமது பெரிய பாபுவும் கோவிந்த காங்கூலியும் இரண்டு பேருக்கும் தைரியமளித்து இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தார்கள். இதன் பிறகு நம் மிடமே இருவரும் இருந்ததெல்லாம் அடகு வைத்தார்கள். போன வருஷம்தான் அசல், வட்டி எல்லாமாகச் சேர்த்து விலைக்கு வாங்கிவிட்டோம். காமினி அம்மா கடைசியாக இருக்குமட்டும் அவள், கஷ்டப்பட்ட அந்தப் பிராமணனுக்குச் செய்த உதவியை எங்குமே காண முடியாது'' என்றான்.

ரமேஷ் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுப் பேசாம லிருந்து கொண்டான். சிறிது நேரத்திற்குள் கோபால சர்க்காரை அங்கு போய் கவனித்துக் கொள்ளும்படி அனுப்பிவிட்டான். அவன் மனதிற்குள்ளாகவே, "பெரியம்மா உனது ஆணையை நான் தலைமீது தாங் கினேன். இங்கு இறந்தாலும் சரி; இந்த துரதிருஷ்ட கிராமத்தை விட்டு எங்கும் போவதில்லை'' என்று சொல்லிக்கொண்டான்.

## ஒன்பதாம் அத்தியாயம்

மூன்று மாதத்திற்குப் பிறகு ஒரு நாள் காலை தார கேஸ்வரக் குளத்திற்கு ரமேஷ் சென்றிருந்தான். அங்கே படிக்கட்டில் ஒரு பெண் எதிர்ப்பட்டாள். தான் வழிவிட வேண்டும் என்பதைக்கூட மறந்துவிட்டு அவளையே ஆச்சரியத்துடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அந்தப் பெண்ணுக்கு இருபது வருஷத்திற்கு மேல் அதிகமிராது. அவள் குளித்துவிட்டு மேலே வந்து கொண்டிருந்தாள். அவள் இடுப்பில் வைத்திருந்த தண்ணீர்க் குடத்தைக் கீழே இறக்கிவைத்துவிட்டு, "நீங்கள் இங்கே எப்போது வந்தீர்கள் ?" என்றாள்.

ரமேஷுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை. ஆனால், இப்போது அவன் நிலைமை சரிப்பட்டுவிட்டது. ஒரு புறமாக ஒதுங்கி, "என்னைத் தெரிகிறதா ?" என்றான்.

"தெரியாமல் என்ன! எப்போது வந்தீர்கள் ?"

"இன்று காலையில்தான். எனது மாமா வீட்டிலிருந்து பெண்கள் வருவதாயிருந்தது. ஆனால், அவர்கள் வர வில்லை."

"இங்கு எங்கு தங்கியிருக்கிறீர்கள் ?" என்று அவள் கேட்டாள்.

"எங்குமில்லை. நான் எப்போதும் வந்ததில்லை. ஆனால், இன்று பூராவும் அவர்களை எதிர்பார்த்துக்கொண் டிருக்கவேண்டும். எங்காவது ஒரு இடம் பார்த்தால் போச்சு."

"கூட வேலைக்காரர்கள் இருக்கிறார்களா ?"

"இல்லை நான் தனியாகத்தான் வந்திருக்கிறேன்"

"சரி" என்று கூறிவிட்டு அந்தப் பெண் தலை நிமிர்ந்தாள். இருவர் கண்களும் சந்தித்தன. ஆனால் அந்தப் பெண் உடனே தலைகுனிந்து கொண்டாள். பிறகு, "ஆனால் சரி, என்னோடு வாருங்கள்" என்றாள்.

இதைக் கூறிவிட்டுக் குடத்தை எடுத்துக்கொண்டு புறப்படுவதற்குத் தயாரானுள். ரமேஷுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

“நான் வருகிறேன். இதில் ஏதாவது தடை இருந் திருந்தால் நீங்கள் அழைத்திருக்கமாட்டீர்கள். தாங்கள் யார் என்பது தெரியாததல்ல இதன் அர்த்தம். இருந்தாலும் நீங்கள் யார் என்று தெரியவில்லை. அதைச் சொல்லுங்கள்” என்ருன்.

“சரி, நீங்கள் சிறிது நேரம் இங்கே நில்லுங்கள். நான் பூஜை செய்துவிட்டு வருகிறேன். போகும்போது வழியில் எல்லாம் சொல்கிறேன்.”

இதைக் கூறியதும் அந்தப் பெண் கோவிலுக்குள் சென்றுவிட்டாள். ரமேஷ் பேசாமல் அவள் போவதையே பார்த்துக்கொண்டு நின்ருன். ஈர ஆடை அணிந் துள்ள அந்தப் பெண்ணின் அழகை வியந்து கொண்டிருந் தான். அவளுடைய முகம், சாயல், நடை சகலமும் அவனுக்குப் பழக்கப்பட்டது போல் தோன்றியது. ஆனுல் யார் என்று ஞாபகப்படுத்திக்கொள்ள முடியவில்லை. அரை மணி நேரத்திற்குப் பிறகு அவள் கோவிலைவிட்டு வெளியே வரும்போது மறுபடியும் ஒரு முறை அவளுடைய முகத்தை நன்கு பார்த்தான். ஆனுல் இன்னும் அவனுக்கு யாரென்று புலப்படவில்லை. போகும்போது ரமேஷ், “உங்களோடு யாரும் மனிதர்கள் இல்லையா ?” என்று கேட்டான்.

“இல்லை, வேலைக்காரி மட்டும் இருக்கிருள். அவள் வீட்டில் வேலையாக இருந்தாள். நான் அடிக்கடி இங்கு வருவது உண்டு. இந்த எல்லோரையும் எனக்குத் தெரியும்.”

“சரி, என்னை ஏன் உங்களோடு அழைத்துக்கொண்டு போகிறீர்கள் ?”

சிறிது நேரம் மௌனமாக நடந்து சென்ற பிறகு, “இங்கு உங்களுக்குச் சாப்பாட்டுச் சௌகரியம் இருக் காது. நான் ரமா!” என்ருள்.

* * *

ரமா எதிரில் உட்கார்ந்துகொண்டு ரமேஷுக்கு சாதம் பரிமாறினுள். வெற்றிலே பாக்குக் கொடுத்தாள். பிறகு அவன் இளைப்பாறட்டும் என்று தன் கையாலேயே ஒரு பாயை விரித்துவிட்டு பக்கத்து அறைக்குச் சென்று விட்டாள். ரமேஷ் அந்தப் பாயின் மேல் கண்ணை மூடிப் படுத்துக்கொண்டான். தனது இருபத்தி மூன்று வருஷ வாழ்க்கையும் இந்த ஒரு வேளையில் அடியோடு மாறிப் போயிற்று என்று அவன் நினைத்தான். குழந்தையிலிருந்து அவன் அயலூரில் அந்நியர்களிடமே வாழ்ந்து வந்திருக்கிருன். பசியைத் தணிப்பதற்கு உணவைத் தவிர வேறு ஒன்றுமே கிடையாது என்று எண்ணியிருந்தான். ஆனுல், இன்று எதிர்பாராத இந்த உபசரிப்பால் அவன் மனம் சந்தோஷக் கடலில் மூழ்கியிருந்தது. ரமா விசேஷமாக ஒன்றும் சாப்பாடு தயாரித்திருக்கவில்லை. ரொம்ப சாதாரண பொருள்களைத்தான் அவன் முன்னிலையில் வைத்தாள். எங்கு இவர் சாப்பிடாமல் மற்றவர்கள் தூற்றுவார்களோ என்று அவள் பயந்துகொண்டிருந்தாள். ஐயோ பாவம்! அவன் வயிறு நிறையச் சாப்பிட மாட்டானே என்னவோ என்றுதான் அவள் தானே சங்கோசத்தை விட்டுப் பரிமாற வந்தாள்! இன்று சங்கோசம் ஒன்றும் அவனை நெருங்கத் தடை செய்யவில்லை. அவன் திருப்தியாகச் சாப்பிட்ட பிறகுதான் அவள் 'அப்பாடா' என்று மூச்சு விட்டாள். சாப்பிட்ட ஆசாமியைவிட அவள் எவ்வளவு அதிகத் திருப்தி அடைந்தாள் என்பது எல்லோருக்கும் தெரியக்கூடிய விஷயம் அல்ல. ஆனுல், எல்லா விஷயமும் தெரிந்தவர்களிடம் ஒளிக்க முடியாதல்லவா?

பகலில் தூங்கும் வழக்கம் ரமேஷுக்குக் கிடையாது. சன்னலுக்கு வெளியில் தெரிந்த ஆகாயத்தில் கரு மேகங்கள் கூடிக்கொண்டிருந்தன. பாதி மூடிய கண்களுடன் அவன் அவைகளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவனது உறவினர்களான பெண்கள் வந்தார்களா இல்லையா என்ற கவனமே இல்லை. திடீரென ரமாவின் கோமளமான குரல் அவன் செவியில் பட்டது. அவள் கதவுக்கு வெளியே நின்று கொண்டு, "இன்று ஊருக்குப் போகாவிட்டால் இங்கேயே இருந்து கொள்ளுங்களேன்" என்ருள்.

ரமேஷ் உடனே எழுந்து உட்கார்ந்து கொண்டான். "இந்த வீட்டுச் சொந்தக்காரரை இன்னும் நான் பார்க்கவே இல்லையே. அவர்கள் சொல்லாவிட்டால் நான் எப்படி இருக்க முடியும்?" என்றான்.

ரமா அங்கேயே நின்றுகொண்டு, "அவர்தான் இருக்கச் சொல்கிறார். இந்த வீடு என்னுடையதுதான்" என்றாள்.

ரமேஷ் திடுக்கிட்டு, "இங்கு எதற்காக வீடு வாங்கி வைத்திருக்கிறாய்?" என்றான்.

"இந்த இடம் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. நான் அடிக்கடி இங்கு வருவேன். இப்போது இங்கு யாருமில்லைதான். ஆனால் சில சமயங்களில் இங்கு கால் வைப்பதற்குக்கூட இடமிருக்காது."

"அந்த மாதிரி சமயம் வராதிருக்கட்டும்!"

ரமா சிரித்துக்கொண்டு மௌனமாயிருந்தாள்.

"தாரக்நாத் பாபாவிடம் உனக்கு ரொம்ப பக்தி இருக்கும் போலிருக்கிறது. இல்லையா?"

"நான் ,அந்தப் பக்திக்கு எங்கு போவேன்! ஆருள் உயிரோடிருக்கும் வரையிலும் முயற்சிப்பேன்."

ரமேஷ் மறுபடி ஒன்றும் கேட்கவில்லை. ரமா அங்கேயே வாசற்படி மீது உட்கார்ந்துகொண்டாள். பிறகு, "இரவு நீங்கள் என்ன சாப்பிடுவீர்கள்?" என்றாள். ரமேஷ் சிரித்துக்கொண்டு, "கிடைப்பதைச் சாப்பிடுவேன். சாப்பாட்டிற்கு உட்காருகிற வரையிலும் அதைப்பற்றி நான் யோசிப்பதில்லை. எனது சமையல்காரன் இஷ்டம் போல் விட்டுவிடுவேன்" என்றான்.

"ஏன் உங்களுக்கு இந்த விரக்தி?"

இதில் ஏதாவது உள் அர்த்தம் இருக்கிறதா அல்லது வெறும் சிரிப்புப் பேச்சுத்தானா என்று சந்தேகித்தான். "இல்லை, வெறும் சோம்பேறித்தனம்தான்" என்றான்.

"ஆனால், பிறர் காரியத்தில் நீங்கள் சோம்பலாக இருந்ததைப் பார்த்ததில்லையே!"

"அதற்குக் காரணமிருக்கிறது. பிறர் காரியத்தில் சோம்பல் பட்டால் அதற்காக ஆண்டவனிடம் பதில் சொல்லியாகவேண்டும். தன் காரியத்திற்கும் பதில் சொல்லித்தான் தீரவேண்டும்; இருந்தாலும் அவ்வளவு முக்கியம் அல்ல."

ரமா சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "உங்களிடம் பணம் இருக்கிறது. ஆகையால் பிறர் காரியங்களில் மனசைச் செலுத்த முடிகிறது. ஆனால், பணம் இல்லாதவர்கள் என்ன செய்ய முடியும்?" என்றாள்.

"ரமா, எனக்கு அவர்களைப் பற்றித் தெரியாது. ஏனென்றால், பணம் இருப்பதால் ஒன்றும் மாறுதல் இல்லை. மனதைச் செலுத்துவதையும் அளந்து கூற முடியாது. பணம் இருப்பதும் இல்லாமலிருப்பதும் இகத்தையும் பரத்தையும் கடக்க முயற்சிப்பவர்களுக்குத் தான் தெரியும்."

ரமா சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "பரலோகத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு இன்னும் உங்களுக்குப் போதிய வயது வரவில்லையே. நீங்கள் என்னைவிட மூன்று வருஷம்தானே மூத்தவர்கள்!" என்றாள். ரமேஷ் சிரித்துவிட்டு, "இதன் அர்த்தம் என்ன? நீ இன்னும் பரலோகத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய வயதடையவில்லை என்பதா? ஆண்டவன் அப்படியே அருளட்டும். நீ சிரஞ்சீவியாக இரு. ஆனால், இன்றைய இன்பமே எனது முடிவான இன்பமல்ல என்று நான் எப்போதும் நினைத்ததில்லை" என்றான்.

ரமேஷின் குரலில் வெளிப்பட்ட வேதனையை ரமாவும் உணர்ந்தாள். அவள் உடனே, "நீங்கள் சந்தியா பூஜை செய்ததைப் பார்த்ததே இல்லை. கோவிலுக்குள் என்ன இருக்கிறது என்று பார்க்காவிட்டால் போகிறது. ஆனால், சாப்பிடும்போது ஆசமனம் செய்வதையும் மறந்துவிட்டீர்களே?" என்றாள்.

"மறக்கவில்லை. ஆனால், மறந்துவிட்டாலும் ஒன்றும் பாதகமில்லை என்று நினைக்கிறேன். ஆமாம், எதற்காக இதைக் கேட்கிறாய்?"

"நீங்கள், பரலோகத்தைப் பற்றி அதிகக் கவலைப் படுகிறீர்களே என்று கேட்டேன்."

ரமேஷ் இதற்கு ஒன்றும் பதில் அளிக்கவில்லை. அதற்கப்புறம் கொஞ்ச நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள். பிறகு ரமா மெள்ள மெள்ள, "என்னை சிரஞ்சீவியாக இரு என்றது சாபம் கொடுத்தது போலத் தான். நமது ஹிந்து குடும்பத்திலுள்ள விதவைகளை யாரும் சிரஞ்சீவியாக இருக்கும்படி சொல்ல மாட்டார் கள்." சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "நான் மரணத்தை விரும்புகிறேன் என்பதும் உண்மை அல்ல. ஆனாலும் நான் அதிக நாள் வாழப் பயப்படுகிறேன். ஆனால், இது தங்களைப் பற்றிய விஷயம் அல்ல. எந்த விஷயத்தையும் தங்களிடம் வற்புறுத்திக் கூறுவது மகா பாவம். ஆனால், பிறந்ததிலிருந்து பிறருக்காகவே உழைக்கும் நீங்கள் இதைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

இதைக் கேட்டு ரமேஷ் பெருமூச்சு விட்டான். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ரமாவைப் போலவே மெள்ள மெள்ள, "எனக்கு இப்போது அந்த விஷயங்கள் எல்லாம் ஞாபகத்துக்கு வருவதில்லை. ரமா, நான் யாரோ; ஆனால் உனது பாதையில் குறுக்கிடுகிறேன். இருந்தாலும் இன்று என்னை நீ உபசரித்ததைப் போல, உலகத்தில் உபசரிக்கப்படுபவர்கள் பிறருடைய துக்கத்தைக் கண்டு பைத்தியமடைந்து விடுவார்கள். நீ எனது வாழ்க்கையை ஒரு நொடியில் மாற்றிவிட்டாய். நான் இதைத்தான் மௌனமாக யோசித்துக்கொண்டிருந்தேன். இன்று வரை எனக்கு யாரும் உன்னைப்போல அன்பாக உண வளித்ததில்லை. ரமா, இன்றுதான் முதல் முதலாக சாப்பிடுவதில்கூட இவ்வளவு ஆனந்தம் இருக்கிற தென்பதை அறிந்தேன்" என்றான்.

இதைக் கேட்டு ரமாவின் தேகம் சிலிர்த்தது, அடிக்கடி நடுங்கினாள். அவள் மெதுவாக, "ஆனால் இதை மறப்பதற்குத் தங்களுக்கு அதிக நாள் பிடிக்காது. பிறகு எப்பவாவது ஞாபகத்திற்கு வந்தாலும் ரொம்ப லேசாகத்தான் வரும்" என்றாள்.

ரமேஷ் ஒன்றும் பேசவில்லை. "வீட்டுக்குப் போய் என்னை நிந்திக்காவிட்டால் அதையே என் பாக்கியமாகக் கருதுவேன்" என்றாள்.

ரமேஷ் மெதுவாக, "இல்லை ரமா, நிந்திக்க மாட்டேன்; புகழவும் மாட்டேன். எனது இன்றைய நிலை நிந்தனைக்கும், புகழ்ச்சிக்கும் அப்பாற்பட்டதாகும்" என்றான்.

ரமா இதற்குப் பதில் அளிக்கவில்லை. முதலில் சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்துகொண்டிருந்தாள். பிறகு எழுந்து தனது அறைக்குள் சென்றுவிட்டாள். அங்கே அந்த சூன்யமான அறைக்குள்ளே, ரமாவின் கண்களிலிருந்து பெரிய பெரிய கண்ணீர்த் துளிகள் கீழே சிந்தின.

## பத்தாம் அத்தியாயம்

இரண்டு நாள் இடைவிடாது மழை பொழிந்த பிறகு மூன்றும் நாள் வானம் சிறிது வெட்டாப்பு விட்டிருந்தது. சண்டி மண்டபத்தில் கோபால் சர்க்காரோடு உட்கார்ந்து கொண்டு ரமேஷ் ஜமீன் கணக்குகள் பார்த்துக்கொண்டிருந்தான். திடீரென இருபது குடியானவர்கள் அழுதுகொண்டு வந்து, "சின்ன எஜமானரே, இந்தத் தடவை எங்களைக் காப்பாற்றுங்கள். நீங்கள் காப்பாற்றாவிட்டால் எங்கள் பெண்டு பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு தெருத் தெருவாகப் பிச்சை எடுக்க வேண்டும்" என்றார்கள்.

ரமேஷ் திடுக்கிட்டு, "என்ன விஷயம்?" என்றான்.

"எங்களுடைய நூறு ஏக்ரா நிலமும் வெள்ளத்தால் முழுகிவிட்டது, வெள்ளம் வடியாவிட்டால் பயிர்கள் நாசமடைந்துவிடும். ஊரில் ஒரு குடும்பமும் பசியால் சாகாமல் இருக்காது."

ரமேஷுக்கு ஒன்றும் புரியவில்லை. கோபால் அவர்களிடம் இரண்டொரு கேள்வி கேட்டு ரமேஷுக்கு எல்லா விஷயத்தையும் விளக்கினான். இந்த நூறு ஏக்ரா

பூமியை நம்பித்தான் இந்த ஊரே வாழுகிறது. எல்லாக் குடியானவர்களுக்கும் கொஞ்சம் கொஞ்சம் பூமி அதிலிருக்கிறது. அதற்குக் கீழ்புறத்தில் சர்க்கார் கட்டிய பெரிய அணை ஒன்று இருக்கிறது. மேல் புறத்திலும் வட புறத்திலும் கிராமங்கள்தான். தென்புறத்திலும் கோஷாலுக்கும், முகர்ஜிக்கும் சொந்தமான அணை இருக்கிறது. அந்த வழியாகத்தான் தண்ணீர் போகக்கூடும். ஆனால் அந்த அணையை அடுத்து ஒரு குளமிருக்கிறது. வருஷா வருஷம் அந்தக் குளத்திலிருந்து சுமார் இருநூறு ரூபாய்க்குக் குறையாமல் மீன் பிடித்து விற்பார்கள். ஆகையால் ஜமீந்தார் வேணி பாபு அங்கே பெரிய காவல் வைத்திருக்கிறார். இன்று காலையிலிருந்து இவர்களெல்லோரும் அவரைவிட்டு அசையாது உட்கார்ந்திருந்தார்கள். இப்பொழுதுதான் அங்கிருந்து அழுது கொண்டு வருகிறார்கள்.

ரமேஷ் வேறு ஒன்றும் கேட்கப் பிரியப்படவில்லை. அவன் எழுந்து சென்றுவிட்டான். அவன் வேணியிடம் சாயங்காலம் சென்றான். வேணி பாபு ஒரு தலையணையில் சாய்ந்துகொண்டு புகை பிடித்துக்கொண்டிருந்தான். அவனருகில் ஹால்தார் உட்கார்ந்துகொண்டிருந்தார். ஒரு வேளை இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்திருப்பார்கள்.

ரமேஷ் ஒன்றும் பீடிகை போடாமல், "கரையை இனியும் தடுத்து வைத்துக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. இப்போது அதை உடைத்துவிட வேண்டும்" என்றான்.

வேணி ஹுக்காவை ஹால்தார் கையில் கொடுத்துவிட்டு, "எந்தக் கரை?" என்றான்.

ரமேஷ் கோபமாகத்தான் வந்திருந்தான். "பெரிய அண்ணா, குளத்துக் கரைதான். அந்தக் கரையை உடைத்துவிடாவிட்டால் பயிர்கள் எல்லாம் நாசமடைந்துவிடும். தண்ணீரை அகற்றுவதற்கு உத்திரவிடுங்கள்" என்றான்.

"அந்தத் தண்ணீரோடு இருநூறு, முந்நூறு ரூபாய் மீன்கள் வெளியே போய்விடும் என்பது உனக்குத்

தெரியாதா ? இந்தப் பணம் யார் கொடுப்பார்கள் ? குடியானவர்களா, நீயா ?"

ரமேஷ் கோபத்தை அடக்கிக்கொண்டு, "குடியானவர்கள் ஏழைகள். அவர்களால் கொடுக்க முடியாது. நான்தான் கொடுத்தால் கொடுக்க வேண்டும். ஆனால், நான் ஏன் கொடுக்க வேண்டும், தெரியவில்லையே ?" என்றான்.

"ஆனால் நான்தான் எதற்காக இவ்வளவு நஷ்டமடைய வேண்டும் ? எனக்கும் இது தெரியவில்லையே !" பிறகு அவன் ஹால்தாரைப் பார்த்து, "சித்தப்பா, நம்ம தம்பி ஜமீனைக் காப்பாற்றுவதைப் பார்த்தாயா ? ரமேஷ், அந்த அயோக்கியர்கள் காலையிலிருந்து இங்குதான் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார்கள். எனக்கு எல்லாம் தெரியும். உன்னிடம் யாரும் வேலைக்காரர்கள் இல்லை ? அல்லது காலில் செருப்புக்கூடக் கிடையாதா ? போய், அதற்கு ஏற்பாடு செய். தண்ணீர் தானே வடிந்து போய் விடும்" என்றான்.

வேணி பாபு இதைக் கூறியதும் ஹால்தாரோடு சேர்ந்து கொண்டு 'கட கட'வெனச் சிரித்தான். ரமேஷால் பொறுக்க முடியவில்லை. இருந்தாலும் தனது கோபத்தை அடக்கிக்கொண்டு ரொம்பப் பணிவுடன், "பெரிய அண்ணா, கொஞ்சம் நன்றாக யோசித்துப் பாருங்கள். இந்த இருநூறு ரூபாய் நஷ்டத்தை நாம் மூன்று வீடும் ஏற்காவிட்டால் இந்த ஏழைகள் வருஷம் முழுவதும் தானியமின்றிக் கஷ்டப்படுவார்கள். ஆறு ஏழு ஆயிரம் ரூபாய் நஷ்டமடைவார்கள்" என்றான்.

"அடைந்தால் அடைந்துவிட்டுப் போகிறார்கள். ஐந்தாயிரம் நஷ்டமடைந்தாலும் சரி, ஐம்பதினாயிரம் நஷ்டமடைந்தாலும் சரி. அவர்களால் ஒரு தம்பிடிப் பிரயோசனமும் கிடையாது. பின் எதற்கு அவர்களுக்காக இருநூறு ரூபாய் நஷ்டமடைய வேண்டும் ?"

"ஆனால், வருஷம் பூராவும் அவர்கள் என்னத்தைச் சாப்பிடுவார்கள் ?"

இது ரொம்பக் கேலிப் பேச்சாக இருந்தது வேணி பாபுவுக்கு. அவன் பலமாகச் சிரித்துவிட்டு, "என்னத்தைச் சாப்பிடுவார்களா? பார்த்துக் கொண்டேயிரு; எல்லாப் பயல்களும் பூமியை அடகு வைக்க நம்மிடமே ஓடி வருவார்கள். அப்பா, கொஞ்சம் யோசனையுடன் காரியம் செய். நமது பெரியவர்கள் இப்படி எல்லாம் பாடுபட்டுத்தான் நமக்கு இந்தத் துளியுண்டு நிலமாவது வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நாமும் இதைக் கொண்டுதான் உண்டு உடுத்தி நமது பிள்ளைகளுக்கு வைத்துவிட்டுப் போகவேண்டும். அவர்கள் என்னத்தைச் சாப்பிடுவார்கள் என்று என்னைக் கேட்கிறாய்? கடன் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இல்லாவிட்டால் இந்தப் பயல்களை ஏன் கீழ் சாதி என்று சொல்லுகிறார்கள்?" என்றான்.

கோபத்தால் ரமேஷ் முகம் சிவந்துவிட்டது. இருந்தாலும் ரொம்பச் சாந்தமாக, "ஒரு உதவியும் இவர்களுக்குச் செய்வதில்லை என்று நீங்கள் முடிவு செய்திருக்கும்போது உங்களோடு தர்க்கம் செய்வதில் என்ன பிரயோஜனம்? நான் ரமாவிடம் போய்ப் பார்க்கிறேன். அவள் ஒத்துக்கொண்டால், நீங்கள் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை" என்றான்.

"ரொம்ப சரி, போய்ப் பாரு. அவளுடைய அபிப்பிராயமும் வேறாக இருக்காது. அப்பா, அவள் ஒரு சாதாரணப் பெண்ணல்ல. அவளைச் சம்மதிக்க வைப்பது சுலபமல்ல. நீ இன்னும் சிறு பையன், உனது அப்பாவையே கண்ணில் விரலை விட்டு ஆட்டிவிட்டவள். என்ன சித்தப்பா?" என்றான் வேணி.

சித்தப்பா என்ன சொல்லுகிறார் என்பதைப் பற்றி ரமேஷுக்குக் கவலை இல்லை. வேணியின் இந்த அவமானமான பேச்சுக்கும் பதில் அளிக்க அவன் புத்தி செல்லவில்லை. அவன் ஒன்றும் பதில் பேசாமலேயே வெளியில் சென்றான்.

ரமா துளசி மாடத்திற்கு விளக்கு ஏற்றி வணங்கிவிட்டுத் தலையை உயர்த்தவே ரமேஷ் நிற்பதைக் கண்

டாள். அவள் முந்தானையைக் கழுத்தோடு சுற்றியிருந்தாள். இப்போதுதான் ரமேஷை வணங்கிவிட்டு எழுந்தவள் போலிருந்தாள். அன்றொரு நாள் சின்னம்மா இங்கு வரக்கூடாதெனச் சொல்லியிருந்ததைக் கூட கோபத்தில் மறந்துவிட்டான். ஆகையால் அவன் நேராக உள்ளே வந்து ரமாவை அங்கிலையில் கண்டு எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

இருவரும் ஒரு மாதத்திற்குப் பிறகு இப்போது தான் சந்தித்திருக்கிறார்கள்.

"அவசியம், இந்த விஷயங்களை எல்லாம் நீ கேட்டிருப்பாய். நான் குளக்கரையை உடைத்து விடுவதற்கு உனது சம்மதத்தைக் கேட்டுப் போகலாமென வந்திருக்கிறேன்" என்றான் ரமேஷ்.

ரமாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவள் முந்தானையைத் தலைமீது இழுத்து விட்டுக்கொண்டு, "ஆமாம், அது எப்படி முடியும்? பெரிய அண்ணாவைக் கேட்கவில்லையா?" என்றாள்.

"கேட்டேன். ஆனால் தனியாக அவர் அபிப்பிராயத்தால் என்ன ஆகும்?"

ரமா சிறிது நேரம் யோசித்து விட்டு, "குளத்துத் தண்ணீரை வெட்டிவிட வேண்டியதுதான். ஆனால், மீன்களை எப்படித் தடுக்க முடியும்?" என்றாள்.

"இவ்வளவு தண்ணீருக்குள் ஒன்றும் செய்ய முடியாது. அந்த நஷ்டத்தை நாம்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கிராமமே பட்டினியால் செத்துவிடும்."

ரமா பேசாமலிருந்தாள். ரமேஷ் மறுபடியும், "சரி, நீ சம்மதிக்கிறாயல்லவா?" என்றான்.

"முடியாது. நான் நஷ்டத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன்."

ரமேஷ் ஆச்சரியத்தால் பிரமிப்படைந்து விட்டான். அவன் இந்த மாதிரி பதிலை எதிர்பார்க்கவில்லை. நாம்

சொன்னால் ரமா மீற மாட்டாள் என்று எப்படியோ அவன் எண்ணியிருந்தான். ரமாவும் அவன் மனதி லுள்ளதை அறிந்துகொண்டாள். அவள், " அது தவிர இந்தச் சொத்து எல்லாம் எனது சகோதரனைச் சேர்ந்தது. நான் மேல் பார்வை பார்ப்பவள்தான் " என்றாள்.

" இல்லை. அதில் பாதி பாகம் உனக்கும் இருக்கிற தல்லவா ?"

" பெயருக்குத்தான். அப்பாவுக்கு கடைசியில் எல்லாச் சொத்தும் யதீந்திரனுக்குத்தான் சேரும் என்று தெரியும். ஆகையால்தான் பாதியை என் பெயருக்கு எழுதி வைத்துவிட்டுப் போனார்."

" ரமா, நஷ்டம்தான் எத்தனை ரூபாய் ? இந்தப் பக்கத்தில் உன்னை நன்கு மதிக்கிறார்கள். உனக்கு இது ஒரு லட்சியமே அல்ல. ரமா, உன்னை நான் வேண்டிக் கொள்கிறேன். இத்தனை பேரையும் பசியால் திண்டாட வைக்காதே. நீ இவ்வளவு கடின சித்தமுடையவளாய் இருப்பாய் என்று நான் கனவில்கூடக் கருதியதில்லை."

" எனது கஷ்டத்தை நான் தாங்க முடியாது என்று சொல்கிறேன். இதற்காக என்னைக் கொடியவள் என்றால் நான் கொடியவள்தான். நீங்கள் அவ்வளவு தயை உடையவர்களாய் இருந்தால் பூரா நஷ்டத்தையும் நீங்களே ஏற்றுக்கொள்வது ?"

அவளுடைய பேச்சைக் கேட்டு ரமேஷ் கோதிப் படைந்தான். " மனிதனுடைய உண்மை சொரூபம் பண விஷயத்தில் வெளிப்படுகிறது. இந்த இடத்தில் தன்னை மறைக்க முடியாது ; ஆகையால் உண்மை ரூபம் வெளிப்படுகிறது. இன்று உனது ரூபமும் வெளிப்பட்டு விட்டது. ஆனால், உன்னை எப்பொழுதும் நான் இவ் விதம் நினைத்ததில்லை. நீ ரொம்ப மேலானவள் என்று நினைத்து வந்தேன். ஆனால், நீ அப்படி இல்லை. உன்னைக் கொடியவள் என்று சொல்வது கூடத் தப்பு. நீ ரொம்பக் கீழானவள், அற்பமானவள் " என்றான்.

அளவு கடந்த திகைப்புடன் கண்களை விழித்தது விழித்தபடி, " நான் யார் ?" என்றாள்.

"நீ மகா அற்பமானவள். நான் எவ்வளவு துக்கப் படுகிறேன் என்பது உனக்குத் தெரியும். ஆகையால் எல்லா நஷ்டத்தையும் என்னையே ஏற்றுக் கொள்ளச் சொல்கிருய். பெரிய அண்ணுகூட இதைக் கூறவில்லை. ஆண் பிள்ளை கூட சொல்லாத வார்த்தையை நீ பெண் பிள்ளை வாய் திறந்து சொல்லிவிட்டாய். நான் இதை விடக் கூட அதிக நஷ்டத்தைத் தாங்க முடியும். ஆனுல் ரமா, இன்று உன்னிடம் ஒரு விஷயம் கூறு கிறேன். உலகத்திலுள்ள பாபங்களிலெல்லாம் பெரிய பாபம் எது தெரியுமா? அது, மனிதனிடமுள்ள தயாள குணத்தைக் கொல்லுவதுதான். இன்று நீ அதையே செய்து என்னிடமிருந்து பணம் வசூலிக்க முயற்சிக் கிருய்" என்ருன்.

ரமா ஒன்றும் பேசாமல் கற்சிலை போல நின்றுகொண் டிருந்தாள். அவள் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை. ரமேஷ் மறுபடியும் சாந்தமாக, "எனது பலவீனம் என்ன என்பதைக் கண்டு கொண்டாய். ஆனுல், அந்தப் பலவீனத்தால் உனக்கு ஒரு பயனும்இல்லை. நான் என்ன செய்யப் போகிறேன் என்பதையும் உன்னிடம் சொல்லி விடுகிறேன். நான் இப்போதே சென்று கரையை உடைக்கப் போகிறேன். உங்களால் முடியுமானுல் வந்து தடுத்துப் பாருங்கள்" என்ருன்.

ரமேஷ் இதைக் கூறிவிட்டுப் போனுன். ஆனுல், ரமா போகிறவனைக் கூப்பிட்டு, "எனது வீட்டில் நின்று கொண்டு என்னை இவ்விதம் அவமானமாகப் பேசியதற்கு நான் ஒன்றும் பதில் அளிக்க விரும்பவில்லை. ஆனுல், நீங்கள் அந்தக் காரியத்தை ஒருகாலும் செய்ய முயற்சிக் காதீர்கள்" என்ருள்.

"ஏன்" என்று கேட்டான் ரமேஷ்.

"காரணம், நீங்கள் என்னதான் அவமானம் செய்தா லும் உங்களோடு சண்டையிட எனக்கு விருப்பமில்லை."

அவள் இதைக் கூறும்போது, அவளுடைய முகம் மாறியதையும், உதடுகள் துடித்ததையும் அந்த மாலை இருளில்கூட ரமேஷ் கண்டான். ஆனுல், அந்தச் சமயத்

தில் அவனுக்கு மனோதத்துவ விசாரணை செய்ய அவகாச மில்லை. ஆகையால் உடனே அவன், "நானும் சண்டை யிட விரும்பவில்லை. உனது இந்த நல்லெண்ணத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. உன்னோடு பேசுவதில் பிரயோஜனமில்லை நான் போகிறேன்" என்றான்.

சின்னம்மா மேலே கோவில் வீட்டிலிருந்ததால் அவளுக்கு இதொன்றும் தெரியாது. கீழே வந்தாள். ரமா வேலைக்காரியை அழைத்துக் கொண்டு வெளியே போய்க் கொண்டிருந்தாள். அவள் ஆச்சரியத்துடன், "ரமா, சகதிக்குள்ளே ராத்திரியிலே எங்கே போகிறாய்?" என்றாள்.

"சின்னம்மா, நான் பெரிய அண்ணாவிடம் போய் விட்டு வருகிறேன்."

"வழியில் ஒன்றும் சகதி இல்லை. சின்ன பாபு அப்படிச் செய்து வைத்திருக்கிறார். அவர் மகராசராக இருக்கட்டும். ஏழை எளியவர்கள் நடப்பதற்கு நல்ல வழி செய்தார்" என்றாள் வேலைக்காரி.

மணி பன்னிரண்டு அடித்துவிட்டது; வேணியின் வீட்டில் பலர் கூடி ரகசியமாகப் பேசிக்கொண்டிருந் தார்கள். ஆகாயத்தில் கூடியிருந்த மேகங்கள் எல்லாம் கலைந்துவிட்டன. நிலவு வெளிச்சம் முற்றத்தில் அடித்துக் கொண்டிருந்தது. ஒரு கம்பத்தில் சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டு ஒரு முஸ்லிம் உட்கார்ந்து கொண்டிருந் தான். அவனுடைய முகமெல்லாம் ரத்தம் வழிந்திருந்தது. அவன் அணிந்திருந்த ஆடைகள் கூட ரத்தத்தால் நனைந்திருந்தன.

ஆனால் அவன் மௌனமாக இருந்தான். வேணி ரொம்ப மெதுவாக அவனிடம் ஏதோ சொல்லிக் கொண் டிருந்தான். "அக்பர், என் பேச்சைக் கேளு. போலீசுக்குப் போ. நான் அவனை ஏழு வருஷத்துக்கு ஜெயிலுக்கு அனுப்பாவிட்டால், நான் கோஷால் வம்சத்துக்கே பிறக்கவில்லை. ரமா, நீயும் சொல்லு. ஏன் பேசாமலிருக் கிறாய்" என்றான்.

ஆனால் ரமா பதுமை போல உட்கார்ந்து கொண்டிருந்தாள். அக்பர்அலி கண்ணைத் திறந்து சிறிது நகர்ந்து உட்கார்ந்தான். "சபாஷ்! சின்ன பாபு தன் தாய்ப்பால் தான் குடித்திருக்கிறார். நன்கு கம்பு சுற்றப் பழகியிருக்கிறார்" என்றான்.

வேணி கோபத்துடன், "அக்பர், இதைக் கூறவா நான் இந்நேர வரையிலும் பேசிக் கொண்டிருந்தேன்? யாருடைய தடியால் உனக்குக் காயம் பட்டது? அந்தப் பயல் தடியாலா, அல்லது அவனது வேலைக்காரன் தடியாலா?" என்றான்.

அக்பர் புன்னகை செய்தான். "அந்த வேலைக்காரன் தடியாலா? அவனுக்கு என்ன தடி வீசத் தெரியும்? ஏன் கௌஹர், உனது முதல் அடியிலேயே உட்கார்ந்து விடவில்லை?" என்றான்.

அக்பருடைய இரு பிள்ளைகளும் சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களும் காயமடைந்திருந்தார்கள். அவன் தலையை அசைத்துக் கனைத்தான். அவன் வேறு ஒன்றும் பேசவில்லை. "என்கையில் அடி வாங்கியிருந்தால் அந்தப் பயல் பிழைப்பது வேறு? அவன் கௌஹர் அடியிலேயே 'ஐயோ, அப்பா!' என்று சொல்லி உட்கார்ந்து விட்டான்" என்றான் அக்பர்.

ரமா அவர்கள் அருகில் வந்து நின்று கொண்டாள். அக்பர் இவர்களுடைய ஜமீன் குடிதான். நேற்றைய சாயங்காலமே ரமா இவனை அழைத்துக் கரையைக் காவல் காக்கச் சொன்னாள். அந்த வேலைக்காரன் பலத்தால் ரமேஷ் என்னசெய்வான் என்பதை ஒருதரம் நன்கு பார்த்துவிட விரும்பினாள். ஆனால் ரமேஷ் கம்பு வீசுவதில் இவ்வளவு கெட்டிக்காரன் என்று அவள் கனவில் கூடக் கருதியதில்லை.

அக்பர், ரமாவைப் பார்த்து, "அம்மா, அப்போது உடனே சின்னபாபு அவனுடைய தடியை எடுத்துக் கொண்டு கரையை தடுத்து நின்று கொண்டார். நாங்கள் மூன்று பேரும் சேர்ந்தும் கூட அவரை அங்கிருந்து

நகர்த்த முடியவில்லை. இருட்டிலே அவரது கண்கள் புலிக்கண் போல ஜ்வலித்தது. 'அக்பர், நீ வயதானவன். தள்ளிப்போ. கரையை உடைக்காவிட்டால் எல்லோரும் பசியால் செத்துப் போவார்கள். ஆகையால் அவசியம் உடைத்துத் தீரவேண்டும். நீயும் நிலபுலன்கள் உடையவன்தான். உனது நிலம் பாழ்பட்டுப் போனுல் உனக்கு எப்படி இருக்கும்?' என்ருர். நான் சலாம் செய்து விட்டு, "சின்னபாபு. நீங்கள் அப்பால் போங்கள். உங்கள் தயவால் குதிக்கிற இந்தப் பயல்கள் மண்டையை உடைக்க வேண்டும்' என்றேன்.

வேணி, தனது கோபத்தை அடக்க முடியாமல் இடையில் குறுக்கிட்டு, "அயோக்கியப் பயல், அவனுக்குச் சலாம் வைத்துவிட்டு, இங்கு வேறு வந்து புகழ்கிருயா?" என்ருன்.

மூன்று பேரும் எழுந்து நின்று கொண்டார்கள். "ஜாக்கிரதை! அயோக்கியன் என்று சொல்லாதீர்கள். நாங்கள் முஸ்லிம்கள். எதைப் பொறுத்தாலும் இதைப் பொறுக்கமாட்டோம்" என்ருர்கள்.

அதற்கப்புறம் அக்பர் தனது தலையிலிருந்து வழியும் ரத்தத்தைத் துடைத்துக்கொண்டு, ரமாவைப் பார்த்து, "அம்மா, பெரிய பாபு இங்கு வீட்டில் உட்கார்ந்து கொண்டு அயோக்கியன் என்று சொல்கிருர். அங்கே வந்து பார்த்திருந்தாரானுல் சின்ன பாபு எப்பேர்ப்பட்டவர் என்பது தெரியும்" என்ருன்.

வேணி: போலீசுக்குப் போய் சின்ன பாபு எப்பேர்ப்பட்டவர் என்பதைச் சொல்வதற்கென்ன? நாங்கள் கரையைக் காவல் காத்துக் கொண்டிருந்தோம். சின்னபாபு வந்து அடித்தார் என்று சொன்னுல் போதும்.

அக்பர்: தூ, தூ! பெரிய பாபு, நீங்கள் இரவைப் பகலென்று சொல்லச் சொல்கிறீகள்.

வேணி: சரி, வேறு ஏதாவது சொல்லலாம். இன்று முதலில் போய் காயத்தைக் காட்டிவா. நாளைக்கே வாரண்ட் பிறப்பித்து கச்சேரிக்கு இழுத்து வந்து விடுகிறேன். ரமா, நீயும் இவனுக்கு நன்கு புரியும்படி

சொல்லு. இம்மாதிரி சந்தர்ப்பம் இனி ஒருபோதும் கிடைக்காது.

ரமா ஒன்றும் பேசவில்லை. சும்மா, ஒருதரம் அக்பர் முகத்தை மட்டும் பார்த்தாள். அக்பர் தலையை அசைத்துக் கொண்டு, "முடியாதம்மா, என்னால் முடியாது" என்றான்.

**வேணி :** ஏன் முடியாது ?

**அக்பர் :** பெரிய பாபு, நீங்கள் சொல்வதென்ன ! எனக்கு மானம் வெட்கம் இல்லை? நாலு கிராமத்தார்களும் சர்தார் என்று சொல்வதில்லை ? நீங்கள் உத்திரவிட்டால் ஜெயில் கம்பிகளை வேண்டுமானாலும் ஒடித்து வருகிறேன்! ஆனால் நான் எப்படி பிராது கொடுப்பேன் ?

**ரமா :** ஆனால் போலீசுக்குப் போக மாட்டாயா அக்பர் ?

**அக்பர் :** முடியாதம்மா, என்ன வேண்டுமானாலும் செய்கிறேன். ஆனால் கச்சேரிக்குப் போய் எனது காயத்தைக் காட்டமாட்டேன். எழுந்திரு கௌஹர். வா, வீட்டுக்குப் போவோம். எங்களால் பிராது கொடுக்க முடியாது.

இதைக் கூறிவிட்டு அக்பர் எழுந்ததும், வேணி கோபத்தால் கொதித்தான். அதட்டல், மிரட்டல், வேண்டுதல் ஒன்றையும் லட்சியம்செய்யாமல் அக்பர் அலி எழுந்து போய்விடவே ரமாவின் இதயத்தைப் பிளந்து கொண்டு ஒரு பெருமூச்சு வெளிக் கிளம்பியது. அவளறியாமலே கண்களில் நீர் நிறைந்தது. இன்று இவ்வளவு பெரிய அவமானம், தோல்வி அடைந்தும் கூட அவளுடைய தலையிலிருந்து ஏதோ ஒரு பெரிய சுமை நீங்கியதுபோலிருந்தது. ஏன் இம்மாதிரி இருக்கிறது என்பதை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. இரவு முழுதும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. அவள் தாரகேஸ்வரத்தில் ரமேஷுக்கு உணவு படைத்த காக்ஷி அவளுடைய கண்ணைவிட்டு அகலவில்லை. அந்த சுந்தரமான தேகத்துக்குள்ளே இவ்வளவு அதிக சக்தி எப்படித் துல்லியமாக வாசம் செய்கிறது என்று நினைக்க நினைக்க அவள் முகமெல்லாம் கண்ணீரால் நனைந்தது.

# பதினொன்றாம் அத்தியாயம்

**ர**மேஷ் சிறுவயதில் ரமாவைக் காதலித்தான். ஆனால் அது சிறு பிள்ளைக்காதல் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அது எவ்வளவு ஆழமுடையது என்பதை அவன் முதல் முதலாக தாரகேஸ்வரத்தில்தான் உணர்ந்தான். இன்னும் அது எவ்வளவு கம்பீரமானது என்பதை அன்று ஒரு நாள் சாயங்காலம் அவளுடைய சம்பந்தத்தையே உதறித் தள்ளிவிட்டு வந்தபோது அறிந்தான். ஆனால், அன்றைய இரவு சம்பவத்திற்குப் பிறகு ரமேஷுக்கு அவள் பாலைவனம் போல ஒரே சூன்யமாகத் தெரிந்தாள். இருந்தாலும் அதனால் வாழ்க்கை இவ்வளவு பாரமுடையதாகத் தெரியும் என்று அவன் எண்ணவேயில்லை. இந்த மனஸ்தாபத்திற்குப் பிறகு அவன் அரைக்கணமும் இந்தக் கிராமத்தில் இருக்கப் பிரியப் படவில்லை. ஆனால், அதே சமயத்தில் இன்னொரு சம்பவம் நிகழ்ந்ததால் சிறிது ஆறுதலடைந்தான்.

குளத்துக்கு அக்கரையில் பீர்பூர் கிராமத்தில் இவர்கள் ஜமீன் இருந்தது. அங்கு முஸ்லிம்கள்தான் அதிகம். ஒரு நாள் அவர்கள் கூட்டமாக ரமேஷிடம் வந்தார்கள். "நாங்கள் உங்கள் குடிகள். நாங்கள் முஸ்லிம்கள் ஆனதால் எங்கள் குழந்தைகளை இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்வதில்லை. நாங்கள் பல தடவை முயற்சித்தோம். ஆனால், எங்கள் எண்ணம் ஈடேறவில்லை. உபாத்தியாயர் எங்கள் பிள்ளை களை எடுத்துக் கொள்வதில்லை" என்று கூறினார்கள்.

ரமேஷ் இதைக் கேட்டுத் திகைத்துப்போய், "நான் இம்மாதிரி அநியாயத்தைக் கேட்டதே இல்லை. நீங்கள் உங்கள் பிள்ளைகளை இன்றே அழைத்து வாருங்கள். நான் நேரில் வந்து இருந்து கொண்டு உங்கள் பிள்ளைகளைச் சேர்த்துவிடுகிறேன்" என்றான்.

"நாங்கள் உங்கள் குடிகள்தான். இருந்தாலும் கிஸ்தி கட்டிவிட்டுத்தான் பூமியை உழுகிறோம். ஆகையால் ஹிந்துக்களைப்போல ஜமீந்தாரிடம் பயப்பட மாட்டோம். ஆனால் இவ்விஷயத்தை விவாதிப்பதில் லாபமில்லை. சண்டைதான் வளரும். ஆகையால் எங்களுக்கென்று தனியாக ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். நீங்கள் அதற்கு உதவி செய்தால் போதும்" என்றார்கள்.

ரமேஷுக்கும் சண்டை சச்சரவில் வெறுப்புத் தட்டி விட்டது. அவர்கள் கூறுவது சரியெனப்பட்டது. அவன் சரியென ஒத்துக்கொண்டு அன்றையிலிருந்தே பள்ளிக்கூடத்திற்கான முயற்சிகளில் ஈடுபட்டான். இவர்கள் குவாபூர் ஹிந்து குடிகளைப் போல பேச்சுக்குப் பேச்சு சண்டை பிடித்துக் கொள்வதில்லை. சண்டை பிடித்தாலும் நியாயத்திற்குக் கட்டுப்படுவார்கள். இவர்கள் தங்களுக்குள் ஆபத்துக் காலத்தில் உதவிக் கொள்வதைக் கண்டு ரமேஷ் ஆச்சரியமடைந்தான்.

ரமேஷுக்கு சாதிப் பிரிவினையில் நம்பிக்கை கிடையாது. இந்த இரண்டு சமூகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான். ஹிந்துக்களுடைய தர்மமும், சமூகக் கொடுமைகளும்தான் இந்தப் பொருமைகளுக்கும், குரோதங்களுக்கும் காரணம் என்று நிச்சயமான முடிவுக்கு வந்தான். முஸ்லிம்கள் மதத்தில் ஏற்றத் தாழ்வு கிடையாது. ஆகையால் அவர்களிடம் ஒரு ஐக்ய உணர்ச்சி இருக்கிறது. அப்படி ஹிந்துக்களிடம் இல்லை, இருக்கவும் முடியாது. சாதி பேதங்கள் இருக்கும் வரையிலும் ஹிந்துக்களுக்குள் ஒரு அன்புணர்ச்சியை ஏற்படுத்த முயல்வதெல்லாம் வீணான காரியமாகும். சில வருஷங்களுக்கு முன் ரமேஷ் அதற்காகப் பாடு பட்டதை எல்லாம் எண்ணி உள்ளூற பச்சாதாபப் பட்டான். இவர்கள் 'ஹாய் ஹாய்' என அடித்துக் கொண்டு எப்போதும் இப்படியே நாளைக் கழிப்பவர்கள் தான். இவர்கள் இதே வழியில் போய்க் கொண்டிருந்தால் ஒருக்காலும் கடைத்தேறப் போவதில்லை என்று நிச்சயமான முடிவுக்கு வந்தான். சில நாளாக அநேக காரணங்

களால் பெரியம்மாவைச் சந்திக்காமலிருந்தான். அந்தக் கலகம் நடந்த பிறகு அவன் போகவேயில்லை. இன்று அதிகாலையிலேயே எழுந்து அங்கு சென்றான். பெரியம்மாவுடைய யோசனையில் இவனுக்கு அளவு கடந்த நம்பிக்கை உண்டு. பெரியம்மா இந்நேரத்திலேயே வீட்டு வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு அறைக்குள் உட்கார்ந்து கொண்டு, சாளேசரக் கண்ணாடி போட்டுக் கொண்டு ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருப்பதைக் காண ரமேஷுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவளும் இவனைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அவனை அன்பாக உள்ளே அழைத்து உட்கார வைத்தாள். பிறகு, "அடே, இன்று இந்நேரத்தில் எங்கு வந்தாய்?" என்றாள்.

ரமேஷ்: பெரியம்மா, உன்னை ரொம்ப நாளாகப் பார்க்கவில்லையல்லவா? நான் பீர்புரத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருக்கிறேன்.

விசுவேசுவரி: ஆம். நானும் கேள்விப்பட்டேன். ஏன் நம்ம பாடசாலையிலேயே படிக்க வைக்கக்கூடாது?

ரமேஷ்; பெரியம்மா, நான் அதைக் கூறத்தான் வந்திருக்கிறேன். இவர்களுக்கு நன்மை செய்ய முற்படுவது வீண். பிறர் நலத்தைக் காணச் சகியாத அகங்காரக்காரர்களுக்கு உழைப்பது எதற்கு? இன்னும் அதிக விரோதமாவார்கள். எந்த சனங்களுக்கு நன்மை செய்தால் பிரயோசனமுண்டோ நான் அவர்களுக்காக உழைக்கிறேன்.

விசுவேசுவரி: இது ஒன்றும் புதிதல்ல ரமேஷ். இந்த உலகத்திலே நன்மை செய்ய முற்படுகிறவனுக்கு விரோதிகள் அதிகரித்துக் கொண்டேதான் போவார்கள். அதைக் கண்டு பயப்படுபவர்கள் கோஷ்டியில் நீயும் ஒருவனாகச் சேர்ந்து கொண்டால் காரியம் எப்படி ஆகும்? பகவான் இப்பெரிய பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறார். ஆகையால் நீதான் அதை நிறைவேற்ற வேண்டும். ஏன் ரமேஷ், நீ அவர்களிடம் தண்ணீர் வாங்கிக் குடிப்பாயா?

ரமேஷ் : பார்த்தாயா அதற்குள் உன் காதுவரையிலும் எட்டி விட்டதல்லவா ? இது வரையிலும் நான் குடித்ததில்லை. ஆனால் குடிப்பதில் ஒன்றும் தப்பு இல்லை. நான் சாதிப் பிரிவினைகளை ஏற்கமாட்டேன்.

விசுவேசுவரி : சாதி பேதத்தை ஒப்புக் கொள்வதில்லையா? இது என்ன பொய்யா? சாதி பேதம் இருக்கிறதோ இல்லையோ, நீ ஒப்புக்கொள்ளமாட்டாயா?

ரமேஷ் : இதைக் கேட்பதற்குத்தான் இன்று உன்னிடம் வந்திருக்கிறேன். சாதி பேதம் இருக்கிறதென்று ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அது நல்லது என்று கூற மாட்டேன்.

" ஏன்?''

" என்ன, இது கூட உனக்குச் சொல்ல வேண்டுமா? இதனால்தான் இத்தனை சண்டை சச்சரவுகள் உண்டாகிறது என்பது உனக்குத் தெரியாதா? சமூகத்தில் கீழ் சாதியாக இருப்பவர்கள் மேல் சாதியைப் பார்த்து பொருமைப்படுவது சகஜம். தங்கள் கீழ் நிலையிலிருந்து விடுபட முயலுவார்கள். ஹிந்துக்களுக்கு ஒன்று சேரத் தெரியாது, அழிந்து ஒழிந்து போகத்தான் தெரியும். தன்னையும் தனது சாதியையும் காப்பாற்ற வேண்டும், விருத்தி செய்ய வேண்டும் என்ற உலக நியதி இருக்கிறதே அதை ஏற்றுக் கொள்வதில்லை. ஆகையால் நாளுக்கு நாள் க்ஷீணித்து வருகிறார்கள். நீ சனசங்கியைப் பார்த்தால் பயந்து போவாய். மனிதனைக் கேவலமாக மதித்து அவமானம் செய்வதற்குக் கைமேல் பலன் கிடைப்பதைக் கண்டு கொள்வாய். ஹிந்துக்கள் நாளுக்கு நாள் குறைந்து வருவதையும், முஸ்லிம்கள் நாளுக்கு நாள் அதிகமாவதையும் பார்ப்பாய். ஆனால் இன்னும் ஹிந்துக்களுக்குப் புலப்படுவதில்லை.

விசுவேசுவரி : ரமேஷ், நீ இவ்வளவு விரிவாகப் பேசியும்கூட எனக்குப் புலப்படவில்லை. தங்களைக் கீழ் சாதி என்று கூறிக்கொள்ள வெட்கப்பட்டு தங்கள் மதத்தை விட்டுப் போய் விடுகிறார்கள் என்று சொல்லியிருந்தால் ஒருவேளை எனக்குப் புரிந்திருக்கும். ஹிந்துக்கள்

நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அதற்குக் காரணம் வேறு. சமூகத்தின் பேரிலும் குற்றம் இருக்கிறது. ஆனால், கீழ்சாதிக்காரர்கள் தங்கள் தர்மத்தை விட்டுப் போய்விடுவதற்கு இதுவல்ல காரணம். தன்னைக் கீழ்சாதி என்று சொல்வதற்காக எந்த ஹிந்துவும் இதுவரையிலும் தர்மத்தை விட்டுப் போனதில்லை.

ரமேஷ் : ஆனால், படித்தவர்கள் இப்படித்தானே உத்தேசிக்கிறார்கள்.

**விசுவேசுவரி :** உத்தேசத்தை வைத்துக்கொண்டு தர்க்கம் செய்ய முடியாது. யாராவது கீழ்சாதி என்று கூறுவதைச் சகிக்காமல் மதம் மாறினார்கள் என்றால் படித்தவர்கள் கூறுவதை உண்மையெனக் கொள்ளலாம். ஆனால், அப்படிக் கூற முடியாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

ரமேஷ் : கீழ்ச்சாதிக்காரர்கள், மேல் சாதிக்காரர்களிடம் நிச்சயம் பொறாமைப்படுவார்கள் என்று நான் உண்மையாக நம்புகிறேன்.

ரமேஷின் இந்த உணர்ச்சிகரமான பேச்சைக் கேட்டு விசுவேசுவரி சிரித்தாள். "அது தப்பு, சுத்தத் தப்பு; அப்பா, இது உங்களுடைய நகரம் அல்ல. மேல்சாதி கீழ்சாதி என்று யாரும் கிராமங்களில் கவலைப்படுவதில்லை. மூத்த சகோதரனைப் பார்த்து இளையவன் நான் ஏன் ஒரு வருஷம் இரண்டு வருஷம் பின்னால் பிறக்கவேண்டும் என்று பொறாமைப்படுவதில்லை. அம்மாதிரிதான் கிராமங்களின் நிலைமையும். இங்கு பிராமணரல்லாதார்கள் நாம் பிராமணராகப் பிறக்கவில்லையே என்று துக்கப்படுவதில்லை. மூத்த சகோதரனை வணங்குவதற்கு எப்படி இளைய சகோதரன் வெட்கப் படுவதில்லையோ அம்மாதிரிதான் இங்கு பிராமணர்களை வணங்குவதற்கு வெட்கமடைவதில்லை. சாதிபேதம் என்னும் நாசபுத்தி இந்தப் பாமர கிராமவாசிகளிடம் கிடையாது" என்றாள்.

ரமேஷ் : பின் ஏன் இப்படி நேருகிறது? அந்தக் கிராமத்திலே ஏராளமாக முஸ்லிம்கள் வசிக்கிறார்கள்.

ஆனால், அவர்களுக்குள் இம்மாதிரிசண்டைகள் உண்டாவதில்லை. யாருக்காவது ஆபத்து நேர்ந்தால் இங்கு உள்ளவர்களைப் போல அவனை அமுத்தி விடுவதில்லை. துவாரகா பண்டிதருடைய பிரேதத்தை பிராயச்சித்தம் செய்யாமல் யாரும் தொட மறுத்து விட்டது உனக்கே தெரியுமல்லவா.

விசுவேசுவரி: ஆம், எனக்குத் தெரியும். ஆனால், இதற்கு சாதி பேதம் காரணமல்லவே. காரணம் என்னவென்றால் முஸ்லிம்களிடம் உண்மைத் தர்மம் இருக்கிறது. நம்மிடம் அது கிடையாது தர்மம் என்று சொல்லப் படுவது கிராமங்களிலிருந்து அடியோடு மறைந்து விட்டது. தீய பழக்க வழக்கங்கள்தான் எஞ்சியிருக்கின்றன.

ரமேஷ்: பெரியம்மா, இதைப் போக்குவதற்கு ஒரு வழியும் இல்லையா?

விசுவேசுவரி: இல்லாமலென்ன! அறிவால்தான் இதைப் போக்க முடியும், நீ கடைப்பிடிக்கும் வழிதான் சிறந்தது. இதற்குத்தான் நான் உன்னை ஊரை விட்டுப் போகக்கூடாதென்பது.

இதைக் கேட்டு ரமேஷ் என்னவோ கூற விரும்பினான். ஆனால் அதற்குள் விசுவேசுவரி, "முஸ்லிம் களிடமும் அறியாமை இருக்கிறது என்று நீ சொல்வாய். வாஸ்தவம்தான். ஆனாலும் அவர்களுடைய தர்மம் அவர்களைப் பல வகையிலும் காப்பாற்றுகிறது. ரமேஷ், நான் ஒரு விஷயம் சொல்கிறேன் கேளு. பீர்பூர் கிராமத்திலே ஜாபர் என்று ஒரு பெரிய மனிதன் இருக்கிறான். அவனை எல்லோரும் சாதியிலிருந்து தள்ளி வைத்திருக்கிறார்கள். ஏன் தெரியுமா? அவன் தனது விதவைச் சிறிய தாயாருக்குச் சாப்பாட்டுக்குக் கொடுக்கவில்லையாம். ஆனால், கோவிந்த காங்கூலி தனது இறந்து போன தமையன் மனைவியை அன்றொரு நாள் பாதி உயிர் போகும் வரையிலும் அடித்துவிட்டான். இதற்குச் சமூகம் தண்டிக்காவிட்டால் தொலைகிறது. ஆனால் அவனை தலைமேல் அல்லவா தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறது.

நாம் இந்த மாதிரி குற்றங்களைத் தனிப்பட்ட மனிதனைச் சேர்ந்த பாப புண்ணியம் என கருதி விடுகிறோம். அதற்குத் தண்டனை கடவுள் கொடுத்தாலும் கொடுக்கா விட்டாலும் நமது சமூகம் இதற்கு எதிராக ஒரு விரலைக் கூட அசைக்காது."

இந்தப் பேச்சைக் கேட்டு ரமேஷ் ஆச்சரியமடைந்தான். ஆனால், இதுவே உண்மை என நம்ப முடியவில்லை. விசுவேசுவரி அவனது மனோபாவத்தை அறிந்துகொண்டு, "அப்பா, பலன் அடைவதுதான் சிறந்த வழி என்று தப்பாகக் கருதாதே. நான் சொல்வது சரியா தப்பா என்று அறிய விரும்பினால் ஏதாவது நகரத்தை அடுத்த கிராமத்தையும் நமது குவாபூரையும் ஒப்பிட்டுப் பார். உனக்கே நன்கு தெரிய வரும்" என்றாள்.

கல்கத்தாவுக்கருகிலுள்ள கிராமங்கள் எல்லாம் ரமேஷுக்குத் தெரியும். அவைகளை ஒரு முறை ஞாபகப் படுத்தியதும் அவனுடைய கண்ணை மறைத்திருந்த திரை விலகியது போலிருந்தது. அவன் ஆச்சரியத்துடன் விசுவேசுவரியின் முகத்தைப் பார்த்தான். ஆனால், அவள் இதைக் கவனியாமல் விஷயத்தைத் தொடர்ந்து பேசினாள். "அப்பா, இதனால்தான் நான் அடிக்கடி உன்னிடம் பிறந்த ஊரை விட்டுப் போகாதே என்று சொல்கிறேன். உன்னைப் போல கிராமத்து வெளியில் வளர்ந்தவர்கள், கிராமங்களுக்குத் திரும்பி வந்துவிட்டார்களானால் கிராமங்களுக்கு இந்நிலை ஏற்படாது. கோவிந்த காங்கூலியை தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு உன்னை அப்புறப் படுத்த முயற்சிக்கமாட்டார்கள்" என்றாள்.

ரமேஷுக்கு உடனே ரமா நினைவிற்கு வந்தாள். அவன் தழதழத்த குரலில், "பெரியம்மா, இனி தூரத்தில் போவதைப் பற்றி எனக்கும் கவலை கிடையாது" என்றான்.

அவனுடைய துக்கத்தை விசுவேசுவரி அறிந்து கொண்டாள். ஆனால், காரணம் தெரியவில்லை. அவள், "ஆனால் ரமேஷ், அது கூடாது. நீ இங்கு வந்து வேலையை ஆரம்பித்துவிட்டு பாதியில் விட்டுவிட்டுப் போனால்

உனது பிறந்த ஊர் உன்னை ஒருக்காலும் மன்னிக்காது" என்றாள்.

"ஏன் பெரியம்மா, பிறந்த ஊர் எனக்கு ஒருவனுக்கு மட்டுமல்லவே ?"

விசுவேசுவரி : ஆம், உனக்குத்தான் தாய். தாயார் வாய் திறந்து தனது மகனிடம் ஒன்றும் கேட்கமாட்டாள் என்பது தெரியாதா ? இதனால்தானே இத்தனை பேர்கள் இருந்தும்கூட அவள் அழுவது யார் காதிலும் விழுவ தில்லை. ஆனால், நீ இங்கு வந்ததும் அதைத் தெரிந்து கொண்டாயே.

ரமேஷ் மறுபடி ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் பேசாமலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். பிறகு அவளை வணங்கிவிட்டு மெதுவாக எழுந்து வெளியே சென்றுவிட்டான்.

அவன் வீடு திரும்பும்போது, பக்தி, கருணை கடமை இவைகளெல்லாம் அவனது இதயத்தில் நிரம்பி யிருந்தது. அப்போது சூர்யோதயமாகிவிட்டது. அவன் அறையில் கீழ் புறமிருந்த சன்னல் திறந்திருந்தது. அதற்கு எதிரில் நின்றுகொண்டு, ஆகாயதைப் பார்த்துக் கொண்டிருந்தான். யாரோ ஒரு சிறுவன் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ரமாவின் தம்பி யதீந்திரன் கத வருகில் நின்றுகொண்டு 'சின்ன அண்ணா, சின்ன அண்ணா!' என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனது முகம் வெட்கத்தால் சிவந்திருந்தது. ரமேஷ் அருகில் சென்று கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வந்து, "யதீந்திரா, நீ யாரைக் கூப்பிட்டுக்கொண் டிருந்தாய் ?" என்றான்.

"உங்களைத்தான் !"

"என்னையா ? என்னை, 'சின்ன அண்ணா' என்று சொல்லிக் கூப்பிடும்படி யார் சொன்னார்கள் ?"

"அக்கா."

"அக்காளா ? அவள் ஏதாவது சொல்லி அனுப்பித் தாளா ?"

“ இல்லை. என்னை சின்ன அண்ணாவிடம் அழைத்துப் போ என்று சொன்னாள். அவள் அங்கே நிற்கிறாள்.”

யதீந்திரன் உடனே கதவுக்கு வெளியே காட்டினான். அங்கே ரமா ஒரு தூணருகில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அவன் அவளருகில் சென்று, “ இன்று எனது பாக்கியம். என்னை வரும்படி சொல்லி அனுப்பித் திருந்தால் வந்திருப்பேனே. எதற்காக இவ்வளவு சிரமம் ? வா, உள்ளே வா ’’ என்றான்.

ரமா முதலில் இங்குமங்கும் பார்த்தாள். பிறகு யதீந்திரன் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே சென்று அவன் நாற்காலியருகில் உட்கார்ந்தாள். அதன் பிறகு, “ இன்று உங்களிடம் ஒரு பொருள் யாசிக்க வந்திருக் கிறேன். கொடுப்பீர்களா ?’’ என்றாள்.

அதன் பிறகு ரமேஷின் முகத்தை உற்று நோக்கினாள். அந்தப் பார்வையால் ரமேஷின் சப்த நாடிகளும் நிலை கலங்கியது. சற்று நேரத்திற்கு முன் அவனது இதயத்தில் சுடர் விட்டுக்கொண்டிருந்த லட்சியங்களும், ஆசை அபிலாஷைகளும் ஒரு நொடியில் அணைந்துவிட்டன. “ என்ன செய்ய வேண்டும், சொல்லு ?’’ என்றான்.

அவனது மன நிலையையும் அவள் ஒருவாறு அறிந்து கொண்டாள். அவள் அவனையே பார்த்துக்கொண்டு, “ முதலில் தருவதாக வாக்கு அளியுங்கள் ” என்றாள்.

ரமேஷ் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, “ அது முடியாது. ரமா ! உன்னிடம் என்னவென்று கேட்காமலேயே வாக்கு அளிப்பேன். ஆனால், நீ அதைக் கெடுத்துக் கொண்டாய் ” என்றான்.

“ நானா ?”

“ ஆம், அந்த சக்தி உன்னிடம்தான் இருந்தது. ரமா, இன்று உன்னிடம் ஒரு உண்மையைக் கூறு கிறேன். நீ நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. அந்த நம்பிக்கை இருந்திருந்தால் நான் உன்னை இப்படிக் கேட்டிருக்கமாட்டேன்.”

பிறகு சிறிது பொறுத்து, “ இன்று அதைக் கூறுவ தால் நம்மில் யாருக்கும் எவ்வித லாப நஷ்டமும்

கிடையாது. அன்றுவரையிலும் எந்தப் பொருளும் உனக்குக் கொடுக்க முடியாததாக இருக்கவில்லை. ஆகையால்தான் இன்று சொல்கிறேன். ஆனால், உனக்குத் தெரியுமா ?" என்றான்.

"தெரியாது."

"ஆனால், இதைக் கேட்டு, கோபமோ வெட்கமோ அடையக்கூடாது. ஏதோ ஒரு பழங்காலத்துக் கதையைக் கேட்டுக்கொண்டிருப்பதாக நீ நினைத்துக் கொள்ளவேண்டும் !"

ரமா ஏதோ கூற விரும்பினாள். ஆனால், தலை நிமிர்ந்து பேச அவளால் முடியவில்லை.

ரமேஷ் ரொம்ப நிதானமாக, "ரமா, நான் உன்னைக் காதலித்தேன். ஆனால் அம்மாதிரி வேறு யாருமே யாரையும் காதலித்திருக்க மாட்டார்களென்று நினைக்கிறேன். நீதான் எனக்கு மனைவியாக வருவாய் என்று சிறு வயதில் அம்மா அடிக்கடி என்னிடம் சொல்லுவாள். ஆனால் அதன் பிறகு எனது ஆசை பங்கமடைந்த அன்று நான் கலங்கிப் போனேன். அது எனக்கு இன்னும் நினைவிலிருக்கிறது" என்றான்.

இந்த வார்த்தைகள் எல்லாம் ரமாவின் உள்ளத்தைப் பிளந்துவிடும் போலிருந்தது. அவன் பேசுவதை அவளால் தடுக்கவும் முடியவில்லை. ஆகையால் மௌனமாக உட்கார்ந்துகொண்டு அவனது இன்பப் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ரமேஷ் சொல்கிறான் : "இந்தக் கதையைக் கேட்பது பாவம் என நீ நினைக்கலாம். எனக்கும் முதலில் அந்தச் சந்தேகம் இருந்தது. ஆகையால்தான் அன்று தாரகேசுவரத்தில் ஒரே நாளில் எனது வாழ்க்கையே மாறியபோதுகூட நான் பேசாமலிருந்தேன். ஆனால், அப்படி மௌனமாக இருப்பது என்னால் சாத்தியமானதல்ல."

ரமாவால் இதைப் பொறுக்க முடியவில்லை. "பின் இன்று எதற்காக உங்கள் வீட்டிலேயே என்னை இவ்விதம் அவமானம் செய்ய வேண்டும் ?" என்றாள்.

" அவமானமா ! துளிகூடக் கிடையாது. இதில் மான அவமானம் ஒன்றும் இல்லை. இதில் சம்பந்தப்பட்ட ரமா இப்போது இல்லை. ரமேஷூம் அப்படித்தான். பரவாயில்லை கேளு. அன்று எனக்கு நீ என்ன செய்தாலும் சரி என்று ஏன் தோன்றியதோ ? எனக்குக் கெடுதல் வருவதை நீ பார்த்துக்கொண்டிருக்க மாட்டாய். நீ சிறு வயதில் காதலித்ததை மறந்திருக்கமாட்டாய் என்று நினைக்கிறேன். ஆகையால் எந்த விஷயத்தையும் உன்னிடம் தெரிவிக்காமல் உனது நிழலில் இருந்துகொண்டு வாழ்க்கையைக் கழிப்பது என்று நினைத்தேன். ஆனால், அன்று இரவு நீ சொன்னதாக அக்பர்.........அடே, வெளியில் என்ன இவ்வளவு சத்தம் ?" அதற்குள் கோபால் சர்க்கார் அவசரமாக ஓடி வந்து, " பாபுஜி !" என்றான்.

சத்தத்தைக் கேட்டு ரமேஷ் வெளியே வந்தான். " பாபுஜி, போலீஸ்காரர்கள் பஜூவாவைக் கைது செய்திருக்கிறார்கள் " என்றான்.

பயத்தால் கோபால் சர்க்காருடைய உதடுகள் நடுங்கின. " முந்தாநாள் இரவு ராதா நகரில் நடந்த கொள்ளையில் சம்பந்தப்பட்டவன் என்று சொல்கிறார்கள் " என்றான்.

ரமேஷ், ரமாவிடம், " ரமா, இனி நீ இங்கு ஒரு கணம்கூடத் தாமதிக்காதே. சன்னல் வழியில் போய்விடு. போலீஸ்காரர்கள் வீட்டைச் சோதனை போடாமல் விடமாட்டார்கள் " என்றான்.

ரமாவின் முகம் கறுத்துவிட்டது.

" உன்னைப்பற்றி ஒன்றும் பயப்படவேண்டியதில்லையே ?" என்றாள்.

" சொல்ல முடியாது. விஷயம் என்ன, என்பதே தெரியாதே."

ரமா நடுங்கினாள். அன்று போலீசுக்குத் தகவல் கொடுத்தது ஞாபகத்திற்கு வந்தது. அதன் பிறகு அவள் திடீரென அழத் தொடங்கினாள். " நான் போகமாட்டேன் " என்றாள்.

"முடியாது, முடியாது. ரமா, நீ இப்போது இங்கு இருக்கக்கூடாது. இங்கிருந்து உடனே போய்விடு." இதைக் கூறியதும் உடனே அவன் யதீந்திரனையும், ரமாவையும் சன்னல் வழியாக வெளியே அனுப்பிவிட்டுக் கதவை மூடினான்.

## பன்னிரண்டாம் அத்தியாயம்

இரண்டு மாதங்களாகிவிட்டன; பஜுவா கொள்ளைக்காரரோடு ஜெயிலிலிருக்கிறான். அன்று போலீசார் வீடு சோதனை போட்டதில் ரமேஷிடமிருந்து ஒன்றும் கைப்பற்றவில்லை. 'என் பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்க பஜுவா என்னோடு அன்றிரவு வந்திருந்தான்' என்று பைரவ ஆசாரியா சாட்சி சொன்னார். ஆனாலும், பஜுவா விடுதலை ஆகவில்லை. வேணி மிகுந்த உற்சாகத்துடன், "ரமா, ரொம்ப முன் யோசனையுடன் காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. அன்று தடியும் கையுமாக இந்தப் பயல் வந்து நம்மிடம் மீன் பாகம் கேட்டதை போலீசுக்குத் தெரிவிக்காமலிருந்திருந்தால் இன்று தண்டனை அடைந்திருப்பானா? ஆனால், அன்று ரமேஷ் பேரிலும் ஏதோ இரண்டு சொல்லி வைத்திருந்தால் இன்று ரொம்ப நன்றாக இருந்திருக்கும். ஆனால், நீதான் நான் சொன்னதைக் கேட்கவில்லையே" என்றான்.

ரமாவின் முகம் வெளுத்துவிட்டது. அதைக்கண்டு வேணி, "வேண்டாம், வேண்டாம். நீ சாட்சி சொல்லப் போக வேண்டாம். ஆனால், போவதிலும் ஒன்றும் தப்பு இல்லை. ஜமீனை வைத்துக் கொண்டு இதற்கு எல்லாம் பயந்து முடியுமா?" என்றான்.

ரமா ஒன்றும் பேசவில்லை.

வேணி: ஆனால் ரமேஷ் சுலபத்தில் வசப்பட மாட்டான். இந்தத் தடவை அவனும் சும்மா இருக்கவில்லை. அவன் ஏற்படுத்தி இருக்கிற புதிய பள்ளிக்கூடத்தால் நமக்கு அநேக கஷ்டங்கள் ஏற்படும். அவர்கள் எல்லாம் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டார்களானால்

அப்புறம் அவர்கள் ஜமீனில் இருப்பதும் இல்லாததும் இரண்டும் ஒன்றுதான். நான் இதை உன்னிடம் இப்போதே சொல்லிவிடுகிறேன்.

ஜமீன் காரியங்கள் அனைத்தையும் ரமா, வேணியின் யோசனைப்படியே செய்துவந்தாள். இது விஷயத்தில் அவர்களிருவருக்கும் அபிப்பிராய பேதமே உண்டானதில்லை. ஆனால், இன்று முதல்முதலாக ரமா தர்க்கம் செய்தாள். "ஆமாம், அப்படியானால் ரமேஷ் அண்ணாவிற்கும் தானே கஷ்டம் உண்டாகும் ?" என்றாள்.

வேணிக்கும் இது ரொம்ப சந்தேகமாகத்தானிருந்தது. ஆனால், அவன் இதற்கு முன் யோசித்து வைத்திருந்ததைச் சொல்லத் தொடங்கினான். "ரமா, உனக்கு இவைகளைப் பற்றி என்ன தெரியும் ? அவனுக்குத் தீங்கு நேருவதைப் பற்றிக் கவலை இல்லையே ! நாம் இருவரும் கஷ்டமடைந்தால் போதும் ; அதுதான் அவனுக்குச் சந்தோஷம். அவன் வந்ததிலிருந்து எப்படிப் பணத்தைச் செலவழிக்கிறான் பார்த்தாயா ? எங்கு பார்த்தாலும் சின்ன சாதிகள், சின்ன பாபு, சின்னபாபு என்று கூச்சல் போடுகிறார்கள். நம்மை யாரும் மதிப்பதே இல்லையே ! ஆனால் இதை இப்படியே விட்டு வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. நீ அவனைப் போலீஸ் கவனத்துக்கு இழுத்து விட்டது ரொம்ப நல்லதாகப் போச்சு."

ஆனால், இந்தப் பேச்சுகளால் உத்சாகமடைய வேண்டிய ரமா மௌனமாக இருப்பதைக்காண வேணிக்கு ஆச்சரியமாக இருந்தது. திடீரென அவள் முக மாறுதலைக் கண்டான். "நான் போலீசில் பிராது கொடுத்திருப்பது ரமேஷ் அண்ணாவிற்குத் தெரியுமா ?" என்றாள்.

"சரியாகத் தெரியாது. ஆனால், கடைசியில் தெரிந்து தானே தீரும். பஜ"வா விசாரணையில் அனைத்தும் வெளிப் பட்டுவிடும்."

இதற்குப் பிறகு ரமா ஒன்றும் பேசவில்லை. அவள் மௌனமாக ஏதோ ஒரு பெரிய வேதனையைச் சகித்துக் கொண்டிருப்பவள் போலிருந்தாள். ரமேஷை ஆபத்தில் சிக்க வைப்பதில் நான்தான் எல்லோரைக் காட்டிலும்

முதன்மையானவள் என்பது ஒரு நாளைக்கு ரமேஷுக்குக் தெரிந்துவிடும் என்று நினைத்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு அவள், "ஏன் அண்ணு, இன்று அவரைப் பற்றியே எல்லோரும் பேசுகிருர்களல்லவா?" என்ருள்.

**வேணி :** நமது கிராமத்தில் மட்டுமல்ல. சுற்றிலும் ஏழு, எட்டுக் கிராமங்களிலும், ரோட்டுப் போடுவது, பள்ளிக்கூடம் திறப்பது எல்லாம் ஆரம்பமாகின்றன. இன்று கீழ்சாதிக்காரர்கள் எல்லாம் என்ன சொல்கிருர்கள் தெரியுமா? மேல் சாதிக்காரர் கிராமங்களில் ஒவ்வொரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அதனுல் மேன்மை அடை கிருர்கள் என்று சொல்லுகிருர்கள். புதிய பள்ளிக்கூடம் எங்கு ஏற்படுத்துவதானுலும் நான் இருநூறு ரூபாய் கொடுக்கிறேன் என்று ரமேஷ் சொல்லுகிருன். சித்தப்பா விடமிருந்து கிடைத்த பணமெல்லாம் அவன் இதிலேயே செலவழித்துவிடுவான். முஸ்லிம்கள் அவனை ஒரு அவதார புருஷனுக நினைத்துக்கொண்டிருக்கிருர்கள்.

அவனுடைய பெயரோடு தன் பெயரும் சம்பந்தப் படக்கூடுமா என அவள் உள்ளத்திலே ஒரு கணம் பளிச் செனத் தோன்றி மறைந்தது. ஆனுல், அது ஒரு கணம் தான். அடுத்த கணமே அவள் உள்ளம் கனத்த அந்த காரத்தில் மூழ்கியது.

**வேணி :** ஆனுல், நான் அவனை லேசில் விட்டுவிட மாட்டேன். நமது குடிகளை இவ்விதம் கெடுப்பதை நாம் சும்மா பார்த்துக்கொண்டிருப்போம் என்று கனவில் கூட எண்ணவேண்டாம். இந்தப் பயல் பைரவ ஆசார்யா, பஜுவா பக்கம் சாட்சி கூறிவிட்டு வந்திருக்கிருன். அவன் எப்படித் தன்மகளுக்குக் கலியாணம் செய்வானே பார்த்து விடுகிறேன். இப்போது இன்னெரு வழியும் இருக்கிறது. ஆனுல், கோவிந்த சித்தப்பா என்ன சொல்கிருரோ பார்க்கிறேன். ஊரில் கொள்ளை நடந்துகொண்டுதானி ருக்கிறது. இந்தத் தடவை வேலைக்காரனை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டால் அடுத்த தடவை எஜமானை அனுப்புவ தற்கு ஒன்றும் கஷ்டம் இராது. ரமா, நீ முதலிலேயே சொன்னுய் அவன் லேசுப்பட்டவன் அல்ல என்று. ஆனுல் அப்பொழுது அதை நான் நம்பவில்லை."

ரமா ஒன்றும் பதில் பேசவில்லை. ஒரு பெண், தன்னைப் புகழ்ந்து பேசுவதைக் கேட்டும்கூட சந்தோஷமடையாமல் இம்மாதிரி துக்கத்துடனிருப்பாளா என்பதை யோசிக்க வேணியால் முடியவில்லை.

அவள் மனதிலுள்ளதை அறியாவிட்டாலும் அவளுடைய முகபாவத்தைக்கண்டு சிறிது ஆச்சரியமடைந்தான். அவன் சமயலறைக்குச் சென்று சின்னம்மாவிடமும் இரண்டொரு வார்த்தைகள் பேசினான். பிறகு அவன் வீட்டிற்குப் புறப்படும்போது ரமா அவனைச் சாடை செய்து அருகில் அழைத்து, "பெரிய அண்ணா! ஜெயிலுக்கு சின்ன அண்ணா போனால் நமக்கு ஒன்றும் அவமானமில்லையா?'' என்றாள். வேணி ஆச்சரியத்துடன், "ஏன்?" என்றான்.

"அவரும் நம்மைச் சேர்ந்தவர்தானே. நாம் அவரைக் காப்பாற்றுவிட்டால் உலகம் நம்மைப் பார்த்து காரி உமிழாதா ?''

"நடத்தைக்குத் தகுந்த பலன் அனுபவித்துவிட்டுப் போகிறான். நாம் அதற்கு என்ன செய்ய முடியும்?''

"ஆனால், ரமேஷ் அண்ணா கொள்ளை அடிப்பவர் அல்ல என்பது அனைவருக்கும் தெரியுமே. அவர் பிறர் நன்மைக்காகத்தானே பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். அதைத் தவிர நாம் ஊரார் முகத்தில்தான் எப்படி விழிக்க முடியும்?''

வேணி 'கல கல 'வெனச் சிரித்தான். "சரி, இன்று உனக்கு உடம்பிற்கு என்ன?'' என்றான்.

ரமா ஒரு தரம் இந்த மனிதனோடு ரமேஷை ஒப்பிட்டுப் பார்த்தாள். பிறகு அவள் தலை நிமிரவே முடியவில்லை. "ஊர்க்காரர்கள் நம்முன்னால் பேசாவிட்டாலும் அப்புறம் போயாவது பேசுவார்கள். ராஜாவின் தாயாரைக் கூட அப்பால் போய் ஜனங்கள் கேவலமாகப் பேசுவார்கள் என்று நீ சொல்வாய். ஆனால், கடவுள் ஒருவன் இருக்கிறானல்லவா! ஒரு நிரபராதிக்கு, தண்டனை வாங்கிக் கொடுத்தால் அவன் நம்மைச் சும்மாவிடமாட்டான்'' என்றாள்.

“அப்பாடி! அந்த படவா, கடவுளை நம்புகிருனு? கோவில் விழுந்துவிட்டது. அதற்கு ஆள் அனுப்பினேன். ‘வீண் செலவு செய்வதற்கு என்னிடம் பணம் கிடையாது’ என்று சொல்லி அனுப்பிவிட்டான். கேட்டாயா அவன் பேச்சை! இது அவனுக்கு வீண் செலவாம்! ஆனுல், முஸ்லிம்களுக்குப் பள்ளிக்கூடம் ஏற்படுத்திக் கொடுப்பதுதான் நல்ல செலவாம்! பிராமணனுகப் பிறந்தும் சந்தியா வந்தனம் செய்வதில்லை. முஸ்லிம் தொட்ட தண்ணீரைக் கூடக் குடிக்கிருனும். நாலு எழுத்து இங்லீஷ் படித்த பிறகு அவனுக்குச் சாதியாவது, தர்மமாவது! ஆனுல் இதற்கெல்லாம் தண்டனை இல்லாமல் போய்விடுமா? அதை எல்லோரும் ஒரு நாளைக்குப் பார்ப்பார்கள்.”

ரமா வேறு ஒன்றும் தர்க்கம் செய்யவில்லை. ரமேஷின் அனுசாரத்தைப்பற்றி எண்ணி மனதிற்குள் வருத்தமடைந்தாள். வேணி ஏதோ பேசிக்கொண்டே அங்கிருந்து சென்றுவிட்டான். ரமா அப்படியே சிறிது நேரம் நின்று கொண்டிருந்தாள். பிறகு அறைக்குள் சென்று உட்கார்ந்து கொண்டாள். அன்று ஏகாதசி. சாப்பிட வேண்டிய தொந்தரவு இல்லை. இதை நினைக்க அவளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

## பதின்மூன்றும் அத்தியாயம்

மழைகாலம் கழிந்துவிட்டது. வரப்போகும் துர்க்கா பூஜையின் ஆனந்தமும் மலேரியாவின் பீதியும் கிராமங்களில் குடி கொண்டிருந்தது. சென்ற வருஷம் இந்த ராக்ஷசன் கையிலிருந்து ரமேஷ் தப்பிவிட்டான். ஆனுல், இந்த வருஷம் தப்பிக்க முடியவில்லை. மூன்று நாள் ஜுரத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்துவிட்டு இன்றுதான் எழுந்தான். இந்த மலேரியா வராமல் இருப்பதற்கு ஏதாவது வழி செய்தாகவேண்டும் என்று நினைத்தான். சனங்கள் இவ்விதம் மலேரியாவால் மாதக் கணக்காகக்

கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தால் ஆண்டவன் என்னைச் சும்மா விடமாட்டான் என்று எண்ணினன், இதற்குமுந்தியே கிராமவாசிகளிடம் இதைப் பற்றிப் பேசியிருக்கிருன். அவர்களும் இதனுடைய அபாயத்தை உணர்ந்திருந்தார்கள். ஆனுலும், குளம் குட்டைகளைத் தூற்றுவதற்கும்; குப்பை கூளங்களை அப்புறப்படுத்துவதற்கும் யாரும் முன் வரவில்லை. 'வீட்டுச் சோற்றைத் தின்று ஊர் வேலை செய்வதா' என்று கருதினர்கள். குட்டைகள் இருந்த நிலத்துச் சொந்தக் காரர்கள் 'இது எங்கள் பாட்டன் காலத்திலிருந்து இருக்கிறது. யார் வேண்டுமானுலும் சுத்தம் செய்து கொள்ளலாம்' என்று சொல்லிவிட்டார்கள். ஆனல், அவர்கள் இதற்காகக் காசு செலவழிக்கவோ, அல்லது தேக சிரமமடையவோ சம்மதிக்கவில்லை. இதைச் சுற்றிலும் இன்னும் அநேக கிராமங்கள் மலேரியாவில் கஷ்டப் படுவது ரமேஷுக்குத் தெரியும். உடம்புக்குச் சிறிது குணமான பிறகு அந்தக் கிராமங்களுக்கெல்லாம் போய்ப் பார்த்துவிட்டுவந்து செய்யவேண்டியதைச் செய்வதெனத் தீர்மானித்துக்கொண்டான். மலேரியா இல்லாத கிராமங் களில் தண்ணீர் தேக்கம் கிடையாதென்பதை அறிந்தான். இதைச் சனங்களுக்குப் புரியும்படி செய்து விட்டால் போதும் என நினைத்தான். குறைந்தது பீர்பூர் குடிகளான முஸ்லிம்கள் அவசியம் அறிந்து கொள்வார்கள். தனது இன்சினீயரிங் படிப்பு இத்தனை நாளைக்குப் பிறகு உபயோகப்படுவதை நினைத்து மனதிற்குள் சந்தோஷ மடைந்தான்.

இதற்குள் யாரோ அழுதுகொண்டு வந்து, "சின்ன பாபு!" எனக் கூப்பிட்டார்கள்.

ரமேஷ் திரும்பிப் பார்த்தான். பைரவ ஆசார்யா தரையில் விழுந்து பெண்களைப் போல விக்கி விக்கி அழுது கொண்டிருந்தார். அவரோடு ஏழு, எட்டு வயதுப் பெண் குழந்தையும்கூட இருந்தது. அந்தப் பெண்ணும் தந்தை யுடன் சேர்ந்து அழுதது இதற்குள் வீட்டிலிருந்த அனைவரும் வந்து கூடிவிட்டார்கள். ரமேஷ் ஒன்றும் தெரியாமல் நின்றுகொண்டிருந்தான். இவர் வீட்டில்

யார் இறந்துவிட்டார்கள்? அல்லது இவருக்கு என்ன கஷ்டம் வந்துவிட்டது? இவருக்கு எப்படி ஆறுதளிப்பது என்று யோசித்துக்கொண்டிருந்தான். கோபால் சர்க்காரும் தன் வேலையை விட்டு ஓடி வந்தான். அவன் அருகில் சென்று பைரவ ஆசார்யா கையைப் பிடிக்கவும் அவர் கோபாலனைக் கட்டிக்கொண்டு இன்னும் பலமாக அழத் தொடங்கினார். கோபாலன் அவருக்கு எவ்வளவோ சமாதானம் சொல்லவே அவர் தனது துக்கத்திற்கான காரணத்தைச் சொல்லத் தயாரானார். அதைக் கேட்டு ரமேஷ் திடுக்கிட்டுவிட்டான். இவ்வளவு பெரிய தீங்கு எங்காவது நடைபெறுமா என்று அவன் கற்பனைகூடச் செய்ததில்லை. பைரவ ஆசாரியா சாட்சியத்தால் பஜுவா விடுதலையாகி வெளி வந்ததும், அவனைப் போலீசின் அன்புப் பார்வையிலிருந்து காப்பாற்றுவதற்காக ரமேஷ் அவனைச் சொந்த ஊருக்கு அனுப்பிவிட்டான். அவன் எப்படியோ விடுதலையாகிவிட்டான். ஆனால், சாட்சிக் காரன் சிக்கிக்கொண்டான். பைரவ ஆசார்யா மேல் ஆயிரத்து நூற்றி அறுபது ரூபாய் ஏழு அணு கொடுக்க வேண்டும் என்று கோர்ட்டில் போட்டு வேணி சின்ன மாமனார் டிக்ரி பண்ணி வைத்துக் கொண்டிருக்கிறாராம். அந்த விஷயம் இது வரையிலும் தெரியாதாம். இன்னும் ஏலத்திற்கு ஒரே ஒரு நாள்தானிருக்கிறதாம். ஆனால், இந்த வழக்கு ஒரு தரப்பாகவும் தீர்ப்பாகிவிடவில்லை. வழக்கம்போல சம்மன் வந்திருக்கிறது. எவனோ பைரவ ஆசார்யா என்று கையெழுத்துப் போட்டு சம்மனை வாங்கிக்கொண்டான். அதோடு நான்தான் பைரவ ஆசார்யா என்று கூறி வாய்தா காலத்தில் கொடுக்க வேண்டியதை ஒத்துக்கொண்டான். இந்த வழக்கு அடியோடு எல்லாமே பொய். இவ்விதம் ஒரு பலவான், பலமற்ற ஒருவனைத் தெருத் தெருவாகப் பிச்சை எடுக்க வழி செய்துவிட்டான். இதைக் கோர்ட்டு மூலம் பொய் படுத்துவது சாமான்யமானதல்ல. டிக்ரித் தொகையைக் கோர்ட்டில் கட்டாமல் வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. இனி மண்டையை உடைத்துக்கொண்டாலும் உண்மையை யாரும் கேட்கமாட்டார்கள். தரித்திர பைரவ ஆசார்யா இத்தனை ரூபாய்க்கு எங்கே போவார்?

எதிர் வழக்காடுவது எப்படி? அரசாங்கம், சட்டம், கச்சேரி, நீதிபதிகள் இத்தனை பேர் இருந்தும் இந்த ஏழை மௌனமாக மடிய வேண்டியதுதான். இந்தக் காரியம் வேணியும், கோவிந்த காங்கூலியும் சேர்ந்து செய்தது என்பது அனைவருக்கும் தெரியும். இதைப்பற்றிக் கிராம வாசிகள் உள்ளூற எத்தனையோ துக்கப்பட்டாலும் யாரும் பகிரங்கமாக வெளியில் வந்து வாதாடத் துணிய மாட்டார்கள். எதிரிகள் இவ்வளவு சாமர்த்தியமாகச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதைக் கண்டு ரமேஷ் வியப்படைந்தான். அவர்களுடைய கோணல் புத்தி சர்க்காரிடமிருந்து தப்ப வைக்கிறது. இந்த உயிரற்ற சமூகம் அவர்களை எவ்வித தண்டனையுமின்றிக் காப்பாற்று கிறது. ஆகையால் அவர்கள் எவ்விதத் தடையுமின்றி சமூகத்தை ஆட்டி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று அவனுக்குப் பெரியம்மாவின் பேச்சு ஞாபகத்திற்கு வந்தது. அன்று அவள் சிரித்துக்கொண்டு, "ரமேஷ், இந்த ஜாதிபேத விவாதங்களில் நெருப்பை வை! அப்பா, நீ விளக்கு ஏற்று; விளக்கு ஏற்று ; கிராமத்துச் சனங்கள் இருளில் தவிக்கிறார்கள். அவர்களைக் கண்ணைத் திறந்து பார்க்கும்படி செய். அப்பொழுது அவர்கள், கறுப்பு எது; வெள்ளை எது; நல்லது எது; கெட்டது எது? என்பதைத் தெரிந்து கொள்வார்கள். அப்பா, நீ இங்கு வந்த பிறகு இதை விட்டுப் போகக்கூடாது. நீங்களெல்லாம் கவனிக் காமல்தான் கிராம்ய லக்ஷ்மிக்கு இந்தக் கோலம் ஏற்பட் டிருக்கிறது.!" என்று கூறியிருந்தாள். ஆம், இது வாஸ் தவம்தான். நான் போய்விட்டால் இதற்குத் துளியும் வழியில்லாமல் போய்விடும் என்று நினைத்தான்.

"அடடா! இதுவா இன்றைய வங்காளக் கிராமங் களின் நிலை! இதில், ஒரு காலத்தில் உயிரும் இருந்திருக்கு மல்லவா! அப்போது இது அண்டினவர்களைக் காப் பாற்றி வாழுவதற்கு எவ்வளவோ உதவி செய்தது. ஆனால், இன்று இது உயிர் விட்டுவிட்டது. ஆனாலும், கிராம வாசிகள் இதைத் தலையில் சுமந்துகொண்டு திரிகிறார்கள். கண் திறந்தே பார்ப்பதில்லை. கஷ்டப்படுபவர்களுக்கு விமோசனம் அளிக்காத சமூகத்தை நம்பி வாழ்கிறார்கள் என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டான்.

ரமேஷ் வெகு நேரம் அப்படியே உட்கார்ந்துகொண்டிருந்துவிட்டுப் பிறகு எழுந்து பைரவ ஆசார்யா கொடுக்க வேண்டிய தொகைக்கு ஒரு செக் எழுதி கோபாலனிடம் கொடுத்து, "நீங்கள் முதலில் விஷயத்தை நன்கு தெரிந்து கொண்டு பணத்தைக் கட்டிவிடுங்கள். எப்படியும் அப்பீலுக்கு ஏற்பாடு செய்துவிட்டு வாருங்கள். இம் மாதிரி பயங்கரமான குற்றம் எப்போதுமே அவர்கள் செய்யா வண்ணம் பாடம் கற்பிக்கவேண்டும்" என்றான்.

கோபாலன் செக்கை வாங்கிக் கொண்டான். சிறிது நேரம் அவனும், பைரவ ஆசார்யாவும் ரமேஷையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ரமேஷ் பிறகு பூரா விஷயத்தையும் தெளிவாகச் சொன்னான். ரமேஷ் ஒன்றும் வேடிக்கை செய்யவில்லை என்று ஆசார்யாவுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அவர் உடனே பைத்தியம் பிடித்தவர் போல ஓடி வந்து ரமேஷ் காலைப் பிடித்துக் கொண்டு மனதார வாழ்த்தினார். ரமேஷைத் தவிர்த்து வேறு யாராவதாக இருந்தாலும் அவரிடமிருந்து விடுபட்டிருக்கவே முடியாது. இந்த விஷயம் கிராமம் முழுதும் ஒரு நொடிக்குள் பரவிவிட்டது. இனி வேணியும், கோவித்தனும் தப்ப முடியாது என்று அனைவரும் எண்ணினார்கள். சின்னபாபு, தனது விரோதியைப் பழி வாங்குவதற்குத்தான் இத்தனை ரூபாய் கொடுத்தார் என்று எல்லோரும் எண்ணினார்கள். கடவுளே பார்த்து, பைரவ ஆசார்யாவுக்காக ரமேஷை இந்தக் காரியம் செய்யத் தூண்டிவிட்டிருக்கிறார் என்று யாருமே கருதவில்லை.

ஒரு மாதம் கழிந்துவிட்டது. மலேரியாவைத் தொலைப்பதற்காக ரமேஷ் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான். அதற்கான வேலைகளில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தான். நாளைதான் பைரவ ஆசார்யா வழக்கு வாய்தா என்பதை அடியோடு மறந்திருந்தான். வேலைக்காரன் மூலம் ஆசார்யாவின் பேரனுக்கு அன்னப்பிரஸ்தானம் என்று கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்தான். ஆனால், அவனுக்கு அழைப்பே கிடையாது. பைரவ ஆசார்யா ரொம்ப தடபுடலாகச் செய்கிறார் என்று கேள்விப்பட்டான். ஊரிலுள்ள எல்லோரையும் அழைத்

திருந்தார். ஆனால், ரமேஷ் வீட்டிலுள்ள யாரையாவது அழைத்தாரா இல்லையா என்பதைச் சொல்ல முடியவில்லை. அதோடு தலைக்கு மேல் வழக்கு இருந்தும் இந்தப் பத்து பதினைந்து நாளாக ஆசார்யா சந்திக்காதது நினைவிற்கு வந்தது. இருந்தாலும்கூட பைரவ ஆசார்யா தன்னைத் தள்ளி வைத்து விடுவார் என்று அவனால் நம்ப முடிய வில்லை. ஆகையால் அவன் உடனே மேல் வேஷ்டியை எடுத்துப் போட்டுக் கொண்டு அவர் வீட்டுக்குப் போவதற்குக் கிளம்பினான். போகும் வழியில் இரண்டொரு நாய்கள் எச்சக்கலைக்குத் தகராறு செய்து கொள்வதையும். மேளச் சத்தம் வருவதையும் பார்த்தான். உள்ளே சென்று பார்த்தான். வீடு பூராவும் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஊரிலிருந்த மண் விளக்குகளெல்லாம் அங்கே எரிந்து கொண்டிருந்தது, அவைகளிலிருந்து வெளிச்சம் அதிகமில்லாவிட்டாலும் புகைககு ஒன்றும் குறைச்சல் இல்லை. வீடு முழுவதும் புகையால் சூழப்பட்டு துர்க்கந்தம் வீசிக் கொண்டிருந்தது. சாப்பாடு எல்லாம் முடிந்திருந்தது. ஜனங்களையும் அதிகமாகக் காணோம். கிராமத்திலுண்டான கிழங்கள்தான் "போகிறோம்." என்று சொல்லிக் கொண்டிருந்தன. ஹரி ஹர ராயை, தர்மதாஸ் இன்னும் கொஞ்சம் இருந்து போகும்படி வேண்டிக் கொண்டிருந்தார்.

கோவிந்த காங்கூலி ஒரு குடியானப் பையனுடன் என்னவோ ஏகாந்தமாகப் பேசிக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில்தான் ரமேஷ், ஒரு துர்க்கனவு போல அவர்கள் எதிரில் போய் நின்றான். அவனைக் கண்டதும் எல்லோ ருடைய முகங்களும் கறுத்துவிட்டது. ரமேஷுக்கும், விரோதி பக்கத்து ஆட்கள் இத்தனை பேரையும் ஒன்றாகக் காணக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. யாரும் அவனை வரவேற்று உட்காரச் சொல்ல முன் வரவில்லை. ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. பைரவ ஆசார்யாவை அங்கு காணோம். சிறிது நேரம் கழித்து அவர், "ஆமாம் கோவிந்த அண்ணா..........." என்று கூறிக்கொண்டு வெளியே வந்தவர் பூதத்தைக் கண்டது போலப் பயந்தார். அவர் உடனே வேகமாக வீட்டுக்குள் சென்றுவிட்டார்.

அவன் தனியாக அந்த வீட்டைவிட்டு வெளியில் வந்த போது அவனுக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை. இதற்குள் பின்னுலிருந்து யாரோ, "அப்பா, ரமேஷ்!" எனக் கூப்பிடுவது கேட்டது.

ரமேஷ் திரும்பிப் பார்த்தான். தீனு நடுங்கிக் கொண்டே வந்து கொண்டிருந்தார். அவர் அருகில் வந்து, "வா, அப்பா, வீட்டுக்குப் போவோம்" என்ருர்.

ரமேஷ் சிரிப்பதற்கு முயற்சித்தான். ஆனுல், அவனுல் சிரிக்க முடியவில்லை. போகிறபோது தீனு, "நீ செய்த உபகாரம் மாதிரி அவனுடைய அப்பன் ஆத்தாள் கூட அவனுக்குச் செய்யமாட்டார்கள். இது எல்லோருக்கும் தெரியும்; ஆனுல், என்ன செய்வது! வேறு வழியில்லை. குழந்தை குட்டிகளை வைத்துக் கொண்டு நாங்கள் குடும்பம் நடத்த வேண்டியிருக்கிறது. இதனுல் உனக்கு அழைப்பு அனுப்பினுல்—தெரிந்ததா அப்பா—பைரவனையும் ஒன்றும் அதிகமாகக் குற்றம் சொல்ல முடியாது. நீங்களெல்லாம் நகரத்தில் வசிப்ப வர்கள். ஜாதி சமயம் ஒன்றையும் நம்புவதில்லை. ஆகையால்—தெரிந்ததா அப்பா—அவள் கடைசிப் பெண் ணுக்கும் பன்னிரண்டு வயதாகிவிட்டது. நாளைக்கு அவளையும் வேறு கடத்த வேண்டும். அப்பா, நமது ஜாதி வழக்கங்கள் தெரியுமல்லவா? தெரிந்ததா அப்பா—" என்ருர்.

"ஆம், எல்லாம் தெரிந்தது."

ரமேஷ் வீட்டு வாசல் கதவருகில் நின்றுகொண்டு, "ஆமாம் அப்பா, தெரியாமல் என்ன? ஒன்றும் குழந்தை அல்லவே. அந்தப் பிராமணனைத்தான் எப்படிக் குற்றம் சொல்வது? நாங்கள் வயது காலத்தில் பரலோகத்தைப் பற்றி........"

ஆனுல், ரமேஷ் அவர் கூறி முடிப்பதற்குள், "ஆமாம், ரொம்ப சரி" என்று கூறிவிட்டு வீட்டிற்குள் சென்று விட்டான்.

கிராமத்தார்கள் தன்னை ஜாதியிலிருந்து தள்ளி வைத் திருக்கிருர்கள் என்பதை இப்போது ரமேஷ் அறிந்து

கொண்டான். கோபத்தால் அவன் கண்கள் சிவந்தன. வேணியையும், கோவிந்தனையும் இன்று ரொம்ப மரியாதை யுடன் பைரவ ஆசார்யா அழைத்திருந்ததுதான் அவனுக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. கிராமத்தார்களுக்கு சகல விஷயங்களும் தெரிந்திருந்தும்கூட பைரவனுடைய நடத்தையை மன்னித்ததோடல்லாமல் அவனது செய்கைக்காகச் சந்தோஷப்படுகிறார்களே என்பதுதான் அளவு கடந்த துக்கமாயிருந்தது.

ரமேஷ் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, "ஹே, ஆண்டவா! இந்த நன்றி கெட்ட சாதியின் பாபம் எப்படிப் போகும்? ஆண்டவா, இவ்வளவு பெரிய அவமானத்தை நீ கூடவா மன்னித்து விடுவாய்?" என்று வாய் விட்டுச் சொன்னான்.

## பதினான்காம் அத்தியாயம்

ரமேஷுக்கு இந்தச் சந்தேகம் துளிகூடக் கிடையாது ஆனால், அடுத்த நாள் சாயங்காலம் கோபால் சர்க்கார திரும்பி வந்து, "பைரவ ஆசார்யா நம்ம தலையில் மிளகு அறைத்து விட்டார். அவர் ஆஜராகவில்லை. வழக்கு ஒரு பக்கமாகத் தீர்ப்பாகி, நாம் கட்டிய தொகையை வேணி முதலியவர்கள் பெற்றுக்கொண்டார்கள்" என்று சொன்னான்.

பைரவனின் இந்த நன்றி கெட்டதனம் ரமேஷை அளவு கடந்த அவமானத்திற்குள்ளாக்கியது. அவன் அப்படியே எழுந்து நின்றுகொண்டு வெளியில் போகப் புறப்பட்டான். எஜமானனுடைய சிகப்பேறிய கண் களைப் பார்த்து கோபால் பயந்துவிட்டான். அவன் மெதுவாக, "நீங்கள் எங்காவது போகிறீர்களா?" என்றான்.

"ஆம்" என்று கூறிவிட்டு ரமேஷ் வேகமாகச் சென்றுவிட்டான். பைரவன் வீட்டு வெளிப் பக்கத்தில் யாரையும் காணோம். உள்ளே சென்றான். அப்போது

ஆசார்யாவின் மனைவி தீபத்தைக் கையிலெடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள். திடீரென ரமேஷை எதிரில் காணவே நடுங்கிவிட்டாள். எப்போதும் வராதவர் இன்று எதற்காக வந்திருக்கிறார் என்று யோசிக்கவே அவள் பயம் பன்மடங்காகியது. ரமேஷ் அவளிடம், "ஆச்சர்யா எங்கே?" என்றான்.

அவள் கூறியது ஒன்றும் சரியாகப் புரியவில்லை. இருந்தாலும் அவர் வீட்டில் இல்லை என்பது தெரிந்தது. ரமேஷ் மேல் வேஷ்டிகூட இல்லாது போயிருந்தான். மாலை இருளில் அவன் முகம்கூட நன்கு தெரியவில்லை. இதற்குள், ஆசார்யாவின் பெரிய பெண் லக்ஷ்மி ஒரு குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு வெளியே வந்தாள். அவள் ரமேஷ் நிற்பதைக்கண்டு, "அம்மா, இது யார்?" என்று கேட்டாள்.

ஆனால், அவளுடைய தாயார் ஒன்றும் பேசவில்லை. ரமேஷும் ஒன்றும் பேசவில்லை. அவள் பயந்து போய், "அப்பா, யாரோ இங்கு வந்து பேசாமல் நின்று கொண்டிருக்கிறார்கள்" என்று சத்தமிட்டாள்.

"யார் அது?" என்று கூறிக்கொண்டு அவளுடைய தகப்பனார் வெளியே வந்தார். அவர் ரமேஷைக் கண்டதும் அசையாது கற்சிலை போலானார். அந்த மங்கிய வெளிச்சத்தில்கூட இந்த வாட்ட சாட்டமான மனிதர் யாரென்பதைக் கண்டு கொள்ள நேரம் பிடிக்கவில்லை. ரமேஷ் கோபமாக, "இங்கே வாருங்கள்" என்று கூறி அவரது கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "இந்த வேலை செய்யலாமா?" என்றான்.

ஷபரவ ஆசார்யா அழுதார். "ஐயோ, கொன்று விட்டானே! லக்ஷ்மி, ஓடிப்போய் வேணிக்குத் தகவல் கொடு!" என்றார்.

அவரோடு கூடவே வீட்டிலிருந்த அத்தனை பேரும் கூக்குரலிட்டார்கள். இதற்குள் தெருவிலுள்ள அனைவரும் வந்து கூடிவிட்டார்கள். ரமேஷ் பலமாக அவனை ஒரு தாக்குத் தாக்கி, "பேசாதிரு! முதலில் இதைச் சொல்லு, இப்படி ஏன் செய்தாய்?" என்றான்.

பைரவன் அவனுடைய கேள்விக்குப் பதிலளிக்க முயற்சிக்கவில்லை. அவன் தன்னை ரமேஷ் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு தொண்டை கிழியக் கத்தினான். பார்க்கப் பார்க்க ஊர் முழுதும் வந்து கூடிவிட்டது. வேடிக்கை பார்ப்பதற்காக பலர் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள். ஆனால், கோபமடைந்திருந்த ரமேஷ் இவைகளை எல்லாம் கவனிக்கவில்லை. நூற்றுக் கணக்கானவர்களின் பரிகாசப் பார்வைக்கு முன் அவன் பைரவனை பிடித்த பிடி விடாமல் அதட்டிக்கொண்டிருந்தான். ரமேஷின் தேக பலத்தைப் பற்றி ஏற்கனவே கதைகள் பரவியிருந்தன. ஆகையால் யாரும் பைரவனை விடுவிக்க முன் வரவில்லை. வேணி தூர இருந்தே எட்டிப் பார்த்துவிட்டு நழுவ முயன்றார். அதைப் பார்த்த பைரவன், “ வேணி பாபு !......” என்றார்.

ஆனால், வேணி பாபு இதை துளியும் கவனிக்கவில்லை. ஒரு கணத்தில் மாயமாய் மறைந்துவிட்டார். திடீரென அந்தக் கூட்டத்திலே சிறிது வழி உண்டாகியது. அதற்குப் பிறகு ரமா அங்கு வந்து ரமேஷ் கையைப் பிடித்துக் கொண்டு, “ போதும் விடுங்கள் ” என்றாள்.

ரமேஷ் அவளை எரித்து விடுபவன் போலப் பார்த்து, “ ஏன் ?” என்றான்.

ரமா பல்லைக் கடித்துக் கொண்டு, “ இத்தனை பேருக்கு எதிரில் உங்களுக்கு வெட்கமாக இல்லையா ? எனக்கு செத்து விடலாம் போலிருக்கிறது !” என்றாள்.

ரமேஷ் அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்துவிட்டு கையை விட்டுவிட்டான். உடனே ரமா, “ சீ, வீட்டிற்குப் போங்கள் ” என்றாள்.

ரமேஷ் ஒன்றும் பேசாமல் வெளியே சென்று விட்டான். இது ஏதோ ஒரு மாயா ஜாலம் போலத் தெரிந்தது. ஆனால், அவன் போன பிறகு எல்லோரும் ரமாவைப் பார்த்து அதிசயப்பட்டார்கள். தங்களுக்குள் விசித்திரமாகச் சிரித்துக்கொண்டார்கள். இவ்வளவு பிரமாதமாக ஆரம்பமாகி இப்படி முடிந்தது யாருக்கும் பிடிக்கவில்லை.

ஜனங்கள் சென்று விட்டார்கள். கோவிந்த காங்கூலி ரொம்ப கம்பீரமாக முன் வந்து, "அவன் வீட்டேறி குற்றுயிராக அடித்துவிட்டுப் போய் விட்டான். முதலில் இதற்கு வழி சொல்லுங்கள் !" என்ருர்.

பைரவன் இரு கால்களுக்கிடையேயும் தலையை நுழைத்து உட்கார்ந்து நடுங்கிக் கொண்டிருந்தார். அவர் பரிதாபமாக வேணியின் முகத்தைப் பார்த்தார். ரமாவும் அங்குதானிருந்தாள். அவள் வேணியின் மனதிலுள்ளதை அறிந்து கொண்டு, "அண்ணு, நம்ம பக்கத்திலும் குற்ற மில்லாமலில்லை. இப்போது அப்படி என்னதான் நடந்து விட்டது ?" என்ருள்.

வேணி ஆச்சரியத்துடன், "ரமா, நீ பேசுவது, ஆச்சரியமாக இருக்கிறது !" என்ருர்.

பைரவனுடைய பெரிய பெண் ஒரு தூணருகில் நின்று அழுது கொண்டிருந்தாள். அவள் காயம்பட்ட நாக சர்ப்பம் போல், "ரமா அக்கா. நீ அவனுக்குத்தான் பரிந்து பேசுவாய். சரி நீயே சொல்லு ; உனது வீடு புகுந்து யாராவது உன் அப்பாவை அடித்திருந்தால் நீ என்ன செய்வாய் ?" என்ருள்.

அவள் பேச்சைக் கேட்டு ரமா முதலில் திடுக்கிட்டாள். அவளுடைய தகப்பனை விடுவித்து விட்டதற்கு நன்றி காட்டாது விட்டாலாவது போகிறது. ஆனுல், அவள் பேச்சில் மறைந்திருந்த கருத்து அவளுக்குக் கோப மூட்டியது. இருந்தாலும் அவள் சாந்தமாக, "எனது அப்பாவுக்கும் உனது அப்பாவுக்கும் ரொம்ப வித்தியாச மிருக்கிறது லஷ்மி. ஆகையால் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்காதே. ஆனுல், நான் யாருக்காகவும் பரிந்து பேச வில்லை. நான் நல்லதுக்குத்தான் சொன்னேன்" என்ருள்.

லஷ்மி கிராமத்துப் பெண். சண்டையிடுவதில் யாருக்கும் இளைத்தவளல்ல. உடனே அவள், "நல்லா யிருக்கிறது ! அவனுக்குப் பரிந்து பேசுவதற்கு உனக்கு வெட்கமாயில்லை ? பெரிய வீட்டுப் பெண் ஆனதால், பயத்தால் யாரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள் ! ஆனுல், யாருக்குத்தான் தெரியாது ? நீயும் முகத்தை வெளியில்

காட்டிக் கொண்டிருக்கிருய்! வேறு யாராவதாயிருந்தால் கழுத்தில் கயிறு போட்டுக் கொண்டிருப்பார்கள்" என்ருள்.

வேணி, லஷ்மியை அதட்டி, "பேசாமலிருக்க மாட்டாய்? அவைகளை எல்லாம் எதற்காகப் பேச வேண்டும்?" என்ருன்.

"ஏன் பேசக்கூடாது? அப்பாவை இவ்வளவு கஷ்டப்படுத்தியவனுக்குப் பரிந்து பேசுபவளா? இன்று அப்பா செத்துப் போயிருந்தால்?"

முதலிலேயே ரமா திகைப்படைந்திருந்தாள். அதோடு வேணியின் இந்தப் பேச்சைக் கேட்டு அவள் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. அவள் லக்ஷ்மியைப் பார்த்து, "லக்ஷ்மி, அப்பேர்ப்பட்டவர் கையில் இறப்பதற்குப் பாக்கியம் செய்திருக்க வேண்டும். இன்று உனது அப்பா இறந்திருந்தால் நிச்சயம் சொர்க்கம் போயிருப்பார்?" என்ருள்.

"அதுதான் அக்கா, அவனுக்காகச் சாகிருயா!"

ரமா அவளுக்கு ஒன்றும் பதில் அளிக்கவில்லை. அவள் வேணியைப் பார்த்து, "அண்ணு, இதென்ன வார்த்தை? நீ சொல்லமாட்டாயா?" என்ருள். இதைக் கூறிய பிறகு அவள் அவனையே பார்த்தாள். அவளுடைய பார்வை இருளைப் பிளந்துகொண்டு வேணியின் மனதைப் பார்க்க முயன்றது. வேணி கவலையுடன், "அம்மா, எனக்கென்ன தெரியும்! ஜனங்கள் இம்மாதிரி எத்தனையோ பேசுகிருர்கள். ஆனுல், அதை எல்லாம் கவனித்துக் கொண்டிருக்க முடியுமா?" என்ருன்.

"ஜனங்கள் என்ன சொல்லுகிருர்கள்?"

வேணி ரொம்ப அலட்சியமாக, "சொல்வதைச் சொல்லட்டுமே. அவர்கள் சொல்வது தேகத்தில் காய்த்தா தொங்குகிறது?" என்ருன்.

அவனுடைய கபட வார்த்தைகளை ரமா அறிந்து கொண்டாள். அவள் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "உன்னுடைய தேகத்தில்தான் ஒன்றும்

காய்த்துத் தொங்காது. ஆனால், எல்லோர் தேகமும் இப்படி இல்லை. ஜனங்களிடம் இவைகளைக் கூறியது யார்? நீதானே?" என்றாள்.

"நானா?"

ரமா தனது கோபத்தை அடக்கிக் கொண்டிருந்தாள். இப்போதுகூட அவள் சாந்தமாக, "உன்னைத் தவிர வேறு யாருமில்லை. உலகத்திலே எந்தப் பாப காரியமும் நீ இன்றி நடக்காது. கொள்ளை, மோசடி, வீட்டில் நெருப்பு வைப்பது எல்லாம் செய்துவிட்டாய். பின் இதைத்தான் எதற்கு பாக்கி வைக்கிறாய்?" என்றாள்.

வேணி திடுக்கிட்டு ஒன்றும் பேசவில்லை. ரமா, "பெண்களுக்கு இதைவிடப் பெரிய தீங்கு வேறு கிடையாது என்பதை அறிந்து கொள்ளும் சக்தி உன்னிடம் இல்லை. நான் உன்னைக் கேட்கிறேன். இந்த அபவாதத்தை பரப்பியதால் நீ என்ன லாபம் அடைந்தாய்?" என்றாள்.

வேணி பயத்துடன், "எனக்கு என்ன லாபம் வந்து விடும்! நீ அதிகாலையில் ரமேஷ் வீட்டிலிருந்து வெளி வருவதை ஜனங்கள் பார்த்திருக்கும்போது நான் என்ன செய்ய முடியும்?" என்றான்.

ரமா இதைக் கவனிக்காமல், "நான் இத்தனை பேருக்கு முன்னால் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனால், அண்ணா, உன் மனக்கருத்து எனக்குத் தெரியாதென்று நினைக்காதே. நான் இறப்பதற்குள் உன்னையும் லேசில் விடமாட்டேன். அதையும் தெரிந்துகொள்" என்றாள்.

பைரவன் மனைவி இது வரையிலும் மௌனமாக எங்கோ நின்று கொண்டிருந்தாள். அவள் முன் வந்து ரமா கையைப் பிடித்துக்கொண்டு, "அடி அம்மா, உனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? உன்னைத் தெரியாதவர்கள் இங்கு யாரிருக்கிறார்கள்?" என்றாள்.

அதன் பிறகு தனது பெண்ணைப் பார்த்து, "லக்ஷ்மி, நீயும் பெண். ஒரு பெண்ணின் மேல் இந்தப் பழியைச் சுமத்தாதே. தர்மத்திற்கு அடுக்காது. இன்று அவள்

செய்த உபகாரத்தை மறந்துவிடலாமா ?'' என்று கூறி விட்டு ரமாவை அறைக்குள் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டாள்.

இந்தச் சம்பவத்தின் நியாயாநியாயம் எப்படி இருந்தாலும் அன்று தான் நடந்து கொண்டதை எண்ணி வெட்கப்பட்டுக் கொண்டு ரமேஷ் இரண்டு நாள் வரையி லும் வீட்டை விட்டு வெளிக் கிளம்பவில்லை. அத்தனை பேருக்கு எதிரில் ரமா வந்து தன் மானத்தைக் காப்பாற்றி விட்டதை எண்ணுந்தோறும் அவன் மனது சந்தோஷத் தால் நிறைந்தது. ஆகையால் அந்த வருத்தத்தில்கூட இன்பம் கலந்திருந்தது. இந்த இன்ப துன்ப நினைவுகளி லேயே இந்த வீட்டில் இன்னும் சில காலம் வாசம் செய்யலாமென முடிவு செய்துகொண்டான். ஆனால், இவன் பொருட்டு வேறு ஒருவர் நிரந்தரமான அவமானத் துக்கு ஆளாகி இருக்கிறார் என்பது இவனுக்குத் தெரியாது.

அவன் சும்மா வீட்டிலேயே உட்கார்ந்து கொண் டிருக்க முடியவில்லை. அன்று சாயங்காலம் பீர்பூர் பஞ்சாயத்து சபைக்கு போகவேண்டியிருந்தது. ஆகையால் அன்று சாயங்காலம் பீர்பூரிலிருந்து அழைத்துப் போக வந்திருந்தார்கள். ரமேஷ்தான் சில நாளைக்கு முன் இந்த யோசனை கூறியிருந்தான். இன்று எல்லோரும் கூடி சின்ன பாபுவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகையால் அவன் புறப்பட்டான்.

கிராமங்களில் ஏழைகள் மலிந்து இருப்பதை அறிந்தான். அநேகர் ஒரு துண்டு நிலம்கூட இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் பிறருடைய பூமியைக் குத்த கைக்கு உழுதோ அல்லது கூலி வேலை செய்தோதான் வயிறு வளர்க்கிறார்கள். நோயாலோ அல்லது வேறு ஏதாவதாலோ ஒரு நாளைக்கு வேலைக்குப் போகாவிட்டா லும் குடும்பமே பட்டினி கிடக்க வேண்டியதுதான். ஆனால், இவர்கள் ஒருகாலத்தில் நல்லநிலையில் இருந்தார்கள் என்பதும், கடனால் இந்நிலைக்கு ஆளானார்கள் என்பதும் விசாரித்து அறிந்தான். கடன் விவகாரமும் ஒழுங்காய் இல்லை. கடன் கொடுத்தவர்கள் வட்டி வாங்குவதில்லை.

சாகுபடியில் பங்கு கேட்கிறார்கள். வட்டிக்கும் இதற்கும் கணக்குப் பார்த்தால் இது ஏறக்குறைய அசலவ்வளவு இருக்கும்.

ஒரு தரம் குடியானவன் குடும்பச் செலவிற்காகவோ அல்லது விவசாயத்திற்காகவோ கடன் வாங்கிவிட்டால் பிறகு அவனால் தலை தூக்கவே முடியாது. பிரதி வருஷமும் அவன் முதலாளி வாசலில் போய் கையேந்தி நிற்கவேண்டியதாகிறது. இந்த விஷயத்தில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் அனைவருக்கும் ஒரே நிலைமைதான். பெரும்பாலும் ஹிந்துக்கள்தான் அதிகம். ரமேஷ் நகரத்திலிருந்து கொண்டு புத்தகத்தில் படித்துவிட்டு இங்கு வந்து பார்த்து ஆச்சரியமடைந்தான். அவன் ஏராளமான பணம் பாங்கியில் போட்டிருந்தான். அந்தப் பணத்தோடு இன்னும் சிறிது போட்டு இவர்கள் கடைத்தேற உதவி செய்தான். ஆனால், இரண்டொரு இடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்துவிட்டு, 'இந்தத் தரித்திரர்கள் அனாதைகளாயிருந்தாலும் அல்ப புத்தி உடையவர்கள்' என்று தீர்மானித்தான். பொய் பேசக் கூசுவதில்லை, கடன் வாங்கியதைத் திருப்பிக் கொடுக்கும் எண்ணமே இருப்பதில்லை. அநேக இடங்களில் சாதுக்களே கிடையாது. ஏமாற்று வித்தையை நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். பக்கத்து வீட்டுப் பெண்களின் அழகுகளை ஆராயவும் தெரிந்திருந்தார்கள். ஆண்களுக்குக் கலியாணமாவது கடினமாக இருந்தது. குடும்பம் தவறாமல் விதவைகள் நிறைந்திருந்தார்கள். அவர்கள் ஒழுக்கமும் கெட்டிருந்தது. அவர்களுடைய சமூகக் கட்டுத்திட்டங்களோ சொல்லி முடியாது. ஆனால் போலீஸ்காரனுக்கும் திருடனுக்கும் உள்ள சம்பந்தம்தான் இவர்களுக்கும் சமூகத்திற்கும உள்ள சம்பந்தமாகும். இருந்தாலும் அவர்களது நடத்தையைக் கண்டு கோபமடைவதும் கூடாது. துஷ்டப் பிள்ளையிடம் தந்தை எவ்வளவு கவலையடைவாரோ அவ்வளவு கவலை அடைந்தான் ரமேஷ். ஆகையால் இன்று சாயங்காலம் பீர்பூர் புதிய பள்ளிக்கூடத்தில் ரமேஷ் பஞ்சாயத்து சபை ஏற்படுத்த விரும்பினான். சிறிது நேரத்திற்குள் மாலை இருளைக்

கிழித்துக் கொண்டு சந்திரன் உதயமானுன். ஜன்னலுக்கு வெளியே தரையில் கிரணங்கள் மாயா ஜாலம் புரிந்தன. ரமேஷ் அதையே பார்த்துக்கொண்டு புறப்படாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான். அப்போது ரமா கதவருகில் வந்து நின்ருள். அங்கே வெளிச்சமில்லாததால் வீட்டு வேலைக்காரி என நினைத்துக்கொண்டு, "என்ன வேண்டும் ?" என்ருன்.

"நீங்கள் வெளியில் போகப் போகிறீர்களா ?"

ரமேஷ் திடுக்கிட்டான். "யார் ரமாவா ? இந்நேரத்தில் எங்கு வந்தாய் ?"

அவள் என்ன காரணத்தால் மாலை வேளையில் வந்தாள் என்பதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனுல், என்ன காரியத்திற்கு வந்தாளோ அதைப்பற்றி எவ்வளவோ சொல்ல வேண்டியிருந்தது. எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று அவளுக்குப் புரியவில்லை. அவள் பேசாது நின்று கொண்டிருந்தாள். ரமேஷும் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "உங்களுக்கு உடம்பு தேவலாமா ?" என்ருள்.

ரமேஷ் : சரியில்லை. தினமும் இரவில் ஜுரம் வந்து விடுகிறது.

ரமா : அப்படியானுல் வெளியில் சில நாளைக்குப் போய்வருவது நல்லதல்லவா ?

ரமேஷ் : நல்லதுதான். ஆனுல் எப்படிப் போவது ?

இதைக் கேட்டு ரமாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "அநேக வேலை இருக்கிறதென்று நீங்கள் சொல்வீர்கள். ஆனுல் நமது தேகத்தைவிட என்ன முக்கியமான வேலை இருக்கிறது ?" என்ருள்.

"எனது தேகம் ரொம்ப அற்பமானது என்று நான் சொல்லவில்லையே ! ஆனுல், மனிதனுக்குத் தேகத்தை விடக்கூட முக்கியமான வேலை இருக்கிறது. ஆனுல் உனக்கு அது தெரியாது ரமா."

"எனக்குத் தெரிய வேண்டியதில்லை. ஆனுல், நீங்கள் எங்காவது போய்த்தான் ஆக வேண்டும். நீங்கள் உங்கள்

குமாஸ்தாவிடம் சொல்லிப் போங்கள். நான் கவனித்துக் கொள்கிறேன்."

"நீ என் காரியங்களைக் கவனித்துக் கொள்வாயா? ஆனால்........."

"ஆனால் என்ன?"

"நான் உன்னை நம்ப முடியுமென்று நீ நினைக்கிறாயா?"

"ஜனங்கள் நம்பமாட்டார்கள். ஆனால், நீங்கள் நம்பி விடுவீர்கள்."

அவளுடைய உறுதியான பேச்சைக் கேட்டு ரமேஷ் ஆச்சரியமடைந்தான். "சரி, யோசிக்கிறேன்."

"இல்லை. இது யோசிப்பதற்கான சமயம் அல்ல. இன்றே நீங்கள் வேறு எங்காவது போகவேண்டும். போகா விட்டால்—"

இதைச் சொல்லச் சொல்ல அவன் கலங்கிப் போயிருக்கிறான் என்பதை ரமா அறிந்தாள். ஏனென்றால், இவ்விதம் திடீரென இடம் மாற்றாவிட்டால் என்ன கெடுதல் ஏற்படும் என்பதை அனுமானிப்பதில் ஒன்றும் கஷ்டமில்லை. ரமேஷ் இதை நன்கு அறிந்தான். உடனே அவன், "சரி, நான் போவதால் உனக்கு என்ன லாபம்? என்னைக் கெடுப்பதற்கு நீயும் முயற்சித்தவள்தான். இன்று ஒரு சங்கடத்தில் மாட்ட வந்திருக்கிறாயாக்கும். அவைகளை எல்லாம் நீயும் மறந்திருக்க முடியாதே. நான் போய் விடுவதால் உனக்கு என்ன நன்மை உண்டாகும் என்பதை நன்றாகச் சொல்லிவிடு. நான் போய் விடுகிறேன்."

இதைக் கூறிவிட்டு ரமா என்ன சொல்வாளோ என்று அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால், அவள் ஒன்றும் பேசவில்லை. இவனது பேச்சுக்களால் அவள் எவ்வளவு வருத்தமடைந்தாள் என்பதும் தெரியவில்லை. கொஞ்ச நேரம் வரையிலும் பேசாமலிருந்து தன்னைச் சமாளித்துக்கொண்டு ரமா, "சரி, நன்றாகச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் போவதால்

எனக்கு ஒன்றும் லாபமில்லை. ஆனால், போகாவிட்டால் அபாயமிருக்கிறது. நான் சாட்சி கூற நேரிடும்" என்றாள்.

"அதுவா விஷயம்? சாட்சி கூறுவிட்டால்?"

"கூறுவிட்டாலா? நாளைக்கு வரப்போகும் மகா மாயா பூஜைக்கு யாரும் வரமாட்டார்கள். யதீந்திர னுக்குப் பூணூல் போடும்போதும் யாரும் சாப்பிட மாட்டார்கள்."

இதைக் கூறும்போதே அவள் நடுங்கினாள்.

"அதற்கப்புறம்?"

"அதற்கப்புறமா? வேண்டாம், நீ போய் விடு. ரமேஷ் அண்ணா, என்னை நீ பலவழிகளிலும் துன்புறுத் தாதே. நீ போய் விடு; இந்த ஊரை விட்டுப் போய்விடு.'

இருவரும் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தார்கள். இதற்கு முன் எங்கு ரமாவைப் பார்த்தாலும் ரமேஷின் ரத்தம் வேகமாக ஓடத் தொடங்கும். அவன் மனதை எவ்வளவோ சிரமப்பட்டு வசப்படுத்துவான். இதனால் அவன் தன்னையே நொந்து கொள்வான். ஆனால், எவ்விதமும் மனதை இவன் வசப்படுத்த முடிந்ததில்லை. இன்று அவளை இந்நேரத்தில் தனியாக இங்கு அடைந்த தால் அவன் இதயம் பல விதக் கஷ்டங்களை அடைந்தது. ஆனால், இன்று ரமாவின் கடைசி வார்த்தையால் இதயம் சாந்தமடைந்தது. இன்று அவளது பீதி நிறைந்த வேண்டுகோளால் அவனது கண்ணை மறைத்திருந்த திரை விலகியது. அவன் உடனே, "சரி, அப்படியே ஆகட்டும். இன்று நேரமில்லை. என்னிடமிருந்து விலகிக் கொள்வ தால் நீ அடைவதைவிட, இன்றைய இரவு நான் அடைந்த பாக்கியம்தான் மிகப் பெரியது நீ உனது வேலைக்காரி யைக் கூப்பிடு. நான் இப்பொழுது வெளியில் போக வேண்டும்" என்றான்.

ரமா மெதுவாக, "இன்று எவ்விதமும் போக முடியாதா?" என்றாள்.

"முடியாது. உனது வேலைக்காரி எங்கே?"

"என்னோடு யாரும் வரவில்லை."

ரமேஷ் திகைப்படைந்தான். “ இது என்ன ? உனக்கு எப்படித் தனியாக இங்கு வரத் துணிவு உண்டா யிற்று ? உன்னோடு வேலைக்காரியைக்கூட அழைத்து வரவில்லையா ?”

“ அதனால் என்ன வந்துவிடுகிறது ? வருவதை, உன்னால் தடுக்கா முடியாது.”

“ நல்லது செய்ய முடியாதுதான். ஆனால், பொய் அபவாதத்திலிருந்து தப்புவிக்கலாமல்லவா ? ராணி, இரவு ரொம்ப நேரமாகிவிட்டதே.”

இதுதான் ரொம்ப நாளாக மறைந்திருந்த பெயர் திடீரென என்னவோ சொல்ல வந்தவள், பிறகு வாயை மூடிக் கொண்டாள். அதன் பிறகு அவள், “ரமேஷ் அண்ணா, அதனால் ஒன்றும் விளைந்துவிடாது. நிலா இரவுதானே ? நான் கொண்டாட்டமாகப் போய் விடுவேன் ” என்று மட்டும் சொன்னாள்.

பிறகு அவள் அங்கிருந்து மெதுவாக வெளியே சென்றுவிட்டாள்.

## பதினைந்தாம் அத்தியாயம்

ரமா வருஷா வருஷம் துர்கா பூஜையை வெகு விமரிசையாகக் கொண்டாடுவாள். சப்தமி அன்று கிராமத்திலுள்ளவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் பெரிய விருந்து வைப்பாள். அன்று பிரசாதம் பெறுவதற் காக ஜனங்கள் ஏராளமாகக் கூடுவார்கள். ஹிந்துக்கள் மட்டும் அல்ல ; பீர்பூர் முஸ்லிம்கள் அனைவரும் வரு வார்கள். இந்த வருஷம் அவள் தேக அசௌக்கியமாக இருந்தும்கூட எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தாள். கோவில் வீட்டில் கொலு வைக்கப்பட்டிருந்தது. ஆனால், பூஜை முடிந்ததும் பிரசாதங்கள் இன்னும் பாக்கி இருந்தது. சப்தமி சந்திரனும் ஆனந்தமாக வெளிக் கிளம்பினான். ஆனால், முகர்ஜி வீட்டில், ஏதோ இரண்

டொரு பெரிய மனிதர்களைத் தவிர எல்லா இடங்களும் காலியாகத்தானிருந்தது. உள்ளே சாதம் மலைபோலக் குவிந்து கிடந்தது. ஆனல் இதுவரையிலும் யாரும் அம்பிகையின் பிரசாதம் பெற்றுப் போக வரவில்லை. "அடே, இந்தப் பாமரர்களா சாப்பாட்டை இவ்விதம் அலட்சியம் செய்வார்கள். இவர்களுக்கு இவ்வளவு கொழுப்பு ஏறிவிட்டாதா!" — வேணி பாபு கையில் ஹுக்காவைப் பிடித்துக் கொண்டு உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருந்தார். "பயல்களுக்கு நன்ருகப் பாடம் போதிக்கிறேன். அப்படிப் பண்ணி விடுவேன்; இப்படிப் பண்ணி விடுவேன்" என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். "எந்தப் பயல் தூண்டுதலினல் இவர்கள் நின்றுகொண்டார்கள். ஹிந்து முஸ்லிம்கள் எல்லோரும் ஒரே பேச்சாக இருக்கிருர்களே" என்று கோவிந்தன், தர்மதாஸ், ஹல்தார் முதலியவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். உள்ளே சின்னம்மாவும் ஏதோ பிதற்றிக் கொண்டுதானிருந்தாள். இவ்வளவு பெரிய கூச்சலில் ஒரே ஒருவர் மட்டும்தான் வாய் திறக்கவில்லை. அது வேறு யாருமல்ல, ரமாதான். அவள் யாரையும் குறை கூறவில்லை. யார் பேரிலும் குற்றம் சுமத்தவில்லை. இன்னும் அவள் வாயிலிருந்து எவ்விதக் குற்றச் சாட்டும் வெளிக் கிளம்பவில்லை. இவள் என்ன பழைய ரமாதான? அவள் தேக செளக்கியம் இல்லாமலிருக்கிருள் என்பதில் சந்தேகமில்லை. ஆனல், அதை அவள் ஒத்துக்கொள்வதில்லை. சிரித்துக்கொண்டே மறுத்துவிடுகிருள். நோய் அவள் அழகைக் கெடுத்து விட்டுப் போனல் போகிறது. ஆனல், அவளிடம் அந்தக் கர்வத்தைக் காணுமே; அந்தக் கோபம், அந்தப் பிடிவாதம் ஒன்றையுமே காணுமே! அவளுடைய கண்களில் வேதனையும், கருணையும் நிறைந்திருந்தது. இந்த இரண்டு பாதுகாப்புக் கடியில் உலகத்தையே அழிக்கக்கூடிய மகா சமுத்திரம் அடங்கிக் கிடக்கிறது என்பதைச் சிறிது நன்கு கவனித்தால்கூட கண்டு கொள்ளலாம். ரமா கோவில் வீட்டுக்குள் வந்து தேவிக்கு எதிரில் நின்றுகொண்டாள். அவள் அங்கு நிற்பதைக் கண்டு ஜனங்கள் கண்டபடி திட்ட ஆரம்பித்தார்கள்.

அதைக் கேட்டு ரமா சிரித்தாள். தன்னைப் பறிக்க வரும் மலர் சிரிப்பதைப்போலிருந்தது அவள் சிரித்தது. அவள் கொஞ்சம் கூடக் கோபமடையவில்லை. அவளுடைய சிரிப்புக்கு என்ன அர்த்தம் என்பதுதான் யாருக்குத் தெரியும் ?

வேணி கோபத்துடன், " முடியாது. சும்மா சிரித்து விட்டுப் போய்விட முடியாது. அது ரொம்பக் கெட்டது. இதற்கு யார் காரணம் என்பதைத் தெரிந்து அவனை நசுக்கி விட வேண்டும் " என்றான்.

ரமா மனதிற்குள்ளாகவே நடுங்கினாள். பிறகு வேணி, " ஆனைப்பட்ட அந்தப் பயல் ரமேஷையே ஜெயிலில் தள்ளிவிட்டேன். சத்தம் போடும் இந்த நாய்களை உதைப்பதற்கு எங்நேரமாகும் ?" என்றான்.

ரமா ஒன்றும் பேசவில்லை. அவள் வந்த வேலையை முடித்துக்கொண்டு போய்விட்டாள்.

இன்றோடு ஒன்றரை மாதமாகிவிட்டது ரமேஷ், பைரவ ஆசார்யாவை வீடு புகுந்து கத்தியால் குத்த முயன்றதாகக் குற்றம்சாட்டப்பட்டு இப்போது தண்டனை அனுபவித்து வருகிறான். வழக்கில் வாதி ஒன்றும் சிரமம் அடையவில்லை. புதிய மாஜிஸ்ட்ரேட்டுக்கு எப்படியோ இவன் இந்தக் குற்றம் செய்யக் கூடியவன்தான் என்று மனதில் பட்டுவிட்டது. இந்த விஷயத்தில் அவருக்குப் போதிய சாட்சியங்கள் இருந்தன. போலீஸ் ஸ்டேஷனில் அநேக ரிப்போர்ட்டுகள் இருந்தன. அதில், " ரமேஷ், இம்மாதிரி பல குற்றங்கள் செய்திருக்கிறான். இன்னும் செய்வான் என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது " என்று குறிக்கப்பட்டிருந்தது. மாஜிஸ்ட்ரேட் தமது தீர்ப்பில், " போலீஸ் கண்காணிப்பு இவன் பேரில் அவசியம் இருக்க வேண்டும் " என்றும் குறிப்பிட்டிருந்தார். அதிக சாக்ஷிகள் ஆசார்யாருக்கு வேண்டியிருக்கவில்லை. ஆனால், ரமாவும் சாக்ஷி சொன்னாள். அவள் கூறியதாவது, " பைரவ ஆசார்யா வீட்டுக்குள் புகுந்து அடிக்க வந்தான். இதுதான் எனக்குத் தெரியும். கையில் கத்தி இருந்ததும் இல்லாததும் எனக்குத் தெரியாது."

ஆனல், இதுவா உண்மை? ஜில்லா கோர்ட்டில் ரமா பிரமாணிக்கம் செய்துவிட்டு இந்த உண்மையைக் கூறி வந்தாள். ஆனல், பிரமாணிக்கம் வாங்கும் வழக்க மில்லாத கோர்ட்டில் இவள் நாளை என்ன பதில் சொல்லு வாள்? ரமேஷ் கத்தியை பிரயோகிக்கவில்லை. அவன் கையில் ஒரு சிறு இரும்புச் சாமான்கூட வைத்திருக்க வில்லை என்பது இவளை விட வேறு யாருக்கு நன்கு தெரி யும்? அந்தப் பெரிய கோர்ட்டில் இவள் எதை எதை ஞாபகம் வைத்துக்கொண்டிருக்க முடியும் என்பதைக் கூட கேட்க மாட்டார்கள். ஆனல், இந்தக் கோர்ட்டில் அவளால் உண்மை பேச முடியவில்லை. வேணி முதலிய வர்கள் கையில் சிக்கிக் கொண்டிருக்கும் கிராம சமூகத் திற்குச் சத்தியம் தேவையில்லை. உண்மை பேசினல் பொய் அபவாதத்தைச் சுமந்து கொண்டு சமூகத்தை விட்டு வெளியேறி விடவேண்டும் என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். அதைத் தவிர்த்து, ரமேஷிற்கு இவ் வளவு பெரிய தண்டனை கிடைக்கும் என்று அவள் கனவில் கூடக் கருதியதில்லை. அதிகமாகப் போனலும், நூறு இருநூறு ரூபாய் அபராதம் போடுவார்கள் என்று அவள் நினைத்தாள். அவனை எவ்வளவு தூரம் ஊரை விட்டுப் போகச் சொல்லியும் கேளாததால், ரமா கோபத் துடன் அபராதம் விழத்தான் வேண்டும் என்று எண்ணினள். இது நல்ல பாடமாக இருக்குமல்லவா? ஆனல், அவனுக்கு இவ்விதம் தண்டனை கிடைக்கும். நோயால் வாடியிருக்கும் அவனது முகத்தைப் பார்த்துக் கூட இரக்கமின்றி மாஜிஸ்ட்ரேட் ஆறு மாதம் தண்டித்து விடுவார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அப்போது அவளால் ரமேஷ் முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஆனல், ரமேஷ், இவளுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தானும். அப்போது கோபால் ஓடி வந்து அப்பீல் செய்வதாகச் சொல்ல, அதற்கு ரமேஷ், "வேண்டாம், மாஜிஸ்ட்ரேட், ஆயுள் பூராவும் ஜெயிலுக் குள்ளேயே இருக்கும்படி உத்திரவிட்டாலும் சந்தோஷத் துடன் ஏற்றுக் கொள்வேன். விடுதலை பெற்று வெளியே வர ஆசைப்படமாட்டேன். ஜெயில் எவ்வளவோ மேலானது" என்ருனும்.

உண்மைதான்! பைரவ ஆசார்யாவோ பிறர் பேச்சைக் கேட்டுக்கொண்டு பொய் பிராது கொடுத்து கைமாறு செய்துவிட்டான்; ரமாவாலும் கிளிக் கூண்டில் நின்று கொண்டு, இவன் கையில் கத்தி இருந்ததா இல்லையா என்பதை நிச்சயமாகக் கூற முடியவில்லை. இனி அவன் அப்பீல் செய்து எதற்காக விடுதலை பெற வேண்டும்? அவனுடைய இந்தத் தோல்வி ரமாவின் இதயத்தை நன்கு அழுத்திக்கொண்டிருந்தது. அந்தப் பாரத்தை அவளால் அப்புறம் அகற்றி வைக்க முடியவில்லை. ஹா! அது எவ்வளவு பெரிய பாரம்! நான் கோர்ட்டில் பொய் பேசவில்லை என்பதை அவளுடைய மனசாட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. அவள் பொய் பேசவில்லை, சரி. ஆனால், உண்மையையும் கூறவில்லையே. உண்மையை மறைப்பது எத்தகைய தவறு; அது இராப்பகலா இப்படித் தன்னைச் சுட்டெரிக்கும் என்பதை அவள் அப்போது கண்டாளா?

பைரவனுடைய இந்தக் குற்றத்திற்காக ரமேஷ் சுய நினைவைக்கூட இழந்துவிட்டான். ஆனால், எனது குற்றத்தை மன்னித்துவிட்டு மௌனமாகச் சிறை சென்றுவிட்டான். எனது எண்ணத்தை இவ்விதம் யாருமே ஏற்றுக்கொண்டு கௌரவித்தது கிடையாதே! இவ்விதம் அவள் உள்ளுக்குள் எண்ணி வருத்தப்பட்டு இன்று ஒரு உண்மையைக் கண்டாள். நான் எந்தச் சமூகத்திற்குப் பயந்துகொண்டு இவ்வளவு பெரிய பாதகத்தைச் செய்தேனே, அந்த சமூகம்தான் எங்கே இருக்கிறது? வேணீ முதலிய சமூகத் தலைவர்களிடம் அது என்னத்தைச் செய்துவிடும்? கோவிந்தனுடைய விதவை மன்னியினுடைய சங்கதி யாருக்குத் தெரியாது? வேணியிடம் அவள் கொண்டிருக்கும் சம்பந்தம் அனைவருக்கும் தெரியும். ஆனால், அவள் சமூகத்தில் பயமின்றி வீற்றிருக்கிறாள். அதோடு இந்த வேணிதான் சமூகத் தலைவன். அதற்கு ஆயிரம் பொத்தல் அடைத்து பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இந்தச் சமூகம்! ஆனால், ரமா தன்னை எண்ணிப் பார்த்து இத்தனைக்கும் மூல காரணனான பைரவன் பேரில்கூட கோபமடையவில்லை. அவ

னுடைய பெண்ணிற்குப் பன்னிரண்டு வயதாகிவிட்டது. அவளுக்கு உடனே கலியாணமாகாவிட்டால் ஜாதியி லிருந்து நீக்கி விடுவார்கள். வீட்டிலுள்ளவர்கள் சாதி எல்லாம் கெட்டுவிடும். இதை நினைத்தால் எந்த ஹிந்துவும் நடுநடுங்கி விடுவான். எல்லா சௌகரியங்கள் இருந்தும் இவள் விடமுடியாத சமூகத்தை ஏழை பைரவன் எப்படி விட்டுவிட முடியும்? வேணியை விரோதித்துக் கொண்டால் அவனுக்கு எத்தகைய அபாயம் நேரும் என்பதை அவள் அறிந்தாள்.

வயோதிக சநாதன் போய்க்கொண்டிருந்தார். கோவிந்தன் அவரை வேணு பாபுவிடம் அழைத்துச் சென்றான். வேணி கோபத்துடன், “என்ன சநாதன், உங்களுக்கு எப்போதிருந்து புத்தி இப்படி மாறிவிட்டது? உங்களுக்கென்ன அதற்குள் இன்னொரு தலையா முளைத்து விட்டது?” என்றான்.

**சநாதன் :** பெரிய பாபு, இரண்டு தலை யாருக்கு முளைக்கும்? உங்களைப் போன்றவர்களுக்கே இரண்டு தலை இல்லாதபோது, எங்களைப் போன்ற ஏழைகளுக் கெப்படி இருக்கும்?

“என்ன சொல்கிறார் பார்த்தாயா?” என்று வேணி பாபு சத்தமிட்டார். சில நாளைக்கு முன்தான் சநாதன் சொத்து முழுவதையும் வேணியிடம் அடகு வைத் திருந்தார். அப்போது இதே சநாதன் காலை மாலை இரு வேளையும் தவறாமல் வந்து இவன் காலைச் சுற்றிக் கொண் டிருந்தார். இன்று அவரே இப்படிப் பேசுகிறார்!

“பெரிய பாபு, இரண்டு தலை யாருக்கும் கிடையாது. என்றுதான் சொன்னேன். வேறு ஒன்றும் சொல்ல வில்லை.”

**கோவிந்தன் :** உங்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் என்பதை நாங்கள்தான் பார்க்கிறோமே. ஆனால், அதை விடுங்கள். தேவியின் பிரசாதத்தைக் கூட ஏன் வாங்கிப் போக வரவில்லை, சொல்லுங்கள்?”

வயோதிகர் சிரித்தார். “எங்களுடைய நெஞ் சழுத்தம்! செய்ய வேண்டியதை நீங்களும், நாங்களும்

செய்து முடித்துவிட்டோம். சரி, அது போகட்டும் தேவியின் பிரசாதமானலும் சரி; வேறு எதுவானலும் சரி; இனிமேல் ஒரு குடியானவனும் எந்தப் பிராமணன் வீட்டிலும் சாப்பிட வரமாட்டான். இவ்வளவு பெரிய குற்றத்தைத் தேவி பராசக்தி எவ்விதம் மன்னிப்பாள் என்று நாங்கள் இதைத்தான் சொல்கிறேம்' என்ருர்.

இதைக் கூறிய பிறகு அவர் ரமாவைப் பார்த்து, "அம்மா, நீ கொஞ்சம் ஜாக்கிரதையாக இரு. பீர்புரத்து முஸ்லிம்கள் அத்தனை பேரும் அடங்காக் கோபத்துடன் இருக்கிருர்கள். சின்னபாபு திரும்பி வந்த பிறகு என்ன நடக்குமென்பது இந்த துர்க்கா தேவிக்குத்தான் தெரியும். இதற்குள் அவர்கள் இரண்டு மூன்று தரம் பெரிய பாபு வீட்டைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள். பெரிய பாபு எதிர்ப்படாதது ரொம்ப க்ஷேமம்" என்று கூறிவிட்டு அவர் வேணியைப் பார்த்தார். கண நேரத்தில் வேணியின் மனம் பயத்தால் மாறிப்போய்விட்டது. சநாதன் மறுபடியும், "பெரிய பாபு, நான் துர்க்கா தேவிக்கு எதிரில் பொய் பேசமாட்டேன். நீங்கள் கொஞ்சம் பந்தோபஸ்தாகவே இருங்கள். இரவில் எங்கும் போகாதீர்கள். எந் நேரத்தில் யார் என்ன செய்வார்கள் என்பதை எப்படிச் சொல்ல முடியும்?" என்ருர்.

வேணி ஏதோ சொல்ல விரும்பினர். ஆனல், ஒன்றும் பேச முடியவில்லை. அவரைப் போலப் பயங்கொள்ளி உலகத்தில் வேறு யாருமே இருக்கமாட்டார்கள்.

இத்தனை நேரத்திற்குப் பிறகு ரமா பேசினள். "ஏன் சநாதன், சின்ன பாபுவுக்காகத்தானே நீங்கள் இத்தனை கோபமடைந்திருக்கிறீர்கள்?" என்ருள்.

சநாதன் துர்க்கையின் விக்ரகத்தைப் பார்த்துவிட்டு, "பொய் பேசி விட்டு எதற்காக நரகத்திற்குப் போக வேண்டும் அம்மா? அதுதான் விஷயம். ஆனல், முஸ்லிம்கள் கோபம்தான் எல்லோரைக் காட்டிலும் அதிகம். அவர்கள் சின்ன பாபுவை ஹிந்துக்களின் அவதார புருஷனுக நினைத்து வந்தார்கள். அதற்குக் காரணமும் இருக்கிறதல்லவா! ஒரு தம்பிடிகூடக்

கொடுக்காத ஜாபர் அலியே சின்னபாபு ஜெயிலுக்குப் போன அன்று பள்ளிக்கூடத்துக்காக ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டான். சின்னபாபுவுக்காக மசூதியில் நமாஸ் கூடப் படிக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன்'' என்றார்.

ரமாவினுடைய வேதனை நிரம்பிய முகம் ஆனந்தத்தால் பிரகாசித்தது. அவள் மௌனமாக சநாதனையே பார்த்துக் கொண்டிருந்தாள். வேணி திடீரென சநாதன் கையைப் பிடித்துக்கொண்டு, "சநாதன், நீ எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும். நீ என்ன கேட்டாலும் கொடுத்து விடுகிறேன். நான் தேவதைக்கு முன் சத்தியம் செய்கிறேன். பிராமணன் பேச்சைக் கேளு'' என்றார்.

சநாதன் ஆச்சரியத்துடன் சிறிது நேரம் வேணியையே பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு, "பெரியபாபு, நன்றாயிருக்கிறது! இன்னும் நான் எத்தனை நாளைக்கு உயிரோடு இருக்கப் போகிறேன்? நான் பேராசைப்பட்டு இதைச் செய்துவிட்டுச் செத்துப்போனால் என் பிரேதத்தை யாரும் காலால்கூடத் தொடமாட்டார்கள்! இது அந்தக் காலமல்ல பெரிய பாபு, அந்தக் காலமல்ல! சின்ன பாபுதான் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட்டுப் போய்விட்டாரே!'' என்றார்.

"இனிப் பிராமணன் பேச்சுச் செல்லாதா?'' என்றார் கோவிந்த காங்கூலி.

சநாதன் தலையை அசைத்துக்கொண்டு, "செல்லாது. நான் சொன்னால் நீயே கோபமடைவாய். ஆனால், அன்று புதிய பள்ளிக்கூடத்தில் சின்ன பாபு என்ன சொன்னார் தெரியுமா? 'பூணூல் போடுவதால் யாரும் பிராமணனாகிவிடமுடியாது.' நான் உங்களுக்குப் புதியவனல்ல; எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் செய்யும் காரியங்கள் எல்லாம் பிராமணர்கள் செய்யக் கூடியது தானா? அம்மா, நான் கேட்பதற்கு நீயே பதில் சொல்லு?'' என்றார்.

ரமா ஒன்றும் பதில் அளிக்காமல் தலையைக் குனிந்து கொண்டாள். சநாதன் இன்னும் அதிக உற்சாகத்துடன்,

“சின்ன பாபு ஜெயிலுக்குப் போனதிலிருந்து இரண்டு ஊர்களிலுமுள்ள போக்கிரிகள் தினமும் இரவில் ஜாபர் அலி வீட்டில் கூடுகிறார்களாம். சின்ன பாபுதான் ஜமீன்தார். மற்றவர்கள் எல்லாம் திருடர்கள் என்று பகிரங்கமாகக் கூறுகிறார்களாம். நாங்களெல்லாம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கிறோம். அவர்கள் யாரிடமும் பயப்படுவதில்லை. பிராமணன் போலிருந்தால்தான் பிராமணன். இல்லாவிட்டால் அவனுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம் என்கிறார்கள் ?” என்றார்.

வேணி துக்கத்துடன், “அவர்களுக்கு ஏன் நம்மீது இவ்வளவு வெறுப்பு !” என்று கேட்டார்.

**சநாதன் :** நீங்கள் கோபமடையக்கூடாது. இதற்கெல்லாம் காரணம் நீங்கள்தான் என்று நினைக்கிறார்கள்.

வேணி பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார்' இதைக்கேட்டுக்கூடக்கோபமடையவில்லை. ஏனென்றால்' அப்போதைய அவனது மனநிலை கோபமடையக்கூடியதாயில்லை. பயத்தால் இதயத் துடிப்பே நின்றுவிடும் போலிருந்தது.

**கோவிந்தன் :** இவர்கள் எல்லாம் ஜாபர் வீட்டிலா கூடுகிறார்கள் ? அங்கே இவர்கள் என்ன செய்கிறார்கள் ?

**சநாதன் :** என்ன செய்கிறார்களோ தெரியாது. ஆனால், அதில் போய் மாட்டிக் கொள்ளாதீர்கள். அங்கே ஹிந்து முஸ்லிம்கள் ரொம்ப ஒற்றுமையாக இருக்கிறார்கள். உயிரும் உடலும் போல இருக்கிறார்கள். சின்ன பாபு ஜெயிலுக்குப் போனதிலிருந்து புகைந்து கொண்டிருக்கிறார்கள். ஏதாவது செய்து நெருப்பு மூட்டி விடாதீர்கள்.

சநாதன் சென்றுவிட்டார். வெகு நேரம் வரையிலும் யாருமே ஒன்றும் பேசவில்லை. ரமா எழுந்து போகத் தொடங்கவே வேணி, “ரமா, எல்லா விஷயத்தையும் கேட்டாயல்லவா ?” என்றார்.

ரமா புன்சிரிப்புக் கொண்டாள், ஒன்றும் பேசவில்லை. இத்தப் புன்முறுவலினால் வேணி மிகுந்த வேதனை

அடைந்தார். "இந்தப் பயல் பைரவனுல்தான் இத்தனை யும் விளைந்தது. அன்று நீ போய் விடுவித்துவிடாதிருந் தால் ஒன்றுமே நடந்திருக்காது. நீ சிரிக்காமலா இருப்பாய், பெண்தானே! நீ வீட்டை விட்டே வெளியில் போக வேண்டியதில்லை. சரி, இனி நாம் என்ன செய்வது? யாராவது ஒரு நாளைக்கு மண்டையில் அடித்துவிட்டால்? பெண் புத்தி கேட்டாலே இப்படித் தான் வரும்!" என்று கூறிவிட்டு வேணி பயத்தாலும் கவலையாலும் நடுங்கிக்கொண்டு உட்கார்ந்துகொண் டிருந்தார். ரமா ஆச்சரியமடைந்தாள். வேணியை அவள் நன்கு அறிவாள். இருந்தாலும் இம்மாதிரி வீண் பழி கூறுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. சிறிது நேரம் நின்றுகொண்டிருந்துவிட்டுப் பேசாமல் அங்கிருந்து சென்றுவிட்டாள்.

அதன் பிறகு வேணி நாலைந்து பேரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு விளக்குகள் சகிதம் பயந்து கொண்டு அங்கிருந்து சென்ருர்.

## பதினுரும் அத்தியாயம்

**வி**சுவேசுவரி அறைக்குள் நுழைந்து கண்களில் நீர் நிறைய தழதழத்த குரலில், "அம்மா ரமா, இன்று உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள்.

ரமா அவளுடைய முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு, "பெரியம்மா, இன்று தேவலாம்" என்ருள். விசுவேசுவரி படுக்கை அருகில் மௌனமாக உட்கார்ந்துகொண்டாள். இன்ருேடு மூன்று மாதமாக ரமா படுத்த படுக்கையாக இருக்கிருள். கடூரமான இருமல்; அதோடு மலேரியாவும் விஷம் போல அவள் தேகத்தில் பரவிவிட்டது. கிராமத்து வைத்தியர்தான் கஷ்டப்பட்டு சிகித்சை செய்து வருகிருர். அவள் என்ன வியாதியால் அணு அணுவாகத் தேய்ந்து தொண்டு வருகிருள் என்பது வைத்தியருக்குத் தெரியவில்லை. ஆனுல்,

விசுவேசுவரி மனதில் ஒரு சந்தேகம் பலப்பட்டு வந்தது. அவள் ரமாவைத் தனது சொந்த மகள்போல் பாவித்து வந்தாள். அந்த அன்புதான் இன்று ரமாவின் நிலையை ஒருவாறு புலப்படுத்தியது. ஜனங்கள் வீண் பிரமையினால் பொய் அவதூறுகளைக் கூறுவதைக் கேட்டு விசுவேசுவரி வருத்தமடைவாள். ரமாவின் கண்கள் நாளுக்கு நாள் குழிவிழுந்து போவதைக் கவனித்தாள். ஆனால், கண்களின் ஒளி சிறிதும் மங்கவில்லை. ரொம்ப தூரத்திலுள்ள வஸ்துவைப் பார்க்க முயலுபவைபோலிருந்தன. விசுவேசுவரி மெதுவாக, "ரமா!" என்று அழைத்தாள்.

"ஏன் பெரியம்மா?"

"ரமா, நான் உன் தாயாருக்குச் சமம்......"

ரமா இடையிலேயே தடுத்து, "தாயாருக்குச் சமம் என்பது என்ன பெரியம்மா; நீதான் எனது தாய்" என்றாள்.

விசுவேசுவரி குனிந்து ரமாவின் நெற்றியில் முத்தமிட்டாள். பிறகு, "அப்படியானால், உனக்கு உடம்புக்கு என்ன என்று உண்மையைச் சொல்லமாட்டாயா?" என்றாள்.

"பெரியம்மா, ஜுரம்தான்."

ரமாவின் வெளிறிய முகம் சிவந்துவிட்டதை விசுவேசுவரி பார்த்தாள். பிறகு அவள் ரொம்ப அன்பாக, "ஆம் அம்மா, அதுதான் இந்தக் குருடி கண்ணுக்குக் கூடத் தெரிகிறதே. ஆனால், இந்தக் கண்ணுக்குத் தெரியாமல் வேறு ஏதாவது ஒளிந்து கொண்டிருந்ததானால் அதை என்னிடம் ஒளிக்காதே. ஒளிப்பதால் நோய் குணமாகிவிடாது" என்றாள்.

ஜன்னல் வழியாக வரும் சூரிய ஒளி ஒன்றும் கடுமையானதாக இல்லை. ஜில்லென்ற காற்றும் வீசிக்கொண்டிருந்தது. ரமா பேசாமலிருந்தாள். சிறிது நேரம் கழித்து, "பெரியம்மா, பெரிய அண்ணா எப்படி இருக்கிறார்?" என்றாள்.

"நன்றாக இருக்கிறான். தலைக் காயம் ஆற இன்னும் நாள் பிடிக்கும். ஆனாலும நாலைந்து நாளில் ஆஸ்பத்திரியி

லிருந்து வீட்டிற்கு வந்துவிடலாம். அம்மா, துக்கப் படாதே. அவனுக்கு இது வேண்டும்தான். இதனால் அவனுக்கு நல்லதுதான் " என்றாள்.

பிறகு சிறிது பொறுத்து, "பெற்ற தாயே இப்படிப் பேசுகிறாளே என்று நீ நினைக்கலாம். ஆனால், இதனால் நான் அதிக துக்கமடைந்தேனா, ஆனந்த மடைந்தேனா என்பதை என்னால் சொல்ல முடியாது. பாபத்துக்குப் பயப்படாதவனுக்கு இம்மாதிரி நேராவிட்டால் உலகம் தாங்காது. இன்று வேணியை அடித்தவன் அவனுக்கு செய்த உபகாரம் போல வேறு யாருமே செய்ததில்லை அம்மா, மந்திரத்தில் மாங்காய் விழுந்து விடுமா?" என்றாள்.

"அப்போது வீட்டில் யாருமில்லையா ?" என்று ரமா கேட்டாள்.

"இல்லாமலென்ன, எல்லோரும்தான் இருந்தார்கள். அவன் அடித்துவிட்டு வீட்டில் உட்கார்ந்து கொள்ளலா மென்று வரவில்லையே. ஜெயிலுக்குப் போவதென்ற தீர்மானத்தோடேயே வந்திருந்தான். ஒரு அடியில் வேணி மயக்கமடைந்து விழுந்தவுடன் அவன் பேசாமல் நின்று கொண்டான். பிறகு அவன் ஒன்றும் செய்யவில்லை. போகும்போது, 'இந்த அடியிலேயே வேணிக்குப் புத்தி வந்தால் சரி. இல்லாவிட்டால் இன்னொரு தரம் வர வேண்டியிருக்கும்'!" என்றான்.

ரமா மெதுவாக, "அப்படியானால் இன்னும் அண்ணாவைக் கண்காணித்து வருகிறார்களா ? ஆனால், இந்தக் குடியானவர்களுக்கு இதற்கு முன் இவ்வளவு துணிவு வந்ததில்லையே. இப்பொழுது எங்கிருந்து வந்து விட்டது ?" என்றாள்.

விசுவேசுவரி, "அம்மா, இதற்கு யார் காரணம் என்பது உனக்குத் தெரியாதா ? ரமா, எரியும் நெருப்பை இவ்விதமா அணைக்க முயல்வது? அதை முரட்டுத்தன மாக அணைக்க முயன்றால் அக்கம் பக்கமெல்லாம் பரவும். ரமேஷ் சுகமாகத் திரும்பி வந்து அவன் இஷ்டப்பட்ட

இடத்திற்குப் போகட்டும். வேணியை நினைத்து நான் இனித் துக்கப்படமாட்டேன்" என்றாள்.

விசுவேசுவரி ரொம்பத் துக்கப்படுகிறாள் என்பதை ரமா அறிந்து கொண்டாள். சிறிது நேரத்திற்குள் தன்னைத் தேற்றிக் கொண்டு விசுவேசுவரி, "ரமா, ஒரே ஒரு மகனை வைத்துக் கொண்டிருப்பவள் என்ன வேதனைப் பட்டிருப்பாள் என்பதை அனுபவித்திருந்தால்தான் உணர முடியும். வேணி அடிபட்டு மூர்ச்சை அடைந்த பிறகு அவனை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போனார்கள். அப்போது நான் அடைந்த துக்கத்தைச் சொல்ல முடியாது. இருந்தாலும் நான் யாரையும் குறை கூறவில்லை. ஒரே ஒரு மகன் என்று தாயாருக்காகத் தருமம் தண்டிக்காமல் விடாது என்று எண்ணிக் கொண்டேன்" என்றாள்.

"பெரியம்மா, உன்னிடம் நான் தர்க்கம் செய்ய வில்லை. நீ கூறுகிறபடி பார்த்தால், இன்று ரமேஷ் அனுபவிக்கும் தண்டனைக்கு என்ன பாபத்தைச் செய் தார். நாம்தானே அவரை ஜெயிலுக்கு அனுப்பினோம். இதை மறுக்க முடியாதே."

"இல்லை, அம்மா அப்படி அல்ல. மறுக்க முடியாது தான். இதனால்தான் இன்று வேணி ஆஸ்பத்திரியில் இருக்கிறான். நீயும்........"

அதற்குமேல் விசுவேசுவரியால் பேச முடியவில்லை. கூற வந்ததைக் கூறாமல், "புரிகிறதாம்மா? எதுவும் வீணாகப் போய் விடாது. எப்படியோ அதற்குப் பலன் கிடைத்துவிடும். ஆனால் அது எப்படிக் கிடைக்கிறது என்பது தெரிவதில்லை. ஒரு மனிதனுடைய பாவத்திற் காக வேறு ஒருவர் ஏன் பிராயச்சித்தம் செய்யவேண்டும் என்பது இன்னும் ரகசியமாகத்தான் இருக்கிறது. ஆனால், பிராயச்சித்தம் அவசியம் செய்துதான் தீரவேண்டும்" என்றாள்.

ரமா இதற்கு ஒன்றும் பதிலளிக்கவில்லை. மறு படியும் விசுவேசுவரி, "ரமா, இதனால் எனக்கும் புத்தி

வந்தது. நாம் பிறருக்கு நன்மை செய்வோம் என்று நினைத்தால் மட்டும் நன்மை செய்துவிட முடியாது. ஆரம்பத்தில் அநேக கஷ்டங்களைச் சமாளித்தாகவேண்டும். ஒரு நாள் ரமேஷ், 'பெரியம்மா, இந்த ஜனங்களுக்கு என்னால் இனி நன்மை செய்ய முடியாது. ஆகையால் நான் போகிறேன்' என்றான். அப்போது அவனை நான் தடுத்து ஆரம்பித்த காரியத்தை முடிக்காமல் போகாதே என்றேன். என் பேச்சை அவனால் மீற முடியவில்லை. இதனால், அவன் ஜெயிலுக்குப் போய் விட்டதைக் கேள்விப்பட்டதும், நானே அவனை ஜெயிலுக்கு அனுப்பியது போலத் தோன்றியது. ஆனால், வேணியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போன அன்று, ரமேஷ் ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டியதுதான் என்று நினைத்தேன. இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், வெளியிலிருந்து நன்மை செய்ய திடீரென வருவதால் இவ்வளவு இடைஞ்சல்கள் இருக்கின்றன. முதலில் எல்லோரிடமும் பழக வேண்டும் என்று நினைப்பதே இல்லை. நல்லவனும் கெட்டவனும் ஒன்று சேராத வரையில் எந்த நல்ல காரியமும் செய்ய முடியாது. படிப்பு, பழக்க வழக்கங்கள், செல்வாக்கு, தேக பலம் இவைகளால் பிறர் நெருங்க முடியாத நிலையிலிருக்கிறான். அம்மா, என்னால் இதைப் பார்க்க முடியாது. அவனைப் போக விடவும் இல்லை, வைத்துக்கொள்ளவும் முடிய வில்லை" என்றாள்.

ரமா, ஏதோ கூற விரும்பினாள். ஆனால், ஒன்றும் பேசவில்லை. விசுவேசுவரி இதைத் தெரிந்து கொண்டு, "ரமா, இதற்காக நான் பச்சாதாபம் அடையவில்லை. ஆனால், நீ நான் சொல்வதைக் கேட்டு கோபமடைய மாட்டாயே? இந்தத் தடவை நீங்களெல்லாம் அவனை உயரத்திலிருந்து கீழே தள்ளி சாமான்ய மனிதர்களோடு கலக்க வைத்ததால், இனி அவன் திரும்பி வந்ததும் உண்மையை உணர்ந்து கொள்வான்" என்றாள்.

ரமாவுக்கு இது அர்த்தமாகவில்லை. அவள், "இதனால் எப்படி அவர் தாழ்ந்துவிடுவார்? நம்முடைய அநியாயத்தினால் அவர் அடைந்த தீங்கிற்காக நாம்

தான் நரகத்திற்குப் போவோம். நமது பாப கர்மங்கள் அவரை எப்படி அணுகும்?" என்றாள்.

விசுவேசுவரி, "ஏன் அணுகாது? இல்லாவிட்டால் பாபத்தை ஏன் இவ்வளவு பயங்கரமானது என்று சொல்கிறோம்? உபகாரத்திற்குக் கைமாறு செய்யாவிட்டாலும் அபகாரமாவது செய்திருக்க வேண்டுமல்லவா? இதனால் உபகாரம் செய்தவனைக் கீழே தள்ளுவதுதானே?

ரமேஷ் திரும்பி வந்த பிறகும் பழையபடியே இருப்பான் என்று நீ நினைக்கிறாயா? அவன் தாராளமாக உதவி செய்து வந்ததைத்தான் பைரவன் தன் செய்கையால் தடுத்து விட்டானே! ஆனால், யார் கண்டார்கள்? இனிமேலாவது அவனது நம்பிக்கைக்கு இந்தக் கிராம வாசிகள் பாத்திரமாகலாம்" என்றாள்.

ரமா சிறிது நேரம் அவள் கையைப் பிடித்துக் கொண்டிருந்தாள். பிறகு மெதுவாக, "ஏன் பெரியம்மா, பொய்ச்சாக்ஷி கூறியவனுக்கு என்ன தண்டனை கிடைக்கும்?" என்றாள்.

விசுவேசுவரி ரமாவின் சிதறிய கூந்தலைக் கோதி விட்டுக் கொண்டே அவளைப் பார்த்தாள். ரமாவின் கண்களிலிருநது கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. விசுவேசுவரி மிகுந்த அன்புடன் அதைத் துடைத்து விட்டு, "அம்மா, இதில் உனக்கு ஒன்றும் சம்மந்தம் கிடையாதே. பெண்ணின் பேரில் அவமானத்தைச் சுமத்துவதாகப் பயம் காட்டிய கோழையை அல்லவா அந்த தண்டனை சாரும். அதற்காக நீ ஒன்றும் அனுபவிக்க வேண்டியதில்லை" என்றாள்.

"அவர்கள்தான் விரோதிகள். எந்த வழியில் வேண்டுமானாலும் விரோதியை வீழ்த்தலாம் என்கிறார்கள். ஆனால், நான் இப்படி வாக்கு மூலம் கொடுத்திருக்கப் படாது" என்றாள் ரமா.

"ஏன், கொடுத்திருக்கப்படாது" என்று கூறி விட்டு விசுவேசுவரி ரமாவைப் பார்த்து திகைத்து விட்டாள். இத்தனை நாளும் அவள் மனதில் இருந்த சந்தேகம் இன்று ஊர்ஜிதமாயிற்று. இன்று ரமாவின்

உள்ளத்தை அறிந்து திடுக்கிட்டாள். ரமா கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தாள். ஆகையால் விசுவேசுவரியின் முக பாவத்தை அவளால் கண்டு கொள்ள முடியவில்லை. ரமா, "பெரியம்மா?" என்று அழைத்தாள்.

விசுவேசுவரி திடுக்கிட்டு, "என்ன சொல்லு?" என்றாள்.

"இன்று நான் உன்னிடம் ஒரு விஷயத்தை ஒத்துக் கொள்கிறேன். ரமேஷ் சொல்லியபடி தினம் சாயங்காலம் ஜாபர் அலி வீட்டில் அனைவரும் கூடி நல்ல விஷயங்களைக் குறித்து விவாதித்து வந்தார்கள். ஆனால் இங்கு எல்லோரும் அதைத் தப்பாகக் கருதினார்கள். அவர்களைப் போலீஸ் வசம் ஒப்புவிக்க முயன்றார்கள். நான் ஆள் அனுப்பி அவர்களை எச்சரித்துவிட்டேன். போலீஸ்காரர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டால் பிறகு அவர்கள் மீள முடியாது."

விசுவேசுவரி இதைக் கேட்டு நடுங்கினாள். "அப்படியா சங்கதி! வேணி கிராமத்துக்குள் போலீசை வரவழைக்க முயன்றானா?"

"அதனால்தான் பெரிய அண்ணாவிற்கு இந்தத் தண்டனை கிடைத்தது என்று நினைக்கிறேன். பெரியம்மா, என்னை மன்னித்துவிடுவாயா?"

"ரமா, நான் மன்னிக்காவிட்டால், வேறு யார் மன்னிப்பார்கள்? கடவுள் இதற்காகச் சந்தோஷப்படுவார், நான் உன்னை ஆசீர்வதிக்கிறேன்."

"பெரியம்மா, அவர் திரும்பி வந்து கனவு பலித்தது கண்டு சந்தோஷமடைவார் என்று நான் திருப்திப் படுகிறேன். அவர் விரும்பியது நிறைவேறிவிட்டது. குடியானவர்கள் நித்திரை கலைந்து எழுந்துவிட்டார்கள். அவரைக் குடியானவர்கள் அறிந்துகொண்டார்கள், அன்பு செலுத்துகிறார்கள். பெரியம்மா, இந்த அன்பின் ஆனந்தத்தால் எனது குற்றத்தை மறந்துவிடமாட்டாரா?"

விசுவேசுவரி ஒன்றும் பேசவில்லை. அவள் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. அதன் பிறகு

இருவரும் வெகு நேரம் வரையிலும் மௌனமாகவே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். பிறகு ரமா, "பெரியம்மா!" என்று கூப்பிட்டாள்.

"ஏனம்மா?"

"ஒரே ஒரு விஷயத்தில்தான் நாங்களிருவரும் பிரிய முடியவில்லை." விசுவேசுவரி குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டாள்.

*ரமா* : உன்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். நான் இல்லாதபோதுகூட அவர் என்னைமன்னிக்கா விட்டால், நீ எனக்காக அவரிடம், நான் உண்மையில் அவர் நினைப்பது போல அவ்வளவு கெட்டவளல்ல என்பதைச் சொல்லவேண்டும். நான் அவருக்கு அளித்த துக்கத்தைவிடப் பன்மடங்கு அனுபவித்தேன். இதை நீ சொன்னால் கூட நம்ப மாட்டாரா?

**விசுவேசுவரி** : வா, அம்மா, நாமிருவரும் வேணியும், ரமேஷும் இல்லாத ஒரு இடத்திற்குப் போய்விடுவோம். எங்கிருந்து பார்த்தாலும் கோவிலின் கொடு முடி தெரியும் ஒரு இடத்திற்குப் போய்விடலாம். எனக்கு எல்லாம் தெரியும் ரமா. அம்மா, இந்த உலகத்தை விட்டுப் பிரியும் நாள் வந்துவிட்டால், பிறகு இந்த விஷயத்தைச் சுமந்து கொண்டு அங்கு போக முடியாது.

வெகு நேரம் வரையிலும் மௌனமாக இருந்த பிறகு, கடைசியில் ரமா, "பெரியம்மா, நானும் அப்படித்தான் போக விரும்புகிறேன்" என்றாள்.

## பதினேழாம் அத்தியாயம்

ஜெயிலுக்கு வெளியே ஆண்டவன் ரமேஷுக்கு இத்தனை சௌகரியம் செய்து வைத்திருப்பார் என்று அவன் கனவில்கூடக் கருதியதில்லை. ஆறு மாதக் கடின காவலுக்குப் பிறகு அவன் வெளியில் வந்து கண்டதை அவனால் நம்பக்கூட முடியவில்லை. வேணி பாபு தலையில் தலைப்பாகையுடன் எல்லோருக்கும் முன்னால் நின்று

கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் இரண்டு பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், மாணுக்கர்களும், இன்னும் அநேக இந்து முஸ்லிம்களும் நின்று கொண்டிருந்தார்கள். வேணி தழ தழுத்த குரலில், " அப்பா, ரமேஷ், ரத்த பாசம் என்ன என்பது இப்போதுதான் தெரிகிறது. யது முகர்ஜியின் பெண் ஆசார்யாவைக் கைக்குள் போட்டுக்கொண்டு இவ்விதம் செய்வாள் என்று அந்தச் சமயத்தில் எனக்குத் தெரியாமல் போச்சு. வெட்கமின்றி கச்சேரியில் பொய் சாக்ஷி கூறுவாள் என்று யார் கண்டார்கள். ஆண்டவன் இதற்கு எனக்குச் சரியான தண்டனை கொடுத்துவிட்டார். அப்பா ரமேஷ், ஜெயிலுக்குள் சௌக்கியமாக இருந்தாயா? எனக்கு இந்த ஆறு மாதமாகத் தணல் மேல் நிற்பது போலிருந்தது " என்றார்.

என்ன சொல்வதென்று ரமேஷுக்குப் புரியவில்லை. ஆகையால் அவன் சும்மா பார்த்துக்கொண்டு நின்றான். தலைமை உபாத்தியாயர் அவன் காலில் நெடுக விழுந்து வணங்கினார். அவருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அனைவரும் பலவித உபசாரங்கள் செய்தார்கள். வேணியின் துக்கம் தணியவில்லை. அவர் மிகுந்த வேதனையுடன், " அப்பா, உனது அண்ணா பேரில் கோபம் கொள்ளாதே. வீட்டிற்குப் போவோம் வா. அம்மாவுக்கு, அழுது அழுது கண் குருடாகி விட்டது " என்றார்.

எதிரில் குதிரை வண்டி தயாராக நின்றது. ரமேஷ் ஒன்றும் பேசாமல் போய் ஏறிக்கொண்டான். வேணி அவனுக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டு தலைப்பாகையை எடுத்தார். காயம் ஆறியிருந்தும், அதன் தழும்பு நன்கு தெரிந்தது, ரமேஷ் அதைப் பார்த்துத் திடுக்கிட்டு, " பெரிய அண்ணா, இது என்ன?" என்றான்.

வேணி ஒரு பெருமூச்சு விட்டு, " அப்பா, யாரைக் குற்றம் சொல்வது? இது எனது கர்மத்தின் பலன். இப்போது அதைக் கேட்டு என்ன பிரயோசனம்?" என்றார்.

அவர் கூறியதைக் கேட்டு ரமேஷ் என்னவோ நடந்திருக்கிறது என்று தெரிந்து கொண்டான். ஆனால்

அவன் அதைத் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. இதைக் கண்டு வேணி மனதிற்குள் வருத்தமடைந்தார். ஒரு நிமிஷம் மௌனமாக இருந்துவிட்டு, “மனதில் ஒன்றும் வாக்கில் ஒன்றுமாக எனக்குப் பேசத் தெரியாது. மற்ற வர்களைப் போல் மனதிலுள்ளதை ஒளிக்கத் தெரியாது. இதனால் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்க வேண்டி யிருக்கிறது. இருந்தும் புத்தி வருவதில்லை” என்றார்.

தான் கூறுவதை ரமேஷ் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு வேணி ரொம்ப சாந்தமாக, “அன்று எனக்கு ஏற்பட்ட மனக் கஷ்டத்தை மறைக்கத் தெரியவில்லை, இதுதான் என்பேரில் தப்பு. ரமா, உனக்கு நாங்கள் என்ன கெடுதல் செய்து விட்டோம்? எதற்காக எங்களை இவ்விதம் படுகுழியில் தள்ளினாய்? ரமேஷ் தண்டிக்கப்பட்டான் என்று அம்மா கேட் டால் உயிரை விட்டுவிடுவாளே! நாங்கள் சகோதரர்கள். இன்றைக்குச் சண்டை போடுவோம், நாளைக்குக் கூடிக் கொள்வோம். நீ ஒரே அடியில் தம்பியையும், தாயாரையும் நாசமாக்கிவிட்டாய். ஆனால், எங்களுக்கு ஆண்டவன் துணை இருப்பான் என்று சொல்லி விட்டேன்” என்றார்.

இதைக் கூறிய பிறகு அவர் மறுபடி ஒரு தரம் ஆண்டவனை வேண்டிக்கொண்டார். ஆனால், ரமேஷ் ஒன்றும் இந்த வேண்டுதலில் கலந்து கொள்ளவில்லை. அவன் மௌனமாக விஷயத்தைக் கேட்டு வந்தான். பிறகு வேணி, “ரமேஷ், அப்போது ரமா அடைந்த கோபத்தை நினைத்தால் இப்போதுகூட எனக்குப் பயமெடுக்கிறது. அவள் பல்லைக் கடித்துக்கொண்டு, ‘ரமேஷ் தகப்பன் என் அப்பாவை ஜெயிலுக்கு அனுப்ப முயற்சிக்கவில்லையா? அனுப்ப முடிந்திருக்குமானால் விட்டிருப்பானா?” என்றாள். இந்தப் பெண்ணின் கர்வத்தைக் கண்டு என்னால் பொறுக்க முடியவில்லை. ‘சரி, ரமேஷ் ஜெயிலிலிருந்து வெளியில் வரட்டும், அப்புறம் என்ன நடக்கிறதென்று பார்!’ என்றேன்.”

இது வரையிலும் ரமேஷுக்கு நன்கு புரியவில்லை. அவனது தந்தை எப்போது ரமாவின் தந்தையை ஜெயி

லுக்கு அனுப்ப முயற்சித்தார் என்பது அவனுக்குத் தெரியாது. தான் இங்கு வந்ததும் ரமாவின் சிறிய தாயார் இவ்விதம் கூறியது அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஆகையால் மேலும் கேட்க ஆசைப்பட்டான். இதை அறிந்து வேணி, "கொலே செய்வது அவளுக்குச் சர்வ சாதாரணம்! அக்பரைத் தடியுடன் அனுப்பியது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? ஆனுல், உன்னிடம் அது ஒன்றும் பலிக்கவில்லே. ஆனுல், நான்தான் ரொம்ப மெலிந்தவன்..........."

அதற்கப்புறம் வேணி கொஞ்சம் யோசித்து விட்டு, "சொல்வதைக் கேட்டாயா?" என்ருர்.

"அதற்கப்புறம்?" என்ருன் ரமேஷ்.

"அதற்கப்புறம் நடந்ததெல்லாம் எனக்கு என்ன ஞாபகமா இருக்கிறதப்பா! ஆஸ்பத்திரிக்கு என்னே யார் கொண்டு போனுர்கள், அங்கு யார் என்னேக் கவனித்துக் கொண்டார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. இந்தத் தடவை நான் பிழைத்தது அம்மா புண்ணியத்தால் தான். இம்மாதிரி தாயார் யாருக்கு அப்பா இருக்கிருள்?" என்ருர்.

ரமேஷ் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லே. அவன் பதுமை போல அசையாது உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் கைகளேப் பிசைந்துகொண்டான். அவனுக்கு உண்டான கோபத்திற்கும் வெறுப்பிற்கும் அளவேயில்லே. வேணி எவ்வளவு கெட்டவர் என்பது ரமேஷுக்குத் தெரியும். அவர் செய்யாத காரியம் ஒன்றுமில்லே என்பதையும் அவன் அறிவான். இருந்தாலும் ஒரு மனிதன் இவ்விதம் அபாண்டமாகப் பொய் பேசுவாஞ என்று நினேத்தான். ஆகையால் ரமா பேரில் கூறிய சகல குற்றத்தையும் நம்பினுன்.

அவன் திரும்பி வந்ததால் கிராமம் முழுதும் உற்சவம் போலக் கொண்டாடினுர்கள். தினம் இரு வேளேகளிலும் அநேகர் வந்து பல விஷயங்களேப் பற்றிப் பேசிப் போவார்கள். தான் ஜெயிலுக்குப் போனதால் இருந்த வருத்த

மும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிட்டது. அவன் திரும்பி வந்த பிறகு எங்கும் ஒரு மலர்ச்சி நிறைந்திருப்பதைக் கண்டான். இது இத்தனை நாளும் எங்கிருந்தது என்று ஆச்சரியப்பட்டான்.

வேணியினால் அடக்கப்பட்டுக் கிடந்த அந்த சக்தி இப்போது பன்மடங்கு வேகத்தோடு வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. இன்று வேணியை இன்னும் நன்ருக அறிந்துகொண்டான். இன்று வேணியை ஜனங்கள் வெறுப்பதைக் கண்டான். இப்போது வேணியின் விரோதமும் அடங்கிவிட்டது. இன்று ஜனங்களின் அனுதாபத்துடன், வேணியின் நட்பும் கிடைத்துவிட்டதால் ரமேஷ் மிகுந்த சந்தோஷமடைந்தான். ஆறு மாதத்திற்கு முன் விட்டுப் போயிருந்த காரியங்களை ஆரம்பிக்க முயன்ருன். ஆனால், ஜனங்கள் இன்னும் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். ஒரே ஒரு விஷயத்தில்தான் அவன் தன்னையே வேருக்கி வைத்திருந்தான். அது தான் ரமா விஷயம். அவன், வழியிலேயே ரமா நோயுற்றிருக்கிருள் என்பதைத் தெரிந்து கொண்டான். ஆனால், அவளுக்கு என்ன நோய் என்பது தெரியாது. தன்னை ரமாவிடமிருந்து முழுவதும் விடுவித்துக் கொண்டதாகவே எண்ணி வந்தான். ரமாதான் இவனுடைய இத்தனை கஷ்டத்திற்கும் காரணம் என்பதை அனைவரும் அறிவார்கள். ஆகையால் அவள் விஷயமாக வேணி கூறியது அனைத்தும் பொய் அல்ல என்று எண்ணினன்.

ஐந்து ஆறு நாளைக்குப் பிறகு ரமேஷிடம், வேணி வந்தார். பீர்புரத்திலுள்ள ஒரு நிலவிஷயமாக வெகு நாளாக வேணிக்கு ரமாவிடம் மனஸ்தாபமிருந்தது. வேணி வெளிக்கு என்ன சொல்லிக் கொண்டாலும் மனதிற்குள் ரமாவிடம் பயம்தான். இப்போது அவள் நோய்ப் படுக்கையில் இருக்கிருள். வழக்காட முடியாது. அதோடு பீர்புரத்து முஸ்லிம் குடிகளும் ரமேஷ் பேச்சைத் தட்டமாட்டார்கள். ஆகையால் இனி எப்படியானுலும் இந்தச் சமயத்தைக் கைவிடக்கூடாது என்று அவர் ரமேஷைத் தொந்தரவு செய்தார். அதற்கு ரமேஷ் இணங்க மறுக்கவே

வேணி பலவிதமான தந்திரங்கள் செய்து கடைசியாக, "உன்னால் இந்தக் காரியம் ஏன் ஆகாது? அவள் நோயுடன் இருக்கிறாள் என்று நீ நினைக்கிறாயா? உன்னை அவள் ஜெயிலுக்கு அனுப்பும்போது நீ நோய் அடைந்து இருக்கவில்லை?'' என்றார்.

அவர் கூறுவது உண்மையாகப்பட்டது. அவனால் மறுக்க முடியவில்லை. இருந்தாலும் அவன் மனம் ரமாவுக்கு விரோதமாகப் போக இடந்தரவில்லை. அவள் நோயுற்றிருக்கும் போது அவளுக்கு எதிராக இந்தக் காரியம் செய்ய எவ்வகையிலும் அவன் இணங்கவில்லை. அவன் பேசாமலிருந்தான். இந்தக் காரியத்திற்குச் சிறிது அவகாசம் வேண்டும் என்பதை வேணி அறிவார். ஆகையால் விட்டுப் பிடிக்கலாம் என்று அவர் போய் விட்டார்.

இந்தத் தடவை ஒரு விஷயம் ரமேஷின் திருஷ்டியை விசாலப்படுத்தியது. இந்த உலகத்திலே விசுவேசுவரிக்கு அதிகப் பற்றுக் கிடையாது என்பதை ரமேஷ் அறிவான். அன்று ஜெயிலிலிருந்து வந்தவுடன் வேணியும் இவனும் வீட்டிற்குச் சென்றார்கள். அப்போது விசுவேசுவரி இவர்களிருவரையும் கண்டு ஆனந்தமடைந்தாள். இருந்தாலும் வேறொன்றிற்காக அவள் மனம் வேதனை அடைவது போல ரமேஷுக்குப் பட்டது. இன்று பேச்சு வாக்கில், விசுவேசுவரி காசி போகப் போவதாகவும், அவள் இனித் திரும்பப் போவதில்லை என்றும் கேள்விப் பட்டான். இதைக் கேட்டு அவன் திடுக்கிட்டான். 'அடே! எனக்குத் தெரியாதே! நாலைந்து நாட்களாகச் சந்திக்க முடியவில்லை. ஆனால், அதற்கு முன்பு சந்தித்த போதுகூட என்னிடம் கூறவில்லையே!' தன்னைப் பற்றியோ, அல்லது பிறரைப் பற்றியோ யாரிடமும் அவள் பேசப் பிரியப்படமாட்டாள் என்பது ரமேஷுக்குத் தெரியும். இனி விசுவேசுவரி போய்விடுவாள் என்பதில் துளிகூட அவனுக்குச் சந்தேகம் உண்டாகவில்லை. இங்கு பெரியம்மா இல்லாவிட்டால் எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று நினைக்கவே அவன் கண்களில் நீர் நிறைந்தது. அவன் சிறிதும் தாமதம் செய்யாமல் அவ

ளிடம் சென்ருன். அப்போது ஒன்பது, பத்து மணி இருக்கும். வீட்டிற்குள் நுழைந்ததும், "அம்மா முகர்ஜி வீட்டிற்குப் போயிருக்கிருர்கள்" என்று வேலைக்காரி சொன்னுள். ரமேஷ் திடுக்கிட்டு, "இந்நேரத்திலா?" என்ருன்.

ரொம்ப பழைய நாளைய வேலைக்காரி இவள். அவள் புன்முறுவலுடன், "அம்மாவுக்கு எந்நேரமானுல்தான் என்ன? இன்று ரமாவின் தம்பிக்குப் பூணூல் போடு கிருர்கள்" என்ருள்.

"யதீந்திரனுக்கா பூணூல்?" ரமேஷ் இன்னும் அதிக ஆச்சரியமடைந்தான். "இது யாருக்கும் தெரியாதா?" என்ருன்.

"அவர்கள் யாருக்கும் தெரிவிக்கவில்லை. தெரிவித் திருந்தாலும் யாரும் அவர்கள் வீட்டிற்குச் சாப்பிடப் போகமாட்டார்கள். ரமாவை எஜமானர் சாதியிலிருந்து தள்ளி வைத்திருக்கிருரே!" என்ருள் வேலைக்காரி.

ரமேஷுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை. சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு ரமேஷ் இதற்குக் காரணம் என்ன என்று கேட்டான். உடனே வேலைக் காரி மிகுந்த வெட்கத்துடன், "எனக்கென்ன தெரியும்! ரமாவுக்கு ரொம்ப கெட்ட பெயர் உண்டாயிருக்கிற தல்லவா! நாங்கள் ஏழைகள். இவைகளெல்லாம் எங் களுக்கு எப்படித் தெரியும்?" என்ருள்.

சொல்லிவிட்டு அவள் அங்கிருந்து நழுவிவிட்டாள். சிறிது நேரம் பேசாமல் நின்றுகொண்டிருந்து விட்டு அவன் வீடு திரும்பினுன். இது வேணியின் பழிவாங்கும் வேலை என்பதைத் தெரிந்துகொண்டான். ஆனுல், அவன் எதனுல் ரமாவிடம் கோபம் கொண்டிருக்கிருன் என்பதை அவனுல் கண்டுபிடிக்க முடியவில்லை.

# பதினெட்டாம் அத்தியாயம்

அன்று சாயந்திரம் ஒரு எதிர்பாராத சம்பவம் நடந்தது. கோர்ட்டுத் தீர்ப்பை அலட்சியம் செய்து விட்டு கைலாசரும், மோதிலாலும் ரமேஷிடம் வந்தார்கள். ரமேஷ் முன்னெச்சரிக்கையாக, “அப்பா, என் முடிவை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா ?” என்ருன்.

வாதி, பிரதிவாதி இருவரும், “ஏற்றுக் கொள்ளாம லென்ன ! நீதிபதியைவிட நீங்கள் புத்தியிலாகட்டும் படிப்பிலாகட்டும் ஒன்றும் குறைந்தவர்களல்லவே. நீதிபதிகள் செய்வதை உங்களைப் போலுள்ளவர்களே செய்யலாமே. நாளைக்கு நீங்கள் ஒரு சர்க்கார் அதிகாரி யாக வந்து தீர்ப்பளித்தால் ஒத்துக்கொண்டுதானே ஆக வேண்டும் ? அப்போது உங்கள் தீர்ப்பை ஒத்துக் கொள்ள முடியாது என்று சொல்ல முடியுமா ?” என் ருர்கள். இதைக் கேட்டு ரமேஷ் சந்தோஷமடைந்தான்.

கைலாஸ் : நீங்கள் எங்களைச் சேர்ந்தவர்கள். ஆகை யால் உங்களிடம்தான் விஷயத்தை நன்கு கூற முடியும். அங்கு வக்கீலுக்குக் காசு கொடுக்காமல் ஒன்றும் காரியம் ஆகாது. இங்கு ஒரு தம்பிடிகூடச் செலவு கிடையாது. வக்கீலையும் சந்தோஷப்படுத்த வேண்டியதில்லை ; கச்சேரிக்கு நடந்து நடந்து காலையும் ஒடித்துக்கொள்ள வேண்டியதில்லை. நீங்கள் கூறுவது நல்லதாயிருந்தாலும் சரி, கெட்டதாயிருந்தாலும் சரி நாங்கள் அதற்குக் கட்டுப் படுகிருேம். கடவுள் எங்களுக்கு நல்ல புத்தியைக் கொடுத்துவிட்டார். அதனுல்தான் நாங்கள் கச்சேரியி லிருந்து உங்களிடம் வந்திருக்கிருேம்.

ஒரு சிறு வாய்க்கால் சம்பந்தமாகத்தான் இவர் களுக்குள் தகராறு. அது சம்பந்தமான தஸ்தாவேஜுகளை எல்லாம் ரமேஷிடம் கொடுத்துவிட்டு அடுத்த நாள் காலை வருவதாகச் சென்றுவிட்டார்கள். ரமேஷ் அங்கேயே உட்கார்ந்து கொண்டான். இது அவனுக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. இம்மாதிரி விஷயத்தை அவன் எண்ணியதே இல்லை. இவன் எண்ணியிருந்தாலும் எண்ணு

விட்டாலும் இன்று அவர்கள் வழக்கைத் தீர்த்துக் கொள்ள இவனை நாடியிருக்கிருர்கள். இது ஒன்றே அவனைச் சந்தோஷக் கடலில் ஆழ்த்துவதாயிருந்தது. இது ஒன்றும் ரொம்பப் பிரமாதமான விஷயம் இல்லைதான். ஏதோ கிராமத்தில் உள்ள இரண்டு குடியானவர்கள் சச்சரவுதான். இருந்தாலும் அது அவனுக்குச் சொல்லொணு வியப்பை அளித்தது. இனி எதிர்காலத்தில் இந்தக் கிராமத்திற்கு என்னென்னதான் நல்லது செய்துவிட முடியாது ? ஆகாயத்தில் வசந்தகால மேகக் கூட்டங்கள் நிறைந்திருந்தன. அதைப் பார்த்ததும் திடீரென அவனுக்கு ரமா ஞாபகம் வந்தது. வேறு எப்போதாவதாயிருந்திருந்தால் அவனுக்கு சொல்லொணுக் கோபமுண்டாயிருக்கும். ஆனுல், இன்று துளிகூட கோபமுண்டாகவில்லை. அவன் மனதிற்குள்ளாகவே சிரித்துக் கொண்டு, “ரமா, உன்னுல் நான் இவ்வளவு மேன்மை அடைந்துவிட்டேன். நீ விஷமிட்டது எனக்கு அமிர்தமாகிவிட்டது. இப்படி எல்லாம் நடக்கும் என்று உனக்குத் தெரிந்திருந்தால் நீ ஜெயிலுக்குக்கூட என்னை அனுப்பியிருக்கமாட்டாய் !” என்று சொல்லிக் கொண்டான்.

“ரமா அக்கா, உங்களைப் பார்க்கவேண்டுமென்று அழைத்து வரச் சொன்னுர்.”

ரமா இவனை அழைத்து வரும்படி வேலைக்காரியை அனுப்பியிருக்கிருள் ! ரமேஷ் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். இன்று என்ன அதிசயங்களாகவே நடந்துகொண்டிருக்கிறதே !

“சின்ன பாபு, நீங்கள் தயவுசெய்து.....”

“அவள் எங்கே இருக்கிருள் ?”

“வீட்டில் படுத்துக் கொண்டிருக்கிருள். நாளை சமயம் கிடைக்காது. ஆகையால் இப்போதே......”

“சரி, வா போவோம்” என்று ரமேஷ் புறப்பட்டான்.

ரமேஷை அழைத்து வரும்படி ஆள் அனுப்பிவிட்டு ரமா ஒருவித சலிப்புடன் படுத்துக்கொண்டிருந்தாள்,

வேலைக்காரி தெரிவித்த பிரகாரம் ரமேஷ் அறைக்குள் நுழைந்தான். அவன் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்ததும் ரமா ஆவேசம் வந்தவள்போல் ரமேஷின் காலடியில் விழுந்தாள். அறையின் ஒரு மூலையில் விளக்கு மினுக் மினுக்கென எரிந்துகொண்டிருந்தது. அந்த மங்கிய வெளிச்சத்தில் ரமாவின் உடம்பை நன்கு கவனிக்க முடியவில்லை. அவன் வரும் வழியில் நினைத்துக்கொண்டு வந்ததெல்லாம் சுத்தத் தப்பு என்பதைக் கண்டான். சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "இப்போது எப்படி இருக்கிறது, ராணி?" என்று கேட்டான்.

ரமா கொஞ்சம் தள்ளி உட்கார்ந்துகொண்டு, "நீங்கள் என்னை ரமா என்றே சொல்லிக் கூப்பிடுங்கள்" என்றாள்.

ரமேஷுக்கு யாரோ முதுகில் சவுக்கால் அடித்தது போலிருந்தது. அவன் உடனே சிறிது கடுமையாக, "சரி, நீ அசௌக்யமாயிருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன். அதனால்தான் இப்போது எப்படி இருக்கிறது என்று கேட்டேன். இல்லாவிட்டால் உன்னுடைய பெயரைச் சொல்லி அழைக்கவேண்டிய அவசியமேயில்லை" என்றான்.

ரமா அனைத்தையும் அறிந்துகொண்டாள். சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு அவள் மெதுவாக, "இப்போது எனக்கு ஒன்றுமில்லை. உங்களை வரும்படி அழைத்தது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறதா? ஆனால்..."

ரமேஷ் குறுக்கிட்டு, "இல்லை, ஆச்சரியமடையவில்லை. இனி உன்னுடைய எந்தக் காரியத்திற்காகவும் நான் ஆச்சரியமடையமாட்டேன். சரி, எதற்காக அழைத்தாய்?" என்றான்.

இந்தப் பேச்சு அவளுக்கு எத்தகைய வேதனையை அளித்தது என்று ரமேஷுக்குத் தெரியாது. சிறிது நேரம் மௌனமாகத் தலையைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். பிறகு, "ரமேஷ் அண்ணா, இன்று உங்களுக்கு இரண்டு காரியங்களுக்காகச் சிரமமளிக்

கிறேன். நான் உங்களுக்குச் செய்த தீங்குகள் எல்லாம் எனக்குத் தெரியும். இருந்தாலும் நீங்கள் வருவீர்கள், எனது கடைசி வேண்டுகோளை மறுக்க மாட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்" என்றாள்.

திடீரென அவள் தொண்டை கம்மிக்கொண்டது. ரமேஷுக்கும் விளங்கிவிட்டது. அந்தப் பழைய அன்பு மீண்டும் பொங்கிப் பிரவகித்தது. இன்று இத்தனை நாளாகிக்கூட அந்த அன்பு மாறாமல் இருப்பதைக் காண ரமேஷுக்கு ஆச்சரியமாக இருந்தது. கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "நீ, என்ன சொல்கிறாய் ?" என்றான்.

"பெரிய அண்ணா, உங்களுடைய உதவியால் சுவாதீனப்படுத்தப் போகும் பூமி உண்மையிலேயே என்னுடையது. அதை நான் உங்கள் கையில் ஒப்புவித்து விட்டுப் போக விரும்புகிறேன்."

"நீ பயப்படாதே! திருடுவதற்கு நான் யாருக்கும் உதவி செய்ததில்லை. இனியும் செய்யமாட்டேன். தருமம் செய்ய விரும்பினால் இன்னும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்; அவர்களுக்குக் கொடுத்துவிடு. நான் தானம் வாங்கமாட்டேன்.'

முன் எப்போதாவதாயிருந்தால், முகர்ஜி வம்சத்திடம் தானம் வாங்குவதில் கோஷால் வம்சத்திற்கு அவமானம் ஏற்பட்டு விடாது என்று சொல்லியிருப்பாள். ஆனால், இன்று அப்படிக் கூறவில்லை. அவள் ரொம்பப் பணிவாக, "ரமேஷ் அண்ணா, நீங்கள் திருடுவதற்கு உதவி செய்யமாட்டீர்கள் என்பதும், உங்களுக்காகத் தானம் வாங்க மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். நான் கூறுவது அதுவல்ல. குற்றம் செய்தவனுக்குத் தண்டனை கிடைக்கிறது. நான் அநேக குற்றங்கள் செய்திருக்கிறேன். அந்தக் கடனுக்காக இதை ஏன் வாங்கிக் கொள்ளக் கூடாது?" என்றாள்.

"சரி, உன்னுடைய இரண்டாவது வேண்டுகோள் என்ன ?"

"யதீந்திரனை உங்கள் வசம் விட்டுப் போகிறேன். அவனைத் தங்களைப் போன்ற மனிதனுக்குங்கள். அவன் பெரியவனானாலும் தங்களைப் போலவே சிரித்துக்கொண்டு தியாகம் செய்ய வேண்டும்."

ரமேஷின் மனதிலிருந்த கோபமெல்லாம் மாறி விட்டது. ரமா முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "இதை என் கண்ணாரக் காண முடியாது தான். ஆனாலும், அவன் தேகத்திலே அவனுடைய மூதாதையர்களின் ரத்தம்தான் ஓடுகிறது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். தியாக புத்தி அவன் ரத்தத்திலே ஊறிப் போயிருக்கிறது. கல்வி அளித்தால், அவனும் ஒரு நாளைக்கு உங்களைப் போலவே தலைநிமிர்ந்து நிற்க முடியும்" என்றாள்.

ரமேஷ் உடனே ஒன்றும் பதில் அளிக்கவில்லை. அவன் ஜன்னலுக்கு வெளியே சந்திரிகை நிறைந்த ஆகாயத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். சொல்ல முடியாத வேதனை அவன் இதயத்தை அமுக்கிக்கொண்டிருந்தது. வெகுநேரத்திற்கப்புறம், "பாரு, இந்த விஷயங்களில் எல்லாம் என்னை இழுக்காதே. எத்தனையோ கஷ்ட நஷ்டங்களுக்குப் பிறகு ஒரு சிறு ஒளியின் ரேகையைக் கண்டேன். இனி மறுபடி அது அணைந்து விடுமோ என்று பயமாயிருக்கிறது" என்றான்.

"இல்லை, ரமேஷ் அண்ணா! இனிப் பயம் வேண்டாம். தங்களுடைய அந்த ஒளி இனி அணையாது. நீங்கள் ரொம்ப தூரத்திலிருந்து வந்து, ரொம்ப உயரத்திலிருந்துகொண்டு காரியங்கள் செய்ய விரும்பியதாகப் பெரிய அம்மா சொன்னாள். அதனால்தான் இதில் இத்தனை தடைகள் உண்டாயிற்று. இன்று எங்களுடைய துர்ச் செய்கைகளின் பலனால் உங்களைச் சரியான இடத்தில் உட்கார வைத்துவிட்டோம். இன்று எங்களுக்கு மத்தியில் வந்துவிட்டதால் உங்களுக்குப் பயம் உண்டாகிறது. முன்பாக இருந்தால் இந்த சந்தேகமே தோன்றியிருக்காது. அப்போது நீங்கள் எங்கள் கிராம சமூகத்திற்கு வெளியிலிருந்தீர்கள். ஆனால், இப்போது அதில் நீங்களும் ஒரு அங்கத்தினராகிவிட்டீர்கள். ஆகை

யால் இனி நீங்கள் ஏற்றிய ஜோதி அணையாது. இனி அது நாளுக்கு நாள் சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.''

"ரமா, இனி நான் ஏற்றிய ஜோதி அணையாது என்பது உனக்கு நன்கு தெரியுமா?''

"ஆம்; எனக்கு நன்கு தெரியும். எல்லாம் தெரிந்த பெரியம்மாவே சொன்னாள். இது தங்கள் பொறுப்பு. ரமேஷ் அண்ணா, யதீந்திரனைத் தங்களோடு சேர்த்துக் கொண்டு எனது குற்றங்களை எல்லாம் மன்னித்து, என்னை ஆசீர்வதிக்க மாட்டீர்களா? நானும் கவலையின்றி என் கணவரிடம் சென்றுவிடுவேன்.''

ரமேஷ் இதயத்தில் மின்னல்போல் எண்ணங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன. ஆனாலும் மௌனமாகத் தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். மறுபடியும் ரமா, "என்னுடைய இன்னொரு வேண்டுகோளையும் நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். என்ன சொல்லுங்கள்?'' என்றாள்.

"என்ன விஷயம்?''

"என் நிமித்தம் நீங்கள் எப்பொழுதும் பெரிய அண்ணாவிடம் சண்டையிடக் கூடாது.''

"நீ சொல்வது விளங்கவில்லையே?''

"நான் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு வாதம் செய்யாமல் போவதை எப்போதாவது புரிந்து கொண்டால் இதற்கு அர்த்தமும் விளங்கிவிடும். ஒரு நாள் என்னாலேயே பொறுக்க முடியவில்லை. அப்போது பெரியம்மா, 'பொய்யை வளர்த்திக்கொண்டே போனால் அதற்கு வயது அதிகமாகிவிடும். சகிப்புத் தன்மையின்மையால் பொய்யை அதிகப்படுத்துவது போன்ற பாபம் வேறொன்றுமில்லை' என்றாள். அவளுடைய இந்த உபதேசத்தை மனதில் வைத்துக்கொண்டு எனது துக்கங்களனைத்தையும் உதறித் தள்ளிவிட்டுப் போகிறேன். ரமேஷ் அண்ணா, நீயும் இதை எப்போதும் மறந்துவிடாதே'' என்றாள்.

ரமேஷ் பேசாமல் அவளேயே பார்த்துக்கொண்டிருந்தான். ரமா சிறிது கழித்து, "ரமேஷ் அண்ணு, என்னை உன்ஞல் மன்னிக்க முடியாவிட்டால் அதற்காக வருத்தமடையாதே. இன்று கடினமாகத் தெரியும் விஷயம் இன்ெனுரு நாளைக்கு ரொம்ப சாதாரணமாகத் தெரியும். அன்று நீ எனது குற்றமனைத்தையும் மன்னித்துவிடுவாய். இதற்காக நான் துக்கப்படவில்லை. நான் நாளை போகிறேன்" என்ருள்.

ரமேஷ் திடுக்கிட்டு, "நாளையா? எங்கே போகிருய்?" என்ருன்.

"பெரியம்மா என்னை அழைத்துப் போகுமிடத்துக்கு."

"இனி அவர் திரும்பி வரப் போவதில்லை என்று கேள்விப்பட்டேனே!"

"நானும் வரமாட்டேன். நானும் உன்னிடமிருந்து கடைசியாக விடைபெற்றுக் கொள்கிறேன்."

இதைக் கூறிவிட்டு அவள் தரையில் சிரம் வைத்து வணங்கிஞள். சிறிது நேரம் ரமேஷ் என்னவோ யோசித்துவிட்டு பிறகு எழுந்து நின்றுகொண்டு, "சரி, போ; நீ எதற்காக விடை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லக்கூடாதா?" என்ருன்.

ரமா பேசாமலிருந்தாள். ரமேஷ், "நீ ஏன் இப்படி எல்லா விஷயங்களையும் மறைத்துக்கொண்டு போகிருய் என்பது உனக்குத்தான் தெரியும். உன்னை நான் அந்த கரண சுத்தியாய் மன்னிக்கும் நாள் வரவேண்டுமென்று பகவானிடம் பிரார்த்திக்கிறேன். உன்னை மன்னிக்க முடியாமல் நான் அடையும் வேதனையைக் கடவுள்தான் அறிவார்" என்ருன்.

ரமாவின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. அந்த மங்கிய வெளிச்சத்தில் ரமேஷால் அதை அறிந்துகொள்ள முடியவில்லை.

ரமா மௌனமாகத் தூரத்திலிருந்தபடியே மீண்டும் ஒருமுறை நமஸ்கரித்தாள். அதன் பிறகு ரமேஷ் அங்

கிருந்து சென்றுவிட்டான். தனது எதிர் காலத்து வேலைத் திட்டங்களெல்லாம் ஒரு நொடியில் பொடிப் பொடியாகப் போய்விட்டதே என்று அவன் வழி நெடுக யோசித்துக்கொண்டு சென்றுன்.

அடுத்த நாள் ரமேஷ் விசுவேசுவரி வீட்டிற்குச் சென்றுன். அவள் வண்டியில் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவன் வண்டிக்குள் எட்டிப் பார்த்து விட்டு நீர் நிறைந்த கண்களுடன், "பெரியம்மா, நாங்கள் என்ன அவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டோம். நீ எதற்காக எங்களை இவ்வளவு சீக்கிரமாக விட்டுப் போகிருய்?" என்றுன்.

விசுவேசுவரி தனது வலது கையை அவனுடைய சிரசின் மேல் வைத்துக் கொண்டு, "குற்றத்தைச் சொல்லிப் போனுல் அதற்கு ஒரு முடிவே கிடையாது. ஆகையால் அது தேவையில்லை. ரமேஷ், இங்கு நான் இறந்தால் வேணிதானே எனக்குக் கொள்ளி வைப்பான். அப்படியானுல் எனக்கு எப்படி முக்தி கிடைக்கும்? எனது இந்த வாழ்க்கைதான் பெரிய துக்கத்திலேயே கழிந்தது. எனது அந்த வாழ்க்கையும் துக்கத்திலேயே கழிய வேண்டுமா? இதே பயத்தால்தான் நான் இங்கிருந்து போகிறேன்" என்றுள்.

இடி விழுந்தவன்போல ரமேஷ் திகைத்து நின்று விட்டான். இன்று இவளுடைய இந்த ஒரு வார்த்தையால் தாய் உள்ளம் எப்படிக் கொதிக்கிறது என்பதைக் கண்டுகொண்டான்.

"பெரியம்மா, ரமாவும்கூட வருகிருளா?" என்றுன்.

"அப்பா, உலகத்தில் அவளுக்கு எங்கும் இடம் கிடையாது. ஆகையால் அவளை பகாவானுடைய பாதார விந்தங்களில் சேர்ப்பிக்க அழைத்துப் போகிறேன். அங்கே போயும் அவள் பிழைப்பாளா என்பது சந்தேகம்தான். அவள் உயிரோடிருந்தால் வாழ்நாள் பூராவும் ஒரு விஷயத்தை ஆராயும்படி கூறுவேன். ஆண்டவன் அவளுக்கு இத்தனை அழகையும், குணத்தையும் கொடுத்து இந்த உலகத்திற்கு அனுப்பிவிட்டு, பிறகு எவ்வித குற்றமுமின்றி இத்தனை துக்கத்தை அவள் தலைமீது சுமத்தி ஏன்

இந்த உலகத்திலிருந்து அவளை அப்புறப் படுத்த வேண்டும்? இதில் ஏதாவது தெய்வ ரகசியம் இருக்கிறதா? அல்லது நமது சமூகத்தின் கொடுமைதானா? அப்பா ரமேஷ், உலகத்தில் அவளைவிடத் துர்ப்பாக்கியசாலி வேறு யாருமே இருக்க மாட்டார்கள்" என்றாள்.

இதைக் கூறக் கூற பெரியம்மாவின் குரல் தழ தழத்தது. அவள் இவ்விதம் வருத்தமடைந்ததை யாருமே பார்த்தது கிடையாது. ரமேஷ் ஒன்றும் பேசவில்லை. மீண்டும் விசுவேசுவரி, "ரமேஷ், உன்னிடம் நான் கேட்டுக்கொள்வது இதுதான். நீ என்றும் அவளைத் தவருக நினைக்காதே. போகிறபோது நான் யாரையும் குறை கூற விரும்பவில்லை. அவளைவிட யாருமே உனது நன்மையை நாடமாட்டார்கள். இதை ஒரு நாளும் நம்பாமலிருந்துவிடாதே" என்றாள்.

"ஆனால், பெரியம்மா........."

பெரியம்மா உடனே இடைமறித்து, "ரமேஷ், இதில், 'ஆனல் கீனல்' ஒன்றுமே இல்லை. நீ கேள்விப் பட்டதெல்லாம் பொய். நீ அறிந்ததெல்லாம் தவறு. ஆனல், இனி அந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் முடிவு கட்டிவிடவேண்டும். நீ சகல கோபதாபங்களையும் விட்டு எப்போதும் இதே போலச் சேவை செய்து வர வேண்டும். அதற்காகத்தான் அவள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு மௌனமாக இருக்கிருள். ரமேஷ், அவளுடைய உயிருக்கே ஆபத்து வந்திருக்கிறது. இருந்தும் அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளி வரவில்லை" என்றாள்.

அப்போது அவனுக்குக் கடந்த இரவு ரமா சொன்ன இரண்டொரு விஷயங்கள் ஞாபகத்திற்கு வந்தது. அவனுக்கு அழவேண்டுமென்றிருந்தது. அவன் தலை குனிந்துகொண்டு, "பெரியம்மா, அப்படியே செய்கிறேன் என்று அவளிடம் சொல்லிவிடு" என்றான்.

இதன் பிறகு ரமேஷ் அவளை வணங்கிவிட்டு வேக மாக அப்புறம் சென்றுவிட்டான்.

★

13000

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1960